கல்விக் கொள்கைகள், பாடசாலைப் பரிபாலனம்

சம்பந்தமான

# விரிவுரைகளின் தொகுப்பு

அரசினர் தமிழர் ஆசிரியர் சங்கம்

1973

அரசினர் தமிழர் ஆசிரியர் சங்கம்

வடமாநிலக் கல்வித் திணைக்களத்துடன்

இணைந்து நடாத்திய

விடுமுறைகாலப் பயிற்சிக் கழகத்திலும் கருத்தரங்கிலும்

கல்விக் கொள்கைகள், பாடசாலைப் பரிபாலனம் சம்பந்தமாக

விரிவுரையாளர் நிகழ்த்திய

# விரிவுரைகளின் தொகுப்பு

ஷெ விரிவுரைகள் நடைபெற்ற இடமும் காலமும்

1973 ஏப்ரல் 15, 16, 17 ஆம் திகதிகளில்

யாழ் / வேம்படி மகளிர் கல்லூரி

1973 ஏப்ரல் 18, 19 ஆம் திகதிகளில்

யாழ் / வீரசிங்கம் மண்டபம்

முதலாம் பதிப்பு — மே மாதம் 1973

(மட்டுப்படுத்தப்பட்ட விநியோகம்)

கருத்தரங்கு காட்டிய வழிகளிலொன்று

↓

ஆசிரியர்கள் கையிற்றான் குழந்தைகளின் எதிர்காலமும் நாட்டின் சுபீட்சமும் தங்கியுள்ளது. எனவே, ஆசிரியர்கள் கடமை, கண்ணியம், கட்டுப்பாடுடன் சிந்தித்துச் செயற்பட வேண்டும்.

திருத்தங்களுக்கு இடமுண்டு.

பதிப்புரிமை:
அரசினர் தமிழர் ஆசிரியர் சங்கம்
162, ஜம்பட்டா வீதி, கொழும்பு-13 தொலைபேசி: 32750



# சமர்ப்பணம்

ஆசிரியர்கள் கல்வி, நிர்வாகத் திறமைகளுடன் பதவி உயர்வு பெறவும், இளஞ்சிறுர்கள் சிறந்த நிர்வாகத்தின் கீழ்த்தகுந்த கல்வியைப் பெறவும் உதவுமுகமாகத் தொகுத்த இந் நூலை இருபத்து மூன்று ஆண்டுகளுக்கு முன் தன்மான உணர்வும், சமுதாயப் பற்றும் கொண்டு சிறந்த இலட்சியங்களை முன்வைத்து அரசினர் தமிழர் ஆசிரியர் சங்கத்தை உருவாக்கியவர்களுக்கும், அவர்களின் கனவு நனவாக அயராதுழைத்தவர்களுக்கும் பாதகாணிக்கையாக, சங்கச் சார்பில் சமர்ப்பிக்கின்ருேம்.

வணக்கம்.

பொ. சித்திரவேல்
தலைவர்

ந. பாலசுப்பிரமணியம்,
பொதுச் செயலாளர்.

அரசினர் தமிழர் ஆசிரியர் சங்கம்.

# முன்னுரை

நடைபெற்ற கருத்தரங்கு தலைமையாசிரியர் தெரிவுப்பரீட்சையை இலகுப் படுத்தியதோடு அமையாது, கல்விக் கொள்கைகள், பரிபாலனம் பற்றிய புதிய அறிவைப் பெறவும், முன்படித்தவற்றை நினைவுபடுத்தவும், சந்தேக விபரீதங் களைத் தீர்க்கவும் உதவியுள்ளதென்பது ஆசிரியர்கள் தினசரி எமக்கு எழுதிக் கொண்டேயிருக்கும் கடிதங்களிலிருந்து புலனாகின்றது. இவ்வாறு நினைந்து பாராட்டக்கூடிய, பயன்படக்கூடிய விரிவுரைகளை நிகழ்த்திய விரிவுரையாளர் களையும், தலைமை தாங்கிச் சிறப்புற நடாத்தி அறிவுரை பகர்ந்த தலைவர்களையும் ஆசிச் செய்தியனுப்பி எம்மை இத்துறையில் ஆர்வமூட்டிய கல்வி அமைச்சின் நிரந்தரச் செயலாளர் அவர்களையும் பூர்த்தி விழாவிற் கலந்து உரையாற்றி ஊக்க மூட்டிய கல்வி அமைச்சின் பாடசாலை நிர்வாகப் பகுதிக் கல்வி அதிபதி, கல்வி அதிகாரிகள் ஆகியோரையும் மூலகாரணகர்த்தாக்களாக இருந்த வடமாநிலக் கல்வியதிபதி, கல்வியதிகாரிகள், நிர்வாக அதிகாரி ஆகியோரையும் ஆசிரிய உலகம் என்றும் மறக்க முடியாது.


விரிவுரைகளின் சுருக்கங்களைத் தொகுத்து நூல்வடிவில் ஆக்கித்தர வேண்டுமென்று கருத்தரங்கிற்குச் சமுகம் அளித்திருந்தவர்களில் நானூற்றுக்கு மேற்பட்டவர்கள் ஒப்பமிட்டு மகஜர் மூலம் எம்மை வலியுறுத்தும் அளவிற்கு விரிவுரைகள் ஆசிரியர்களை வெகுவாகக் கவர்ந்து விட்டன. விரிவுரைகளைத் தொகுத்து நூல்வடிவில் ஆக்குவது மிகச் சிரமமான கருமம், எனினும், ஆசிரியர்கள் அனைவருக்கும் பயனுடைய செயல் என்பதனால் முயற்சி செய்தோம். விரிவுரை யாளருக்குத் திரும்பவும் சிரமம் கொடுத்தோம். அச்சத்தோடு சென்ற எம்மை நேசக்கரம் நீட்டி, "இடமாற்றங்களோடு மட்டும் தடுமாறாது இப்படியான ஆக்க பூர்வமான சேவைகளிலும் ஈடுபடும் உங்களுக்கு எமது பூரண ஒத்துழைப்பு எந்நேரமும் கிடைக்கும். இத்தகைய சேவைகளினால் சமூகத்தில் ஆசிரியர்களின் அந்தஸ்தும் உயரும்" என்று கூறி வேண்டிய உதவி புரிந்தனர்.

பரீட்சை மிகமிக நெருங்கி விட்டது. சிந்தித்துச் செயலாற்ற முடியாத வகையில் மிகக் குறுகிய காலத்தில் வெளியிடுகிறோம். குறைகள் இருப்பின் மன் னியுங்கள், எமக்கும் அவற்றைத் தெரிய வையுங்கள்.

படித்துப் பரீட்சையில் சித்தியடையப் பாடசாலைகளில் நல்ல நிர்வாகம் நடைபெற நம் இளஞ் சந்ததியினர் சிறந்த கல்வியைப் பெற இத்தொகுப்பு நூல் ஓரளவு உதவிபுரியுமென நம்புகிறோம். கருத்தரங்கிற்கும் நூல் வெளியீட்டிற்கும் ஒத்துழைப்பு நல்கியவர்களுக்கும் குறுகிய காலத்தில் நெருக்கடிகளின் மத்தியில் சிறப்புற அச்சிட்டு உதவிய கலைவாணி அச்சகத்தாருக்கும் எமது நன்றி.

கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.
14-5-73

அ. பொன்னம்பலம்
உப தலைவர்,
அ. த. ஆ. சங்கம்



கல்வி அமைச்சின் செயலாளர்

# கலாநிதி பிரேமதாச உடகம அவர்கள்

## அனுப்பியுள்ள ஆசிச் செய்தியின் தமிழாக்கம்

பொதுச் செயலாளர் அவர்கள்,
அரசினர் தமிழர் ஆசிரியர் சங்கம்.

ஐயா,

தலைமை ஆசிரியர் தெரிவுக்காகக் கல்வி அமைச்சினால் நடாத்தப்படவிருக்கும் பரீட்சைக்குத் தோற்றும் ஆசிரியர்களுக்கு உதவுமுகமாக அரசினர் தமிழர் ஆசிரியர் சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட பயிற்சி நெறி வகுப்புக்குப் பாராட்டுத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இப்பயிற்சி நெறி வகுப்பு யாழ்ப்பாணக் கல்வித் திணைக் களத்தின் பூரண ஒத்துழைப்புடன் நடாத்தப்படுவதை அறியும்போது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி உண்டாகின்றது.


கல்வி நிர்வாகம், கல்வித் துறையில் ஒரு முக்கிய தொழிலியல் அபிவிருத்தியாக இப்போது வந்து கொண்டிருக்கிறது. ஆசிரியர்களைத் தொழிலியல் சார்ந்த சிறந்த நிர்வாகிகளாக எம்மால் பயிற்ற முடியுமென்பது இப்போது தெளிவாகியுள்ளது. தமது அன்றாட நிர்வாகக் கடமைகளை ஆற்றுகையில், தலைமை ஆசிரியர்களும் பாடசாலை அதிபர்களும் எதிர் நோக்கும் பிரச்சினைகளைக் கலந்துரையாடல்கள் மூலம் தீர்க்க முடியுமென்பது இப்பொழுது தெரிந்து கொள்ளக்கூடியதாயிருக்கிறது. இத்துறையில் ஏராளமான படைப்புகள் ஐக்கிய அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, ஐக்கிய இராச்சியம் மற்றும் சோசலிச நாடுகளிலிருந்து பெறக் கூடியதாயிருக்கின்றது.

ஐந்து நாட்கள் நடைபெறும் இப்பயிற்சி நெறி வகுப்புகளில் கலந்து கொள்பவர்கள் பாடசாலை நிர்வாகத்தின் கொள்கைகள், திட்டங்கள், நடைமுறைகள் ஆகியவற்றை அறிந்து கொள்வார்கள் என்பது எனது நம்பிக்கையாகும். எமது பாடசாலைகளின் நிர்வாகப் பிரச்சினைகள், எமது கலாச்சார, சமூகச் சூழ்நிலைகளுக்குப் புறம்பானவையாக இருப்பினும் அவற்றைத் தீர்ப்பதில் ஆசிரியர், பெற்றோர், நிர்வாகிகள், தலைமை ஆசிரியர்கள் ஆகியோர் காட்டுகின்ற நல்லெண்ணம் உதவுமென நம்புகிறோம்.

இப்பயிற்சி நெறி வகுப்பு பூரண வெற்றியளிக்க வேண்டுமென வாழ்த்துவதுடன் இத்தகைய ஒரு பயிற்சி நெறி வகுப்பை ஒழுங்கு செய்த அரசினர் தமிழர் ஆசிரியர் சங்கத்துக்கு எனது நன்றியையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இங்ஙனம்
தங்கள் விசுவாசமுள்ள
(ஒப்பம்) பி. உடகம
செயலாளர்.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு -2
10-4-1973.



விடுமுறைகாலப் பயிற்சிக் கழகத்தையும், கருத்தரங்கையும்

வடமாநிலக் கல்வியதிபதி திரு. தி. மாணிக்கவாசகர் அவர்கள்

குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்து நிகழ்த்திய

# தொடக்கவுரை

தலைமையாசிரியர் தெரிவுப் பரீட்சைக்குத் தோற்றுகின்ற ஆசிரியர்களுக்கு உதவு முகமாக இப்பயிற்சிக் கழகத்தைக் கல்வித்திணைக்களமும் அரசினர் தமிழர் ஆசிரியர் சங்கமும் இணைந்து ஒழுங்கு செய்துள்ளன. இவ்விதமான நடவடிக்கைகளுக்கு எதிர்காலத்திலும் எமது திணைக்களம் சகல ஒத்துழைப்பும் நல்கத் தயாராகவுள்ளது.

ஆசிரியர்களே எதிர்காலச் சமுதாயத்தைச் சிருஷ்டிக்கும் சிற்பிகள். அவர்கள் கையிற்ருன் நாட்டின் எதிர்கால சுபீட்சம் தங்கியுள்ளது. எனவே, ஆசிரியர்களாகிய நீங்கள் நாட்டினதும் சமுதாயத்தினதும் நலனைக் குறிக்கோளாகக் கொண்டு தொண்டாற்ற வேண்டியவர்களாக இருக்கிறீர்கள். நீங்கள் மாணவர்களுக்கு மட்டுமன்றி ஏனைய சமுதாய உறுப்பினர்களுக்கும் சிறந்த வழிகாட்டிகளாகத் திகழ வேண்டும். ஆசிரியரை மாணவரும் மற்றையோரும் பின்பற்றும் நிலை இருப்பதால் ஆசிரியன் தனது நடை, உடை, பாவனை யாவற்றிலும் முன்மாதிரியாகத் திகழவேண்டியவனுகின்ருன்.

ஆசிரியனது கல்வி பல்கலைக் கழகத்துடனே அன்றிப் பயிற்சிக் கலாசாலையுடனே முடிந்துவிடவில்லை. தனது நாட்டிலும், உலகிலும் ஏற்படும் மாற்றங்கள், உருவாக்கப்படும் புதிய திட்டங்கள், கண்டுபிடிப்புக்கள், சாதனைகள் பற்றிய அறிவையும் ஆசிரியன் தெரிந்திருக்க வேண்டியவனுகின்ருன். இதனல் காலமெல்லாம் ஆசிரியன் படித்துக் கொண்டேயிருக்க வேண்டியவனுகின்ருன்.

சமுதாயம், சமுதாயத்தின் எதிர்கால வளர்ச்சி, நாட்டின் தேவை, பொருளாதார அபிவிருத்தி ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டே கல்விக் கூடங்கள் அமைய வேண்டும். பாடவிதானத்தைச் சரியான முறையில் திட்டமிடுவதின் மூலமே மேற்படி இலட்சியங்களை அடையலாம். இந்நோக்கங்களை அடைவதற்குப் பாடவிதானம் ஒரு கருவியாகப் பயன்படுகின்றது. இந்த அடிப்படையை

மையமாகக் கொண்டே நமது புதிய கல்வித் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இதைச் செயற்படுத்தும் உங்களிலேயே இதன் வெற்றியும் தங்கியுள்ளது. இதை உணர்ந்து நாட்டுப் பற்றுடனும், சமுதாயப் பற்றுடனும் நீங்கள் செயற்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வியின் இலட்சியம் பின்வரும் நான்கு வகையாக அமைய வேண்டும்:

(i) சமுதாயம் பேணுகின்ற இலட்சியங்களை மாணவர்கள் மத்தியில் பதிய வைத்தல்.

(ii) சமுதாயம் விரும்பும் எண்ணங்கள், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் ஆகியவற்றை மாணவர் மத்தியில் வளர்த்தல்.

(iii) மாணவர் தான் வாழும் சமுதாயத்தின் வாழ்க்கை நெறியில் தன்னை அர்ப்பணித்துத் தானும் அச்சமுதாயத்தின் ஓர் அங்கமென்ற எண்ணத்தை வளரச் செய்தல்.

(iv) சமுதாயத்தின் பாரம்பரியங்களை உள்ளடக்கிய கல்வியையும், அதற்குரிய நவீன அறிவையும் வழங்குதல்.

பாடசாலை ஒரு சிறிய சமுகம். அங்கேயும் மாணவர், மாணவர் வளர்ச்சி, எதிர்காலத் தேவை முதலியவற்றை ஆசிரியன் அறிந்து அதற்கேற்பக் கல்வி புகட்ட வேண்டும். அவனது செயல்களும் இவற்றிற்கேற்பவே அமைய வேண்டும். மாணவர்களது பிஞ்சு மனம் திட்டமிட்டு வளர்க்கப்பட வேண்டியதொன்று. ஒரு தோட்டக்காரன் பயிருக்குப் பசளையிட்டு, நீர்ப்பாய்ச்சிக் கண்ணும் கருத்துமாகப் பாதுகாத்து வளர்த்து எப்படி அதனுல் பெறக்கூடிய பலனைப் பெறுகின்ருனே அவ்வாறே ஆசிரியனும் மாணவனது, உடல் மனேவளர்ச்சிகளில் கண்ணும் கருத்துமாக இருந்து அவனுல் எதிர்காலச் சமுதாயம் பெறக்கூடிய பலனைப் பெறப்பண்ண வேண்டும். ஒவ்வொரு மாணவனதும் ஆற்றல் எந்தத் துறையில் அதிகமாகச் செயற்படுகின்றதென்பதை அவதானித்து அதற்கேற்ப அவனது செயற்பாடுகளையும் ஆர்வத்தையும் திசைதிருப்பி நாட்டுக்கும் அவனுக்கும் நன்மைபெறச் செய்யவேண்டியதும் ஆசிரியனது கடமையே. மாணவனது சிந்தனையை விரிவுபடுத்தித் தன்னம்பிக்கையை வளர்த்து அவனது நல்ல செயற்பாடுகளுக்கு உத்வேகத்தை ஏற்படுத்த வேண்டும்.

பயிற்சிக் கழகங்கள், பரீட்சைக்கு மட்டுமல்லாது முன்கூறிய இலட்சியங்களை அடைவதற்கும், ஆசிரியர்களின் அறிவு விருத்திக்கும், சுமுகமான நிர்வாகத்திற்கும் பெருமளவில் உதவி செய்யுமென நான் நம்புகின்றேன். எனவே, இத்தகைய பயிற்சிக் கழகங்கள் தொடர்ந்தும் நடைபெறுவது ஆசிரியர்களுக்கு மட்டுமன்றி நாட்டிற்கும், சமுதாயத்திற்கும், நன்மை பயப்பதாகவே அமையுமென்பதைக் குறிப்பிடுவதுடன் இக்கழகம் சிறப்பாக நடைபெற, இலட்சியம் நிறைவேற ஆசிகளைக் கூறி எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

வணக்கம்.

கருத்தரங்கில் இறுதிநாள் பூர்த்தி விழாவில்

பிரதம விருந்தினராகக் கலந்து சான்றிதழ் வழங்கிய

கல்வி அமைச்சின் பாடசாலை நிர்வாகப் பகுதி

வித்தியாதிபதி திரு. ஜோர்ஜ் மென்டிஸ் அவர்களின்

# சிறப்புரை

நான் உங்கள் முன்னிலையில் தமிழில் உரையாற்ற முடியாமைக்கு உண்மையிலேயே வருந்துகின்றேன். உங்களுக்கு விளங்கக்கூடிய மொழியிலே பேசமுடிந்தால் அல்லது நான் பேசுகின்ற மொழியை நீங்கள் விளங்கக்கூடிய நிலையில் இருந்தால் பெரிதும் மகிழ்ச்சி அடைந்திருப்பேன். இக்கருத்தரங்கில் தொடர்ந்து ஐந்து நாட்கள் பங்குபற்றிச் சோர்வடைந்திருக்கும் உங்கள் முன் கல்வித் திட்டம் பற்றி நீண்ட விரிவுரையை ஆற்றுவது பொருத்தமற்றது. எனினும், தலைமையாசிரியர் தெரிவுப் பரீட்சை பற்றிச் சில விடயங்களைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

1972-ம் ஆண்டு நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்ட தலைமையாசிரியர்களில் திறமையற்ற சிலரும் இடம் பெற்று விட்டனர். தலைமையாசிரியராகத் தெரிவு செய்யப்படுபவர் திறமையுடையவராக இருத்தல் வேண்டும். அத்துடன் 1972-இல் கொண்டுவரப்பட்ட கல்விச் சீர்திருத்தங்களின் வெற்றி கூடுதலாகப் பாடசாலைத் தலைவர்களின் கையிற்றான் தங்கியுள்ளது. இவற்றிற் கெல்லாம் கல்விக் கொள்கை, பரிபாலனம் பற்றிய அறிவு பாடசாலைத் தலைவர்கட்கு மிக அவசியம் எனக் கல்வி அமைச்சு கருதியது. இதனாலேயே இப்படியான போட்டிப் பரீட்சை மூலம் தலைமையாசிரியர்களைத் தெரிவு செய்வதென முடிபு செய்துள்ளோம்.

ஆசிரியத் தொழில் இலகுவானதல்ல; பொறுப்பும் மகத்துவமும் வாய்ந்தது. ஆனால் அதன் பொறுப்பையும் மகத்துவத்தையும் அறியாத நிர்வாகத் திறமையற்றவர்கள் பாடசாலைகளில் கடமையாற்றச் செல்வது மருத்துவத்தை முறையாக அறியாதவர் வைத்திய சாலையில் வைத்தியம் செய்யச் செல்வதுபோல மிகவும் அபாயகரமானதாகும்.

கருத்தரங்கில் பரீட்சைக்குரிய பாடத்திட்டத்திலுள்ள கல்விக் கொள்கைகள் பற்றி விரிவுரையாளர்களும், பரிபாலனம் பற்றிக் கல்வி அமைச்சின் கணக்காளர் திரு. இராஜசுப்பிரமணியம் அவர்களும் நன்கு தெளிவு படுத்தியுள்ளனர் என்பது எவரும் பாடத்திட்டம் கடினம் என்று இங்கு குறிப்பிடாததில் இருந்து புலனாகின்றது. நீங்கள் பெற்ற அறிவுடன் 1960 இல் நடைபெற்ற பாடசாலைச் சுவீகரிப்புப் பற்றியும் அறிந்திருத்தல் நன்று. பாடசாலை நிர்வாகக் கிளையின் கல்வி அமைச்சின் வெளியீடாகிய புதிய ஆசிரியர்களுக்கு ஓர் அறிவுரை என்னும் கைநூலிலுள்ள விடயங்களையும் அறிந்திருப்பது நன்று. பாடத்திட்டம் மாவட்டத்திற்கு மாவட்டம் அல்லது இனத்திற்கு இனம் வித்தியாசம் காட்டப்படாது சகல ஆசிரியர்கட்கும் ஒரே திட்டமாகவே வகுக்கப்பட்டுள்ளது என்பதனையும் குறிப்பிட விரும்புகின்றேன்.

சிறப்பாக நடைபெற்ற உங்களின் கருத்தரங்கின் இறுதி நாள் பூர்த்தி விழா வில் நாம் பங்கு கொள்ள வாய்ப்புக் கிடைத்ததையிட்டுப் பெரு மகிழ்ச்சியடைவதோடு, இதனை ஒழுங்கு செய்த வடமாநிலக் கல்வித் திணைக்களத்திற்கும், அரசினர் தமிழர் ஆசிரியர் சங்கத்திற்கும் பாராட்டைத் தெரிவிக்கின்றேன். இறுதியாகப் புதிய கல்வித் திட்டங்கள் பூரண வெற்றிபெற ஆசிரியர்களாகிய நீங்களும், ஆசிரிய சங்கங்களும் ஒத்துழைப்பு நல்க வேண்டுமென்றும், பரீட்சையில் சித்தியடைந்து தலைமையாசிரியர் களாகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர், யாழ்ப்பாணக் குடா நாட்டுக்குள்ளேயே சேவை செய்யவேண்டுமென்று எண்ணாது ஆசிரியர் பற்றுக்குறையாகவுள்ள கஷ்டமான பிரதேசங்களிலும் கடமையாற்ற முன்வரவேண்டுமென்றும் இத்தருணத்தைப் பயன் படுத்தி வேண்டுகோள் விடுக்கின்றேன்.

நன்றி

வடமாநிலக் கல்வித் திணைக்களத்துக்கும்
அரசினர் தமிழர் ஆசிரியர் சங்கத்துக்கும்

ஷெ கருத்தரங்கிற் பங்கு பற்றிய

ஆசிரிய குழாம் நவின்ற

# நன்றிப்பா

### நேரிசை வெண்பா

நந்தலைமை யாசிரியர் நற்றெரிவுச் சோதனையில்
சிந்தை மகிழ்வடையச் சித்தியுறும் — சிந்தையொடு
மாசில் பணிபுரிந்த மாணிக்க வாசகற்கு
ஈசன் அருள் பொலிக ஈண்டு.

### விருத்தம்

எம்பெரும் குழாத்துக் கீங்கு
இதஞ்செறி பயிற்சி யீந்து,
எம்பெரும் பாலா ருக்கு
இயைந்தநல் லுயர்வை யீந்து,
எம்பெருஞ் சேவை கொண்டு
எம்மிளஞ் சிறுர்க ளுக்கும்
எம்பெரும் நாட்டி னுக்கும்
ஏற்றநற் பயனைச் செய்ய,

எம்வட பிராந்தி யத்து
இயைந்தகல் வித்திணையா ரோடு
நம்மர சுத்தமிழா சிரியர்
நற்சங்கத் தாரும் சேர்ந்து
தம்மிலோர் ஒருமை கண்டு,
தங்களுள் இணைவு கொண்டு,
இங்குயர் கருத்த ரங்கை
ஏற்றவா றியைய வாக்கி,

கற்றவர் தம்மைக் கொண்டு
கருத்துரை ஆற்று வித்தும்,
மற்றவர் எவரும் போற்ற
மாபெரும் பயனைத் தந்தும்,
உற்றநற் பணிகள் செய்த
உத்தம ரனைவ ருக்கும்
இற்றினம் எங்கள் நன்றி
இயம்பினேம் இனிதேற் பீரே!

வணக்கம்.

கருத்தரங்கிற் பங்குகொண்ட ஆசிரியர்கள்

ஆக்கம்: கோப்பாய்க் கவிரத்தினம் ''முருகசூரியன்''

## 15-4-73 தொடக்கம் 19-4-73 வரை நடைபெற்ற
## விடுமுறைகாலப் பயிற்சிக் கழகத்தில்
## விரிவுரை நிகழ்த்தியவர்கள்

1. திருமதி. இ. ஆனந்தகுமாரசாமி அவர்கள் (அதிபர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை)
2. திரு. கு. நேசையா அவர்கள் (பல்கலைக்கழக முன்னாள் விரிவுரையாளர்)
3. திரு. ஈ. ஸி. வேலாயுதபிள்ளை அவர்கள். (அதிபர், கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலை)
4. திரு. இராஜ். சுப்பிரமணியம் அவர்கள் (கணக்காளர், கல்வி அமைச்சு)
5. திரு. M. குணரத்தினம் அவர்கள் (கல்வி அதிகாரி)
6. ஜனாப் M. M. மன்சூர் அவர்கள் (கல்வி அதிகாரி)
7. திரு. வே. கந்தப்பு அவர்கள் (விரிவுரையாளர், பலாலி ஆசிரியர் கலாசாலை)
8. திரு. எஸ். இராசையா அவர்கள் (கணக்காளர், யாழ். கல்வித் திணைக்களம்)
9. திரு. ஆ. மகாலிங்கம் அவர்கள் (நிர்வாக அதிகாரி, யாழ்/கல்வித்திணைக்களம்)
10. திரு. என். தேவபாலசிங்கம் அவர்கள் (விரிவுரையாளர், கொழும்புத்துறை ஆ. க.)
11. திரு. ஆர். எஸ். நடராசா அவர்கள் (விரிவுரையாளர், கொழும்புத்துறை ஆ. க.)
12. திருமதி. எஸ். செல்லத்துரை அவர்கள் (விரிவுரையாளர், கோப்பாய் ஆ. க.)
13. செல்வி P. ஆறுமுகம் அவர்கள் (அதிபர், யாழ்/வேம்படி மகளிர் கல்லூரி)
14. திரு. கே. தருமலிங்கம் அவர்கள் (பாடசாலைக் கட்டிட வேலைப்பரிசோதகர்)
15. திரு. W. M. அழகக்கோன் அவர்கள் (வாழிகாட்டு ஆலோசகர்)
16. திரு. எஸ். குமாரசாமி அவர்கள் (ஆசிரியர், காரைநகர் இந்துக் கல்லூரி)
17. திரு. ந. பாலசுப்பிரமணியம் அவர்கள் (பொதுச் செயலாளர் அ.த.ஆ.ச.)

## தலைமை தாங்கியவர்கள்

1. திரு. M. குணரத்தினம் அவர்கள் (கல்வி அதிகாரி)
2. திரு. செ. சிவப்பிரகாசம் அவர்கள் (வட்டாரக் கல்வி அதிகாரி) முன்னாள் தலைவர் அ.த.ஆ.ச.
3. திரு. இ. சபாலிங்கம் அவர்கள் (அதிபர், யாழ்./இந்துக் கல்லூரி)
4. திரு. R. S. சீவரத்தினம் அவர்கள் (கல்வி அதிகாரி)
5. திரு. M. சிமியாம்பிள்ளை அவர்கள் (கல்வி அதிகாரி)
6. திரு. த. சண்முகதாசன் அவர்கள் (முன்னாள் தலைவர் அ. த. ஆ. சங்கம்)
7. திரு. பொ. சித்திரவேல் அவர்கள் (தலைவர் அ. த. ஆ. ச.)
8. திரு. க. கா. மதியாபரணம் அவர்கள் (போஷகர் அ. த. ஆ. ச.)
9. திரு. ஏ. எஸ். நல்லையா அவர்கள் (கல்வி அதிகாரி)

வடமாநிலக் கல்வியதிபதி

**திரு. தி. மாணிக்கவாசகர் அவர்கள் தலைமையில்**

நடைபெற்ற பயிற்சிக்கழக நிறைவு விழாவில் பிரதம விருந்தினராகக் கல்வி அமைச்சின் பாடசாலை நிர்வாகப்பகுதிக் கல்வியதிபதி

**திரு. ஜோர்ஜ் மெண்டிஸ் அவர்களும்**

கல்வியதிகாரிகள்

**திரு. L. B. வளலியத்த அவர்களும்**

**ஜனாப் A. L. M. இஸ்மாயில் அவர்களும்**

கலந்து கொண்டனர்.

கழக அமைப்பாளர்கள்: (i) ஜனாப் எம். எம். அலி அவர்கள் (கல்வியதிகாரி)
(ii) திரு. ந. பாலசுப்பிரமணியம் அவர்கள் (பொதுச் செயலாளர் அ. த. ஆ. ச.)

# பொருளடக்கம்

## பகுதி I

### கல்விக் கொள்கைகள்


1. கல்வியின் நோக்கங்களும் கல்விக் கொள்கைகளும் .... 1
2. மகாத்மா காந்தியின் கல்விக் கொள்கை .... 3
3. பெற்றிக் பிறீபல் (1782—1852) .... 4
4 ரூஸோவின் கல்விக் கருத்துக்கள் .... 6
5. மேரி மொன்டிசூரி அம்மையாரின் கல்விக்கொள்கைகள் .... 10
6. ஜோன் டியூயின் கல்விக் கொள்கை .... 12
7. பெற்றூர் - ஆசிரியர் - மாணவர் தொடர்பு .... 17
8. பாடத்திட்ட வகைகளும், பாடத்திட்டம் அமைக்கும்போது கவனிக்க வேண்டிய விதிகளும் .... 20
9. பாடசாலைக் கருமங்களைத் திட்டமிடும்போது கவனிக்கவேண்டியவை .... 24a
10. கல்வி முன்னேற்றத்திற்குச் சமூகத்தாற் செய்யப்படும் சேவைகள் .... 25
11. டோல்ரன் முறையும் தொழில் முறையும் .... 28
12. தொழில் முறை .... 30
13. கேள்வி கேட்டல் சம்பந்தமான வழி முறைகள் .... 31
14. பொருளாதார விருத்தியும் கல்வியும் .... 33
15. சமூகத்தில் மாற்றங்கள் ஏற்படுத்துவதற்காகக் கல்வித்திட்டத்தினை இயைபு படுத்தல் .... 37
16. கல்வி அமைச்சிலிருந்து பாடசாலை வரையிலான தொடர்பு .... 41
17. இலங்கையின் எதிர்காலக் கல்வித் திட்டம் .... 44


## பகுதி II

### பரிபாலனம்


18. கல்விச் சட்டங்கள் .... 50
19. பாடசாலைகளின் உட்பரிபாலனம் .... 58
20. வரலாற்றுக் குறிப்புகள் .... 62
21. பெற்றூர் ஆசிரியர் சங்கமும் பாடசாலைக் கட்டடங்களும் .... 64

| | | |
|---|---|---|
| 22. | நியமனம் .... | 65 |
| 23. | அரச ஊழியர்களுக்கு அரசியல் உரிமைகள் .... | 68 |
| 24. | அவைகளில் அங்கத்துவம் வகித்தல் கருத்து வெளியீட்டு உரிமைகளைப் பிரயோகித்தல் .... | 69 |
| 25. | பொது நடத்தையும் ஒழுக்கமும் .... | 71 |
| 26. | இடமாற்றங்கள் .... | 74 |
| 27. | ஒரு பாடசாலையில் வைத்திருக்க வேண்டிய பதிவேடுகளின் அட்டவணை .... | 75 |
| 28. | இருப்புப் பொருட்களின் பதிவேடும் கணக்கீடும் க[redacted]ட்டுக்காப்பும் .... | 75 |
| 29. | அரசினர் விடுதிகளும் ஆசிரியர்களும் .... | 78 |
| 30. | அரசினர் பாடசாலைகளில் பணம் திரட்டல் .... | 81 |
| 31 | சம்பளக் கடன்கள் .... | 82 |
| 32. | லோகோர் சீமாட்டி கடன் நிதி .... | 86 |
| 33. | லீவு .... | 87 |
| 34. | புகையிரத ஆணைச்சீட்டு .... | 88 |
| 35. | தொழிற் சங்கம் .... | 96 |
| 36. | பொது அறிவு (சுருக்கக் குறிப்புகள்) | 97 |

பகுதி I

# கல்விக் கொள்கைகள்

# கல்வியின் நோக்கங்களும் கல்விக் கொள்கைகளும்

கல்வி, சமுதாயத்தை உருவாக்குகின்றது. சமுதாயத்தேவைகளைப் பூர்த்தி செய்யவே கல்வி அளிக்கப்படுகின்றது. ஒவ்வொரு நாடும் தனது சமூக, பொருளாதார, அரசியல் பண்பாட்டுத் தேவைகளுக்கேற்ற கல்வித் திட்டத்தை நிறுவுகின்றது எனவே கல்வித் திட்டங்கள் நாட்டிற்கு நாடு வேறுபடுகின்றன. ஒவ்வொருவரும் தமது குடும்பம், சுற்றுடல், பிரதேசம், நாடு என்ற அடிப்படையில் எழும்பும் பல்வேறு தேவைகளையும் பூர்த்தி செய்து, இணக்கமாக வாழக்கூடிய வளர்ச்சியைப் பெறுதல் அத்தியாவசியமானது. அத்துடன் சுய தேவைகளையும் பூர்த்தி செய்தல் வேண்டும்.

இவ்வாறு சமூக இணக்கத்தைப் பெறுவதற்கு, அளிக்கப்படும் கல்வி அமைப்பில் நான்கு பிரதான அம்சங்கள் கவனிக்கப்படவேண்டும். கல்வி பயிலும் ஒவ்வொருவரும் பூரணவளர்ச்சி பெறுவதற்குரிய வாய்ப்புக்கள் அளிக்கப்படவேண்டும். சிறந்த மனிதத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளும் தன்மை விருத்தியடைய வேண்டும். குடியுரிமைப் பொறுப்பையும், பொருளாதாரத் தேர்ச்சியையும் உண்டாக்க வேண்டும். முதலில் பூரண வளர்ச்சியை எடுத்துக்கொள்வோம். மாணவரின் இயல்புத் தன்மைகளை விருத்தி செய்து, அவர்களின் ஆர்வ ஆற்றல்களைத் துணையாகக் கொண்டும் ஒவ்வொருவரும் தம்மால் இயன்ற வளர்ச்சியைப் பெறுவதற்கு வழிவகுக்க வேண்டும். அடிப்படை விடய அறிவைப் பெறுவதுடன், மாணவர் கவின் கலைகளைக் கற்று ரசனை வளர்ச்சியும், சிறந்த பழக்க வழக்கங்களையும், பொருத்தப்பாடுடைய தன்வயப் பண்புகளையும் பெற்றுப், பூரணத்துவம் அடையக் கூடியதாக இருக்கவேண்டும்.

சிறந்த மனிதத் தொடர்புகளை அமைத்துக் கொள்வதற்குப் பயிற்சியும், வாய்ப்புக்களும் மாணவருக்கு அளிக்கப்பட வேண்டும். சமூக உணர்வு, பொறுப்புணர்ச்சி, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, சகோதரத்துவம், ஒத்துழைப்பு முதலிய நற்பண்புகளை மாணவன் பெறுவதால் சமூகத்தில் நல்வரவும், இணக்கமும் உடையவராக வாழக் கூடியவர்களாவர்.

குடியுரிமைப் பொறுப்புத்தன்மை மாணவருக்கு ஏற்படுத்துவது கல்வியின் பணிகளிலொன்றாகும். நாட்டுப்பற்று, சர்வதேசாபிமானம், பொதுப் பொருட்களைப் பேணிப் பாதுகாத்தல், சட்டத்திற்கு அமைந்து நடத்தல், கூட்டுவாழ்க்கை முறைகளை அனுசரித்தல், நாட்டின் நலனுக்குப் பொருந்தாதவற்றைத் தவிர்த்தல், கடமையுணர்ச்சியுடையவராய் இருத்தல் முதலியவற்றில் மாணவர் வளர்ச்சி பெற்றுக் குடியுரிமைப் பொறுப்புத் தன்மையுடையவர்களாய் விளங்கவேண்டும்.

பொருளாதாரத் தேர்ச்சி கல்வியின் முக்கிய குறிக்கோளாகும். மாணவர் தமது வருங்கால சீவியத்தை நடாத்துவதற்கும், நாட்டின் பொருளாதார விருத்திக்கும் கல்வி உதவவேண்டும். அவர்களுக்குத் தொழிலைப்பற்றிய அறிவு, கைக்குரிய திறமைகள், தொழில்களின் மகத்துவத்தைப் பற்றிய சீரான மனப்பான்மை, நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைகளைப் பற்றிய அறிமுகம், முதலியன பொருளாதாரத் தேர்ச்சிக்கு அவசியம் இத்தன்மைகளைத், தொழிற் தகவற் சேவை, தொழில் முன்னிலைப் பாடங்கள், தேசிய சேமிப்பு இயக்கம் முதலியவற்றில் பங்கு பற்றும் வாய்ப்புகள் மாணவருக்கு அளிக்கப் பட வேண்டும்.

கல்வியின் பொது நோக்கங்களோடு பாடநோக்கங்கள் இணைந்திருத்தல் வேண்டும். வெவ்வேறு பாடத்துறைகளின் சிறப்பு நோக்கங்கள் வேறுபட்டிருந்தாலும் பொது நோக்கத்துடன் தொடர்புடையனவாய் இருத்தல் வேண்டும். மேலும் ஒவ்வொரு பாடத்துறையிலும் மாணவன் அப்பாட சம்பந்தமான விடய அறிவு, திறமை, வளர்ச்சி, மனப்பான்மை விருத்தி என்பனவற்றைப் பெறக்கூடியதாக இருக்கவேண்டும் (உ-ம்) சமூகக் கல்வி கற்பதனால் அவ்விடயத்துறையில் அறிவு வளர்வதுடன் தேசப்படம் உபயோகித்தல், கூட்டுறவுக் கலந்துரையாடல், தலைமை தாங்குதல், சீர்தூக்கிப்பார்த்தல் போன்ற திறமைகளையும் தேசப்பற்று, சர்வதேச அபிமானம், சகிப்புத்தன்மை, நடுவுநிலைமை போன்ற மனப்பாங்குகளையும் உருவாக்கலாம்.

கல்விக் கொள்கைகளை மூன்றாகக் கொள்ளலாம். இக் கொள்கைகள் பல்வேறு இலட்சியங்களை அடிப்படையாகக் கொண்டு ஒன்றுக்கொன்று வேறு படுகின்றன. கற்பித்தலில் பயன்படு முறைகள் இக் கொள்கைகளைச் சார்ந்தனவாய் அமைகின்றன. கல்விச் சிந்தனையாளர்களும் இக்கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு தமது கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். முதலில் இயற்கைவாதக் கல்விக் கொள்கையை எடுத்துக் கொள்வோம். ரூஸோ, பெஸ்ரலோஜி, பிறீபல், மொன்டிசோரி அம்மையார் இயற்கைவாதக் கொள்கையை ஆதரித்தனர்; இக்கொள்கை, மாணவரின் இயல்புத் தன்மைகளை இயற்கையாகவே விருத்தியடைவதற்கு வாய்ப்பு அளிக்கின்றது. இயற்கையான அபிவிருத்தியை ஆசிரியர்கள் எதுவிதமான செயற்கைத் தடைகளாலும் கட்டுப்படுத்தலாகாது. மாணவர்களை அவதானித்து உதவுதல், விளையாட்டினூடேயும், ஆக்கமுயற்சிகளாலும் கல்வி கற்றல் முதலியன இக்கொள்கையைச் சேர்ந்தனவாகும்.

அடுத்தது இலட்சியவாதக் கல்விக்கொள்கை. இக் கொள்கையை உடைய பல சிந்தனையாளர்களுள் பிளேட்டோ பிரதானமானவர். இதன்படி, ஒருவரின் தன்வயத்தை மேன்மையடையச் செய்தல், தன்னிறைவுப் பேறு அடையச்செய்தல் முக்கியமான தாகும் பண்பாடு, கலை, கலாச்சாரம் ஆகியவற்றைத் துணையாகக் கொண்டு ஆன்மீக, மானத விருத்திக்கு அடிகோலி, மனிதனை இலட்சியப் பாதையில் செலுத்துதல் இக்கொள்கையின் விசேட அம்சமாகும். பிளேட்டோவின் நூல்களை ஆராயுமிடத்து இஃது நன்கு புலனாகின்றது.

கடைசியாக, பயன்வாதக் கொள்கையை ஆராய்வோம். இக்கொள்கையை ஆதரித்த சிந்தனையாளர்களுள் ஜோன் டிவி, கில்பாட்ரிக், மகாத்மா காந்தி பிரதானமானவர்களாவர். மாணவரின் வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பயன்தரும் கல்வியே சிறந்தது. செய்து கற்றல், பரிசோதனைகள் மூலம் கற்றல், ஆக்கப் பணிகளிலும் சமூக அனுபவங்களிலும் ஈடுபடுவதன் மூலம் கற்றல் எனப் பல கற்றல் முறைகள் இக்கொள்கையை ஊற்றாகக் கொண்டுள்ளன.

மேற் கூறப்பட்டுள்ள நோக்கங்களையும் ஆராய்ந்து, தமது நாட்டுக்கு ஏற்றனவற்றைத் தெரிவு செய்து, பயன்படுத்த வேண்டும். எப்படியான ஒரு சமுதாயத்தைச் சிருஷ்டிக்க விரும்புகிறோம் என்பதைச் சிந்தித்து, அதற்கேற்ப எமது கல்வித் திட்டத்தை அமைத்துக் கொள்ளுதல் நன்று.

திருமதி. இ. ஆனந்தக்குமாரசாமி

# மகாத்மா காந்தியின் கல்விக் கொள்கை

உலக சரித்திரத்தில் ஒவ்வொரு பெரிய இயக்கமும் அதற்கேற்ற கல்வித்திட்டத்தை உருவாக்கியது. இலங்கையை ஆண்ட ஐரோப்பிய இனத்தவர்களாகிய போர்த்துக் கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோரும் தங்கள் தங்கள் தேவைக்கேற்ற கல்வி முறைகளையே இலங்கையில் அமுல் நடத்தினர். அப்படியே இந்தியாவுக்கும் தனது விடுதலை இயக்கத்துக்கு அமைவான ஒரு ஆதாரக் கல்வித்திட்டத்தை (Basic Education) மகாத்மா காந்தி அவர்கள் ஆக்கிக்கொடுத்தார். இந்தக் கல்வித்திட்டம் மிகச் சிறந்த ஒரு கல்வித்திட்டம் என்று உலகக் கல்விமான்கள் மத்தியில் ஒரு நிலையான எண்ணம் நிலவுகிறது.

மகாத்மா காந்தி அவர்கள் கல்வி என்பது: ''சீவியத்துக்குச் சீவியம் மூலம், சீவியம் முழுவதும்'' என்று கருதினர். இவருடைய இந்தத் திட்டம் முழுக்க முழுக்கத் தொழிலையே ஆதாரமாகக் கொண்ட திட்டமாகும். மகாத்மா காந்தி அவர்கள் தமது இலட்சியம் பூரணமடைய ஒரு புதிய கல்வித்திட்டம் வேண்டுமென்று கருதினர். அத்திட்டம் தொழிலை ஆதாரமாகக் கொண்டதாகவும், தொழில் மகத்துவத்தை விளக்குவதாகவும் அமைய வேண்டும் என்று விரும்பினர். மேலும் அவர், எல்லா மக்களுக்கும் கல்வி அவசியமென்றும், அது அவர்கள் ஆற்றலுக்கேற்பக் கற்பிக்கப்பட வேண்டும் என்றும், ஒரு சிலருக்குத்தான் உயர்தரக்கல்வி என்ற நிலை மாறி எல்லோரும் உயர்தரக் கல்வி பெற வசதியளிக்க வேண்டும் என்றும் கூறினர். இவற்றை ஆதாரமாகக் கொண்டு அமைந்ததே இவரது கல்விக் கொள்கையாகும்.

"தொழில் மூலம் எல்லாப் பாடங்களையும் படிக்கலாம்'' என்ற சித்தாந்தமே இக் கொள்கையின் முக்கிய அம்சமாகும். உதாரணமாக மேசை செய்யுமொருவன் வேண்டிய பலகைகளின் அளவுகளைக் கணிக்கும்போது எண் பாடத்தையும், கோணங்களின் அளவுகளைக் கணிக்கும்போது கணித பாடத்தையும் அந்த மரங்களின் தன்மை, அவை வளரும் காலநிலை என்பனவற்றை ஆராயும் போது புவியியலையும் கற்கிருன். இப்படியே எல்லாப் பாடங்களையும் படிக்க வேண்டும் என்பதே இந்தக் கல்விக் கொள்கையின் நோக்கமாகும். இங்கே புத்தகம், வாசிகசாலை என்பன எல்லாம் இரண்டாம் நிலையிலேயே அமைகின்றன.

மாணவர்கள் தங்கள் அனுபவங்களைப் புத்தகங்களாக எழுத வேண்டும். பாடசாலை ஒரு சமூகம் போல இயங்க வேண்டும் சூழலிலுள்ள தொழில்களைச் செய்யப் பாடசாலை வழிகாட்டியாக அமைய வேண்டும். பாடசாலை தொழிற்சாலை போலவும், சனசமூக நிலையம் போலவும் விளங்க் வேண்டும். பாடசாலையில் மதச் சார்பற்ற கல்வி வழங்கப்பட வேண்டும். நீதிநெறிகள் அவசியம் போதிக்கப்பட வேண்டும். போதனு மொழி தாய் மொழியாக அமைய வேண்டும், என்பன எல்லாம் மகாத்மா காந்தி அவர்களின் கொள்கையாகும்.

மனிதன் இறக்கும் வரை படிக்கவேண்டும். கல்வி பாடசாலைகளில் மட்டுந்தான் நடைபெறுகிறது என்ருல் அது முழுப்பிழையான கொள்கையாகும். தொழில் நுட்பங்கள் எல்லா இடங்களிலும் பரவவேண்டும். சிறிய இயந்திரங்களின் உபயோகம் தெருவுக்குத் தெரு பெருக வேண்டும். அப்படியிருந்தால் மாத்திரமே நாம் எமக்கு வேண்டிய உணவு, உடை முதலியவற்றைச் செய்ய முடியும். இதற்குக் கல்விமுறை உதவவேண்டும் என்பதே மகாத்மாவின் கொள்கையாகும்.

ஆனல் அதனுடன் நிற்காது தொழிலை ஆதாரமாகக் கொண்டு கல்வி உற்பத்தியாகினும், இறுதியாகப் பூரண மனிதனின் பூரணக்கல்வியாக முடிவு காணவேண்டும். அது மாத்திரமல்ல. அக்கல்வி மூலம் ஒரு புதிய சர்வோதய சமூகம் எழும்பவேண்டும். மகாத்மா காந்தி அவர்களின் கல்விக் கொள்கையை ஓரளவு தழுவியமைந்ததே இலங்கையின் புதிய கல்வித் திட்டமாகும். எனவே அக்கல்வித் திட்டத்தை மாணவர்களுக்கு ஊட்டி வருங்காலச் சந்ததியை முன்னேற்றுவோமாக.

கு. நேசையா

# பெற்றிக் பிறீபல் (1782—1852)

ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த கல்விச் சிந்தனையாளராகிய பிறீபல் 'கின்டர் காடன்' கல்வியின் தந்தை எனப் போற்றப்படுகின்றார். ரூசோவினால் வெளியிடப்பட்ட கல்விக் கருத்துக்களை நடைமுறைப்படுத்திய சுவிற்சலாந்தைச் சேர்ந்த 'பெஸ்ரலோஜியின் (1746—1827) கல்விக் கொள்கையினை ஆதரிப்பவராகப் பிறீபல் காணப்பட்டார். குழந்தைகளின் இயல்பினைத் தெளிவுபடுத்தும் வகையில் இவரது முயற்சிகள் காணப்பட்டன. கல்வி என்பது உள்ளத்தினின்றெழும் இயல்பான வளர்ச்சி என்பது இவரது கருத்தாகும். இக்கருத்தின் அடிப்படையிலேயே அவர் குழந்தைகளைச் செடிகளுக்கு ஒப்பிட்டார். பாடசாலையில் ஆசிரியன் தோட்டக்காரனுக்குச் சமன் என்பது இவரது கருத்து. தோட்டக்காரன் தோட்டத்தில் செடிகளின் இயல்பான வளர்ச்சிக்கு ஆவன செய்யுமுகமாக வேண்டிய சூழலை ஏற்படுத்தும் கடமை உடையவன். அவ்வாறே ஆசிரியனும் மாணவரின் இயல்பான வளர்ச்சிக்கு உகந்த சூழலை ஏற்படுத்துபவன் என்பதே இவரது கருத்து. 'கின்டர் காடன்' என்னும் ஜெர்மன் சொல்லுக்குக் 'குழந்தைப் பூங்கா' என்பது பொருளாகும், எனவே 5—6 வயதுள்ள குழந்தைகளின் கல்வியில் குறிப்பாக அக்கறை காட்டி இப்பருவத்தாரின் கல்வியில் ஒரு புதிய நோக்கினை ஏற்படுத்தினார் பிறீபல்.

மையநரம்புத் தொகுதியையும் புலன்களையுமே துணைக்கொண்டு குழவி தன் சூழலிலிருந்து அநுபவங்களைப் பெறுகின்றதென்னும் கருத்தின் அடிப்படையில் அவரது கல்விக் கொள்கை அமைந்திருப்பதைக் காண்கின்றோம். இவரது ஒருமைப்பாட்டுக் கொள்கை குழந்தையை இயற்கை, மனித சமூகம், கடவுள் ஆகியவற்றுடன் தொடர்பு கொள்ளச் செய்யும் ஒப்பற்ற சாதனமாகக் கல்வியை மதிப்பதாகும். சடப்பொருள் உலகிலும் ஒருமைப்பாடு உண்டு. இவ்வொருமைப்பாட்டுக் கருத்தினைக் கொண்டே ஒருமைப்பாடுள்ள உருவங்கள் மூலம் பயனுள்ள அநுபவங்களை ஏற்படுத்த முற்பட்டார். பின்வரும் கல்விக் கருத்துக்கள் இவரது கொள்கையை விளக்குவதாகும்.

(அ) குழந்தையின் இயல்பு நன்கு உணரப்படுதல்.

(ஆ) குழந்தையின் இயல்பான செயலினின்றும் தொடங்கும் கல்வியே ஒழுக்கத்துக்கு வழிவகுக்கும்.

(இ) தற்போதைய குழந்தையின் வாழ்விலிருந்தே அநுபவங்கள் தேர்ந்தெடுக்கப்படவேண்டும்.

(ஈ) அனுபவங்கள் குழந்தையைத் தூண்டுவனவாயிருக்க வேண்டும்.

(உ) தனித்தன்மையை மதிப்பதோடு குழந்தைபெறும் அனுபவங்கள் அதனைச் சமூகச் செயலில் ஈடுபடத் தூண்டவேண்டும்.

மேலே கூறப்பட்ட கருத்துக்கள் குழந்தையின் சுதந்திரத்தையும், அதன் இயல்புக்கேற்ற கல்வியையும், கற்பித்தல் முறையையும் வலியுறுத்துவனவாகும். இவரது தத்துவத்தின்படி கல்வியில் குழந்தையின் கவர்ச்சி, அநுபவம், செயல்கள் வலியுறுத்தப்படுவதோடு கற்றலில் குழந்தையின் பங்கையும் வலியுறுத்துவதாகும். தானே செயற்படும் முறையே குறிப்பாக இப்பருவத்தில் சிறந்ததென்பது பிறீபலின் கருத்தாகும்

குழந்தையின் இயற்கைப் போக்குக்குக் கல்விப்போதனை குறுக்கீடாகக்கூடாது என்பது இவரது கருத்தாகும். விளையாட்டு ஓர் இயற்கைச் செயல். அது ஆக்கத் திறனையும் தரவல்லது. எனவே விளையாட்டினை இப்பருவத்தில் கற்பித்தல் முறையாகக் கொண்டு பயனுள்ள அனுபவங்களைப் பெற வழிவகுக்கலாம் என்பதும் இவரது கருத்தாகும். இவ்வகையில் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வளர விளையாட்டுப் பெரிதும் பயன்படுமெனக் கண்டார். பாடப் புத்தகம் என்பதே இல்லாத விளையாட்டு முறையே இவர் தந்த ‘கின்டர் காடன்’ முறையாகும்.

இவரது கல்விக் கருத்துக்கள் ஆசிரியனைக் குழந்தைகளோடு குழந்தையாகவே வாழவேண்டும் என வலியுறுத்துவதாகும். வானவில்லின் நிறங்களில் அமைக்கப்பட்ட கம்பளி நூலாலான பந்து விளையாட்டு வெகுமதிப் பொருளாகக் குழந்தைகளுக்குத் தரப்படுகிறது, குழந்தைகள் அதனைத் தொட்டுப் பார்க்கின்றனர். அதனை எறிந்து விளையாடுகின்றனர். இதனுல் அதன் நிறங்களை அறிவர், அதனைப்பற்றிப் பாடுகின்றனர். உரையாடுகின்றனர்.

சதுரமான கட்டைகள், நீள்சதுரமான கட்டைகள் இவை குழந்தைகளுக்கு வெகுமதிப் பொருட்களாகத் தரப்படுகின்றன. அவர்கள் வட்டம், சதுரம், நீள்சதுரம் என்பவற்றுக்குள்ள தொடர்புகளையும், தன்மைகளையும் அறிந்து கொள்ளுகின்றனர். இவ்வாறு இயல்பான விளையாட்டின் மூலம் தொடர்புறுத்திக் கற்றுக் கொள்ளும் வாய்ப்புத் தரப்படுவதால் அவர்கள் தாமாகவே அனுபவங்களைப் பெறுகின்றனர்.

இவ்வகைக் கற்பித்தல் விஞ்ஞானக் கற்றலுக்குப் பெரிதும் துணையாகின்றது. புலன், காட்சி, அனுபவம். உற்றுநோக்கல், பகுத்தல், தொகுத்தல் முறையில் கல்வி பெற வழியேற்படுகிறது. ஒருங்கிணைத்துக் கற்கும் முறை இவரால் வலியுறுத்தப்பட்டது. இவ்வாறு சிந்தனையாளராகிய பிறீபல் கல்வியில் மாணவ மையக் கற்பித்தலுக்குப் பெரிதும் அழுத்தங் கொடுத்துத் தற்காலக் கல்வியின் போக்குக்குப் பெரிதும் ஆக்கமும், ஊக்கமுந் தந்தார் என்பது தெளிவு,

ஆர். எஸ். நடராசா

# ரூஸோவின் கல்விக் கருத்துக்கள்

18-ம் நூற்ருண்டில் ஐரோப்பாவில் பெருஞ் செல்வர்க்கும், மத குருமார்க்கும் சமுதாயம் கட்டுப்பட்டு இருந்தமையால் தனி மனித சுதந்திரம் கட்டுப்படுத்தப்பட்ட நிலையில் இருந்தது. சமூகத்தின் மேல் கற்றறிந்த ஓர் வர்க்கம் ஆட்சி செலுத்திக் கொண்டு இருந்தது. இச்சமூக அமைப்பை மாற்றுவதற்கு கல்வியை ஒரு சிறந்த சாதனம் எனக் கருதிச் செயற்பட்டவரே கல்வியாளர் ரூஸோ. ரூஸோவின் கல்விக் கருத்துக்களே இவரின் பின் தோன்றிய கல்வியாளர்களான பெஸ்ரலோஜி, பிரோபல் மான்டிசோரி ஆகியோரின் கல்வித் தத்துவங்களுக்கு வித்தாக அமைந்தது. கல்வி யாளர்களுக்கு ஓர் கலங்கரை விளக்காய் விளங்கினுர் ரூஸோ.

கல்வியாளர் ரூஸோவின் கல்வித் தத்துவத்தை அறியமுன் அவரின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றி அறிதல் அவசியமாகின்றது. ஏனெனில் அவரின் கல்விக் கருத் துக்கள் பெரும்பாலும் அவரின் அனுபவத்தைக் கொண்டே இருக்கிறது. 1712-ம் ஆண்டு ஆனி மாதம் 28-ம் திகதி ஜினீவா நகரில் பிறந்தாராயினும் தனது வாழ்நாளைப் பிரான்சு நாட்டில் செலவிட்டார். ரூஸோவின் தந்தையாரான இஸாக் ரூஸோ என்பார் கடிகார உற்பத்தி செய்பவராகவும் நடன ஆசிரியராகவும் பணிபுரிந்தாராயினும் கல்வி அறிவு பெற்று இருந்தார் என்று கூறுவதற்கில்லை. தாயாரான சூசானி பெர்னுட் என்பார் சாதாரண பெண்களைப்போல் அல்லாது சிறந்த அறிவும் கலாச்சாரமும் உடையவராகக் காணப்பட்டார். ரூஸோவின் தாயார் சிறுவயதில் இறக்க தந்தையாரின் சகோதரியின் மேற்பார்வையின் கீழ் வாழ்ந்தார். இக்காலத்தில் தனது மாமியாரால் அளிக்கப்பட்ட சங்கீத அறிவைப் பெற்றுக்கொண்டு மிகுதி நேரங்களில் சுதந்திரமாக விளையாடுவதிலே செலவிட்டார். 6 முதல் 10 வயது வரை தந்தையாரிடம் தாயாரால் பேணிப் பாதுகாக்கப்பட்ட நூல்களில் இருந்து கல்வியைப் பெற்ருர். அதன்பின் இரண்டு வருடங்களுக்கு மத குருவிடம் கல்வி பயின்ருர்.

அவர் வாழ்ந்த காலத்தில் ஓர் குறிப்பிட்ட வர்க்கத்தினருக்கே கல்வி வசதி அளிக்கப்பட்டமையால் ரூஸோ பிரத்தியேக தனியார் பாடசாலைகள் இன்றி யாவையும் அரசாங்க பாடசாலைகளாக அமைத்தல் வேண்டும் எனவிரும்பினுர். ரூஸோ மாண வர்களை வித்துக்கு ஒப்பிட்டார். முளைக்கும் வித்துக்கள் எவ்வாறு நாற்று மேடைகளில் பாதுகாக்கப்படுகின்றனவோ அவ்வாறு மாணவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என விரும்பினுர். ரூஸோ பிள்ளைகள் தனித்தனியாக (individual) கவனிக்கப்படல் வேண்டும் என விரும்பினுர். ஆகவேதான் ஒவ்வோர் பிள்ளைகளுக்குந் தனி ஆசான் (Tutor) இருக்க வேண்டும் என விரும்பினுர். ரூஸோ கூறியது போன்று தனி ஆசான் அமர்த்தும் முறை இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் குருகுல முறையின் மூலம் கையாளப் பட்டதை நாம் அறிவோம்.

ரூஸோவின் கல்விக் கருத்துக்களுக்குக் காரணமாக அமைந்தமை பிளேட்டோ வினுல் எழுதப்பட்ட குடியரசும் (Republic), லொக் (Locke) என்பவரால் எழுதப்பட்ட கல்விச் சிந்தனைகள் (Thoughts of Education) என்னும் நூல்களுமேயாம். ரூஸோ தம் கருத்துக்களை விளக்கும் நோக்கமாக 1762-ம் ஆண்டு "எமில்" என்ற ஓர் குழந்தையைக் கற்பனையில் உருவாக்கி அக்குழந்தைக்கு இயல்பாகக் கல்வியூட்டும் முறையை ஒரு நூலாக வெளியிட்டார். இந்நூல் இன்றும் கல்வியுலகில் தன் செல்வாக்கை இழக்காமல் விளங்கி வருகிறது. இந்நூலின் ஓர் பகுதி புதினமாக (Novel) வும் மற்ருேர் பகுதி

கருத்துக்களின் விளக்கமாகவும் (Exposition) அமைந்துள்ளது. விஞ்ஞானத்தின் ரீதியாகக் கல்வியை முதன் முதலில் சிந்தித்த கல்வியாளர் ரூஸோ ஆவார். கல்வியை விளக்கும்பொழுது அவர் "பிறக்கும் பொழுது காணப்படும் குறைகளும் தேவைகளும் வளர்ந்தபின் கல்வியால் பூரணப்படுகிறது எனக் கூறியுள்ளார். (all that we lack at birth and need when grown up is given us by education) இவ்வகையான கல்வி இயற்கை, மனிதன் அன்றிப் பொருள்களில் இருந்தும் கிடைக்கப்பெறுகிறது. அக்காலத்தில் காணப்பட்ட கல்வி முறையை அறவே வெறுத்து அவை மாற்றியமைக்கப்பட வேண்டிய முறையையும் கூறினர். அக்காலத்தில் வெறும் பொருளற்ற பாடப்புத்தகத்திற்கும், பாடப் பொருளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதை வெறுத்தார். மாணவனின் நாளாந்த தேவைகளுக்குப் பயன்படாத பாடங்கள் கற்பிக்கப்பட்டு ஒரு சமுதாயம் உருவாக்கப் பட்டதைக் கண்டித்தார். இவரின் முன் 3R's, 3A's முறைகளேயிருந்ததேயாயினும் இவரின் ஆராய்ச்சியின் பயனுக கல்வியுலகில் 3H's முறையும் (Head, Hand, Heart) புகுத்தினர். 1938-ம் ஆண்டு வெளியிடப்பட்ட ஸ்பென்சர் அறிக்கையும் பாடவிதானம், முயற்சி, அனுபவம் ஆகியவற்றை மையமாகக் கொண்டு இருத்தல் வேண்டும் என வலியுறுத்துகிறது. ரூஸோ வகுத்த திட்டத்தில் கல்வியில் மூன்று விடயங்கள் கவனிக் கப்படல் வேண்டும் என விரும்பினர்.

(1) குழந்தையின் இயல்பை மாற்ருமல் அதே ரீதியில் வளரவிட வேண்டும்.

(2) குழந்தையின் அனுபவத்தை அடிப்டையாகக் கொண்டு வழிகாட்டல், கற்பித்தல் முறை அமையவேண்டும்.

(3) மாணவனுக்குச் சமூக இணக்கம் ஏற்பட வேண்டும் என்னும் அடிப்படையைக் கொண்டுதான் குழந்தையின் இயற்கையான தன்மையை மாற்ற வேண்டும்.

அக்காலத்தில் அமைந்த கல்வி முறையில் பிள்ளைகளின் தேவைகள் கவனிக்கப் படாமல் அவர்களின் அன்றைய தேவைகள் யாவையும் எதிர்கால தேவைகளுக்காகத் தியாகம் செய்யப்பட்டு அவர்களின் மேல் அதிக கட்டுப்பாடும் அமைந்திருந்தது. குழந்தை மனிதனின் ஓர் சிற்றுருவம் எனக் கருதல் தவருகும். என்றும் குழந்தையை குழந்தையாகவே கருதிக் குழந்தையின் திறமைக்கேற்பக் கல்வி அளிக்கப்படல் வேண்டும் என விரும்பினர். குழந்தையின் உடல் அல்லது உள்ளத்தால் ஏற்றுக்கொள்ள முடியாத கல்வியை அளிக்காமல் உண்மை நிகழ்ச்சிகளைக் குழந்தைகளுக்குக் கற்பித்தல் வேண்டும் என விரும்பினர். 20-ம் நூற்ருண்டில் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட குழந்தையை மையமாகக் கொண்டு கல்வி அமைத்தல் வேண்டும் எனும் உண்மையை 18-ம் நூற்ருண்டில் வாழ்ந்த தீர்க்கதரிசியான கல்வியாளர் ரூஸோ வெளியிட்டார்.

ரூஸோ குழந்தையின் வளர்ச்சியை நான்கு படிகளாக அமைத்தார். 0 முதல் 2 வரையான குழவிப் பருவ (Infancy) த்தில் எண்ணங்களும், உணர்ச்சிகளும் மனதில் தோன்றினுலும் அவைகளுக்கு கருத்துத் தெரிவிக்கும் விடயத்தில் ஓர் சிறு அளவிலான தாக்கம் தான் ஏற்படும். அதையடுத்து 2 முதல் 5 வரையான குழந்தைப்பருவம் (Childhood) இக்காலத்தில் குழந்தை சொல்லுடன் பொருளைப் பார்த்து அறிவைப் பெறக் கூடியதாக விருக்கும். இக்காலத்தில் குழந்தைகள் எளிய சுதந்திரமான, ஆரோக்கிய மான சூழ்நிலையில் வளர்க்கப்படல் வேண்டும். குழந்தைகள் பிறர் குறுக்கீடுகளோ இன்றிக் கட்டாயப்படுத்தலோ இன்றி வளர அனுமதிக்கப்படல் வேண்டும். 5 முதல் 12 வயது வரையான பிள்ளைப் பருவத்தில் (Boyhood) மனது உணர்ச்சிகளின் தாக்கத்தில் இருந்தாலும் கூட நுண் அறிவைப் பெற்றதாக இருக்கும். இக்காலத்தில் உடல் வளர்ச்சிக்கான பயிற்சிகள் கொடுத்தல் குறைவானதாகவிருந்தால் விரும்பத்தக்கது. 12 முதல் 15 வயது வரை காளைப் பருவம் (Youth) இப்பருவத்தில் மனவளர்ச்சி அடையப்

பெற்று ஓரளவு விடயங்களை ஆராய்ந்து அறியக்கூடிய தன்மை ஏற்படக்கூடிய பருவமாகும். அறிவு வளர்ச்சி அடையப்பெற்றாலும் கூட ஒழுக்கத்தைப் பொறுத்தவரையில் அவன் எவ்வாறு தன் பிள்ளைப் பருவத்தில் நடந்து கொண்டானோ அவ்வாறே தான் தன் குமரப் பருவத்தின் முற்பகுதியில் நடந்துகொள்வான். இப்பருவத்திலே இயற்கை உலகு பற்றி அறிவதற்காய அடிப்படையான ஆராய்வூக்கம் தென்படும். குழந்தையின் ஆராய்வூக்கத்தையும், கவர்ச்சிகளையும் ஒரு முகப்படுத்திப் பல்வேறு இயற்கைப் பிரச்சினைகளைத் தூண்டிக் கற்பித்தலை முறையாக அமைத்தல் வேண்டும். இக்காலத்தில் வரலாறு, கதைகள் போன்றவற்றைக் கற்பித்தால் தான் வாழப்போகும் சமூக அமைப்பு பற்றியும், சமூகத்துடன் இசைந்து வாழக்கூடிய ஆற்றலையும் சிறுவனிடம் இது தோற்றுவிக்க ஏதுவாக அமையும். இக்காலத்தில் குழந்தை தன் பிற்காலத்தில் சுதந்திரமாக வாழ்வை நடாத்தக்கூடிய வகையில் ஒரு வாழ்க்கைத் தொழிலைக் கற்பித்தல் வேண்டும். 15 முதல் 20 வயது வரையான காலம் கல்வியின் கடைசிக் கட்டமாகும். இக்காலத்தில் ஒழுக்கப் பயிற்சியே நடுவிடம் பெறுகின்றது. இப்பயிற்சி பிற்காலத்தில் அவன் சமூகத்தில் மற்றவர்களுடன் பரிவுடனும், சிநேகமாகவும், ஒழுக்கமாகவும் வாழ வழியமைக்கும். சிறுவனது மனவெழுச்சிகள், பாலுணர்ச்சிகள் யாவையும் தூய்மைப் படுத்தப்பட்டுப் பிற்காலத்தில் அறநெறி அடிப்படையில் வாழ வழியமைக்கக் கூடியதாக இப்பயிற்சி அமைதல் வேண்டும். குழந்தை இப்பயிற்சி பெற்று முடிவடையும் காலத்தில் சிறந்த மனிதப் பண்புகளுள்ள முழுமையான ஆளுமையினைப் பெற்றவனாக அவன் உருப்பெற்றிருப்பான்.

ரூஸோ தன் இளமைப் பருவத்திலே தாயாரை இழந்தமையின் நிமித்தமாக தாய்மை அன்பைப்பெற முடியவில்லை. ஆகவேதான் அவர் பெண்களுக்கு அளிக்கப்பட வேண்டிய கல்வி முறையையும் அதன் முக்கியத்துவத்தையும் விளக்கினார். குடும்பத்தில் ஏற்படும் பிரச்சினைகள் மற்றும் கெடுபிடிகள் முதலியவற்றைச் சமாளித்துச் சந்தோஷமாக வாழ்க்கை அமையவேண்டும் எனில் குடும்ப ஒற்றுமை நிலவ வேண்டும் என வலியுறுத்தினார். ( The Charms of the home is the antidote of wise ) எமில் என்னும் கற்பனைக் குழந்தைக்குச் சோபி என்னும் பெண்ணை வாழ்க்கைத் துணைவியாகக் கற்பனை செய்து சோபியின் கல்வி எவ்வாறு அமைதல் வேண்டும் என விபரித்துள்ளார். 13 வயது வரைக்கும் ஆண்களைப் போலான கல்வி அமைந்தாலும் கூட மேலும் தொடரப்படும் கல்வி மாறுபட்டதானதாக இருத்தல் வேண்டும் என விரும்பினார். பெண்களின் கல்வியில் தத்துவம், அறிவியல் போன்ற பாடங்கள் முதன்மை பெறாமல் கட்டுப்பாட்டுடன் நடக்கவும், கீழ்ப்படிந்து நடக்கவும், ஆண்களைச் சந்தோஷப்படுத்தவும், அவர்களுக்கு உதவவும் அவர்களால் அன்புகாட்டப்படவும், மதிக்கப் படவும், இளமையில் கற்பிக்கவும் அவர்களுக்கு அறிவுரை கூறவும் வாழக்கையை வாழக்கூடிய வகையில் சந்தோஷமாக அமைப்பதற்கும் ஏற்றமுறையான கல்வி அளிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். இம்முறையான கல்வியின் மூலம் ஆண்களை விடப் பெண்கள் குறைந்தவர்கள் எனக் கணிக்கப்படக் கூடாது எனக் கருதினார். ஆண்கள் பெண்கள் இருவருமே மாறி ஒருவருக்கொருவர் உதவி செய்தல் வேண்டும் என விரும்பினார் இவ்விடயத்தில் அவர் கூறும் ஆங்கில வாக்கியம் நோக்கத்தக்கது " Women are specially Constituted to please men," he immediately adds that " men in their turn have to please women".

கல்வியாளர் ரூஸோவின் சிறப்பு மிக்க கல்விக் கருத்துக்களைத் தொகுத்துப் பார்த்தல் அவசியமாகும்.

(1) குழைந்தையின் தேவைகள், இயல்புகள் பற்றி ஆசிரியர் அறிந்திருத்தல் வேண்டும். குழந்தையின் கவர்ச்சி, செயல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட குழந்தை மையக் கல்வியாக (Child centered Education) அமைய வேண்டும் என விரும்பினார்.

(2) பிறர் குறுக்கீடுகள் எதுவுமின்றிச் சுதந்திரமாகக் கல்விபெற வேண்டும் என விரும்பினர். சுதந்திரம் மறுக்கும் பொழுது மனமுறிவு, மனத்தாக்கம் போன்றன ஏற்படும். இதனல் அவனை சமூகம் ஏற்காத நிலை ஏற்படும். சமூகம்தான் உண்மையான கற்றல் ஸ்தாபனம் எனக் கூறினர். (Real education is society) கல்வியில் சுதந்திரம் அளிக்கப்படல் வேண்டும் எனும் கருத்தை இவரின் பின் வந்த கல்வியாளர்களான மான்டிசோரி, ஜான்டுயி போன்றவர்கள் வலியுறுத்தினர்கள்.

(3) குழந்தை புலன்களின் வழியே தனது கல்வி அறிவை வளர்ப்பதனல் அறிவு வளர்ச்சிக்கு முன் புலப்பயிற்சி (Sense Training) அளிக்கப்படல் அவசியம் என வலியுறுத்தினர்.

(4) தானேகற்றல் (Auto Education), செய்துகற்றல் (Learning by Doing) போன்ற கல்விக் கொள்கைகளை வலியுறுத்தினர். முயன்று கற்றலை ஜான்டுயியும், செய்து கற்றலைக் காந்திஜியும் வலியுறுத்தினர்கள். இவைகள் யாவும் இருபதாம் நூற் ண்டுக் கல்வியுலகில் பெருமளவிற்குப் பயன் படுத்தப்படுகிறது.

(5) கைத்தொழிலைக் கற்பிப்பதன் மூலம் கல்வியில் உடல் உழைப்பின் இன்றியமையாமையை விளக்கியுள்ளார். இக்கருத்தைக் காந்திஜி வலியுறுத்தினர்.

(6) எதிர் முறையான (Negative) கல்வி அமையவேண்டும். இம்முறையில் குழந்தைகள் குற்றங்களைச் செய்யாது தடுக்கும்போது அது ஒரு நல்ல பலாபலனை அளிக்கக் கூடியதாகயிருக்கும் என நம்பினர். எதிர் முறையான கல்வியில் பிள்ளைகளின் வளர்ச்சிப் பருவம் தேவைகள், ஆற்றல் என்பனவற்றை உணர்ந்து அளித்தும் அது மட்டுமன்றி அவனை உண்மையான வழியில் செலுத்தி அவன் வளர்ந்து பராயம் அடைந்தவுடன் அவன் தான்பெற்ற கல்வியை அறிந்து, விரும்பிப் பாராட்டக் கூடியதாகவும் இருக்கும் எனக் கூறினர். இதைவிடுத்து நேர்முறையான (Positive) கல்வியில் பக்குவம் அடையாத பிள்ளையின் மனம் ஒரு மனிதனின் கடமைகளைச் செய்யக் கூடியதான பயிற்சி அளிக்கப்படுகிறது.

தேவைகள் மறுக்கப்படும் பொழுது அவை புரட்சிக்கு வித்தாக மாறுகின்றன (Repression is the Seed of Revolution) என்னும் சேக்ஸ்பியர் கூற்றுக்கிணங்க ரூஸோவின் இளமைக் காலத்திலும், வாழ்வின் வசந்த காலமாகிய குமரப்வருவத்திலும் கல்வி கற்பதில் ஏற்பட்ட இடர்ப்பாடுகளின் காரணமாகக் கல்வியுலகில் காணப்படும் அன்றிக் கையாளப்படும் கல்விமுறையை அன்றே வகுத்தபடியால் ஓர் தீர்க்கதரிசியாகவும் தனக்குப்பின் தோன்றிய கல்வியாளர்களின் திட்டங்களுக்கும் செயல் முறைகளுக்கும் அடித் தளம் அமைத்த படியால் கலங்கரை விளக்காயும் கல்வியுலகில் மிளிர்ந்தார். வாழ்வின் முற்பகுதியில் சமூக சேவையாளராகவும் வாழ்ந்து, வாழ்வின் பிற்பகுதியில் குழந்தையின் இயற்கையான வளர்ச்சி முறையை அடிப்படையாகக் கொண்டமைந்த கற்பித்தல் முறையை உருவாக்கிச் செயற்படுத்தினர்.

ஈ. ஸி. வேலாயுதபிள்ளை

# மேரி மொன்டி சூரி அம்மையாரின் கல்விக் கொள்கைகள்

''பாலர்கள்'' தயாரிக்கப்பட்டதோர் நற்சூழ்நிலையில் சுதந்திர அடிப்படையில் கற்றுக்கொள்வதையே மொன்டிசூரி அம்மையாரின் பாலர் கல்விப்பயிற்சிமுறை விளக்கிக் கூறுகிறது. இற்றைக்கு அறுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பதாக வைத்தியகலாநிதி மேரி மொன்டி சூரி அம்மையார் இத்தாலி நாட்டிலே அதன் தலைநகருக்கு அருகாமையிலுள்ள ஓர் ஏழைக் கிராமத்தில் சிறுவர்க்கான வொரு சிறிய ஆய்வு பாடசாலையை ஆரம்பித்துள்ளார். நவீன விஞ்ஞான உளவியற் தத்துவங்களை அனுசரித்தே அம்மையார் இப்பாடசாலையை ஸ்தாபித்தார். இப்பாடசாலைக்குக் குழந்தைகள் இல்லம் எனப் பெயரிட்டார். இன்று இலங்கையின் பல பாகங்களிலும் பாலர் பாடசாலை அல்லது மொன்டி சூரிப் பாடசாலை என்ற வெறும் நவீன நாமத்தை விளம்பரமாகக் கொண்ட அநேக பாடசாலைகள் தோன்றியுள்ளன. ஒருசில மொன்டி சூரிப் பாடசாலைகளிற் கூட எடுத்துக் காட்டாகப் பூரண அமைப்பைக் காண்பதரிது.

சிறுவர்களை நாம் அடக்கி ஆண்டு சுயாதீனமற்ற சூழ்நிலையில் வளர்ப்போமானல் அவர்களில் காணப்படும் சுய ஆற்றல் குன்றிப்போய்விடும். வெறும் விளையாட்டுப் பொருட்களையும், பொம்மைகளையும் எவ்வித திட்டமும், ஆயத்தமும், கிரமுமின்றிக் காட்டிப் பயிற்சியளிப்பதல்ல. மொன்டி சூரி முறை. சிறுவர் கல்விப் பயிற்சி முறையில் கையாளப்படுவன எவையும் அர்த்தமற்ற விளையாட்டுப் பொருட்களல்ல. உபகரணங்கள் யாவும் ஐந்து வருட ஆராய்ச்சிக்குப் பின்னரே அம்மையார் நன்ருகத் திட்டமிட்டுப் படிமுறைக் கிரமப்படி சிறுவர்களின் உடல் உளவளர்ச்சி விருந்திக்கென விசேடமாக ஆக்கி அமைத்தார். அப்பாடசாலையில் காணப்பட்ட உபகரணங்கள் யாவும் அழகான பெட்டிகளிலும், உறைகளிலும், சிறுவர்களுக்கு எட்டக் கூடிய நீண்ட இருக்கிகளில் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும். சிறுவர்கள் தங்களுக்கு விருப்பமான எந்த ஒரு உபகரணப் பெட்டியையோ, உறையையோ சுயேச்சையாகத் தெரிந்து கொள்ளலாம். ஒவ்வொரு சிறுவருக்கும் சொந்தமாக ஒரு சிறு மேசையும் நாற்காலியும் கொடுக்கப்படும். ஒவ்வொருவரும் சுயேச்சையாக நடமாடித் திரிவதற்கென இட வசதியும் அளிக்கப்படும். பயிற்சி உபகரணத்தை மேசை மீது வைத்துப் பயிலலாம். இன்றேல் ஒரு தனி அறையில் சிறுவர்களுக்கெனக் கொடுக்கப்பட்ட அழகிய வண்ண நிறக் கம்பளத்தையோ அல்லது சமுக்காளத்தையோ தரைமீது தாங்களாகவே விரித்து விட்டு அதன் மேல் உட்கார்ந்து பயிலலாம். ஒரு சிறுவனுடைய பயிற்சியில் வேறு எந்த மாணவனும் தலையிட விடாது ஆசிரியர் கவனித்துக் கொள்ளுதல் வேண்டும். அதேபோல் பயிற்சி முடிந்ததும் உபகரணங்களை வீசிவிட்டுச் செல்லாது கவனிப்பதும் ஆசிரியர் கடமையாகும். ஒவ்வொரு பொருளையும் அதற்குரிய இடத்தில் ஒழுங்காக வைக்கப் பழகுதல் அவசியம். இத்தகைய ஒழுங்கு முறைகள் யாவும் நம் நாட்டின் மொன்டி சூரிப் பாடசாலைகளில் காண்பது மிக அரிதாகும்.

இப்போது அம்மையாரினது மொன்டி சூரிப் பாடசாலைகளில் கையாளப்படும் கல்விக் கொள்கைகளைச் சற்று ஆராய்வோம். முக்கிய கல்வி அறிஞர்களாகிய ரூசோ, பெஸ்ரலோஜி, பிறீபல் போன்றவர்களின் கல்வித் தத்துவங்களையே அம்மையார் ஆராய்ந்து அவற்றை அடிப்படையாகக் கொண்டு இம் முறையைத் தயாரித்துள்ளார்.

ரூசோ அவர்கள் (1) பிள்ளைகள் தானேகற்றல் (2) செய்து கற்றல் (3) குழந்தை மையக் கல்வி ஆகிய இம் மூன்று கொள்கைகளிலும் முக்கிய கவனம் செலுத்தினர். அத்தோடு பெஸ்ரலோஜி என்பார் பிள்ளைகளின் வீடும் பாடசாலைகளும் ஒன்ருக இருக்க வேண்டுமென்றும் அதுவே கற்றலின் தொடக்க நிலையென்றும் உறுதிப்படுத்தினர். இன்னும் பிறீபல் என்னும் அறிஞர் பிள்ளைகளின் உள்ளத்தில் தோன்றும் இயல்பான மலர்ச்சியே கல்வியென்றும் குழந்தைகளுக்குக் கற்கும் பொழுது பூரண சுதந்திரம் கொடுக்கவேண்டுமென்றும், பிறர் தூண்டுதலின்றி அவர்கள், கவர்ச்சி, அனுபவம், செயல்கள் மூலமே கற்றுக் கொள்கிருர்கள் என்றும் உணர்ந்தார். ஆகவே ''குழந்தைப் பூங்கா'' என அழைக்கப்படும் சிறுவர் பாடசாலையொன்றை முதல் முதலாக ஆரம்பத்தில் அமைத்தார். ஆசிரியர்களாகிய நாம் இப்பாடசாலைகளில் குழந்தைகளோடு குழந்தைகளாகவே வாழவேண்டுமென்றும் வற்புறுத்தினர். எனவே கலாநிதி மொன்டிசூரி அம்மையார் அவர்கள் இம் மூவர்களினதும் கல்விக்கொள்கைகளை அடிப்படையாக வைத்தே குழந்தைகளின் சுதந்திரத்திற்கு முக்கிய இடம் கொடுத்துப் புலனறிவுகள் மூலம் அவர்கள் கற்க வேண்டுமென்றும் நன்குணர்ந்தார். அத்தோடு பிள்ளைகள் கற்கும் பொழுது தாமாகவே கற்க வேண்டுமென்றும் வற்புறுத்தினர். இதுவே மொன்டிசூரி அம்மையாரின் கல்விக் கொள்கைகளாகும்.

நா. தேவபாலசிங்கம்

''நல்ல சூழ்நிலையில், சுதந்திர அடிப்படையில், பயிற்சி முறையில் பாலர்கள் கல்வி கற்க வேண்டும்.''

# ஜோன் டியூயின் கல்விக் கொள்கை

கல்வி என்றால் என்ன? கல்வியின் இலக்கு யாதாயிருக்க வேண்டும்? கல்வி யாருக்கு அளிக்கப்பட வேண்டும்; யாரால் அளிக்கப்பட வேண்டும்? கல்வி எத்தகையதாக இருக்க வேண்டும்? கல்வி எத்தகைய சூழலில் அளிக்கப்படவேண்டும்? கல்வி ஏன் அளிக்கப்படவேண்டும்? கல்வியின் பயன் என்ன?

— இத்தகைய கேள்விகளுக்கு விடைகாண முற்பட்டு, தமது முயற்சியின் காரணமாக உலகத்தின் கவனத்தைத் தம் பக்கம் ஈர்த்த பெருமக்களையே நாம் கல்விச் சிந்தனையாளர்கள் என்கிறோம்

பிளேட்டோ, ரூசோ, பிறீபல், டியூயி, காந்தியடிகள் ஆகியோர் இந்த வரிசையைச் சேர்ந்தவர்கள்.

பிளேட்டோவின் கல்விக் கொள்கை இலட்சியவாதத்தின் பாற்பட்டது. இதனை அறிவு மையக் கல்விக் கொள்கை என்றும் சொல்லலாம். இக்கொள்கையில் சில உண்மைகள் நித்தியமானவை என்றும், முழுமையானவை யென்றும், அவற்றையடைவதே கல்வியின் இலக்காக இருக்கவேண்டும் என்றும் கொள்ளப்பட்டது.

பிளேட்டோவுக்குப் பின்னர் வந்த ரூசோவின் கல்விக்கொள்கை இயற்கை வாதத்தின் பாற்பட்டது. இதனை மாணவ மையக் கல்விக்கொள்கை என்றும் கூறலாம். இக்கொள்கையில் குழந்தை ஒன்று இயற்கையான சூழலில் அதனது இயற்கையான தன்மைக்கேற்ப, அதனது விருப்புக்கள், தேவைகள் என்பனவற்றிற்கு இயைந்த நிலையில் அக்குழந்தைக்குக் கல்வி புகட்டப்பட்டால் அக்குழந்தை ஒரு முழுமையான மனிதனாக வளர்ச்சியடையும் என்று கொள்ளப்பட்டது.

ஆனால், கல்வியை அறிவு மைய நிலையிலோ, அல்லது மாணவ மைய நிலையிலோ நிலைநிறுத்தாமல் சமுதாயத்தை மையமாகக் கொண்டு அமைக்க வேண்டும் என்ற கருத்தை வெளியிட்டவர் அமெரிக்க நாட்டறிஞரான ஜோன் டியூயி அவர்கள்.

இவர் அமெரிக்காவிலுள்ள பேர்லிங்டன் என்னுமிடத்தில் 1859-ம் ஆண்டில் பிறந்தவர். பல்கலைக்கழகப் படிப்புக்குப் பின்னர் மிச்சிக்கன், மின்னசோட்டா, சிக்காக்கோ, கொலம்பியா ஆகிய பல்கலைக் கழகங்களில் பேராசிரியராகப் பணியாற்றியவர். சிக்காக்கோ பல்கலைக்கழகத்தில் 1894-ம் ஆண்டில் கல்வித்துறைப் பேராசிரியராக இவர் பணியாற்றியபோது அங்கு இவரால் ஆரம்பித்து நடத்தப்பட்ட "செய்முறைப் பாடசாலை" கல்வித் துறையில் ஒரு பெரும் புரட்சி ஏற்படுவதற்கு வழிவகுத்தது. கல்வி, ஜனநாயகம், தத்துவம் ஆகிய துறைகளில் இவர் உழைத்து எழுதிய நூல்கள் உலகப் பிரசித்தமானவை; பெரும் சிந்தனைப் புரட்சிக்கு வித்திட்டவை. இவர் இயற்கை எய்தியது 1952-ம் ஆண்டிலாகும்.

பிளேட்டோ ஒரு இலட்சிய அரசினால் ஆளப்படும் ஒரு இலட்சிய சமுதாயத்தை உருவாக்குவதன் மூலம், இலட்சிய மனிதர்களை உருவாக்க முடியுமென நம்பினர்.

ஆனால் ரூசோவோ ஒவ்வொரு தனி மனிதனையும் இலட்சிய மனிதனாக உருவாக்குவதன் மூலம் ஒரு இலட்சிய சமுதாயத்தைப் படைக்க முடியும் எனக் கனவுகண்டார்.

எந்தக் கல்விக் கொள்கையை எடுத்துக் கொண்டாலும் அக்கொள்கைகள் சில அடிப்படையான வேறுபாடுகளை ஆராய முற்படுவதையே நாம் பார்க்க முடியும். அறிவுக்கு முதலிடம் கொடுப்பதா அல்லது ஒழுக்கத்திற்கு முதலிடம் கொடுப்பதா என்றோ அல்லது தனி மனிதனுக்கு முதலிடம் கொடுப்பதா அல்லது சமுதாயத்திற்கு முதலிடம் கொடுப்பதா என்றோ இப்பிரச்சினைகள் ஆராயப்படுவதை நாம் அவதானிக்க முடியும்.

தனி மனிதன் ஒருவன் எச்சந்தர்ப்பத்திலும் நடைமுறையிலிருக்கும் சமுதாயம் ஒன்றிலேயே வளர்ந்து வாழவேண்டியுள்ளது. எனவே ஹேபர்ட் ஸ்பென்ஸர் என்ற கல்வியாளர் கூறியிருப்பது போல ஒரு மனிதன் முழுமையான வாழ்க்கையை அனுபவிக்க வேண்டுமேயானால் அவன் அச்சமுதாயத்திலிருக்கும் சகல துறைகளிலும் அனுபவம் உள்ளவனாகவும், ஆற்றல் மிகுந்தவனாகவும் இருக்கவேண்டியுள்ளது. எனவே, கல்வியின் இலக்குக் குறித்தும், கல்வி முறையில் கொள்ளப்படவேண்டிய வழிமுறைகள் குறித்தும், கல்வியின் உள்ளடக்கம் குறித்தும் சிந்திக்கும்போது சமுதாயத்தையும் தொடர்பு படுத்தியே சிந்திக்கவேண்டியிருக்கின்றது.

சமுதாயத்தைத் தொடர்புபடுத்திக் கல்வி பற்றிய கருத்துக்களை மிகவும் நுணுக்கமாக வெளியிட்டவர் ஜோன் டியூயி அவர்கள். இவருடைய கருத்தின்படி கல்விக்கு ஓர் ஆக்க பூர்வமான பணி உண்டு. திட்டமிடப்பட்ட முறையில் சமுதாயத்தை மாற்றியமைக்கும் பணியையும் கல்வி மேற்கொள்ளப்பட வேண்டுமென்பது இவரது கருத்தாகும்.

தனிமனித ஆற்றலையோ, சமுதாய ஆற்றலையோ வளர்ப்பது மட்டும் கல்வியின் இலக்கு அல்ல.

நடை முறையிலிருக்கின்ற சமூக அமைப்பை மாணவர்கள் விமர்சிப்பதற்கும், அச்சமூக அமைப்பை அவர்கள் புனர் நிர்மாணம் செய்வதற்கும் வழிசெய்யும் முறையில் கல்வியின் இலக்கு அமைய வேண்டும் என்பது டியூயின் கருத்தாகும்.

ஒரு பரந்த அடிப்படையில் நோக்கும்போது கல்வி என்பது ஒரு சமூகம் தான் வாழவும், தான் வளரவும் தனது இளைய தலைமுறையினருக்கு அளிக்கின்ற ஒரு கருவியாகக் கொள்ளப்படலாம்.

குழந்தைகளின் இயற்கையான தன்மை அவர்களை செயலாற்றத்தூண்டுகிறது. ஆனால் இச் செயலுக்கு இயற்கையானதான ஒரு குறிக்கப்பட்ட ஒழுங்கான வடிவம் கிடையாது.

சமூகம் குழந்தையின் செயற்றுடிப்புக்கு ஒரு ஒழுங்கான வடிவம் கொடுக்க முயற்சி செய்கின்றது.

இம்முயற்சியையே கல்வி என்கின்றோம்.

குழந்தையின் இயற்கையான செயலாற்றும் துடிப்புக்குச் சமூகம் ஒரு ஒழுங்கான வடிவத்தைக் கொடுக்க முயற்சி செய்யாவிட்டால் அத்துடிப்பு முரண்பட்ட திசைகளில் வளர்ச்சியடைந்து அச்சமூகத்தைக் கட்டிக் காத்துப் பேணுகின்ற சக்திகளையே நாசம் செய்யவும் முனைந்துவிடும். எனவே, ஒரு சமூகம் தன்னை வாழவைப்பதற்கோ அல்லது வளர்த்துக் கொள்வதற்கோ மட்டுமன்றித் தன்னை அழிவிலிருந்தும் காத்துக் கொள்வதற்குமே கல்வி மிக மிக இன்றியமையாததாகின்றது.

கல்வியைச் சமுதாயத்துடன் தொடர்படுத்திச் சிந்தித்துக் கல்வியின் உள்ளடக்கம் எதுவாக இருக்கவேண்டும் என்பது பற்றியும், கல்வியளிக்கப்படவேண்டிய முறை எத்தகையதாக இருக்கவேண்டும் என்பது பற்றியும் டியூயி அவர்கள் மிகவும் ஆணித்தரமான முறையில் தனது கருத்துக்களைத் தெரிவித்திருக்கின்ருர். இக் கருத்துக்கள் செயல்முறைவாதம் என்ற தத்துவத்தைச் சார்ந்து நிற்பவை.

கல்வி புகட்டப்படவேண்டிய முறை ''ஒழுங்கின்'' அடிப்படையில் அமைய வேண்டுமேயல்லாது அதிகாரத்தை நம்பியதாக இருக்கக் கூடாதென்பது டியூயின் கொள்கை.

அதிகாரம் வெளிச் சக்திகளின் விளைவு.

ஒழுங்கு—தனது வசதி, தனது தேவை கருதி ஒருவன் தனக்குத் தானே ஏற்படுத்திக் கொள்கின்ற நடை முறை.

சில விளைவுகள் நன்மையானவையென்றும் அந்த நன்மைகளை அடைவதைக் குறிக்கோளாகவும் கொண்டு பிரயோகிக்கப்படுவதே அதிகாரமாகும்.

ஆனல் எந்த விளைவையும் முன் கூட்டியே நல்லதென்று கூறமுடியாதென்பது டியூயின் கருத்தாகும்.

''நல்லது'' என்பது ஒப்பீட்டு முறையிலே பார்க்கப்பட வேண்டிய ஒன்ருகும் இதைப் போலவே.

''விருப்பம்'' என்பது கட்டாயப்படுத்துவதன் மூலம் உண்டாக்கப்பட முடியாத தொன்ருகும்.

எனவே,

கல்வியில் ''ஒழுங்கு'' என்பது ஒரு போதுமே வெளி அதிகாரத்தின் மூலம் உருவாக்கப்பட முடியாத ஒன்ருகும்.

மாணவர் கற்க வேண்டுமென்ற ஆர்வத்தினல் உந்தப்படும் போது தன்னைத் தானே ஒழுங்கு படுத்திக் கொள்கிருன்.

தனது அறியாமையை உணர்ந்த உடனேயே மாணவன் ஒருவன் கற்கவேண்டுமென்ற ஆர்வத்தினல் உந்தப்பட்டுத் தன்னைத்தானே ஒழுங்குபடுத்த முயல்கின்ருன்.

மாணவன் தனது அறியாமையை உணர்வதற்கு ''பிரச்சனை'' ஒன்று வேண்டும். ''பிரச்சனையை''த் தீர்க்க முற்படும்போது கல்வி தொடங்குகிறது.

எனவே, கல்வியின் முதற்படி ''பிரச்சனை'' ஒன்று உள்ளதென்பதை உணர்தலேயாகும்.

''பிரச்சனை'' ஒன்று உள்ளதென்பதை உணர்ந்திருப்பதனல் மட்டுமே அப்பிரச்சனைக்குத் தீர்வு காணும் முயற்சியில் மாணவன் ஒருவன் நிச்சயமாக ஈடுபடுவான் என்று சொல்ல முடியாது.

பிரச்சனைக்குத் தீர்வு காணும் முயற்சியில் அவன் ஈடுபடும்போது, அவனைச் சார்ந்திருக்கும் குழுவிலிருந்து அவனை விலகச் செய்யும் வண்ணம் பிரச்சனைக்குத் தீர்வு காணும் முயற்சி இருக்குமேயானல் அவன் அச்செயலில் இயங்குவதற்குத் தயங்கவே செய்வான்.

அவனைச் சார்ந்தோரும் அப்பிரச்சனைக்குத் தீர்வுகாணும் முயற்சியிலீடுபடும் போதுதான் அவன் அச்செயலில் முழுமையாகத் தன்னை ஈடுபடுத்திக் கொள்வான்.

எனவே, கல்வியின் இரண்டாவது படி மாணவன் அவனைச் சூழவுள்ள குழுவினரோடு சேர்ந்து அவர்களது நோக்கங்கள் வேறுபடா வண்ணம் செயலாற்றும் முயற்சியிலீடுபடுவதாகும்.

ஒழுங்கின் அடிப்படையில் அமைந்த கல்வி பெறும் முயற்சிக்குத் தேவையான அடிப்படைகளாகப் பின்வருவனவற்றைக் குறிக்கலாம்.

(1) எந்த வகையான கட்டாயப் படுத்தும் செயல்களும் தவிர்க்கப் பட வேண்டும். — கட்டாயம் இருக்குமேயானால் அக்கட்டாயத்திலிருந்து தப்புவது எப்படியென்று மாணவன் சிந்திப்பானே தவிர கற்கவேண்டுமென்ற ஆர்வத்தினால் தூண்டப் பட மாட்டான். அடித்தல், ஏசுதல், கோபித்தல், பரீட்சையில்கூடிய புள்ளிகள் பெற வேண்டுமென ஆசைப்பட வைத்தல் என்பன போன்றவை எல்லாமே ஒருவகையான கட்டாயத்தின் பாற்பட்டவையென்றுதான் சொல்லவேண்டும்.

(2) மாணவன் ஒருவன் ''பிரச்சனை'' ஒன்று உள்ளதென்பதை உணரும்படியாக ஆசிரியர் செயலாற்றவேண்டும் — பிரச்சனையைத் தீர்க்க வேண்டுமென்ற உணர்வுதான் கற்கவேண்டுமென்ற ஆர்வத்தை மாணவனிடம் தூண்டுகிறது.

(3) மாணவனிடம் கற்கவேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டுவதற்கு ஒவ்வொரு தனி மாணவனதும் அவனது தனிப்பட்ட விருப்புக்கள், வெறுப்புக்கள், ஆசைகள், தேவைகள் என்பனவற்றை உணர்ந்தவராக ஆசிரியர் இருக்கவேண்டும். எல்லா மாணவர்களும் ஒரேவகையான விருப்பு வெறுப்புகளையும் ஆசைகளையும், தேவைகளையும் உள்ளவர்களாக இருப்பார்கள் என்று எதிர்பார்ப்பது தவறாகும். ஒவ்வொரு மாணவனையும் கற்கவேண்டும் என்ற ஆர்வமுடையவனாக ஆக்குவதற்கு ஒவ்வொரு மாணவனைப் பற்றியுமே ஆசிரியர் நன்கு அறிந்திருக்கவேண்டியது மிக மிக அவசியமாகும்.

(4) வகுப்பில் உள்ளோர் அத்தனை பேரும், ஆசிரியர் உட்பட, கற்கும் முயற்சியில் ஒருவரோடு ஒருவர் கூட்டுறவு முறையில் இணைந்து செயல்படும் ஓர் சூழலை உருவாக்கவேண்டியது ஆசிரியரது கடமையாகும். கூட்டுறவின் அடிப்படையில் செயல்படும் இக்குழுவில் ஆசிரியர் அதிக அனுபவம் உள்ளவராக செயல்படுகின்றாரே தவிர அதிக அதிகாரமுடையவராக செயல்படக்கூடாது.

இத்தகைய அடிப்படையில் கற்றல் நிகழுகின்ற போது மாணவன் தனது செயல் மூலமே கல்வி பெறுகின்றான்.

செயல் மூலம் கல்வி என்பது டியூயி அவர்களது கல்விக் கொள்கையின் அடிப்படையான அம்சமாகும்.

அனுபவத்தின் மூலம்பெறப்படும் வளர்ச்சிதான் கல்வி என்பது டியூயியின் கருத்தாகும்.

அனுபவம் கல்வியின் அடிப்படை என்று சொல்கின்ற அதே நேரத்தில் எல்லா அனுபவங்களும் கல்வி ஆகாது என்பதை ஒப்புக்கொள்ள அவர் தயங்கவில்லை.

கல்விமுறை பற்றி டியூயி கூறியுள்ள கருத்துக்களைப் போலவே கல்வியின் உள்ளடக்கம் பற்றியும் டியூயியின் கருத்துக்கள் மிகவும் புரட்சிகரமானவை. ஒரு சமூகம் தான் வாழவும் வளரவும் தனது இளைய தலைமுறையினரை ஒழுங்கு படுத்தும் முயற்சிதான் கல்வி என்னும் வரைவிலக்கணத்திற்கு அமையவே கல்வியின் உள்ளடக்கம் பற்றிய டியூயியின் கருத்துக்களும் உள்ளன.

ஒரு சமூகத்திலுள்ள தொழில்களும் கலைகளும் சமூகவளர்ச்சிக்குத் தேவையான அறிவியல், சமூகவியல், கலையியல், பொருளியல் பாடங்களும் கல்வியின் உள்ளடக்கமாக இருக்க வேண்டுமென டியூயி விரும்பினுர். ஆனுல் இத்தனை விசயங்களும் கல்வியின் உள்ளடக்கமாக அமைந்த போதிலும் ஒவ்வொரு தனி மாணவனது விருப்புக்கள் வெறுப்புக்கள், தேவைகள் என்பனவே கல்வியின் அடிப்படையாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்த அவர் தயங்க வில்லை.

இந்திய விடுதலைக்குப் பெரிதும் உழைத்த காந்தியடிகள், கல்வி பற்றியும் மிகவும் ஆழமாகச் சிந்தித்துத் தனது கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

காந்தியடிகளின் கல்விக் கொள்கைக்கும் டியூயி அவர்களின் கல்விக் கொள்கைக்கும் இடையில் பெருத்த ஒற்றுமை உண்டு. இருவரது கல்விக் கொள்கைகளையும் ஒப்பிட்டு நோக்கும்போது டியூயி அவர்களின் கல்விக் கொள்கைகளே காந்தி அடிகளின் கல்விக் கொள்கைக்கு அடிப்படையாக அமைந்திருக்கின்றன, என்று கூடச் சொல்லலாம் போலத் தோன்றுகின்றது.

இன்று இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கும் புதிய கல்வித் திட்டம் பெருமளவுக்கு டியூயி அவர்களினதும் காந்தி அடிகளினதும் கல்விக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டதாகவே உள்ளது.

சு, குமாரசாமி

“அனுபவம் கல்வியின் அடிப்படை என்று சொல்லுகின்ற அதே நேரத்தில் எல்லா அனுபவங்களும் கல்வியாகாது”.

# பெற்றூர் - ஆசிரியர் - மாணவர் தொடர்பு

இவ்விடயத்தில் நடுநாயகமாக விளங்குபவர் மாணவராகும். ஒரு மாணவன் ஒரு பூரணமான முழு அம்சமாகும். அவனது ஆளுமை (Personality) யை விருத்தியாக்குவதே ஆசிரியராகிய எமது நோக்கமாகும். அவனது மானத சுகநலம் சீராக இருத்தல் வேண்டும். அதற்கு அவனது மனவெழுச்சிகள் (உள்ளக்கிளர்ச்சி) சரியான துறையில் செம்மையான முறையில் வழி நடாத்தப்பட வேண்டும்.

அமெரிக்க விவசாய குழுவினர் 4Hs என (Head, Heart, Hand, Health) தலை, இதயம், கை, சுகநலம் என நான்கு அம்சங்களைப் பயிற்றுவதாகவும் முறையே பகுத்தறிவு, இரசிகசமுதாயம், கைத்திறமை, தேகசுகநலம் என்னும் நான்கையும் விருத்தியாக்குவதே நோக்கமெனவும் கொள்கின்றனர். அது எமக்கும் பொருந்தும்.

வீடும் பாடசாலையுமே மாணவனது இரு முக்கிய தலங்களாகும். ஆகவே, பெற்றூரும் ஆசிரியருமே முக்கியத்துவம் வாய்ந்தவர்களாவர்.

ஆசிரியராகிய நாம் எந்த வகையில் நடந்து கொண்டால் மாணவரை நம் வசப்படுத்தி, அன்னூரின் மனவெழுச்சிகளைச் சாதகமான துறையில் தொழிற் படுத்தி ஆளுமையை விருத்தியாக்கலாம்? ஐக்கிய நாடுகளில் 2ந் தரம் தொடக்கம் 10ந் தரம் வரையும் உள்ள 12000 மாணவர் ''எனக்கு அதிகம் உதவிபுரிந்த ஆசிரியர்'' என்னும் விடயம் பற்றி எழுதிய வியாசங்களைத் தொகுத்து ஆராய்ந்த பொழுது பின்வரும் 12 இலட்சியங்களும் பெரிதும் போற்றப்பட்டிருப்பதை உவிற்றி கண்டார். அவை வருமாறு;- (1) ஒத்துழைப்பும் ஜனநாயக மனப்பான்மையும். (2) அன்பும் இரக்கமும். (3) பொறுமை. (4) பலதிறப்பட்ட கவர்ச்சிகளுடமை (5) மனோரம்மியமான பண்பும் தோற்றமும். (6) நேர்மையும் பாராபட்சமின்மையும். (7) நகைச்சுவை (தமாஷா) படைத்தவர். (8) சாந்தமான மனோபாவமும் மனவுறுதியும். (9) மாணவரின் பிரச்சினைகளில் கவர்ச்சியுடையவர். (10) பிடிவாதமின்மை (இணங்குந்தன்மை) உடையவர் (11) மெச்சவும் உற்சாகமூட்டவும் விரும்புந்தன்மையுடையவர். (12) ஒரு குறித்த பாடத்தைக் கற்பிப்பதில் விசேட சாமர்த்தியமுடையவர்.

ஆகவே ஆசிரியராகிய நாம் இந்த இலட்சியங்களுடைவர்களாயிருப்பின் ஆசிரியர்-மாணவர் தொடர்பு (உறவுமுறை) சிறந்து விளங்குமென்பதற்கு ஐயமில்லை. ஆசிரியர் தமது மனப்பான்மையை மாற்றி மாணவரின் ஒரு துணைவனுக, ஒரு வழிகாட்டியாக நடந்து கொள்ள வேண்டும். அங்ஙனம் நடந்து கொள்வதற்கு மாணவனை நன்கு அறிதல் வேண்டும். அதற்குப் பெற்றூரின் ஒத்துழைப்பு அவசியமாகும்.

மாணவனின் வீட்டு நிலைமை, குடும்ப நிலைமை, ஓய்வு நேர வேலைகள், சூழ்நிலை, நண்பர் ஆதியனவற்றைச் சரிவரப் பெறக்கூடியது பெற்றூரிடமாகும். மேலும் வரலாற்றுக் குறிப்புத் திரட்டல், வைத்திய பரீட்சை நடாத்தி மாணவனின் உடற் குறைகளைத் திருத்தல், பாடசாலைக்கு நேரத்துக்கு ஒழுங்காக வருதல், பரீட்சைப் பெறுபேறுகளையும் பரீட்சை அறிக்கைகளின் பலாபலன்களையும் ஆராய்தல் முதலியன பெற்றோரின் பரஸ்பர நல்லெண்ணத்துடனும் ஒத்துழைப்புடனுந்தான் செய்யப்படலாம்.

ஆசிரியன் பெற்றோரின் கொள்கைகளையும் மனப்பான்மையையும் அறிந்தாற்றான் முரண்பாடின்றித் தனது தொழிலைச் செய்யலாம். 12 வயது வரையில் கட்டாயக் கல்வியிருப்பதால், பெற்றோர் தமது பிள்ளைகளுக்குப் பொருத்தமான கல்வி கிடைக்கிறதா சுகநலம் பேணப்படுகிறதா எனப் பார்ப்பதற்கும் கேட்பதற்கும் உரிமையுண்டு. பாடசாலை பொதுமக்களுக்குச் சொந்தமானது. அதனால் அவர்கள் உரிமை பாராட்டுவர். ஆசிரியராகிய நாம் அதைப் பயன்படுத்த வேண்டும்.

இக்காலக் கல்வி பெற்றோரின் அக்காலக் கல்வியிலும் பெரிதும் வேறுபாடுடையதாகையாலும், ஒரு சந்ததியாரின் சிறப்பான நடத்தை முறைகள் அடுத்த சந்ததிக்கும் பொருந்தாது ஆகையாலும் பெற்றோர் எதிர்பாராத, முன் தெரியாத, புது நிலைமைக்கும், புதுச் சூழ்நிலைக்கும் ஏற்பத், தமது மனக் கொள்கைகளையும் மனப்போக்குகளையும் மாற்றியும் திருத்தியும் அமைப்பதற்கு ஆசிரியர் — பெற்றோர் தொடர்பு, மாணவனின், நலன்கருதி; மிகவும் அவசியமாகும்.

கனிஷ்ட வித்தியாலயங்களின் முன்னேற்றங்கருதியும் மாணவர் விருத்தி கருதியும் பெற்றோர் ஆசிரியர் சங்கம் 247-ம் சுற்று நிருபத்தின் விதிகளுக்கிணங்க ஸ்தாபிக்கப்பட்டுளது. அதன் நோக்கங்களை முதலில் ஆராய்வாம்.

1. சமூக நிகழ்ச்சிகள், வெளிவேலைகள்
   - பரிசளிப்பு விழா
   - கல்விச் சுற்றுலா
   - விளையாட்டுப் போட்டிகள்
   - சுகாதாரப் போட்டிகள்
   - பொருட் காட்சி

2. பாடசாலைத் தேவைகள்
   - கட்டிடம்
   - காணி சுவீகரித்தல்
   - தளபாடம்
   - சிரமதான முயற்சிகள்

3. அரசாங்கத்தின் கல்விக் கொள்கைகளைச் செயற்படுத்தல்
   - பாடசாலைப் புனருத்தாரணம்
   - பாடத்திட்டம் திருத்தியமைத்தல்
   - காலத்துக்குக் காலம் வரும் மாற்றங்கள்
   - சட்டதிட்டங்களை அறிதல்

4. பிள்ளைகளுக்கு ஏற்படும் இடர்ப்பாடுகள், தடைகள்
   - பிரயாணம்
   - பண வசதி
   - மதிய போசனம்
   - உடுப்பு
   - நீர் மலகூடம்

5. மாணவர் வரவு
   - நேரம்
   - ஒழுங்கான வரவு
   - விசேட நிகழ்ச்சிகளுக்குச் சமுகம்
   - பூச்சி மருந்து போன்றவை

6. பின்தங்கிய மாணவர்

- செய்கை முறை
- வாழ்க்கையோடொட்டிய கல்வி
- தனி முறை குழு முறை
- திறமைக்கேற்ற சிறப்பான கல்வி

7. ஆசிரியருக்கான வசதிகள்

- ஆசிரியர் அறை
- நூல் நிலையம்
- மேசை கதிரை
- மலசல கூடம்

8. பெற்றாரும் கல்விக் கொள்கைகளும்

- கல்விப் பிரச்சினைகள்
- பாடசாலைப் பிரச்சினைகள்
- பெற்றாரின் அறிவு விருத்தி
- கல்வித்திணைக்களத் தொடர்பு

பண வசதி, பொருள் வசதி, அனுபவ நிறைவு, ஆற்றல் திறமை உள்ள பெற்றார் பலர் இருப்பர். வித்தியாலயமும் ஓர் ஆலயமாகும். ஆலயத் தொண்டு செய்வதுபோல வித்தியாலயத்திலும் பலர் தொண்டு செய்ய முன்வருவர். மேலே காட்டிய பிரகாரம் பாடசாலையில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பெற்றாரின் ஒத்துழைப்புப் பெரிதும் பயன்படும். பயன்படுத்துவோமாக.

பாடசாலைப் பெற்றார் ஆசிரியர் சங்கம் ஒவ்வொரு பாடசாலையிலும் அமைக்கப்படின், ஒவ்வொரு பாடசாலையிலுமிருந்தும் மூன்று பிரதிநிதிகள் கொண்ட ஒரு வட்டாரப் பெ. ஆ. சம்மேளனமும் ஒரு பிராந்தியத்திலுள்ள வட்டாரங்கள் சேர்ந்து ஒரு பிராந்திய சம்மேளனமும், பிராந்தியங்கள் சேர்ந்து அகில இலங்கை பெ. ஆ. சம்மேளனமும் தொழிற்படும்.

இதனால் பெற்றார் - ஆசிரியர் சங்கம் பலம் வாய்ந்த ஓர் இயக்கமாகும். கல்வி சம்பந்தமான ஆக்கபூர்வமான செயல்களுக்குத் தகுதி வாய்ந்த ஆலோசனை கூறும் ஒரு உத்தம சபையாகலாம். சங்க உறுப்பினர் பரந்த அநுபவம் வாய்ந்தவர்களாகிக் கருமங்களைத் திறம்படச் செய்யும் ஆற்றலைப் பெறுவர்.

குறிப்பு:- மறுவிபரங்களைக் கல்வி அமைச்சின் 247-ம் இலக்கச் சுற்று நிருபத்தை வாசித்தறிக.

வே. கந்தப்பு

# பாடத்திட்ட வகைகளும், பாடத்திட்டம் அமைக்கும்போது கவனிக்கவேண்டிய விதிகளும்

ஒரு நாட்டிலே அங்குள்ள சமூகத்திற்கு அளிக்கப்படும் கல்வியின் நோக்கம் எவைகளோ அவைகளை நிறைவேற்றுவதற்காகத் திட்டமிடப்படும் சாதனமே பாடத் திட்டம் அல்லது கல்விப் பொருட் திட்டமாகும். இதைக் கல்விக்கிரமம் என்றும் சொல்வர். கல்வியின் நோக்கங்கள், சமூகத்திற்குச் சமூகம், காலத்திற்குக்காலம், எவ்விதம் மாற்றம் அடைகின்றதோ அவ்விதமே பாடத்திட்டமும் கல்வியின் நோக்கங்களுக்குத்தக மாற்றியமைக்கப்பட்டு வருகிறது.

பாடத்திட்டம் என்றால் என்ன? முன்பெல்லாம் பாடசாலையில் கற்பிக்கப்படும் பாடங்களின் தொகுதியே பாடத்திட்டம் (Curriculum) என்று கருதப்பட்டது. ஆனால் இன்று அந்தப் பாடத் தொகுதியுடன், பாடசாலையில் நடைபெறும் சகல முயற்சிகளையும் உள்ளடக்கியதே பாடத்திட்டம் எனக் கருதப்படுகிறது - பாடசாலையில் நடைபெறும் கூட்டங்கள், சங்க நிகழ்ச்சிகள், விழாக்கள், போட்டிகள் யாவும் பாடத்திட்டத்துடன் அடங்குபவையேயன்றிப் புறம்பானவை அல்ல. பாடத்திட்டத்திற்குப் புறம்பான முயற்சிகள் (Extra Curricular activities) என்ற பேச்சுக்கே இடமில்லை.

பாடசாலைகளின் வகைகளுக்கு ஏற்ற பாடத்திட்டம் என்ற ரீதியில் பாடத் திட்டத்தை நாம் இரு பெரும் பிரிவாகப் பிரிக்கலாம். பிரதம பாடசாலையில் 6 வயது தொடக்கம் 11 வயது வரைக்கும் உள்ள பிள்ளைகள் கற்கின்றார்கள். இங்கே இவர்களுடைய தேவைகளைப் பொறுத்த மட்டில் அதிக வேறுபாடுகள் கிடையா. ஏறக்குறைய எல்லோருடைய தேவைகளும் பொதுவானவையாக இருக்கும். எனவே எல்லோருக்கும் பொதுவான தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய பாடத்திட்டம் இப்பாடசாலையில் அமைதல் வேண்டும். அப்படியான பாடத்திட்டத்தைப் பொதுப் பாடத்திட்டம் அல்லது அடிப்படைப் பாடத்திட்டம் (Core-Curriculum) என்றும் சொல்லலாம். ஒரு பிள்ளையின் வளர்ச்சிக்குத் தேவையான அடிப்படை அனுபவத்தை அளிக்க ஏற்றதான ஒரு பாடத்திட்டம் உதாரணமாக இந்தப் பாடத்திட்டம் பின்வரும் பாடங்களையும் முயற்சிகளையும் கொண்டதாய் அமையலாம். (1) மொழி (2) எண் (3) சூழல் (4) சமயம் (5) ஆக்க முயற்சிகள் (6) உடல் நலம். அடுத்து கனிஷ்ட பாடசாலையில் அல்லது இப்பொழுது எங்களுடைய பாடசாலை வகைப்படி கனிஷ்ட உயர்தரப் பாடசாலையில் மேற்குறிக்கப்பட்ட பொதுப் பாடத்திட்டம் சிறிது விரிவடையலாம். இந்தப் பாடசாலையில் உள்ள பிள்ளைகளின் தனி வேறுபாடுகள் அவ்வளவு வெளிப்படையாகக் காணப்படாமையால் இங்கும் பொதுப்பாடத்திட்டம் தொடர்ந்து இருக்கலாம் என்று கருதப்படுகின்றது. ஆனால் சிறிது விரிவடையலாம். உதாரணமாகப் பின்வரும் வகையில் அமையலாம். (1) மொழி (2) கணிதம் (3) சமூகவியல் (4) விஞ்ஞானம் (5) சமயம் (6) நடனம் (7) சங்கீதம் (8) கைப்பணி (9) உடல் நலம் (10) தொழில் அனுபவம்

எங்களுடைய கனிஷ்ட உயர்தரப் பாடசாலையிலும் கிட்டத்தட்ட மேற் சொல்லப்பட்ட பாடத்திட்டத்தைப்போன்ற ஒரு பாடத்திட்டமே நடைமுறைப் படுத்தப்படுகின்றது. இங்கு எல்லாப் பிள்ளைகளும் எல்லாப் பாடங்களையும் கற்கவேண்டும்.

அடுத்ததாகச் சிரேஷ்ட அல்லது உயர்தரப் பாடசாலை. இங்கு கற்கும் மாணவரிடத்தே தனியான வேறுபாடு நன்கு கவனிக்கக் கூடிய அளவிற் காணப்படுகின்றது. மாணவர்களின் விசேட ஆற்றல்களும் நன்கு வெளிப்படுகின்றன. எனவே, இப்பாடசாலையில் விசேட பாடத்திட்டம் அல்லது சிறப்புப் பாடத்திட்டம் அமைய வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இந்தச் சிறப்புப் பாடத்திட்டம் மாணவனுடைய தனித் தன்மைகளை விருத்தி செய்வதற்கு உதவும். எவன் எந்தத்துறையில் சிறப்பு ஆற்றல் உடையவனாய் இருக்கின்றானோ அந்தத் துறையில் செல்வதற்குரிய பாடங்களைத் தெரிவு செய்து கற்க அதற்குரிய முயற்சிகளில் ஈடுபட்டுத்தன் சிறப்பாற்றல்களை மேலும் வளர்க்க இந்த விசேட (Periphery) பாடத்திட்டம் உதவும்.

தேவைகள் பூர்த்தி செய்யப்படும் தன்மையைப் பொறுத்துப் பாடத்திட்டத்தை மேற் சொன்னபடி இருவகைப் படுத்தினோம். இனிப் பாடத்திட்ட வகைகளைப் பார்ப்போம்

முதலாவதாகப் பாடங்களை மையமாகக் கொண்ட பாடத்திட்டத்தை எடுப்போம். இந்தவகைப் பாடத்திட்டம் தான் முன்பெல்லாம் நடைமுறையில் இருந்தது. பாடங்கள் தனித் தனிப் பாடங்களாகக் கற்பிக்கப்பட்டன. ஒருசில பாடங்களுக்கு உதாரணமாக இலக்கணம், கணிதம், இலத்தீன் போன்றவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. முயற்சிகளுக்கு இடம் அளிக்கப்படவில்லை. இத்தகைய பாடத்திட்டத்திற்கு இப்போது செல்வாக்கில்லை. தற்காலக் கல்விக் கருத்துகளுக்கு இது ஏற்றதல்ல என்று சொல்லப்பட்டாலும் சில பாடசாலைகளிலே இது நடைமுறையில் இருக்கின்றது. இரண்டாவதுவகை தொடர்புறுத்தப்பட்ட பாடங்களை மையமாகக் கொண்ட பாடத்திட்டம்:- 1. பாஷை இலக்கியம் 2. சரித்திரம் பூமிசாஸ்திரம் 3. அட்சரகணிதம் கேத்திரகணிதம் போன்ற தொடர்பான பாடங்களைத் தொடர்பு படுத்தி அவற்றை மையமாகக் கொண்டு கற்பித்தல். இந்த வகையும் கிட்டத்தட்ட முதலாவது சொல்லப்பட்ட பாடத்திட்டத்தைப் போன்றதே. மூன்றாவது, உலக பெரும் பாடங்களை மையமாகக் கொண்ட பாடத்திட்டம். இங்கே பாடங்கள் பெரும் தலைப்புகளின் கீழ் தொகுக்கப்படுகின்றன. உதாரணமாக சமூகவியல், பொதுவிஞ்ஞானம், கவின் கலைகள் என்றவகையில் பாடங்கள் அமைகின்றன. இந்த வகையிற்றான் எங்கள் கனிஷ்ட உயர்தரப் பாடசாலையில் (Junior Secondary) நடைமுறையில் உள்ள பொதுப் பாடத்திட்டம் அமைந்துள்ளது. நாலாவது வகைப் பாடத்திட்டம் ஒன்றிணைப்பும் பாடத்திட்டம் (Inter Grated Curriculum) முன்பு சொல்லப்பட்ட மூன்று வகைகளும் பாடங்களை மையமாகக் கொண்டன. ஆனால் இது வாழ்கைப்பிரச்சினையையோ அல்லது வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளையோ அடிப்படையாகக் கொண்டு அமையும் திட்டமன்று. உதாரணமாக ஆரம்ப பாடசாலையில் இரண்டாம் வகுப்பில் படிக்கின்ற மாணவருடன் சம்பந்தப்பட்ட ஒரு நிகழ்ச்சி பிறந்ததினக் கொண்டாட்டம். இதை மையமாகக் கொண்டு பல பாடங்களாகிய பேச்சு, எழுத்து, வாசிப்பு, சூழல் ஆகியவற்றைப் படிப்பிக்கலாம். மாணவர்களின் முயற்சிகளுக்கும் இது அதிகமான வாய்ப்பை அளிக்கும். இந்த வகைப் பாடத்திட்டம் ஆரம்ப பாடசாலைகளுக்கு மாத்திரம் அல்ல. கனிஷ்ட உயர்தரப் பாட பாடசாலைகளுக்கும் ஏற்றது. இங்குள்ள பொதுப் பாடத்திட்டம் ஒன்றிணைப்பும் பாடத் திட்டவகையைச் சார்ந்ததாக அமையலாம். ஐந்தாவதாக முயற்சிகளை மையமாகக் கொண்ட பாடத்திட்டம். இது பாடங்களில் சிறிது பின் தங்கிய மாணவர்களுக்குப் பயன்தரக்கூடியது. நாட்டின் பொருளாதாரத்தை வளர்க்கக் கல்வி உதவவேண்டுமென்பது நோக்கமாயின் இவ்வகையான பாடத்திட்டம் அமுல் நடத்தப்படலாம்.

பாடத்திட்டத்தை அமைக்கும் போது கவனிக்கப்படவேண்டியவை என்ன என்று பார்ப்போம். முதலாவது மாணவனை மையமாகக் கொண்டுதான் பாடத்திட்டம் அமைய

வேண்டும். அப்படியானுல் என்னென்ன விடயங்கள் கவனிக்கப்பட வேண்டுமென்பதைப் பார்ப்போம்.

மாணவர்களின் வயது, அவர்களின் வளர்ச்சிப் பருவங்களின் தேவைகள் என்பனவற்றை மனதிற் கொண்டுதான் பாடத்திட்டத்தை அமைக்க வேண்டும். மாணவனின் வளர்ச்சிப் பருவத்திற்கேற்ப அவனின் முதிர்ச்சிநிலை, கற்றலுக்குரிய ஆயத்தநிலை என்பவை வேறுபடுகின்றன. எனவே. பாடத்திட்டம் அமைக்கும்போது இவற்றைக் கவனிக்க வேண்டும். அடுத்து மாணவனின் ஆர்வங்கள், ஆற்றல்கள் கவனிக்கப்படல் வேண்டும். மாணவரின் ஆற்றலுக்கு மிஞ்சியதாகப் பாடத்திட்டம் அமைந்து விட்டால் அவர்களுக்குக் கற்றலில் நாட்டம் குறைவுபடும். தோல்வியின் பின் தோல்வியாகவே மாணவனின் முயற்சிகள் முடிவடையும். இந்நிலையில் மாணவன் திருப்தியற்றவனுய்ப் பாடசாலையைவிட்டு விரைவில் வெளியேறிவிட நேரிடும். எனவே பாடத்திட்டம் ஆற்றலுக்கும், ஆர்வத்திற்கும் ஏற்றதாய் தனியார் வேறுபாடுகளுக்கும் இடம் அளிப்பதாய் அமையவேண்டும். அத்துடன் மாணவனின் தற்போதைய நிலையை மாத்திரம் மனதிற் கொண்டாற் போதாது. அவனின் எதிர்காலத்தைப் பற்றியும் சிந்திக்க வேண்டும். அவன் எதிர்காலத்தில் எவ்விதமாக உருவாக வேண்டும் என்பதையும் மனதிற் கொண்டு பாடத்திட்டத்தைஅமைக்க வேண்டும்.

அடுத்ததாக மாணவனின் பூரணவளர்ச்சியை மனதிற் கொள்ள வேண்டும். அவனது உடல், உள, ஆத்ம வளர்ச்சிகளுக்கு வாய்ப்பு அளிக்கக் கூடியதாகப் பாடத்திட்டம் அமைய வேண்டும். பாடசாலைகளில் ஒரு சில பாடங்களை மட்டும் போதித்து விட்டால் மாணவனின் அறிவை மாத்திரம் அவைகள் வளர்த்து விடுகின்றன. அறிவு அவனிடத்தில் ⅓ வளர்ச்சியைத்தான் ஏற்படுத்துகிறது. சிறந்த அறிவு படைத்த ஒருவன் உடல் உரம் அற்றவனுய் ஆத்மீக சிந்தனையற்றவனுய் இருக்கும்போது அவனுல் என்ன பயன்? சிலசமயம் அவனது அறிவு அழிவுப்பாதையில் அவனை இட்டுச் செல்லவும் கூடுமல்லவா? எனவே பாடத்திட்டம் ஒருவனுக்குப் பூரணவளர்ச்சியை அளிக்கக் கூடியதாக அமையவேண்டும். முழுமையான வளர்ச்சியை அளிக்க ஒரு சமநிலையை உடைய பாடத்திட்டம் (Balanced Curriculum) அமைய வேண்டும். இந்த இடத்து நாம் மாணவனின் ஆளுமையைப் பற்றியும் குறிப்பிடல் வேண்டும். ஆளுமைப் பண்புகளை வளர்க்க உதவும் வகையில் பாடத் திட்டம் அமைய வேண்டும். பொறுப்பேற்றல், தான் தொடங்கும் ஆற்றல் உடைமை, முயற்சியுடைமை, நேர்மை, தலைமை தாங்குதல் போன்ற ஆளுமைப் பண்புகளை வளர்க்க மாணவர்கள் முயற்சிகளில் ஈடுபடுதல் வேண்டும். கற்பித்தல் முறைகள், வகுப்பறைகளிலும் மாணவனின் செயல்கள் தொழிற்பாடுகளுக்கு இடமளிக்க வேண்டும்.

உளவியல் ரீதியில் ஆராய்ந்தால் மாணவனின் உளத்தேவைகள் கவனிக்கப்பட வேண்டும். காப்புணர்வு, குழுஉணர்வு, அந்தஸ்து கவனிக்கப்படுதல், புதிய அனுபவம் போன்ற தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் பாடத்திட்டம் அமைதல் நன்று. உளத்தேவைகள் பூர்த்தியாகும் நிலையில் மாணவன் திருப்தியாக, சந்தோஷமாக இருப்பான் "A Happy Child is always a good child" என்று சொல்லப்படுகிறது. எனவே மாணவர்கள் சந்தோஷமாக இருக்கக்கூடிய ஒரு சூழ் நிலையை ஏற்படுத்துவது அவசியம். அதற்கு உளத்தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய் பாடத்திட்டத்தை அமைக்க வேண்டும்.

அடுத்ததாகப் பிள்ளையின் வளர்ச்சிக்கு வேண்டிய மெய்ப்பாட்டுக் கற்றலும் நடைபெறக் கூடியதாகப் பாடத்திட்டம் அமைய வேண்டும். ஒரு பிள்ளையின் உடல்நிலை

பாதிக்கப் படும்போது பெற்றோர், ஆசிரியர் போன்றோர் அதைக் கவனத்திற்கு எடுத்துக் கொள்வர், ஆனால் மெய்ப்பாட்டுநிலை எப்படியிருக்கின்றது? அது உளத்தைத் தாக்கக் கூடியதாக இருக்கின்றதா? என்று கவனம் எடுப்பவர் யாரும் இல்லை. அதைப்பற்றிய அக்கறை மிகவும் குறைவு. இந்நிலைமாறி மெய்ப்பாட்டு வளர்ச்சி ஏற்பட வாய்ப்பளிக்கும் வகையில் பாடத்திட்டத்தை அமைத்தல் அவசியம்.

இது வரை மாணவனை மத்தியாகக் கொண்டு பாடத்திட்டம் அமைவதானால் எவற்றையெல்லாம் கவனிக்கவேண்டுமெனப் பார்த்தோம்.

இரண்டாவதாக சமுகத்தின் தேவைகள், சூழல் போன்றவற்றைக் கவனிக்க வேண்டும். சமுகத்தின் வளர்ச்சிக்கு அத்திவாரமிடக் கூடிய வகையில் பாடசாலையின் பாடத்திட்டம் அமையவேண்டும். சமூகத்தின் கலாச்சாரம். தொழில், பழக்க வழக்கங்கள் போன்ற வற்றைப் பேணி வளர்க்க வாய்ப்பளிக்கவேண்டும். அப்போது தான் மாணவர் பாடசாலையை விட்டு வெளியேறும்போது சமூகத்தில் தம்மை நன்கு பொருத்திக் கொள்வர். அத்துடன் சமூகத்திற் காணப்படும் சில குறைகளை நிவர்த்தி செய்யக் கூடியதாகவும் பாடத்திட்டத்தை அமைக்கலாம் — மாணவரிடத்திலே சமூகத்தின் மத்தியில் அவர்கள் பழகக் கூடிய வகையில் சாரணர் இயக்கம், சமூக சேவை, சிரமதானம், சமூகத்தை அளவிடல் போன்ற முயற்சிகளுக்கு வாய்ப்பளிக்கும் வகையில் பாடத்திட்டம் அமைதல் நன்று.

அடுத்ததாகப் பாடத்திட்டம் தொடர்பான முறையில் அமையவேண்டும். ஆரம்ப பாடசாலைப் பாடத்திட்டம், கனிஷ்ட பகுதித்திட்டம், சிரேஷ்ட பாடசாலைப் பாடத்திட்டம் ஆகியவை ஒன்றையொன்று தழுவியதாகத் தொடர்பான வகையில் அமையவேண்டும். எங்கள் நாட்டில் கனிஷ்ட உயர்தரப் பாடசாலையில் பாடத்திட்டம் மாற்றியமைக்கப் பட்டுள்ளது. தொழில் முன்னிலைப் பாடத்திற்கு முக்கிய இடம் அளிக்கப்பட்டுள்ளது. இப் பாடத்திட்டம் வெற்றிகரமாக இயங்கவேண்டுமாயின் கனிஷ்ட பாடசாலைத்திட்டமும் அல்லது ஆரம்ப பாடசாலைத்திட்டமும் சிறிது மாற்றமடைவது வரவேற்கத்தக்கது. அப்போது தான் இந்தப் பாடத்திட்டங்களுக்கிடையே தொடர்பு காணப்படும்.

அடுத்து ஒரு சமூகத்தின் பாரம்பரியத்தைப் பேணுவது பாடசாலை செய்யவேண்டிய கருமங்களில் ஒன்று — இக்கடமையைப் பாடத்திற் கூடாகத்தான் நிறைவேற்ற வேண்டும். — எனவே பாடத்திட்டம் அதற்கேற்ற முறையில் அமைதல் வேண்டும் ஒரு சமூகத்தின், கலை, கலாச்சாரம் — பழக்க வழக்கங்கள், நடத்தைக் கோலங்கள் ஆதியன வற்றின் தொகுதியே பாரம் பரியமாகும். இவற்றைப் பேணிக்காப்பாற்றவும், குறைகள் இருப்பின் அவற்றை நீக்கிப் புதியனவற்றை — சமூகத்தின் வளர்ச்சிக்கு ஏற்றவற்றைப் புகுத்திக் கொள்ளவும் வாய்ப்பளிக்கும் வகையில் பாடத்திட்டம் அமையவேண்டும், முன்பெல்லாம் ஆங்கிலேயர் ஆட்சி இருந்த காலத்தில் பாடசாலைகளில் நடைமுறையில் இருந்த பாடத்திட்டம் மேல் நாட்டு மொழி, கலை, கலாச்சாரம் வளருவதற்கேற்றதாய் இருந்தது. இப்போது இந்நிலை மாறி நம் நாட்டுக் கலை, கலாச்சாரம் வளருவதற்கேற்றதாய் அமைந்திருக்கிறது. தொடர்ந்து நம் பாரம்பரியம் பேணப்படக்கூடிய முறையில் எங்கள் பாடசாலைத்திட்டங்களை அமைத்துச் செயற்படுத்துவது விரும்பத்தக்கது.

பாடசாலைத்திட்டம் நெகிழும் தன்மையுடையதாய், இலகுவில் மாற்றியமைக்கப் படத்தக்கதாய் அமையவேண்டும்:- தேவைக்கேற்ப பாடத்திட்டத்தில் சில மாற்றங்களைப் புகுத்தும் அதிகாரம் பாடசாலை நிர்வாகிக்கோ அல்லது ஒரு குழுவுக்கோ அளிக்கப்படுதல் நன்று. அதிகாரம் ஒரு முகப்படுத்தப் பட்ட நிர்வாகத்துள் அடங்கும். பாடசாலைகளில் இப்படிப்பட்ட மாற்றங்களையேற் படுத்துவது கஷ்டமாகும்.

அடுத்ததாக பாடத்திட்டம் பிள்ளைகளின் கவர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு அமைவதாய் இருந்தால் அது உண்மையில் மாணவர்களுக்குக் கற்றலில் நாட்டத்தை ஏற்படுத்தக்கூடியதாய், ஒரு சிறந்த ஊக்கியாய் அமையும். மாணவர் தாம் விரும்பிய பாடங்களைத் தொடர்ந்து கற்கக்கூடியதாய்த் தெரிவுப் பாடங்களின் எண்ணிக்கை பரந்ததாய் இருக்கலாம். அறிவுப் பாடங்களை நன்கு கற்றுத் துலங்க வாய்ப்பில்லாத மாணவரும் திருப்தியடைய வேண்டுமாயின் முயற்சிப்பாடங்களும் ஏராளமாக இடம் பெறலாம். தனியார் வேறுபாடுகளுக்கு ஏற்பத் தம் ஆற்றல்களை வெளியிட, அவற்றை நன்கு வளர்க்க சங்கங்கள், கழகங்கள், விழாக்கள், போட்டிகள் போன்றவைகள் தொடர்ந்து செயற்படல் வேண்டும். இவை எல்லாவற்றையும் கொண்ட ஒரு பாடத்திட்டம் மாணவர்களைக் கற்றலில் ஊக்குவிக்கும் என்பதில் சந்தேகமேயில்லை. இந்த வகைப் பாடத்திட்டத்தை நாம் ஒரு சமநிலைப் பாடத்திட்டம் என்று கூறலாம். இது மாணவர்களுக்கும் பூரண வளர்ச்சியைத் தர வல்லது.

திருமதி எஸ். செல்லத்துரை

''பாடத்திட்டம் மாணவனை மையமாகக் கொண்டு சமூகத்தின் தேவைகளை நிறைவேற்றுவதாய் அமைய வேண்டும்''

# பாடசாலைக் கருமங்களைத் திட்டமிடும் போது கவனிக்க வேண்டியவைகள்

1. நேரசூசிகை.
2. பாடவிதானம்.
3. பாடக்குறிப்புகள்.
4. பாடசாலைப் பரீட்சைகள்.

பாடசாலையை நாம் ஒரு சிறிய சமூகம் என்று சொல்லுகிறோம். அந்தச் சமூகத்தில் தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள், மாணவர்கள், பணியாட்கள் போன்றவர்கள் உறுப்பினர்களாகின்றனர். இத்தனை பேரும் ஒரே தன்மையுடையவர்கள் அல்லர். இவர்களிடையே எத்தனை வேற்றுமைகள். இந்நிலையில் இத்தனை பேரும் ஒரு கட்டுக் கோப்புக்குள் அமைந்து தத்தம் கடமைகளைச் செய்யவேண்டுமாயின் கிரமமான முறையில், ஒழுங்கான முறையில் கருமங்கள் யாவும் நடைபெறவேண்டும். எனவே தான் பாடசாலையில் ஒரு நேரசூசிகை அவசியமாகின்றது. இது ஒழுங்கு, கட்டுப்பாடு, அமைதி போன்றவற்றை நிலைநாட்டுகிறது. அதே நேரத்தில் கற்பித்தல், கற்றல் ஆகிய இரண்டும் நிகழ்வதற்கு உதவுகின்றது. நேரசூசிகை போன்ற ஒரு எழுதப்பட்ட, வரையறுக்கப்பட்ட முயற்சிப்பட்டியல் இல்லாதுபோனால் எங்கள் நாட்டுப் பாடசாலைகளின் நிலையை எண்ணிப் பாருங்கள். பாடசாலை வெறும் சந்தைக் கூட்டமாகிவிடும்.

நேரசூசிகை ஒரு எழுதப்பட்ட சட்டம் போன்று அமைகின்றது. கல்வி அதிகாரியின் அங்கீகாரத்தைப்பெற்று நடைமுறைப்படுத்தப்படுகிறது. அதை ஆசிரியர்களோ பாடசாலை உறுப்பினர்களோ யாவராயிருப்பினும் மீறுது அதன்படி ஒழுகிவர வேண்டும். எனவே இந்த நேரசூசிகை ஆரம்பத்திலே உருவாகின்ற நேரம் அந்தப் பாடசாலை ஆசிரியர்களின் சம்மதத்தின் பேரில், விருப்பத்தின் பேரில் உருவாகிவிட்டால் அது நடைமுறைக்கு வரும்போது ஆசிரியர்கள் அனைவரும் அதை ஏற்றுக் கொள்வர். தலைமை ஆசிரியருக்கும் ஆசிரியருக்கும் இடையே நல்ல உறவு ஏற்படும் ஆசிரிய — ஆசிரிய உறவும் திருப்தியாக இருக்கும். இதனால் பாடசாலையில் நடைபெறும் கற்பித்தல், கற்றல் திருப்தியாக இருக்கும். கட்டுப்பாட்டையும், ஒழுங்கையும் நிலைநாட்டுவது பிரச்சினையாகவே இருக்கமாட்டாது.

அடுத்தபடியாக, ஆசிரியர்களின் ஆற்றல்களை அறிந்து அதற்கேற்ப வேலையைப் பங்கீடு செய்துகொள்ளுவது நன்று. பற்றுக்களுக்கோ, விருப்பு வெறுப்புக்களுக்கோ இடமளிக்காத வகையில் நேரசூசிகை தயாரிக்கப்பட்டால், எல்லோருடைய ஒத்துழைப்பையும் பெற்றுக்கொள்ளும் வாய்ப்புத் தலைமையாசிரியருக்குக் கிடைக்கும். நேரசூசிகை அமைப்பதற்கு முன்னர் ஆசிரியசங்கத்தைக் கூட்டிக் கலந்துரையாடி, அதன் நிமித்தம் ஒரு சுமுகமான சூழ்நிலையை ஏற்படுத்தி அதன் பின்னர் விரும்பினுல் நேரசூசிகையைத் தயாரிப்பதற்கு ஒரு குழுவைப் பொறுப்பாக விடுவதானுலும் விடலாம்.

நேரசூசி இரண்டு பிரிவுகளைக் கொண்டதாக அமையலாம். ஒன்று பாடவேளைகளையும் நாள்வீதம் நடைபெறும் முயற்சிகளையும் குறிப்பிடும் நேரசூசிகை இரண்டாவது, பாடசாலை முயற்சிகளைக் குறிக்கும் முயற்சிப் பட்டியலாகும். இவையிரண்டையும் இணைத்து ஒரு சூசிகையாக அமைத்து விடுதல் கஷ்டமாகும். எனவேதான் பாடசாலைகள் முயற்சிகளுக்கு நேரசூசிகையில் அதிகநேரம் ஒதுக்குவதில்லை. அதை

மனதிற்கொண்டு முயற்சிப் பட்டியல் ஒன்றைத் தனியாகத் தயாரித்து நேரசூசிகையோடு சேர்த்துக் கொள்ளலாம். இவற்றின் பிரதிகள் ஆசிரியர்களுக்கு அளிக்கப்படல் வேண்டும்.

அடுத்ததாக, நேரசூசிகை அமைக்கும்போது மாணவருடைய வயது, கிரகிக்கும் ஆற்றல் அவர்களின் தன்மை என்பவைகளுக்கேற்பப் பாட வேளையைக் கூட்டியோ? குறைத்தோ அமைத்துக் கொள்ளலாம். அதிகமாக எங்கள் பாடசாலைகளில் இம்முறை நடைமுறையிலிருக்கின்றது. கீழ்வகுப்புகளுக்குரிய நேரசூசிகையும், மேல்வகுப்புகளுக்குரிய நேரசூசிகையும் வெவ்வேருக அமைக்கப்படுகின்றன. கீழ் வகுப்புகளுக்குரிய பாடவேளைகள் குறுகியவையாக இருப்பது வரவேற்கத்தக்கது. சிறு பிள்ளைகளின் (1) கவர்ச்சி நீண்டநேரத்திற்கு நிலைத்திருக்கமாட்டாது. அது குறுகிய நேரத்துள் மாறும் தன்மையுடையது. (2) அடுத்ததாக, சிறுவர்களின் கவனம் அல்லது அவதானம் குறுகிய காலத்துள் சிதறும் தன்மையுடையது. இன்னும் சிறுவர்கள் மிகவும் விரைவில் களைப்படையும் தன்மையுடையவர்களாய் இருக்கின்றனர். இங்கு சொல்லப்பட்ட காரணங்களை நாம் மனதிற் கொண்டுதான் சிறுவர்களுக்குரிய நேரசூசிகையை அமைக்க வேண்டும். பாடவேளைகள் 20 நிமிடங்கள் அல்லது 25 நிமிடங்களுக்குமேல் நீடிக்கப்படுதல் கூடாது. அத்துடன் இவர்களுக்குரிய நேரசூசிகை ஒரு முயற்சிப் பட்டியல் போன்று அமைவதுதான் விரும்பத்தக்கது. அப்பொழுதான் ஒன்றிணைப்புப் பாடத்திட்டம் போன்ற திட்டங்களை நடைமுறைப்படுத்தலாம்.

அடுத்ததாக, மாணவன் களைப்படையாத நேரத்தில் சிந்தனையைத் தூண்டும் பாடங்கள் இடம் பெறுவது நன்று. காலைநேரத்தில் மாணவனின் சக்தி செலவழியாத நிலையில் எண், விஞ்ஞானம் போன்ற பாடங்கள் கற்பிக்கப்படுவது நன்று. அதற்கேற்ப நேரசூசிகை அமையலாம். இந்த நேரத்தில் இன்னுமொரு விடயத்தை மனதிற் கொள்ளல் நன்று. உளமுயற்சிக்கு அதிகம் இடம் கொடுக்கும் பாடங்களை அடுத்தடுத்துக் கற்பிக்காமல் உடல் முயற்சிகளைத் தூண்டும் பாடங்கள், கவின்கலைப் பாடங்கள் ஆகியவை மாறிமாறி இடம் பெறுவது நன்று. இப்படியான வாய்ப்பை நேரசூசிகை அளிக்கத்தக்க வகையில் அமைந்தால் மாணவருக்குக் களைப்பு ஏற்படமாட்டாது. பாடமாற்றம் அவர்களுக்கு ஆறுதலை அளிக்கும். அதுமட்டுமல்ல, உள் முயற்சியைத் தூண்டும் பாடங்களில் குறைவானவர்கள் தொடர்ந்து அதிருப்தியடையும் நிலையும் ஏற்படமாட்டாது. இப்பாடமாற்றம் இடைக்கிடை வகுப்பு இடமாற்றத்திற்கும் இடம் அளிக்கும். மாணவர் இடம்பெயர்ந்து செல்லும்போது பௌதிக சுதந்திரம் அவர்களுக்குக் கிட்டுகிறது. [Physical Freedom] இது சிறுவர்களின் வளர்ச்சிக்கு அவசியமான ஒரு தேவையாகும்.

நேரசூசிகை இறுக்கமானதாக [Rigid] அமையக்கூடாது. இலகுவில் மாற்றங்களைப் புகுத்தக்கூடிய வகையில் நெகிழும் தன்மையுடையதாக இருப்பது நன்று முயற்சி அடிப்படையில் பாடங்கள் கற்பிக்கப்படல் நன்று என்று சொல்லுகின்ரேம். அப்படியானல் பாடங்கள் பாடசாலை வளவுக்குள்ளேயே அமைந்துவிடமாட்டா. சமூகத்தின் மத்தியிலே, தொழிற்சாலையிலே, அரசாங்க அலுவலகத்திலே எல்லாம் பாடம் கற்கலாம். இதற்கெல்லாம் நேரசூசி இடம் தரவேண்டும். வேண்டிய நேரத்தில் தலைமை ஆசிரியர், உடன் ஆசிரியர் ஒத்துழைப்புடன் நேரசூசி மாற்றத்திற்கிடமளிக்கும் வகையில் அமையவேண்டும். தற்போது தொழில் முன்னிலைப் பாடம் புதிதாகச்சேர்க்கப்பட்டிருக்கின்றது. இப்பாடம் செய்கை முறை அனுபவங்களை மாணவர்களுக்கு ஏராளமாக அளிக்கக் கூடிய வகையில் நேரசூசி அமையவேண்டும்.

நேரசூசிகை குறுகிய இடைவேளைகளைக் கொண்டதாக அமையவேண்டும். விசேடமாக ஒருநேரப் பாடசாலையாயின் இரு குறுகிய இடைவேளைகள் இருப்பது நன்று.

இந்த நேரம் ஆசிரியர் மாணவர் சந்தித்துப் பேசுவதற்கு மாத்திரம் அல்ல சந்தித்துப் பேசுவதிலும், கருத்துக்களைப் பரிமாறுவதிலும் கூட எவ்வளவோ நன்மை ஏற்படும். ஆசிரிய — மாணவ தொடர்பு, ஆசிரிய — ஆசிரிய தொடர்பு கற்றலுக்கும், கற்பித்தலுக்கும் சாதகமானதாக இதன் மூலம் அமையலாம்.

இடைவேளைகள் ஆசிரியர்களும், மாணவர்களும் தமது உடற்தேவைகள் சிலவற்றைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு இடமளிக்கின்றன. இடைவேளைகள் இல்லாது போனல் இடைக்கிடை மாணவர்கள் எழுந்து வெளியே செல்ல முயற்சிப்பர். அதனல் கற்பித்தலும், கற்றலும் தடைப்படுகின்றன.

இடை வேளைகள் இடம் பெறுவதால் வேறு நன்மைகளும் கிட்டுகின்றன. ஒன்று மாணவர் சில பழக்கங்களைப் பழகிக்கொள்ளுகின்றனர். இடைவேளை நேரத்திற்காகப் பொறுத்திருக்கவும் இடைவேளை நேரங்களில் மாத்திரம் தமது சில தேவைகளுக்காக வெளியே செல்லவும் பழகிக் கொள்வதால் அவர்கள் நடத்தையில் ஒழுங்கு ஏற்படுகிறது. அத்துடன் இந்த ஒழுங்கு ஒருவன் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளவும் உதவுகின்றது.

ஆசிரியர்கள் சங்கம் அல்லது கூட்டம் இயங்குவதற்கும் நேரசூசிகை இடமளிக்கலாம். ஆனல் அந்த நேரம் மாணவர் முயற்சிகளுக்குரிய ஏற்பாடுகள் நடைமுறைப் படுத்தப்படக்கூடிய வசதிகள் இருக்கவேண்டும்.

பாடவிதானம்:— கற்பித்தல் நன்கு நடைபெறவேண்டுமாயின் கற்பிக்கப்படும் விடயம் திட்டமிடப்படல் வேண்டும். விடய அடக்கம் அல்லது பாடப்பொருள் (Syllabus) கல்விப்பகுதியினல் அளிக்கப்படுகின்றது அத்துடன் இப்பொழுதெல்லாம் வழிகாட்டிகளும் உபயோகத்தில் இருக்கின்றன. வழிகாட்டிகளை வழிகாட்டிகளாக உபயோகிக்க வேண்டுமேயொழிய அவற்றைப் பாடவிதானங்களாக உபயோகிக்க முடியாது. இவற்றின் உதவியோடு பாடவிதானங்களை அமைத்துக்கொள்ளலாம்.

ஒவ்வொரு பாடத்திற்குமுரிய பாடவிதானத்தை அமைப்பதற்கு ஒவ்வொரு குழு பொறுப்பாக இருக்கலாம். சிலர் பாடப்பொருளில் கொடுக்கப்பட்ட விடயத்தைச் சிறிது விரித்து அலகுகளாக்கி அவற்றை இரண்டு பாடவேளை மூன்று பாடவேளைகளுக்குரியவை என்ற முறையில் திட்டமிடுகின்றனர். இம் முறையிலும் பார்க்க ஒரு வருடத்தில் எத்தனை பாடவேளைகளோ அத்தனை பாடங்களாகத் திட்டமிடுவது நன்று. ஒவ்வொரு பாடத்தையும் ஒரு தலையங்கத்தின் கீழ்க் கற்பித்தல் நல்லது.

உதாரணமாக ஒரு விடயத்தை எடுத்துக்கொள்வோம். சமூகவியல் பாடம் அதிலே தேவைகள் என்ற விடயம். இதைப் பாடங்களாக வகுக்கலாம்:

(1) பொருளாதார தேவைகள் — உணவு உடை, வீடு.
(2) கலாச்சார தேவைகள் — கல்வி, கலை, சமயம்.
(3) போக்குவரத்துத் தேவைகள் — தரைமீது, வீதிகள், பாதைகள், வாகனங்கள்.
(4) போக்குவரத்து ஆகாயம் — விமானமூலம் சென்று பார்வையிடல்.
(5) போக்குவரத்து நீர் — (இலங்கையில்) பாலங்கள், பாதைகள், தோணிகள்.
(6) உள்நாட்டுப் பாதுகாப்பு
(7) வெளிநாட்டுப் பாதுகாப்பு
(8) நோயினின்றும் பாதுகாப்பு

மேற்படி வகுக்கப்பட்ட பாடங்கள் எல்லாம் தேவையை அடிப்படையாகக் கொண்டவையானலும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு தலையங்கத்தின் கீழ்த் திட்டமிடப்பட்டுள்ளன.

பாடவிதானம் அமைக்கும்போது மாணவருடைய முயற்சிகளுக்கும் இடமளிக்க வேண்டும். தனிப்பட்ட முறையிலோ அல்லது குழு முறையிலோ மாணவன் செய்து கற்க வாய்ப்பளிக்க வேண்டும். படங்கள் வரையலாம். மாதிரிகள் அமைக்கலாம். அட்டவணைகள் தயாரிக்கலாம், வரைபடங்கள் அமைக்கலாம். இப்படியான முயற்சிகள் பாடவிதானத்தில் இடம் பெறவேண்டும்

அடுத்ததாகப் பாடவிதானம் அமைக்கும்போது பாடசாலையின் அயல் மாணவருக்குக் கற்றல் வாய்ப்புக்களை அளிக்கக் கூடியதாக உள்ளதாயின் அதையும் மனதிற் கொண்டு பாடவிதானத்தை அமைக்கலாம். தெங்குப்பொருட்காட்சி நிலையம், கிராமச் சங்கம், ஊர்காவலர் நிலையம், விவசாயப்பண்ணை போன்ற நிறுவனங்கள் அயலில் இருந்தால் இவற்றிற்கு மாணவரை எடுத்துச்செல்லும் முயற்சிகளுக்கு இடம் அளித்துப் பாடவிதானத்தை அமைக்கலாம். இவை நல்ல முறையில் திட்டமிடப்படல் வேண்டும்.

இன்னும் சில புதிய கற்பித்தல் முறைகளை நடைமுறைப்படுத்த ஆசிரியர் விரும்பினுல் பாடவிதானத்தை அதற்கேற்பத் திட்டமிடலாம். உதாரணமாகத் திட்டமுறையை (Project Method) ஆசிரியர் கையாளுவதாக இருந்தால், இம்முறைக்கூடாக உள்ளூர் ஆட்சிமுறையை மாணவர் அறிந்து கொள்ளவேண்டுமென்பது அவரின் திட்டமாக இருந்தால், அத்திட்ட விபரம் பாடவிதானத்தில் இடம் பெறலாம். எத்தனை பாடவேளைகள் விடயத்தைச் சேகரிப்பதற்காகப் பாடசாலைக்குப் புறத்தே செலவழிக்கப்படும் என்பதும் எத்தனை பாடவேளைக்குள் திட்டம் சமர்ப்பிக்கப்படும் என்பதும் பாடவிதானத்தில் இடம் பெறல்வேண்டும். இப்படியான முறையிற் திட்டமிடுதல் அமைந்தாற்றுன் தலைமை ஆசிரியர் நேரசூசிகையில் வேண்டிய மாற்றங்களைச் செய்து கொடுக்கக்கூடியதாக இருக்கும்.

**பாடக் குறிப்புகள்:—** அடுத்த விடயம் பாடவிதானம் இருந்தால் குறிக்கப்பட்ட ஒருநாளில் என்ன பாடம் நடைபெறும் என்பதை அது தெரிவிக்கும். அப்பாடம் எப்படிக் கற்பிக்கப்படவேண்டும், என ஆசிரியர் தன்னைத் தயாரித்துக்கொள்ள உதவுவது பாடக்குறிப்பாகும். ஒரு பாடக்குறிப்பைத் தயாரிக்க முன்னர் ஒரு பாட அமைவு ஒன்றை அமைத்துக்கொள்ளவேண்டும். பாட அமைவு என்னென்ன விடயத்தை ஆசிரியர் கற்பிக்க வேண்டுமென்பதைக் காட்டும். ஒரு அமைப்பு பாட அமைவை வைத்துக் கொண்டு அப்பாடத்தின் ஒவ்வொரு பகுதியையும் எப்படி மாணவனுக்குத் தெரியவைத்தல் மேலானது என்று ஆராய்ந்து அவற்றை அணுகும் முறைபற்றிய குறிப்புக்களையும் சேர்த்துக்கொள்ளும்போது அது பாடக்குறிப்பாக விரிவடைகின்றது.

பாடக்குறிப்பு என்னென்ன விபரங்களைக்கொண்டதாக அமைகின்றது என்பதை நீங்கள் அறிவீர்கள். பாடக்குறிப்பில் சாதாரணமாகக் கொடுக்கப்படும் விபரங்களோடு ஆசிரியர் கையாளப்போகும் முறைபற்றிய குறிப்புக்களையும் சேர்த்துக் கொள்ளுவது நன்று.

அத்துடன் தேடல், பதித்தல், பிரயோகம் என்று தனித்தனிப் பகுதிகளாகப் பிரிக்காமல் தேடலும், பதித்தலும் சேர்ந்து நடைபெற வாய்ப்பு அளிக்கும் வகையில் படிமுறைப்படுத்தி எழுதுவது நன்று எனச் சிலர் கருதுகின்றனர்.

பாடக்குறிப்பு விபரமாக அமைந்தாற்றுன் அது ஆசிரியருக்குப் பயனைக் கொடுக்கும். இது சில அட்டவணைகள், புள்ளிவிபரங்கள் போன்றவற்றையும் கொண்டு அமையலாம். ஒவ்வொரு பாடத்திற்கும் தகுந்த முறையாய்க் குறிப்புத்தயாரிப்பதுதான் சிறந்தது என எண்ணுகிறேன். ஒரு பெரிய விடயத்தை எடுத்து 3 அல்லது 4 பாடவேளைகளாகப் பிரித்துக் கற்பிக்க விரும்பும் ஒருவர் அத்தனை பாடங்களுக்கும் பொது

வாக ஒரு குறிப்புத் தயாரித்தால் அது ஏற்றதல்ல. 3 அல்லது 4 பாடங்களையும் வெவ்வேறு முறைப்படி கற்பதானால் ஒருபாடக் குறிப்புடன் எப்படிச் சிறப்பாகக் கற்பிக்க முடியும். இதை நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

பாடசாலைப் பரீட்சைகள்:— எங்கள் பாடசாலைகளில் நிர்வகிக்கப்படும் பரீட்சை தேர்ச்சிப் பரீட்சை ஒன்றுதான். விவேகப்பரீட்சையோ, நிதானப்பரீட்சையோ அன்றி வேறு பரீட்சைகளோ அதிகம் உபயோகத்தில் இல்லை. எந்தப் பரீட்சையானாலும், அது என்னத்தை அளவிட முற்படுகின்றதோ அதை நல்ல முறையில் அளவிடக் கூடியன வாக அமைதல் வேண்டும்.

தேர்ச்சிப் பரீட்சையின் நோக்கம்:

(1) மாணவரின் தேர்ச்சியை அளவிடுதல்.

(2) ஆசிரியருடைய கற்பித்தல் எந்த அளவுக்குப் பயனுடையதாக இருக்கின்றது என்பதை அறிந்து கொள்ளுதல்.

மேலே தரப்பட்ட இரு நோக்கங்களையும் நிறைவேற்றும் வகையில் பரீட்சைகள் அமையவேண்டும்.

தற்போது வியாசமுறைப் பரீட்சைகளின் செல்வாக்கு மிக மிகக் குறைந்து விட்டது- புதிய முறைப் பரீட்சைதான் நடைமுறையில் அதிகமாக இருக்கின்றன. இவ் வகைப் பரீட்சைகள் காலம், நேரம் ஒருவரின் விருப்பு, வெறுப்பு என்பவற்றால் தாக்கப் படாது. எதை அளந்து கொள்ள வேண்டுமோ அதை ஓரளவிற்குத் திட்டமாக அளந்து கொள்ளக் கூடிய நம்பிக்கையான ஒரு அளவையாகும். எனவே இப்பரீட்சையை நல்ல முறையில் தயாரிக்கக் கூடியவராக ஒவ்வொரு ஆசிரியரும் பயிற்சி பெற்றவராய் இருப்பது அவசியம். சாதாரணமாக இவ்வகைப் பரீட்சை நடைமுறையில் இருந்தாலும் அவற்றில் எத்தனையோ குறைகள் காணப்படுகின்றன. ஒரு வினாவிற்கு ஒரேயொரு சரியான விடைதான் இருக்கவேண்டும். இப்படிச் சொன்னாலும் 'ச' அப்படிச் சொன்னாலும் 'சரி' என்ற நிலை இருக்கக்கூடாது. எனவே, மயக்கத்திற்கு இடம் கொடுக்காது தெளிவான விளக்கமான வினாக்களைக் கொண்ட பரீட்சையாக அமைத்தல் வேண்டும்.

ஒரு பாடசாலையில் பரீட்சைகளைத் தயாரிப்பதற்கு ஒரு குழுவையும், புள்ளியிட்டு புள்ளிகளை அட்டவணைப்படுத்துவதற்கு வேறு ஒரு குழுவையும் பொறுப்பாக விடலாம். புள்ளிகளை அட்டவணைப்படுத்தும் முறையைப் பற்றி ஏற்கனவே திட்டமிடுதல் நன்று.

பரீட்சை தயாரித்தல் பற்றி நான் அதிகம் சொல்லவில்லை. பலவகையான வினாக்கள் இப்பரீட்சையில் இடம் பெறலாம்.

1. பலவற்றுள் ஒன்றைத் தெரிதல்.
2. பலவற்றுள் ஒன்றைத் தவிர்த்தல்.
3. இணைத்தல்.
4. ஏறு நிரைப்படுத்தல்.
5. இறங்கு நிரைப்படுத்தல்.
6. ஒரு சொல்லில் விடையளித்தல்.
7. ஆம்,, இல்லை.
8. சரி, பிழை.

(7, 8) இந்த வகை வினா அவ்வளவு விரும்பத்தக்கதல்ல. இதைத் தவிர்க்கலாம்.

மாணவர் சிந்திக்காது ஒற்றை இரட்டை விளையாடுவதற்கு இது கூடிய வாய்ப்பை அளிக்கும். புதிய முறைப்பரீட்சையை அமைப்பது சிறிது சிரமமாகும். ஆனால், புள்ளியிடுதல் மிகவும் இலகுவானது. இந்தப் புதியமுறைப் பரீட்சையுடன் வியாசமுறை வினாக்களையும் சிறிது சேர்த்துக் கொள்ளுதல் நன்மையுடையதாகும்.

அடுத்துப் புள்ளிகளை அட்டவணைப்படுத்தலைப் பற்றியும் சிறிது சிந்திக்கவேண்டும். மாணவன் பெறும் புள்ளிகளை மாத்திரம் வைத்துக் கொண்டு அவனைப் பற்றி அறிந்து கொள்ள முயற்சியாமல் அவனை அவனது வகுப்பு மாணவனுடன் ஒப்பிட்டுப் பார்க்க உதவக்கூடிய ஏதோ ஒரு முறையைப் பின்பற்றிப் புள்ளிகளை அட்டவணைப் படுத்தலாம்.

ஒரு பாடத்தின் சராசரிப் புள்ளியையும், மாணவனின் புள்ளியையும் அப்பாடத்தின் சராசரி விலகலையும் கணித்துப் புள்ளிகளை அட்டவணைப்படுத்தும் முறை சில பாடசாலைகளில் நடைமுறையில் உண்டு. இம்முறை எல்லாப் பாடசாலைகளிலும் இருப்பது விரும்பத்தக்கது. இம்முறை ஒரு மாணவனை ஏனைய, அதாவது அந்த வகுப்பு மாணவருடன் ஒப்பிட்டு நோக்க உதவுகின்றது. இம்முறையும் அவ்வளவு பூரணமான முறையென்று சொல்லமுடியாது. ஏனென்றால், ஒரு வகுப்பில் 10, 11, 12 வயது மாணவர்கள் படித்துக் கொண்டிருக்கலாம். இவர்களுடைய தேர்ச்சியை நாம் அளவிடும் போது இவர்களது வயது கணிக்கப்படுவதில்லை. 10 வயது மாணவனையும், 12 வயது மாணவனையும் 6-ம் வகுப்பு மாணவன் என்று மாத்திரம் யோசிக்கின்றோமேயொழிய இவருக்கு மிடையில் 2 வருட காலவயது வித்தியாசம் உண்டு என்பதை யோசிப்பதில்லை காலவயதையும் கணித்துத் தேர்ச்சி ஈவு ஒன்றைக் கணிப்போமேயானால் நிலைமை வித்தியாசமாக இருக்கும். உதாரணமாக 6-ம் வகுப்பில் மூன்று மாணவர்கள் இருக்கின்றனர்.

A, 10 வயது மாணவன் 65 புள்ளி பெறுகின்றான்
B, 11 வயது மாணவன் 66 புள்ளி பெறுகின்றான்.
C, 12 வயது மாணவன் 68 புள்ளி பெறுகின்றான்.

இவர்களின் தேர்ச்சி ஈவைக் கணித்தால் புள்ளிகள் மாற்றமடைவதைக் காணலாம். தேர்ச்சி ஈவைப் பின்வரும் முறையிற் கணிக்கலாம்.

$\frac{65 \times 100}{120} = 56$ கால வயதை மாதத்திற் போட்டுக் கணிக்கப்பட்டுள்ளது.

விடை = 56.

இப்படியே கணித்துப் பார்க்கும்போது,

65 — 56 ஆகவும்
66 — 50 ஆகவும்
68 — 47 ஆகவும் மாற்றமடைகின்றது.

கால வயதைச் சேர்த்துக் கணித்துப் பார்க்கும்போது தான் நாம் மாணவர்களை ஒருவரை மற்றவர்களுடன் நீதியான முறையில் ஒப்பிட்டுப் பார்க்க முடிகிறது. இதைப் பற்றி நீங்கள் சிந்திக்கலாம்.

பாடசாலையில் நிதானப் பரீட்சை பிரயோகத்தில் இருக்கவேண்டும். மாணவர்கள் என்னென்ன பாடத்தில் என்ன பகுதியில் குறைவாக இருக்கிறார்கள் என்பதை அறிந்து அதற்குரிய பரிகார முறைகளை ஆசிரியர்கள் கையாளலாம்.

அடுத்து மாணவருடைய சமூக இயைபு நிலையை அளவிட்டு அது கற்றலுக்குச் சாதகமாக இருக்கின்றதா என்பதை அறிந்து கொள்வதற்காக, இடைக்கிடையே சமூக இயைபு அளவுப் பரீட்சையையும் உபயோகிக்கலாம். இப்பரீட்சை திட்டமாக சமூக இயைபினை அளந்து கொள்ளக் கூடியது அல்ல. இருந்தாலும், இதை உபயோகித்து ஓரளவிற்கு வகுப்பிலே யார் யார் செல்வாக்குடையவர்கள், யார் ஒதுக்கப்படுகின்றார்கள் என்பதை அறிந்து மாணவ — மாணவ தொடர்பு கற்றலுக்கு உகந்ததாக மாறுவதற்கேற்ற சில உபாயங்களை ஆசிரியர் கையாளலாம்.

திருமதி. எஸ். செல்லத்துரை.

# கல்வி முன்னேற்றத்துக்குச் சமூகத்தாற் செய்யப்படும் சேவைகள்

பாடசாலைகளும் சமூக நிறுவனங்களே. அவற்றில் நடைபெறும் செயலுக்குச் சமூகத் தொழிற்பாடு ஊக்கமும் ஆக்கமும் தருவதாக இருப்பது அவசியம். சமூகம் தனது இளம் சந்ததியினர் பெறவேண்டிய அனுபவங்களை முறையாகப் பெற ஏற்படுத்திய சூழலே பாடசாலைகள். இப்பாடசாலைகளின் நோக்கமும், இலக்கும் நிறைவேறுவதற்குத் ஏற்ற சூழ்நிலை சமூகத்தால் ஏற்படுத்தப் படவேண்டியது அவசியமாகும். சமூகந் தனது பற்பல நிறுவனங்களின் மூலம் பாடசாலைச் செயற்பாட்டுக்கு முன்னேற்றம் காண முயல வேண்டும். சுருங்கக் கூறின் முறையான கல்வியின் முன்னேற்றத்துக்கு முறையற்ற கல்வி உதவும் வகையில் சமூக நடத்தை அமையவேண்டும்.

சமூகத்தின் சிறு பிரதியே பாடசாலை இப் பாடசாலை குறிப்பிட்ட திட்டமிடப் பட்ட இலக்கினைக் கொண்டது. கல்வி, பாடசாலையினுள்ளும் புறமும் ஏற்படும் அனுபவங்களாகும். பாடசாலையிற் பெறும் அனுபவங்களே சமூகத்தால் திட்டமிடப்பட்டதாகும். எனவே, இப்பாடசாலை அனுபவங்கள் சமூகம் விரும்பும் அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றை ஏற்படுத்த அகத்தும் புறத்தும் சாதகமான சூழல் அவசியம். சமூகம் செய்யும் சேவைகள் கல்வி முன்னேற்றத்துக்கு உதவும் பெருநோக்கு உடைத்தாயினும் திட்டமும் ஒழுங்கும் இல்லாத சமூக அமைப்பில் இந்நிலை காண்பதற்கில்லை.

அரசு என்னும் சமூக நிறுவனம் கல்விச் சூழலாகிய பாடசாலையைக் கட்டுப் படுத்தும் அதிகாரமுள்ளதாகும். அரசின் முயற்சிகள் சமூகத்தின் பிரதிபலிப்பே. எனினும் வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளிலுள்ள சிக்கலான பல பிரச்சினைகள் காரணமாகச் சமூகத் தொழிற்பாடு கல்வி முன்னேற்றத்துக்கு உதவுவதாக அமைவதில்லை. வளர்ச்சியடைந்த நாடுகளிற் சமூகம் கல்வி முன்னேற்றத்துக்குப் பல்லாற்றுனும் ஊக்கமும் ஆக்கமும் தர இடையீடின்றி முயற்சிப்பதை நாம் காணலாம். 'பாடசாலையைத் திற சிறைச்சாலையை மூடு' என்பது ஒரு முதுமொழி. இதனை நன்கு உணரின் பல்லாற்றுனும் உற்றுழியும் கைகொடுக்கும் கல்வியின் முன்னேற்றத்துக்குச் சமூகம் உதவுவது பின் எழக்கூடிய பல சமூகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதாக அமையும்.

இனிச் சமூகத்தாற் செய்யப்படும் சேவைகளைப் பகுத்தும் தொகுத்தும் காண முயல்வோம். வீடு என்னும் சிறிய சமூக நிறுவனம் எவ்வகையில் கல்வி முன்னேற்றத் துக்குச் சேவை செய்கின்றது என ஆராய்வோம். வீட்டுச் சூழல் பாடசாலைச் சூழலுக்கு உறுதுணையாக அமைதல் வேண்டும். வீடே ஒரு குழந்தையின் முதற் கல்வி, நிலையம் வீட்டின் சூழல் ஆளுமையைப் பெரிதும் பாதிக்கின்றது. பாடசாலை குழந்தையின் முழுவளர்ச்சிக்கும் பொறுப்பானதாயினும் வீட்டுச் சூழல் ஒரு மாணவனின் கற்றல், செயல் முறையில் பெரும் பங்கு வகிக்கின்றது. இவ்வடிப்படை உண்மையினை எல்லாப் பெற்றோரும் உணர்ந்து தமது பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்துக்கு ஏற்ற சூழலை ஏற்படுத்துகின்றனரெனச் சொல்வதற்கில்லை. எவனொருவன் தனது பிள்ளைகளின் கல்விக்கு ஏற்ற சூழல் ஏற்படுத்தத் தவறுகிறானே அவனுக்குத் தந்தையாகும் உரிமை இல்லை என்பது ரூசோவின் கருத்தாகும். மேல்வகுப்பினையும் மத்திய வகுப்பினையும் சேர்ந்த பெற்றோர் தமது பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்துக்கு ஏற்ற வகையில் தமது நடத்

தையை அமைக்க முயற்சிப்பதுண்டு. இவ்வகுப்புக்களைச் சேர்ந்த பெற்றோர் இத்துறையில் சேவை ஆற்றும் அறிவுள்ளவராயிருப்பது குறிப்பிடத்தக்கது. மேல் வகுப்பினருக்குக் கல்வி சமூகப் பெயர்வுச் சாதனமாக அமைவதில்லை. எனவே, அவர்களின் நடத்தை இயற்கையில் தமது பிள்ளைகளின் கவர்ச்சிக்கு ஏற்ற கல்வியாய் அமைவதைக் காண்கின்றோம். ஆனல். மத்திய வகுப்புப் பெற்றோர் தமது பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்துக்குப் பெரிதும் உறுதுணையாக வேண்டும் என்னும் பேரார்வத்தினுல் சாதகமான நடத்தையினை மேற்கொள்ள விரும்பி இடையருது முயற்சிக்கின்றனர். ஆனுல் இம்முயற்சிகள் தமது அபிலாஷைகளை நிறைவுறுத்தும் கருவிகளாகப் பிள்ளைகளைக் கருதி அவர்களின் இயல்பான கல்வி முன்னேற்றத்துக்குப் பாதகமாக அமைவதைக் காண்கின்றோம். பிள்ளைகளின் இயல்பான தன்மைகளுக்கு முரணுன வகையில் நடந்து கொள்வதைக் காண்கின்றோம். ஆனுல் கீழ் வகுப்புப் பெற்றோரின் நடத்தை தமது பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்துக்குத் துணையாவது அரிது. அவர்களுக்கு இதற்கு ஏற்ற அறிவோ அன்றேல் பொருளாதாரச் சூழலோ இருப்பதில்லை. அவர்கள் ஏனோ தானே என நடந்து கொள்வதால், பிள்ளைகள் தமது கல்வி முயற்சியில் வெற்றி காண்பதரிதாகின்றது.

எனவே, வீடு என்னும் வலிய சமூக அமைப்பு கல்வி முன்னேற்றத்துக்கு உதவும் வகையில் அமைவது அவசியம். பெற்றோரும் முதியோரும் தமது நடத்தையைப் பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்துக்கு உதவக்கூடியவாறு தமது கருமங்களை ஆற்றுவது பெரிதும் விரும்பத்தக்கது. முறையான கல்விச் சூழ்நிலைகளாகிய பாடசாலைகள் கருதிய குறிக்கோளை அடைய முறையற்ற கல்வி நிலையங்கள் உதவ முன்வரவேண்டும். இவ் வகையில் இலங்கையில் செய்யவேண்டுவன அதிகம் உண்டென்றே கொள்ள வேண்டும். பெற்றோரும் முதியோரும் இத்துறையில் சேவை செய்ய முயலும் வகையில் அறிவூட்டப்படுதல் இலங்கையில் அவசியம்.

சமய நிறுவனங்கள் இலங்கையில் தமது செல்வாக்கினை முற்ருக இழந்துவிடவில்லை. ஞாயிறு பாடசாலைகளும் பிற வினுக்களும் ஆச்சிரமங்களின் சமயத் தொண்டுகளும் இன்றும் செல்வாக்குள்ளவை. இவற்றின் சேவை பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்துக்கு ஏற்ற வகையில் தமது குறிக்கோளுடையவையாகச் சேவை செய்கின்றன. இவற்றின் செல்வாக்கினை உணர்ந்து இச்சமய நிலையங்களின் சேவையைப் பிள்ளைகள் பெறத் தூண்டுவது சமூகம் இத்துறையில் சேவை செய்யும் முயற்சி எனலாம்.

இனி மாதர் சங்கங்கள், இளைஞர் சங்கங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள், கிராமச் சங்கங்கள் என்பன போன்ற சமூக அமைப்புக்கள் தமது சேவை கல்வி முன்னேற்றத்துக்கு உதவ வழிசெய்ய வாய்ப்புள்ளவை. இலங்கையில் இவ்வமைப்புக்கள் குறிப்பிட்ட அளவு, இத்துறையில் பயன் தருவதாகத் தெரியவில்லை. இவை கல்வி முன்னேற்றத்தைக் குறிக்கோளாகக் கொண்டு தொழிற்படுவது சிறந்த சேவை எனலாம்.

வானெலி, திரைப்படம், புதினப் பத்திரிகைகள் என்னும் சமூகச் செல்வாக்குள்ள சாதனங்களும் கல்வி முன்னேற்றத்துக்கு ஆவன செய்யும் நிலையிலுள்ளன. எனினும் அவை இத்துறையில் சேவைசெய்யும் குறிப்பான அக்கறை காட்டுவது இந்நாட்டில் பெரும் குறையாகவே இருந்து வருகின்றன. இத்துறையில் இவை ஏற்ற சேவை செய்யின் மாணவரிடையே இன்று காணப்படும் பல பிரச்சினைகள் தோன்ருதிருக்கும். மேற்கூறப்பட்ட சாதனங்கள் மூலம் சமூகம் சேவை செய்து கல்வி

முன்னேற்றத்துக்கு உதவ இவற்றின் செயற்பாடு புனரமைப்புச் செய்யப்படுவது அவசியம்.

கல்விக்காக ஆண்டு தோறும் சமூகம் தனது வரவில் பெரும் பகுதியைச் செலவு செய்கிறது. இத்தொகைப் பணமும் முயற்சியும் கருதிய பயனைத் தரவேண்டுமாயின் சமூகம் பாடசாலைகளையும், ஆசிரியர்களையும் கல்விப்பகுதி அதிகாரிகளையும் ஊக்கு விக்கும் சேவையில் ஈடுபடவேண்டும். பாடசாலையில் பிள்ளையைச் சேர்த்து விட்ட தோடு தனது கடமை முடிந்து விட்டதாகச் சமூகம் கருதுவது தவறாகும். பாடசாலை கள் சிறந்த முறையில் தொழிற்பட்டுக் கருதிய பயனைத் தரச் சமூகச் சூழல் சாதகமாக அமைவது அவசியம் என்பதனைச் சமூகம் அறிதல் அவசியமாகும்.

இன்று கல்வி முயற்சிகள் கருதிய பயனைத் தராது மேலும் பல பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும் அவல நிலை ஏற்படக் காரணம் சமூகம் இத்துறையில் கருதிய தொண் டினைச் செய்யாததாகும். எனவே. சமூகம் கல்வி முன்னேற்றத்தைக் கருத்திற் கொண்டு தொழிற்பட முயலவேண்டும். அதுவே சமூகம் வருங்காலச் சந்ததியினரை வேண்டிய அறிவு, திறன், மனப்பாங்கு என்னும் சமூகச் செல்வங்கள் பெற்றுப் பொருத் தப்பாடுள்ள நற்பிரசைகளைத் தோற்றுவிக்க வல்லதென்பதை உணர்ந்து செயற்படுவது பயன் தருவதாகும்.

"தூயவை துணிந்தபோது பழிவந்து தொடர்வதில்லை"

ஆர். எஸ். நடராசா

"எவனொருவன் தனது பிள்ளைகளின் கல்விக்கு ஏற்ற சூழல் ஏற்படுத்தத் தவறுகிறானோ அவனுக்குத் தந்தையாகும் உரிமை இல்லை".

# டோல்ரன் முறையும் தொழில் முறையும்

## டோல்ரன் முறை:

கல்விச் சிந்தனையாளர் பலரும் கற்றல், கற்பித்தல் என்னும் இரு செயற்பாடுகளையும் உளவியல் அடிப்படையில் அமைத்துத்தர முயற்சித்தனர். கற்றற் செயல்முறைக்கு நல்ல நோக்கும் போக்கும் ஏற்படுத்தி நற்பயன் ஏற்படுத்தும் வகையில் பற்பல ஆய்வுகள் நடாத்தப்பட்டுள்ளன. ரூசோ தொடக்கிவைத்த மாணவ மையக் கல்விச் செயற்பாடுகள் பின்வந்த கல்விச் சிந்தனையாளரால் செயற்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அமெரிக்க நாட்டைச் சேர்ந்த அம்மையார் செல்வி ஹெலன் பாக்கேஸ்ற் ரினல் டோல்ரன் உயர் நிலைப் பள்ளியில் முதன்முதலாக 1920-ம் ஆண்டிற் செயற்படுத்தப்பட்ட தனியாள் வேற்றுமை அடிப்படையையும் செயல் வழிக் கல்விக் கொள்கையையும் ஒருங்கிணைத்த திட்டமே டோல்ரன் திட்டமாகும். கற்பித்தல் முறைகள் கற்றலையும் கற்பித்தலையும் இலகுவாக்கும் முயற்சியின் பெறுபேறுகளே. இவ்வகை நோக்கில் டோல்ரன் திட்டம் தனியாள் வேற்றுமை, மாணவர் இயல்பு, அடிப்படைத் தேவைகள், கவர்ச்சிகள், சுதந்திரம் என்னும் கல்வி உளவியற் தத்துவங்களை ஆதாரமாகக் கொண்டு அமைந்ததெனலாம். சுயமுயற்சியினுல் பெறும் அனுபவங்கள் நிலையாய பயன்தரவல்லவை. உடலியக்கமும் திறன்களும் விருத்தியாக சுதந்திரம் அவசியம் என்னும் கருத்துக்களெல்லாம் டோல்ரன் திட்டத்தில் அமைந்திருத்தல் காணலாம்.

### டோல்ரன் திட்ட முறையின் பிரதான அம்சங்கள்:

1. சுதந்திரம்
2. சமூக ஊடாட்டம்
3. தனியாள் இயல்புக்கேற்ற கல்வி

இம்மூன்று அடிப்படைகளும் தற்காலக் கற்றல் கொள்கைகளை உள்ளடக்கியவையாகவே காணப்படுகின்றன. செல்வி ஹெலன் பாக்கேஸ்ற் இத்திட்டத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில் கற்பிக்க வேண்டும் என்னும் எண்ணம் ஆசிரியருக்கு எழுவதை விடக்கற்கவேண்டும் என மாணவருக்குத் தோன்ற இத்திட்டம் வழி செய்யுமென்ருர்.

டோல்ரன் திட்டத்துக்கு முன்னேடியாயிருந்தது வினற்காத்திட்டம். இவ்வினற்காத்திட்டம் வெற்றிபெருததற்கு அதனில் காணப்பட்ட அளவற்ற சுதந்திரம் காரணமாயிற்று. வினற்காத் திட்டம் பாடத்தை மாற்றி அமைக்க முனைந்தது. டோல்ரன் திட்டம் பாடசாலையை மாற்றியமைத்தது. டோல்ரன் திட்டத்தை உருவாக்கிய செல்வி ஹெலன் பாக்கேஸ்ற் இதற்குத் தனது பெயரை இடாது விட்டதற்குக் காரணமாகக் கூறியது இங்கு குறிப்பிடத்தக்கது. இத்திட்டம் நடைமுறையில் நெகிழக் கூடியதாக, மாற்றங்கள் செய்யக்கூடியதாக இருக்க வேண்டுமென்பதே இத்திட்டத்தின் பிரதான அம்சங்களாகும்.

மாணவர் கற்கவேண்டிய அனுபவங்கள் சிறு அலகுகளாக்கப்படும். உதாரணமாக ஆறு பாடங்களில் அனுபவம் பெறவேண்டும் என வைத்துக்கொள்வோம். ஒரு மாதத்தில் 20 அலகுகள் இருபது ஒப்படைப்புக்களாக மாணவருக்குத் தரப்படும். ஆறு பாடத்திலும் மொத்தம் 120 ஒப்படைப்புக்கள் இருக்கும். இந்த ஒப்படைப்புக்களை ஆசிரியர் மாணவருக்குத் தருவார். ஒப்படைப்பினை ஆசிரியர் மாணவருக்குத் தரும் பொழுது,

(அ) ஒப்படைப்பினைப்பற்றிய சிறு விளக்கம் இது அறிமுகம் எனலாம்.

(ஆ) இந்த ஒப்படைப்பினைச் செய்ய மாணவர் வாசிக்க வேண்டிய நூற் பகுதி.

(இ) கேள்வி.

(ஈ) இதன் தொடர்பாக வீட்டில் வாசிக்கத் தகுந்த நூல்கள்.

என்பவற்றை ஆசிரியர் விளக்குவார். மாணவர்கள் தாம் விரும்பிய ஒப்படைப்பினை அப்பாடத்துக்குரிய பாட அறைக்குச் சென்று செய்யலாம். ஆறு பாடங்களுக்கும் தனித்தனி அறைகள் இருக்கும். மாணவன் நேரக் குறுக்கீடின்றித் தான் விரும்பிய பாட ஒப்படைப்பு மூன்றினையோ, நான்கினையோ தொடர்ந்து செய்யலாம். ஒவ்வொரு ஒப்படைப்பு முடிந்ததும் பாட அறையிலிருக்கும் பாட ஆசிரியரிடம் ஒப்படைப்பினைச் சமர்ப்பித்து அவர் மதிப்பீட்டின் பின் அடுத்த ஒப்படைப்புச் செய்ய அனுமதிக்கப் பட்டபின்பே அடுத்த ஒப்படைப்பைத் தொடரலாம். தனது ஆர்வம் தணியும் வரை ஒரு பாட ஒப்படைப்பைச் செய்யலாம். எனினும் மாதம் முடியுமுன் 120 ஒப்படைப்புக் களும் பூர்த்தியாக வேண்டும். ஒப்படைப்புக்களை மாணவர் செய்து முடிப்பதனைத் தாமும் பிறரும் கண்டறிந்து ஊக்கமுறவும், மதிப்பீடுகள் செய்யவும் ஹெலன் பாக் கேஸ்ற் மூன்று வழிகளைக் கையாண்டார். அவை:

1. மாணவர் குறிப்பட்டை 2. போதனுசிரியரின் வரைபடம்
3. வீட்டு வரைபடம் என்பனவாகும்.

இவை இலகுவாக மாணவன் வழிப்படவும் அவனை வழிப்படுத்தவும் உதவும். இவற்றில் என்னென்ன பாடங்களில் எத்தனை ஒப்படைப்புகளைச் செய்து முடித்துள்ளானென இலகுவில் அறிய இடமுண்டு. இத்திட்டத்தின் குறிப்பிடத்தக்க சிறப்புகள் என நாம் பரம்பரையான வகுப்புக் கற்பித்தல் முறையோடு ஒப்பு நோக்கும்போது கீழ்வரும் சிறப்புகள் டோல்ரன் முறையில் இருப்பதைக் காணலாம்:

(அ) நெகிழாப் பாட அட்டவணை முறை இல்லை.
(ஆ) தனியாகவும் குழுவாகவும் செயலாற்ற வாய்ப்பு.
(இ) ஆற்றல், கவர்ச்சி என்பவற்றுக்கேற்ப முன்னேற்றம். மீத்திற மாணவருக்குத் தடையில்லை.
(ஈ) தனியாக மேற்பார்வை செய்யவும் வழிகாட்டவும் வாய்ப்பு.
(உ) மாணவர் தமது முன்னேற்றத்தைத் தாமே அறிய வாய்ப்பு.
(ஊ) பாடசாலைக்குச் சமூகமளிக்கத் தவறினும் அதிக பாதிப்பில்லை.

இத்திட்டத்தின்படி வகுப்பறை பாட ஆய்வுக் களமாக மாறும். மாணவரெல் லாம் ஆராய்ச்சியாளராவர். தமக்குப் பொறுப்புக் கொடுக்கப்பட்டதால் அவர்கள் பெருமை கொண்டு ஆர்வத்தோடு ஒப்படைப்புக்களைச் செய்ய இயற்கையாகவே ஊக்கு விக்கப்படுவர். முதன்மை வேண்டி இன்று ஏங்குவோர் இத்திட்டக் கற்றல் முறைமூலம் கணிப்பும் மதிப்பும் பெற்றவராகும். திருப்தி இத்திட்டத்தில் ஏற்பட இடமுண்டு. ஒப்படைப்பு முடிந்ததும் ஆசிரியர் வாய் மொழியாகவும் பரீட்சிப்பார். ஆசிரியர் இத் திட்டத்தின்படி மதிப்பிழக்கமாட்டார். அவர் மாணவனுக்கு வழிகாட்டியாகவும், துணை வராகவும் தேர்வாளராகவும் தொண்டாற்றுவார். நெருக்கமான ஆசிரிய மாணவ உறவு ஏற்பட இத்திட்டத்தில் இடமுண்டு.

எனினும் இதிலும் சில குறைபாடுகளுண்டு. அவற்றைத் தெரிந்திருத்தல் நன்று. உதாரணமாக புதிய கொள்கைகளை இம்முறையில் கற்றுக்கொள்வது சிரமம். போதிய பாடப்புத்தகங்கள் இது பற்றி வெளிவந்திருக்க மாட்டா. வாய்மொழி சிறு இடத்தையே பெறுகின்றது. சோம்பேறிகளைத் தடுக்கப் போதிய வசதி இல்லை. தமது சிக்கல்களைத் தாமே சென்று ஆசிரியரை நாடித் தீர்க்கத் தயங்குவர்.

மேற்கூறிய குறைகள் இருப்பினும் தனிக்கற்றல் முறையில் டோல்ரன் திட்டம் சிறந்த வொன்றென்பது கல்வியாளரது துணிபு. நம் நாட்டில் இதனைச் செயற்படுத்த வாய்ப்பில்லையாயினும் இதன் சிறப்பம்சங்களை நமது வகுப்பறையில் வாய்ப்பு ஏற்படும் பொழுதெல்லாம் பயன்படுத்த முயற்சித்தல் மாணவ மையக் கல்வி நோக்கில் ஆசிரி யரது கடனாகும்.

ஆர். எஸ். நடராசா

# தொழில் முறை

செயல் மூலம் கற்றல் அல்லது தொழில் மூலம் கற்றல் என்னும் கருத்து இப்பொழுது பெரும் செல்வாக்குப் பெற்றுள்ளது. இது உடல் உள சமூக மன வெழுச்சி அடிப்படையில் அமைவதால் கற்றற்றொழில்முறை சிறப்புடன் நிகழ மிகவும் ஏற்றது. "கேட்டேன் மறந்து விட்டேன்" "பார்த்தேன் ஞாபகமிருக்கிறது" "செய்தேன் விளங்கிக் கொண்டேன்" என்னும் கூற்றுக்கள் தொழில் முறையின் சிறப்பினை விளக்கப் போதுமான சான்றாகும்.

செய்து கற்றல் அல்லது தொழில் மூலம் கற்றல் என்பதனைக் கல்விச் சிந்தனையாளர் தொடக்கம் பலரும் வலியுறுத்தினர், எனினும் ஜோன் டூயி தொழில் முறையினைப் பிரபல்யப் படுத்த உதவினார். அவரைத் தொடர்ந்து பேராசிரியர் கில் பற்றிக் திட்டமான வகையில் இதற்கு அழுத்தம் கொடுத்துள்ளார். காந்தியும் இம்முறையின் அடிப்படையிலேயே தனது ஆதாரக் கல்வித் திட்டத்தை உருவாக்கினார். இத் தொழில் முறைக் கற்றல்:

(1) கவர்ச்சியான முயற்சியில் ஈடுபடுத்தும்,

(2) பயன் இம்முறையில் திணிக்கப்பட வேண்டியதில்லை — தானே வந்து சேரும்,

(3) ஊக்கலையும் தேவையையும் அடிப்படையாகக் கொண்டதாயிருக்கும்,

(4) ஒழுங்கு தொழிலில் ஈடுபட்டால் தானே வந்து சேரும்.

தொழில் முறை அனுபவம் பிரச்சினை உருவில் தரப்படும். அப்பிரச்சினை கற்போரைப் பாதிப்பதாய் - தொடரக் கூடியதாய் - வெற்றி காணக் கூடியதாய்- வேண்டிய அறிவு திறன் மனப்பாங்கு என்பவற்றைத் தருவதாய் அமையும், தொழில் முறையில் மாணவரே திட்டமிட்டு நிறைவேற்றுவதாயிருப்பது பெரிதும் விரும்பத்தக்கது. ஆசிரியர் அவ்வப்போது வழிகாட்டுவார்.

தொழில் முறையில் இருவகையான தொழில் முறைகள் இருக்கலாம். ஒன்று தனியாள் தொழில் முறை; மற்றையது குழுத் தொழில் முறை. தனியாள் தொழில் முறையில், தனியாள் வேற்றுமைக்கு மதிப்பளித்து தனியாளின் இயல்புக்கேற்ற கற்றலுக்கு வழிவகுக்கப்படும். குழுத் தொழில் சமூகப் பொருத்தப்பாட்டுக்கு வழிவகுக்கும். எனவே, தொழில் முறை, இருவகையினையும் உள்ளடக்கியதாக இருப்பது பெரிதும் பயன் தரும்.

தொழில் முறை செய்முறையிலிருந்து விதிகளைக் கற்றலுக்கு வழிசெய்கிறது. விதிவருமுறை ஆர்வமும் ஊக்கமும் தரும்வகையில் தொழில் முறையில் கையாளப்படவேண்டும்.

ஆர். எஸ். நடராசா

# கேள்வி கேட்டல் சம்பந்தமான வழி முறைகள்

பொதுவாகப் பிறர் கருத்தை நாம் அறிந்துகொள்ள உதவும் சாதனம் கேள்வி. கேள்விகளைக் கேட்டு நாம் விரும்பிய செய்திகளை அறியவும் சந்தேகங்களைப் போக்கவும் முயற்சிக்கிறோம். கற்பித்தல் அதாவது மாணவர் கற்பதறகேற்ற சூழலை ஏற்படுத்தலாகும். இத் தொழிலில் கேள்வி பெரும் பயன் தர வல்ல சாதனமாகும். 'தட்டுங்கள் திறக்கப்படும் கேளுங்கள் கொடுக்கப்படும்' என்னும் தேவ வாக்கும் இவ்வகைக்கேள்விகளின் பயனை வலியுறுத்துவதாகும்.

ஆசிரியனது தொழிலில் சிறப்பும் பயனும் ஏற்பட அவன் மாணவனை அறிய வேண்டும். பாடத்தை அறிய வேண்டும். தன்னை அறிய வேண்டும். இவற்றுக் கெல்லாம் கேள்வி கேட்டல் நல்ல சாதனமாகும். பொதுவாகத் தெரியாதவற்றைத் தெரிந்து கொள்ளவும் சிந்தனையைத் தூண்டவும் கற்றுக்கொள்ளவும் மதிப்பிடவும் கேள்விகள் கேட்கப்படுகின்றன.

ஒரு வகுப்பில் ஆசிரியன் சிறந்த முறையில் கல்விச் சூழலை ஏற்படுத்தக் கேள்விகளை

(அ) எளிய சொற்களில், மாணவன் கேள்வியின் பொருளைத் தெளிவாக அறிந்து கொள்ளக் கேட்க வேண்டும்.

(ஆ) கேள்வி நீளமானதாயில்லாதிருப்பது நன்று.

(இ) ஏன் அல்லது எப்படி என்ற கேள்விகளே ஆசிரியத் தொழிலுக்கு அதிக பயன் தர வல்லன.

(ஈ) கேட்கும் கேள்வியில் விடை கலந்திருப்பது நன்றன்று.

(உ) ஆம் அல்லது இல்லை என்னும் விடை தரும் கேள்விகள் பயன் அதிகம் அற்றவை.

(ஊ) மிக நீண்ட விடைகளை எதிர்பார்க்கும் கேள்விகளும் அதிக பயன் தரா.

எனவே, ஆசிரியன் கேள்விகளை வகுப்பில் கையாளும் பொழுது மேற் கூறப்பட்டவற்றைப் பொது விதியாகக் கொண்டு கேள்விகளைக் கேட்டல் பெரும் பயன் தரவல்லன. வகுப்பில் கேள்வி கேட்டலில் ஆசிரியன் கவனிக்கத் தக்கது:-

1. பொதுவாகக் கேள்வியைக் கேட்டுக் குறிப்பாக மாணவரிடம் விடை பெறுதல்.

2. கேள்வி, வகுப்பிலுள்ள எல்லா மாணவருக்கும் தெளிவாகக் கேட்க வேண்டும்.

3. மாணவர் கேள்விக்கு விடை தருவதற்குப் போதிய அவகாசம் கொடுக்கப்பட வேண்டும்.

4. வகுப்பில் மாணவர் அமர்ந்திருக்கும் வரிசை முறையோ அன்றேல் அகர வரிசையோ நன்றன்று.

எனவே, கேள்வி கேட்டல், கற்றல், கற்பித்தல் ஆகிய செயலின் பயன்பட வகுத்துக் கொள்வது ஆசிரியனின் ஆற்றலில் தங்கியுள்ளது. மாணவனுக்குப் பாடத்தில் ஆர்வமூட்டவும் அவனது முன்னறிவை மட்டிடவும் அவர் பயன் படுத்தலாம். பாட அறிவைப் படிப்படியாக வளர்க்கவும், மாணவர் விளக்கக் குறைகளைப் போக்கவும், பொது உண்மைகளை மாணவர் அறியச் செய்யவும், மீட்டல் செய்யவும் சலிப்பைப் போக்கவும் பாடச் சுருக்கத்தை மாணவர் அறியச் செய்யவும், சுவை உணர்வைத் தூண்டவும், அவதானத்தைத் தூண்டவும், கேள்விகள் பயன் படுத்தப்பட நல்ல சாதனங்களாகும்.

கேள்வி கேட்டல் பயனுள்ள சாதனமெனினும் ஆசிரியனது திறமையிலேயே அதனைப் பயன் படுத்திப் பயன் பெறும் சிறப்புத் தங்கியுள்ள தென்பதைக் கருத்திற் கொண்டு ஆசிரியன் தொழிற்பட வேண்டும். மாணவர் நிலையினைக் கருத்திற் கொண்டு சூழலுக் கேற்றவாறு கேள்விகளைப் பிரயோகித்தல் ஆசிரியர் கடனாகும்.

"ஆசிரியன் தன்னையும் மாணவனையும்
பாடத்தையும் அறிந்திருத்தல் வேண்டும்."

# பொருளாதார விருத்தியும் கல்வியும்

(i) எமது நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைகள்

(ii) கல்விப் புனரமைப்பு

(iii) தொழில் முன்னிலைப் பாடநெறி

(iv) கல்வியும் பொருளாதார அபிவிருத்தியும்

எமது மிக முக்கியமான பொருளாதாரப் பிரச்சினை பெருகிவரும் சனத்தொகையாகும். ஆண்டு தோறும் ஏறத்தாழ 370,000 பேர் கூடிக்கொண்டு வருகின்றனர். பொருளாதாரத் துறையில் கணிசமான விருத்தி ஏற்படாமல், சனத்தொகை மட்டும் பெருகுவதனுல் வேலையில்லாப் பிரச்சினை பெரும் பிரச்சினை ஆகிவிட்டது. தொழிலாற்றக் கூடியவர்கள் 45,00,000 பேர்கள் இலங்கையில் உள்ளனர். அவர்களுள் 550,000 பேர்களுக்குத் தொழில் வாய்ப்புகள் இல்லை. அதாவது 12சத வீதமானவர்கள் தொழிலில்லாதவர்களாவர். ஆண்டுதோறும் புதிதாக 120,000 பேர்கள் வேலையில்லாதோர் தொகையில் சேருகின்றனர். இவர்களுள் 25 % ஆனவர்கள் க. பொ. த பரீட்சையில் சித்தியெய்தி எவ்விதமான தொழிலுக்கும் தகுதி அற்றவர்களாக உள்ளனர். அவர்களுக்கு இதுவரை கல்வித்திட்டத்தில் தொழிற்பயிற்சி அளிக்கப்படாமையே இதற்குக் காரணமாகும். வேலையில்லா நபர்களை நோக்குமிடத்து அவர்களிடையே பல பிரிவுகளைக் காணலாம். படித்த வேலையில்லாதவர் க. பொ. த. பரீட்சை தகுதி பெற்று வேலையில்லாதவர், எதுவித படிப்புமின்றி வேலையில்லாதவர் எனப் பல பிரிவுகளைக் காணலாம். மேலும் தொழிலில்லாதவர்களின் 76 %ஆனவர்கள் கிராமப்புறவாசிகள் ஆவர். 1969—70ம் ஆண்டில் நடாத்தப்பட்ட சமூக பொருளாதார அளவெடுப்பில் காணப்பட்ட முக்கிய அம்சமானது எமது நாட்டில் 50 %ஆனவர்கள் 21 வயதிற்குட்பட்டவர்கள் ஆவர் என்பதாம். எனவே நாம் அறிவு விருத்தியும் தொழில் நோக்குமுடைய கல்வியின் அவசியத்தை நன்கு உணர்கின்றோம்.

40 % ஆன குடும்பத்தினர் 200 ரூபாய்க்கு உட்பட்ட வருமானமுள்ளவர்கள் என மேற்கூறப்பட்ட அறிக்கை கூறுகின்றது. சம்பளப்படியிலுள்ள ஏற்றத்தாழ்வு காரணமாக ஒரு சிலர் கூடிய சம்பளத்தையும் பெரும்பாலானோர் குறைந்த சம்பளத்தையும் பெற்றுத் தொழில் செய்கின்றனர். குறைந்த வருமான முடையோரே நாட்டின் பெரும்பான்மையினராக இருப்பதனுல் சேமிப்புக் குறைவாக உள்ளது. பெரும்பாலானோர் தமது வருமானத்தில் 86 %த்தை அன்றாடச் செலவுகளுக்குப் பயன் படுத்துகின்றனர். தவிர்க்கக்கூடிய தேவையற்ற செலவுகள் பல சம்பிரதாய முறைகளோடு சேர்ந்து மக்கள் வாழ்க்கையில் இடம் பெற்றுள்ளன. இதன் விளைவாகத் தவருன முறையில் பணத்தை விரயமாக்குதல், கடன் தொல்லைகளில் அகப்படுதல், தேசீய சேமிப்பு இயக்கத்திற்குத் தன் பங்கைச் செலுத்தத் தவறுதல் முதலியவற்றினுல் எமது பொருளாதார அபிவிருத்தி தடைப்படுகின்றது. எனவே எங்கள் வாழ்க்கை முறைகளில் மாற்றத்தை ஏற்படுத்திச் சிக்கனம், சேமிப்பு ஆகியவைகளை மக்கள் மனத்தில் பதித்தல் கல்வியின் பணியாகும். மாணவர் பாடசாலை வாழ்க்கையிலேயே சேமிப்பைத் தொடங்கித் தமக்குக் கிடைக்கும் சிறு தொகைப் பணத்தைத் தேசீய சேமிப்பு முத்திரைகள் ஆகியவற்றில் முதலீடு செய்தல் வேண்டும். பொது மக்கள் தங்களிடமுள்ள மேலதிக பணத்தைக் கட்டுக்கட்டாக வைத்திராமல் நாட்டின் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களில் முதலீடு செய்தல் வேண்டும்.

அடுத்த பிரச்சினை வெளிநாட்டுச் செலாவணித் தட்டுப்பாடே ஆகும். அதிகமான உணவுப் பொருட்களையும் ஆடம்பரத் தளபாடங்களையும் இறக்குமதி செய்வதினுல் எமது பணம் பெருவாரியாக வெளிநாடுகளுக்குச் செல்வதுடன் உள்நாட்டு அபிவிருத்திக்குப் பயன்படமாட்டாமல் உள்ளது. மேலும் உலகச் சந்தையில் எமது ஏற்றுமதிப் பொருட்களின் விலைகள் வீழ்ச்சி அடைந்து வருவதால் எமது கடன் கடலாகிப் பெருகிவருவதுடன் பல பிரச்சினைகளும் ஏற்படுகின்றன. இப்பிரச்சினைகளைச் சமாளிக்க வேண்டுமாஞல் உள்நாட்டில் உற்பத்தியைப் பெருக்க வேண்டும். நாமே எமக்குத் தேவையானவற்றை விளைவித்துக் கொள்வதனுல் அதிக பணம் மிகுதியாகும். மேலும் பொருட்களை உற்பத்தி செய்து வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்வதால் வெளிநாட்டுச் செலாவணியைப் பெருக்கிக் கொள்ளலாம். அண்மையில் எமது நாட்டில் உருளைக்கிழங்கு, மிளகாய், வெண்காயம் முதலிய உப உணவுப் பயிர்களுடன் நெல்லையும் அபிவிருத்தி செய்யும் திட்டம் குறிப்பிடத்தக்கது. முன் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களுள் பலவற்றை இன்று நாமே தயாரிக்கின்ருேம். இன்று எமது நாட்டில் தயாரிக்கப்படும் பொருட்களுக்கு உலோகக் கூட்டுத்தாபனங்களினுல் உற்பத்தி செய்யப்படும் தளபாடங்கள், விசுக்கோத்து, இனிப்பு, குளிர்பானம் முதலியவற்றை உதாரணமாகக் கூறலாம். இவ்வாறு உற்பத்தியைப் பெருக்கித் தன்னிறைவை நோக்கி முன்னேறுவது வெளிநாட்டுச் செலாவணித் தட்டுப்பாட்டைக் குறைக்கும்.

நமது நாட்டில் இயற்கை வளங்களை நல்ல முறையில் பயன்படுத்தல் வேண்டும். அவற்றைப் பாதுகாத்துக் கூடியபலன் தரும் விதத்தில் உபயோகித்தல் வேண்டும். நமது நாட்டின் இயற்கை வளங்களென நாம் ஆறுகள், காடுகள், கனிப்பொருட்கள், கடற்கரை, அதைச் சூழ்ந்துள்ள கண்டமேடைகள், பவளப்பாறைகள், பறவைகள், விலங்கினங்கள் என்பவற்றைக் குறிப்பிடலாம். எமது கடற்கரையைச் சூழ்ந்துள்ள பவளப்பாறைகளைக் கட்டிடத் தேவைகளுக்காக உடைத்து எடுப்பதனுல் பாதுகாப்புக் குறைந்து கடல் நிலத்தை அரித்துக்கொண்டு இருக்கிறது. இதன் நீண்டகால விளைவை நோக்குமிடத்து எமது தரைப்பகுதி குறைந்து கொண்டு இருப்பதை நன்கு உணரலாம். எனவே, எமது பாடசாலை மாணவருக்கும் அவர்களூடே சமூகத்திற்கும் நாட்டின் வளங்களைப் பற்றிய அறிவையும் அவற்றைப் பயன் படுத்தும் விதம் பாதுகாக்கும் வழிகள் முதலியன பற்றி நன்கு போதித்தல் வேண்டும். புதிய கல்வித்திட்டத்தின் கல்விப்பொருளில் இஃது இடம் பெற்றுள்ளது.

ஐந்தாண்டுத் திட்டத்தில் மேற்குறிக்கப்பட்ட பிரச்சினைகள் நன்காராயப்பட்டுப் பல பொருளாதார விருத்திக்குரிய வழிகள் சிபார்சு செய்யப்பட்டுள்ளன. இலங்கை ஒரு விவசாய நாடாகும். அதன் இயற்கை வளங்களை ஆதாரமாகக்கொண்டு கைத்தொழில்களைப் பெருக்கல் முடியும். விவசாயம், கால்நடைவளர்ப்பு, புதிய உணவுப்பயிர்களின் உற்பத்தி, கோழிப்பண்ணை, அபூர்வமான பூச்செடிகளை உண்டாக்குதல், பருத்தி பழவகை உற்பத்தி செய்தல், மீன்பிடித்தல் முதலியன இந்நாட்டு இயற்கை வளங்களோடு இசைந்தனவாகும். இவற்றை அடிப்படையாகக்கொண்டு மக்களுக்கு அவசியமான உணவுகளை அளிப்பது, மேலதிகமானவற்றை பதப்படுத்தித் தகரங்களில் அடைத்து வெளிநாடுகளுக்கு அனுப்புதல், ஆறுகளையும் நீர்வீழ்ச்சிகளையும் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்து தொழிற்சாலைகளை இயக்குதல், கனிப்பொருட்களை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களை விருத்தி செய்தல், வியாபாரப்பொருட்களை உற்பத்தி செய்து அவற்றை ஏற்றுமதி செய்தலுடன் அவற்றை மூலப்பொருளாகக் கொண்ட கைத்தொழில்களை விருத்தி செய்தல் முதலியவற்றினுல் நாம் எமது நாட்டின்பொருளாதாரத்தை விருத்தி செய்யலாம். இவ்வாருன அபிவிருத்திக்கு ஐந்தாண்டுத் திட்டம் அடிகோலுவதுடன், சம்பளப் படிகளைச் சீராக அமைத்து யாவருக்கும் நியாயமான முறையில் வேதனங்களை வழங்குதல், வெளி நாடுகளிலிருக்கும் இலங்கையரின் ஒருபகுதி வருமானத்தை வெளிநாட்டுச் செலாவணிப்

பிரச்சினையை மட்டுப்படுத்துவதற்கும் பயன்படுத்துதல், குடும்பநலத்திட்டம், கல்வியைத் தொழிற் தேவைகளுடன் இணைத்தல் ஆகியவற்றையும் ஆராய்ந்துள்ளது.

இனிக் கல்வியின் புனரமைப்பைப்பற்றி ஆராய்வோம். 1972-ம் ஆண்டு ஆரம்பத்துடன் கல்விப் புனரமைப்பு ஏற்படுத்தப்பட்டது. பொதுவாக நோக்குங்கால் கல்வி அமைப்பில் கல்விப் பொருள் ஒரு பரந்த அடிப்படையில் தற்கால விஞ்ஞான யுகத்திற்கேற்ற வகையில் திருத்தி அமைக்கப்பட்டதுடன், படிப்பித்தல் முறைகளில் முக்கிய மாற்றங்கள் நிகழ்த்தப்பட்டன. கல்விப் பொருள் சமூக தேவைகளுடன் ஒட்டியதாகவும், வாழ்க்கைக்கு உதவுவதாகவும் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறான கல்விப்பொருள் மாணவருக்கு அறிவு வளர்ச்சி, சிறந்த அறிவு, தகுந்த மனப்பான்மை ஏற்படுத்துவதனால் சமூகத்திற்கு பயன்படக்கூடிய பூரண வளர்ச்சியுள்ள வருங்காலப் பிரசைகளை நாட்டிற்கு அளிக்கின்றது. இவ்வளவு ஆண்டுகளும் ஆசிரியர் சொல்வதைக் கேட்டு மாணவர் படித்துப் பரீட்சை எழுதினர். இன்று சிந்தனை, நியாயிக்கும் ஆற்றல், ஆராயும் தன்மை சீர்தூக்கிப் பார்த்தல், பிரச்சினைகளுக்கு முடிவு காணுதல் ஆகிய ஆற்றல்களை விருத்தி செய்யும் முகமாக வகுப்பறைக் கற்பித்தலும் கற்றலும் இடம் பெறுகின்றன.

கல்விப் புனரமைப்பால் மூன்று பிரதான மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஒன்று பாடசாலை அனுமதி வயது ஆறாக உயர்த்தப்பட்டுள்ளது. மாணவர் கூடிய முதிர்ச்சி உடையவர்களாகவும் பாடசாலைக்கு ஆயத்தமுடையவர்களாகவும் முறையான கல்விக்குத் தகுதி உடையவர்களாகவும் ஆறு வயதில் இருப்பர் என்பதே இந்த மாற்றத்தினது அடிப்படை ஆகும். இரண்டாவதாகப் பாடசாலையில் கல்வி பெறும் காலம் பத்தாண்டி லிருந்து ஒன்பதாண்டாகக் குறைக்கப்பட்டுள்ளது. ஆரம்பக் கல்வி முதல் ஐந்தாண்டிலும், கனிஷ்ட உயர்நிலைக் கல்வி அடுத்த நான்கு ஆண்டிலும், கற்பிக்கப்படுகின்றது. ஆரம்பக் கல்வி நிலையில் உடனடியான மாற்றங்கள் ஏற்படுத்தாவிடினும் கல்விப் பொருளை ஒன்றிணைத்தல், புதிய முறைகளைக் கையாண்டு, மாணவரின் விருத்திக்கு உதவுதல் ஆகிய கருத்துக்கள் இடம் பெறத் தொடங்கி உள்ளன. கனிஷ்ட உயர்நிலைக் கல்வியில் கல்விப் பொருள் பிரதான மாற்றத்தைப் பெற்றுள்ளது. 6-ம் வகுப்பு தொடக்கம் 10 கட்டாயப் பாடங்கள் இடம் பெற்றுள்ளன. அவற்றில் புதிய கணிதம், ஒன்றிய விஞ்ஞானம், சமூகக் கல்வி, தொழில் முன்னிலைப் பாடநெறிகள் 1, 2 புதியதாகச் சேர்க்கப்பட்டதுடன் ஆங்கிலம், உடற்கல்வி, கவின்கலைகள் கட்டாய பாடம் ஆக்கப்பட்டுள்ளன. இவற்றுடன் முதல்மொழி சமயம் ஆகிய பாடங்களும் இடம் பெற்றுள்ளன. ஒன்பதாம் வகுப்பு முடிவில் தேசிய கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சை நடாத்தப்பட்டு அதிற் பெறும் தராதரத்தைக் கொண்டு சிரேஷ்ட உயர்கல்விக்கும், உயர் தொழிற் கல்விக்கும் மாணவர் பகுக்கப்படுவர். இந்நிலையில் மாணவர்கள் ஏறத்தாழ 14-15 வயது நிலையில் இருப்பர். பிற நாடுகளிலும் மாணவர்கள் 14 வயதில் உயர் கல்விக்குப் பகுக்கப்படுவர்.

மூன்றாவது மாற்றமும் கல்விப் பொருளோடு தொடர்பானது. தொழில் முன்னிலைப் பாடநெறி 1, 2 என்று தொழில் அடிப்படையான பாடங்கள் இடம் பெற்றுள்ளன. இத்தகைய பாடங்கள் எமது கல்விப் பொருளில் அவசியமானவை. கனிஷ்ட உயர்நிலைப் படியில் மாணவருக்குத் தொழிலைப் பற்றிய அறிவு ஆரம்ப கைக்குரிய திறமைகள், நல்ல மனப்பான்மை ஆகியன விருத்தி அடைவதற்கு வாய்ப்புகள் இருக்க வேண்டும். நமது நாட்டின் பொருளாதார நிலைக்கு ஏற்ற ஆரம்ப தொழில் நோக்குடைய கல்வி அத்தியாவசியமானது. ஒவ்வொருவரும் தொழில் செய்ய வேண்டுமென்றும், எத்தொழிலுக்கும் நியாயமான அடிப்படையில் சம்பளம் வழங்கப்படல் வேண்டுமென்றும், தத்தமக்கு உள்ள ஆர்வ ஆற்றல்களைக் கொண்டே தமக்கென ஒரு தொழிலைத் தெரிவு செய்தல்

வேண்டுமென்றும், நாட்டின் பொருளாதார விருத்தியில் அனைவருக்கும் பங்குண்டு என்ற உணர்வையும் இத்தொழில் முன்னிலைப் பாடநெறிகள் உணர்த்துதல் வேண்டும்.

தொழில் முன்னிலைப் பாடநெறி ஒன்று என்ற தொகுப்பில் மனையியல், கிருஷிகம், நெசவு, உலோகவேலை மரவேலை போன்றன ஆகும். இப்படியான பாடங்களுக்கு ஏற்கனவே அமைக்கப்பட்ட பாடத்திட்டங்கள்; கற்பிக்கும் முறை, கற்க வேண்டியவை, மதிப்பீடு செய்தல் முறை போன்ற ஏற்பாடுகள் உண்டு. ஆனால் தொழில் முன்னிலைப் பாடநெறி இரண்டு என்பது, புதிதாகக் கொண்டு வரப்பட்ட பாடத்துறை ஆகும். இதற்குப் பாடத்திட்டங்கள் ஏற்படுத்தி, முறைகளைக் கண்டுபிடித்து வகுப்பில் மாணவர்களைச் செயல்படுத்தும் பொறுப்பு, பாடசாலைத் தலைமை ஆசிரியர்களிலும் உதவி ஆசிரியர்களிலும் தங்கியுள்ளது. ஒவ்வொரு பாடசாலையும் தனது வட்டாரத்தில் செய்யப்படும் ஒன்று அல்லது மேற்பட்ட தொழில்களைத் தெரிவு செய்து, 6-ம் வகுப்புத் தொடக்கம் 9-ம் வகுப்பு வரை மாணவர்களுக்குத் தகுந்த முறையில் பயிற்சி அளித்தல் வேண்டும். இப்படிச் செய்யும் பொழுது ஒரு பாடசாலை முதலில் தனது வட்டாரத்திலுள்ள தொழில்களைப் பற்றி ஆராய்தல், அவ்வாராய்ச்சியில் மாணவரை ஈடுபடுத்துதல், பின்பு தொழில் அல்லது தொழில்களைத் தெரிவு செய்தல் என்று செயல்பட வேண்டும். அடுத்துத் தெரியப்பட்ட தொழிலை ஆராய்ந்து அதில் தேவைப்படும் கைக்குரிய திறமைகளை நிர்ணயித்தல் வேண்டும். பின்பு அத்தொழிலுக்குரிய மூலப்பொருட்கள், அவை பெறப்படும் விதம் அளவு, பெறுமானம் ஆகியன பற்றிய விபரங்களைச் சேகரித்தல் வேண்டும். இப்பணியைச் செய்வதற்கு ஒவ்வொரு பாடசாலையிலும் ஒரு தலைமை ஆசிரியர் சில உதவி, ஆசிரியர்கள், சில விசேட தகைமை உடைய ஆசிரியர்கள் ஆகியவர்கள் நியமிக்கப்படல் வேண்டும். மேலும் இத்தொழிற் பயிற்சியை மாணவருக்கு அளிக்கும்போது அவர்கள் அதனை மற்றப் பாடங்களுடன் ஒன்றிணைத்துப் படிப்பதற்குரிய ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும். இப்படியாகத் தயார் செய்யப்படும் பாடத்திட்டங்கள், 6-ம் வகுப்புத் தொடங்கி 9-ம் வகுப்புவரை வரம்புள்ளதாக இருத்தல் நன்று. இந்நான்கு ஆண்டுகளிலும் முதலாம் தவணை ஒரு குறிக்கப்பட்ட தொழிற் பயிற்சியை வகுப்பு, வயது, முன்னறிவு, ஆர்வம் என மாணவரின் வளர்ச்சிக்கேற்ப அமைத்துப் படிப்பிக்கலாம். அல்லது முதல் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு தொழிலும் மற்ற இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு தொழிலும் ஆகக் கற்பிக்கலாம். ஒவ்வொரு பாடத்திட்டத்திலும் மாணவரின் வளர்ச்சி, தேர்ச்சி ஆகியவற்றை மதிப்பீடு செய்வதற்கு உரிய திட்டம் இருத்தல் வேண்டும். இவ்வாறு தொழில் முன்னிலைப் பாடநெறிப் பயிற்சி, மாணவருக்குச் சிறந்ததோர் அடிப்படையான தொழில் ஆயத்த நிலையை ஏற்படுத்துகின்றது.

நாட்டின் பொருளாதார விருத்திக்குக் கல்வியினூடு ஆற்றக் கூடிய சேவை பின்வருமாறு: மாணவருக்குப் பரந்த அடிப்படையான கல்வி அளித்துத் தொடர்ந்து அவர்கள் தொழிற் பயிற்சியைப் பெறுவதற்கும் நாட்டினது தேவையைப் பூர்த்தி செய்வதற்கும் உதவுதல் வேண்டும். நாட்டினது இயற்கை வளங்களைப் பேணிப் பாதுகாப்பது மாணவருடைய தலையாய கடமை என்பதை நன்கு உணர்த்துதல் வேண்டும். சிக்கனமான சீவியமும், அன்றாடத் தேவைகளுக்குப் பணத்தை மேலதிகமாக விரயம் ஆக்காமல் சேமிப்பதும், தேசிய சேமிப்பு இயக்கத்திற்குத் தங்கள் முழு ஆதரவை வழங்க வேண்டுமென்று மாணவருக்குப் பல வேறு வழிகளில் படியச் செய்தலும் வேண்டும். நமது நாட்டினது எதிர்காலம் விவசாயத்திலும், அதைச் சார்ந்த கைத்தொழிலிலும் என்ற உண்மையை இளைஞர்களுக்குத் தெளிவாக உணர்த்துதல் வேண்டும். சிரேஷ்ட உயர்நிலை வகுப்புக்களில் கூடிய தொழில் நோக்குடைய பாடங்கள் இடம் பெறல் வேண்டும். மாணவருக்குத் தொழில் நுட்ப, பல் தொழில் நுட்பக் கல்வி பெறுவதற்குள்ள வாய்ப்புக்களை அளித்தல் வேண்டும். இவ்வாறு நாட்டின் பொருளாதாரத் தேவைகளோடு கல்வியை இணைப்பதனால் நாடு தன்னிறைவு பெறும்.

திருமதி இ. ஆனந்தக்குமாரசாமி.

## சமூகத்தில் மாற்றங்கள் ஏற்படுத்துவதற்காகக் கல்வித் திட்டத்தினை இயைபு படுத்தல்

ஒரு மனிதனின் வாழ்நாளில் குறுகிய பகுதி மட்டுமே பாடசாலையில் செல விடப்படுகின்றது. இந்தக் குறுகிய காலகட்டத்தில் அவனுக்குத் தேவையான எல்லா அறி வையும் பெற்றுத் தருவது இயலாது. எனவே, மிகவும் அத்தியாவசியம் எனக் கருதப் படும் அடிப்படையான அறிவுகளை மட்டுமே பெற்றுத்தர முடியும். இத்தகைய அடிப் படைத் திறன்களை வளர்க்கக்கூடிய விதத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட அனுபவங்களின் தொகுப்பே பாடத்திட்டம் எனப்படுகிறது. இப்பாடத் திட்டங்கள் சமுதாயத்திலேற் படும் மாற்றங்களுக்குக் காரணமாக அமைகிறது. எனவே, சமூக நோக்குடன் பாடத் திட்டங்கள் அமைக்கப்பட வேண்டியது இன்றியமையாததாகும். ஆண்மை, சூழல், நடத்தை என்பவற்றை மாற்றலாம். மாற்றுவதே கல்வியின் நோக்கமாகவும் இருக்க வேண் டும் என டாக்டர் வால் (Dr. Wall) குறிப்பிடுகிறார். 'கல்வி ஒரு வெற்றிடத்தில் இருக்க முடி யாது. அது சமூகத்தின் பிரதிபலிப்பாகவே இருக்க வேண்டும் என்பதே பேராசிரியர் மக்லியின் கருத்தாகும்.' அமைதியிலும் நெருக்கடியிலும் தனக்குரிய பணிகளையும் பொதுப் பணிகளையும் நீதி வழுவாமலும் அறிவாற்றலோடும் பரந்த உள்ளத்தோடும் செய்விக்க உதவுவதே முழுக்கல்வியின் பயனாகும் என மில்ட்டன் கூறுகிறார். கல்வித்திட்டத்தில் ஏற்படுகின்ற மாற்றத்தால் சமூகத்தில் ஒற்றுமை, சமூகங்களுக்கிடையில் நெருக்கம் ஏற்பட வேண்டும் என்பது மிகவும் முக்கியமானதாகும்.

சமூகத்தில் ஏற்றத் தாழ்வுகள் பல்லாண்டு காலமாக இருந்து வருகின்றன. இந்த ஏற்றத் தாழ்வுகளுக்கு மிகவும் அடிப்படையான காரணம் பொருளாதாரமே யாகும். ஒவ் வொருவர் செய்யும் தொழிலையும் அடிப்படையாகக் கொண்டு சமூகத்தில் வேறுபாடுகள் நிலவி வந்தன. கல்வியும் ஒரு குறிக்கப்பட்ட மக்களுக்கு உரிய சொத்தாகவே இருந்து வந்தது. பெரும்பான்மையான மக்களுக்கு அடிப்படைக் கல்வி உரிமை மறுக்கப்பட்டு வந்தது. கல்வி அறிவு பெற்றவன் சமூகத்தில் உயர்ந்தநிலையை வகித்து வந்தான். கல்வித் திட்டம் ஒரு சாராருக்குச் சார்பாக அமைந்திருந்தால் சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகள் நிலவிவந்தன. கல்வித் திட்டத்தில் இருந்த இந்த முரண்பாடுகள் சாதாரண மனிதனின் அறிவுத் திறமையைத் தடைசெய்வதுடன் அவனின் ஆக்கபூர்வமான செயற் திறன்களையும் வளர விடாது தடை செய்தது. இந்த நிலை மாறி மனிதசக்தி அவனது நாட்டிற்குப் பயன் பட வேண்டுமானால் கல்வித் திட்டத்தில் பெரிய மாற்றங்கள் ஏற்பட வேண்டும். கல்வித் திட்டத்தில் ஏற்படும் மாற்றங்களால் சமூகத்தில் இருக்கும் வித்தியாசங்கள், ஏற்றத் தாழ்வுகள் அகல வேண்டும்.

கிராமப்புறப் பாடசாலைகளுக்கும் நகர்ப்புறப் பாடசாலைகளுக்கும் இடையில் இருக் கின்ற வேறுபாடுகள் நீக்கப்படல் வேண்டும். தரமான ஆசிரியர்கள், ஆய்வுகூட வசதிகள், நூல்நிலையங்கள் போன்றவை நகர்ப்புறப் பாடசாலைகளில் இருப்பது போல கிராமப் புறப் பாடசாலைகளிலும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். தனியார் பாடசாலைகள் நகர்ப்புறப் பாடசாலைகள் ஆகியவற்றில் அளிக்கப்படும் கல்வி சாதாரண கிராமப்புறப் பொதுமக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தினால் ஏற்படுத்தப் பட்டதே மத்திய மகாவித்தியாலயங்கள் ஆகும். எல்லாப் பாடசாலைகளிலும் சமவாய்ப்பான கல்வி புகட்டப்படும்போது சமூகத்தில் இருக்கும் வித்தியாசங்கள் குறைந்து வரும்.

மனித வாழ்வுக்குப் பயன்படக் கூடிய தேவையான பாடங்கள் போதிக்கப்படல் வேண்டும். எல்லாப் பாடங்களையும் எல்லோரும் கற்கக் கூடிய ஒரு நிலையை ஏற்

படுத்த வேண்டும். முன்பொரு காலத்தில் கிறீக், லத்தீன் போன்ற சில குறிக்கப்பட்ட பாடங்களைப் படிப்பவர்களுக்குச் சமூகத்தில் ஒரு மதிப்பு இருந்து வந்தது. ஆங்கிலேயர் வருகையின் பின் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் ஆங்கிலம் கற்றவர்களுக்குச் சமூகத்தில் மதிப்பு இருந்து வந்தது. அந்தந்தக் காலகட்டத்தில் சமூகத்தில் மதிப்பு இருந்த பாடங்களைக் கற்றுத் தொழில் புரிபவர்களுக்கும் சமூகத்தில் உயர்ந்த இடம் கொடுக்கப் பெற்றது. தற்போதைய சமூகத்தில் எதையும் என்ன? ஏன்? எங்கே? எப்படி? எப்போது? எது? என ஆராய்ந்து பார்க்கின்ற விஞ்ஞான ரீதியான கல்விக்குத்தான் மதிப்பு இருக்கிறது. இத்தகைய கல்வி முறைதான் நமது சமூகத்திற்குத் தேவையென முதலில் எடுத்துக் கூறியவர் கிரேக்க நாட்டுச் சிந்தனையாளராகிய அரிஸ்டோட்டில் ஆகும். இதே கருத்தை ரூசோவும் வலியுறுத்தியிருக்கிறார். எல்லோரும் எல்லாப் பாடங்களையும் கற்பதால் சமூகத்தில் சில பாடங்களுக்குக் கொடுக்கப்படுகிற உயர்ந்தநிலை இல்லாமல் போகும். ஆறுவயது முதல் பதின்நான்கு வயதுவரை எல்லோருக்கும் கட்டாயக் கல்வி புகட்டப்படல் வேண்டும். எல்லோரும் ஓரளவு கல்வி அறிவு பெறுவது வாழ்க்கையை மகிழ்ச்சியுடன் கழிக்க உதவியாக இருக்கும். (Character building is the essence of Education) 'ஒரு மனிதனிடம் நல்ல குணங்களை உருவாக்க உதவியாக இருப்பது கல்விதான்' என மகாத்மா காந்தியும் குறிப்பிட்டிருக்கிறார். சகல மக்களும் அடிப்படைக் கல்வி அறிவைப் பெறுவது சமூகத்தில் இருக்கும் வேறுபாட்டைக் குறைக்கும்.

ஜனநாயக நாடுகளில் சமூகத்தில் பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் இருப்பது இயற்கை. இலவசக் கல்வி இருக்கும் ஒரு நாட்டில் சமூகத்தின் எந்தப் பிரஜையும் கல்வி அறிவைப் பெறமுடியும். பொருளாதார வசதி படைத்தவர்கள் மாத்திரம் கல்வி அறிவைப் பெறலாம் என்ற எதேச்சாதிகாரமான நிலை இதனால் மாறிவரும். உயர் கல்வி கற்பவர்களுக்கு புலமைப் பரிசில் போன்ற வசதிகளைச் செய்து கொடுப்பதால் பொருளாதாரத்தில் சமூகத்தின் அடிநிலையில் இருப்பவன் கூடச் சிறந்த கல்வியைப் பெறமுடியும். சமூகத்தில் இருக்கும் வேறுபாட்டைக் குறைப்பதற்கு இலவசக் கல்வியும் ஒரு காரணமாகும்.

உயர் கல்விப் பொறுப்பை அரசாங்கம் எடுத்ததினால் சகல மக்களுக்கும் சம வாய்ப்பான கல்வி கிடைக்கிறது. உயர் கல்வியில் திறமைக்கே முதலிடம் கொடுக்க வேண்டும். உயர் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களின் அறிவும் பரந்து விரிந்து இருக்க வேண்டும். உலகத்தில் அன்றாடம் நடைபெறும் சம்பவங்கள், சமூகத்தில் ஏற்படும் மாற்றங்களை ஆசிரியர் அறிந்திருக்க வேண்டியது மிகவும் இன்றியமையாதது. தேர்வுக்காக மனனம் செய்த செய்திகளே ஆசிரியர்களின் வாழ்நாள் முழுவதும் அறிவின் எல்லைகளாக இருப்பது தான் பெரும்பாலோருடைய அனுபவம். ஆகவே அவர்கள் உயர் நிலைப் பள்ளிகளுக்கு ஆசிரியர்களாக வரும்பொழுது மாணவர்களின் சந்தேகங்களை ஆழ்ந்து ஆராயாது தாங்கள் கற்ற கல்வியையே அடிப்படையாக வைத்து அறிவு புகட்டுவது மாணவர்களின் அறிவை மழுங்க வைப்பதாகவும் முடியலாம். ஆசிரியர், மாணவரின் அறிவு விருத்திக்கு உதவுபவராக இருக்க வேண்டுமே யொழிய அறிவைத் திணிப்பவராக இருக்கக் கூடாது.

பண்டைய மக்கள் செய்யும் தொழிலைக் கொண்டு சமூகத்தைப் பிரித்து வைத்தனர். பாடவிதானத்தில் நாம் தொழிற்கல்விக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தினால் தொழிலைக் கொண்டு சமூகத்தைப் பிரிக்கும் முறை மாறிவிடும். 'உடல், கை, கால், இந்திரியங்கள், தேகசக்தி ஆகியவற்றிற்குப் பயிற்சி அளியுங்கள். ஆனால் இயலும் வரைக்கும் பிள்ளைகளின் மனதுக்கு வேலை கொடாமற் பேணுங்கள்' என்று தத்துவஞானி ரூசோ தெரிவித்துள்ளார். தற்போதைய புதிய கல்வித் திட்டத்தில் தொழிற் கல்விக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுக்கப் பெற்று இருக்கிறது. புதிய கல்வித்திட்டத்தில் மக்கள் வாழ்

கின்ற சூழலைச் சார்ந்து கற்கக்கூடிய தொழிற்கல்வி முக்கிய இடம் பெறுகிறது. அவ் வப் பிரதேசங்களுக்குரிய முக்கிய தொழில்களைப் பற்றிப் படிக்கும் போது, பிள்ளை களுக்கும் சமுதாயத்துக்குமிடையிலுள்ள தொடர்புகள் விரிவெய்தவும், கூர்மையடைய வும், நடவடிக்கை எடுக்கப்படும். பாடசாலைகளுக்கும் சமுதாயத்துக்கும் இடையில் நெருங்கிய உறவை வளர்ப்பது, சமுதாயத்துக்குக் கல்வியைக் கருத்துடையதாக்குவதில் உதவும் என்பது ஒப்புக்கொள்ளப் பட்ட உண்மை. பிரதேசத் தொழிற்கல்வி இதற்கு மிக மிகப் பயன்படும். தொழிற்கல்வி படிப்பதால் மாணவனிடம் சுறுசுறுப்பு, ஆவல், தன் நம்பிக்கை, இடையூறுகளுக்கு முகம் கொடுக்கும் வல்லமை, அவற்றைச் சமாளிக்கும் வல்லமை, செம்மைப்பாடு, அவதானத்துடன் இருத்தல் ஆகிய குணங்கள் தோன்றும்.

பல பாடங்களைச் சேர்த்துக் கூட்டாகச் சித்தியடைந்தால் சான்றிதழ் கொடுக் கப்படும் நிலை மாறி ஒவ்வொரு தனிப்பாடத்திலும் ஏற்படும் சித்திக்கும் சான்றிதழ் கொடுக்கும் முறை ஓர் முன்மாதிரியான முறையாகும். இப்படியாகப் பரீட்சையில் ஏற் படுகின்ற மாற்றமும் மிக மிக முக்கியமானதாகும். தாய்மொழி மூலம் கல்வி கற்பதால் ஒரு பிள்ளை தன் முழு ஆற்றலையும், செயற்திறனையும் நன்ருக வெளிப்படுத்த முடியும் ஒவ்வொரு பிள்ளையும் தன் தாய்மொழியில் உயர் கல்வி கற்பது அதன் சிந்தனை விருத் திக்கு உதவியாக இருக்கும்.

"பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் — புவி
பேணி வளர்த்திடும் ஈசன்"

என்ற புரட்சிக்கவி பாரதியின் கவிக்கு இலக்கணமாக — அவர்களின் ஞானத் திற்கு மதிப்பளித்து இன்று பெண்களுக்குக் கல்வியில் சமவாய்ப்பு ஏற்படுத்தப் பட்டிருக் கிறது. ஒரு வீட்டை ஆட்சி செய்கின்றவள் பெண்தான். வருங்கால உலகத்தை வள மாக்கும் சிற்பிகள் அவளின் கையில்தான் வளர வேண்டும், ஆகவே, அவளுக்குக் கல்வி யில் நிறைந்த அறிவு இருக்க வேண்டியது இன்றியமையாதது. ஆனுல், அவர்களுக்கு அளிக்கப்படுகின்ற கல்வி வாழ்க்கைக்குப் பயன் படக் கூடிய கல்வியாக இருக்க வேண்டும். சமையல், தையல், குழந்தைகள் பராமரிப்பு போன்ற துறைகளில் கல்வி, புகட்டப்படல் வேண்டும். பெண்களுக்கு இத்தகைய கல்வி அளிக்கப்பட வேண்டும் என்பதை ரூஸோ வும் வலியுறுத்தியிருக்கிருர். ஓய்வு நேரத்தைப் பயன் படக்கூடிய முறையில் கழிக்கக் கூடியதாக மக்களுக்குக் கல்வி புகட்டப்படல் வேண்டும். தனது வேலைகளைத் தானே செய் யக்கூடியவராகவும், வீட்டில் இருப்பவர்களுக்கு அவர்களது முயற்சிகளில் உதவி செய் யக்கூடியவராகவும் தான் வாழும் கிராமத்திற்கு, தனது சமூகத்திற்குப் பயன் படக் கூடியவராகவும் வருவதற்கு ஏற்ற கல்வி முறை புகட்டப்படல் வேண்டும்.

[ The end of all Education, all training should be man making ] 'எல்லாக் கல்விகள், பயிற்சிகள் அனைத்தும் இறுதி முடிவு முழு மனிதனை உருவாக்குவது தான்' என சுவாமி விவேகானந்தர் அழகாகக் குறிப்பிடுகிருர். ஒரு முழு மனிதனை உருவாக்கக் கூடிய தாகவே கல்வித் திட்டம் அமைய வேண்டும்.

பாடசாலையின் வளர்ச்சிக்காகப் பாடுபடும் பெற்ருர் ஆசிரிய - சங்கங்கள் பாட சாலைக்குப் புறம்பாக கிராம மக்களின் வளர்ச்சிக்காகப் பாடுபடும் இயக்கங்கள், சங் கங்கள், சாரணர் இயக்கங்கள், நாடகங்கள் இவற்றில் பங்கு பெறுவதாலும் சமூக இணக் கம் ஏற்படும். இவற்றில் பங்கு பற்றிச் செயலாற்றக் கூடிய திறனைக் கல்வித்திட்டத்தில் புகுத்தல் வேண்டும். ஒவ்வொரு நாட்டிலும் இருப்பவர்கள் மற்றப் பல நாடுகளிற்கும் சென்று கல்வி கற்பதால் வெவ்வேறு தேசங்கள் நாடுகளின் பண்பாடுகள், கலாச்சாரங்

களை அறிய உதவியாக இருப்பதுடன் ஒரு சர்வதேச நல்லுறவு (International relationship) ஏற்படவும் வசதியாக இருக்கும்.

மேற்குறிக்கப்பட்ட மாற்றங்கள் கல்வித்திட்டத்தில் ஏற்படுத்தப்பட்டால் சமூகத்தில் இருக்கும் வர்க்க வித்தியாசங்கள், ஏற்றத் தாழ்வுகள் அறவே நீங்குவதுடன் உலகத்தில் வாழும் மக்கள் சமூகமே ஒரு குடும்பம் போன்ற நிலைக்கு மாறிவிடும்.

நமது நாட்டில் இன்று ஏற்பட்டிருக்கின்ற வேலையில்லாத் திண்டாட்டம் பொருளாதாரப் பிரச்சினை இவை யாவற்றிற்கும் அடிப்படைக் காரணம் நமது கல்வித் திட்டத்தில் இருந்த குறைபாடேயாகும். ஆங்கிலேயர்கள் நம்மை ஆட்சி செய்த காலத்தில் ஏற்படுத்திய கல்வித்திட்டத்தையே இருபது வருடங்களுக்கு மேலாக நாமும் பின் பற்றி வந்திருக்கிறோம். எழுபத்திரண்டாம் ஆண்டு புகுத்தப்பட்ட புதிய கல்வித்திட்டம் ஓரளவு நமது நாட்டிற்குத் தேவையான கல்வித் திட்டமாக இருக்கிறது. ஒரு சமூகத்தில் இருக்கின்ற ஏற்றத்தாழ்வுகள், பொருளாதாரப் பிரச்சினைகள், வேலையில்லாத் திண்டாட்டங்கள் நீக்கப்பட வேண்டுமானால் கல்வித்திட்டத்தில் மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும். கல்வித் திட்டத்தில் ஏற்படுகின்ற மாற்றங்கள் சமூகத்தில் ஆண்டாண்டு காலமாக நிலவி வருகின்ற சமூக வேறுபாடுகளைத் தகர்த்து எறிய உதவும் பெரிய சாதனமாக அமையும். உண்மையான கல்வியின் நோக்கம் மாந்தரை ஒழுங்கானவற்றைச் செய்வோராக மட்டுமின்றி ஒழுங்கானவற்றில் பற்றுக் கொள்வோராகவும், உழைப்போராக மட்டுமின்றி உழைப்பை மதிப்பவராகவும், கற்றவர்களாக மட்டுமின்றி அறிவின் மீது நாட்ட முடையோராகவும், தூயோராக மட்டுமின்றி தூய்மையை விரும்புவோராகவும், நன்நெறியாளராக மட்டுமின்றி நியாய உணர்வும் நல்வாழ்வும் உடையோராகவும் ஆக்குதல் வேண்டும் என்ற சிந்தனையாளர் ருஸ்கினின் கருத்துக்கு அமைய கல்வித்திட்டத்தில் ஏற்படுகின்ற மாற்றங்கள் சமூகத்தின் அடித்தளத்தில் இருக்கின்ற துருப்பிடித்த பிரச்சினைகளைத் துடைத்தெறியும் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

ஈ. ஸி. வேலாயுதபிள்ளை

"சமூகத்தின் ஏற்றத்தாழ்வுகளுக்குப் பொருளாதாரமே அடிப்படைக் காரணம்"

# கல்வி அமைச்சிலிருந்து பாடசாலை வரையிலான தொடர்பு

அந்நியர் ஆட்சியில் நடைமுறையிலிருந்த கல்வித்திட்டம் வெள்ளை உடை உத்தியோகத்தரை (எழுதுவினைஞர், ஆசிரியர் போன்றோர்) உருவாக்குவதாகவே இருந்தது. இந்நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்குத் தடையாகவும், வேலையில்லாப் பிரச்சினையை வளர்ப்பதாகவும், சுதந்திர இலங்கைக்குப் பொருத்தமற்றதாகவுமே அத்திட்டம் அமைந்திருந்தது. நீண்டகாலச் சிந்தனையின் பயனாக இந்நாட்டுக்குகந்த புதிய கல்வித்திட்டம் உருவாக்கப்பட்டும் இப்போதுதான் படிப்படியாகச் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

அரசியற் கட்சிகள் பொதுத் தேர்தலுக்கு முன் தங்கள் கொள்கைகளை (Election Manifesto) மக்கள் முன் சமர்ப்பிக்கும், தங்கள் கட்சி பதவிக்குவரின் இக்கொள்கைகளை நடைமுறைப் படுத்துவோம் எனக் கட்சித்தலைவர்கள் உறுதி பகர்வர். பொருளாதார அபிவிருத்தி, வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்த்தல், நாட்டுக்கேற்ற நல்ல பிரஜைகளை உருவாக்கல் ஆகிய இலட்சியங்களை அடிப்படையாகக் கொண்டே கல்விக் கொள்கைகள் உருவாக்கப்படும். அவ்வாறு உருவாக்கப்பட்ட கல்விக் கொள்கைகளை நடைமுறைப் படுத்தல் கல்வி அமைச்சின் கடமையாகும்.

உருவாக்கப்படும் கல்விக் கொள்கைகளுக்குப் பொறுப்பாயுள்ளவர் கௌரவ கல்வி அமைச்சர் ஆவர். அதனை நடை முறைப் படுத்தும் பொறுப்பு கல்வி அமைச்சின் நிரந்தரச் செயலாளரைச் சாரும். கல்வி அமைச்சின் அமைப்பு விதிகளுக்கிணங்க நிரந்தரச் செயலாளர் மகா வித்தியாதிபதியாகவும் (Dual Function) கடமையாற்றுகின்றார். இவருக்குதவியாக மேலதிகச் செயலாளரும், உதவிச் செயலாளர்களும் நியமிக்கப் பட்டுள்ளனர்.

மகா வித்தியாதிபதிக்குக் கீழ் மூன்று பிரதி வித்தியாதிபதிகள் இயங்குகின்றனர். இவர்கள் மூவரும் வெவ்வேறு மூன்று பிரிவுகளுக்குப் பொறுப்பாயுளர்.

அவை:- 1. பாடசாலைகளின் அமைப்பு.
2. பாடசாலைகளின் கல்வி மேற்பார்வையும் வேலைக்கணிப்பும்.
3. பாடவிதான அபிவிருத்தி

இம் மூன்று பிரிவுகளுக்கும் கீழ் வெவ்வேறு பல கிளைகள் உள. (உ+ம் பாடசாலை நிர்வாகம், ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகள், பாடசாலை வேலைகள், கட்டிடங்கள் முதலியன) ஒரு இலட்சத்துப் பத்தாயிரம் ஆசிரியர்களையும், ஊழியர்களையும் உடைய கல்வி அமைச்சின் வேலைகளை மேற்பார்வையிடுவதும் கல்வித் திட்டங்களைச் செயற்படுத்துவதும் இவர்களின் கடமையாகும்.

இலங்கையைப் பதினைந்து கல்விப் பிராந்தியங்களாகப் பிரித்துள்ளனர். ஒவ்வொரு பிராந்தியத்துக்கும் பிராந்திய வித்தியாதிபதி பொறுப்பாயிருப்பர். அவர் தம் பிராந்தியத்திலுள்ள பாடசாலைகளின் அதிபதியாக இருப்பதோடு கல்வி அமைச்சின் கொள்கைகளையும், திட்டங்களையும் செயற்படுத்துபவராகவும் இருப்பர்.

பிராந்தியக் கல்வித் திணைக்களத்தில் கல்வி அதிபதியின் கீழ் பிரதம கல்வியதிகாரி, கல்வி அதிகாரிகள் கடமையாற்றுவர். பிராந்தியங்கள் மாவட்டங்களாகப் பிரிக்

கப்பட்டுள்ளன. பிராந்தியக் கல்வி அதிபதியின் மேற்பார்வையின் கீழ் மாவட்டங்களுக்குப் பிரதம கல்வி அதிகாரி பொறுப்பாயிருப்பர்.

ஒவ்வொரு மாவட்டமும் பல கல்வி வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. பெரும்பாலும் கல்வி வட்டாரங்களும், பாராளுமன்றத் தொகுதிகளும் ஒன்ருகவே இருக்கும். ஒவ்வொரு வட்டாரத்திலும் ஏறக்குறைய ஐம்பது பாடசாலைகள் வரையில் இருக்கும். ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஒவ்வொரு வட்டாரக் கல்வி அதிகாரி பொறுப்பாயிருப்பர். இவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் பாடசாலைகளுக்கும் இடையில் நெருங்கிய நேரடித் தொடர்புகள் உண்டு. பாடசாலை வேலைகளை மேற்பார்வையிடல், கல்வி வளர்ச்சிக்கும், ஒழுங்கான நிர்வாகத்திற்கும் ஆலோசகராக இருத்தல், விடுமுறைக் கழகங்கள், விளையாட்டுப் போட்டிகள், கலைவிழாக்கள் மூலம் ஆசிரியர்களையும் மாணவர்களையும் புத்தூக்கம் பெறச் செய்தல், ஆசிரியர்களின் உத்தியோகம் சம்பந்தமான விடயங்களைக் கவனித்தல் போன்றவை இவரின் கடமையாகும்.

வட்டாரக் கல்வியதிகாரி

இவர்கள் பரிசோதகராக இருப்பதுடன் ஆசிரியர்களின் ஆலோசகராகவும் நண்பராகவும் இருப்பர். இதனை அடிப்படையாகக் கொண்டே பாடசாலைப் பரிசோதகர் என்ற முன்னைய பதவிப்பெயர் மாற்றப்பட்டு வட்டாரக் கல்வி அதிகாரி என்ற பெயர் வழங்கப்பட்டுள்ளது. நிர்வாக அதிகாரங்கள் பல இருப்பதால் இவர்கள் அதிகாரிகளாயும் இருப்பர்.

பாடசாலைகளைத் தரிசிக்கும்போது அவர்கள் பின்வரும் விடயங்களையும் கவனிப்பர்:

1. நேரசூசி

நேரசூசி ஆசிரியர்களின் வேலைகளையும் வேலை நேரத்தையும் பிரதிபலிக்கும் கண்ணுடியாக அமைய வேண்டும். பாடங்கள் அவ்வப் பாடங்களுக்குப் பொருத்தமான நேரத்திற்கும் பொருத்தமான ஆசிரியர்களுக்கும் அமைய வேண்டும். புறவேலை முயற்சிகளும் நேரசூசியில் இடம் பெறவேண்டும். ஒவ்வொரு ஆசிரியருக்கும் பொதுவாக இருபது மணித்தியாலத்துக்குக் குறையாத வகுப்பு வேலை கொடுபட வேண்டும். மேற்குறிப்பிட்டன போன்ற விடயங்கள் யாவும் நுணுகி ஆராயப்பட்டே நேரசூசி வட்டாரக் கல்வி அதிகாரியால் அங்கீகரிக்கப்படும். சுயநேரசூசி ஒன்றும் ஆசிரியரிடம் இருத்தல் வேண்டும்.

2. பாடத்திட்டம், பாடப்பதிவு

இவை ஒழுங்காக எழுதப்பட்டும் பாடம் முடிந்தவுடன் பாடப்பதிவு நடைபெற்றும் இருக்க வேண்டும். பாடத்திட்டம் பாடத்திற்குப் பாடம் வகுப்புக்கு வகுப்பு தொடர்புள்ளதாக அமைய வேண்டும். ஆசிரியர்கள் மாற்றம் பெற்றுச் செல்லும் போதும், லீவில் செல்லும்போதும், மற்றைய ஆசிரியர்கள் அவ்வாறு மாறி அல்லது லீவில் சென்றவர்களின் வேலையைத் தொடர இவை மிக உதவியாக இருக்கும்.

3. பாடக்குறிப்பு

பாடக்குறிப்பு அவசியமா எனச் சிலர் வினவலாம். ஆசிரியர் தாம் படிப்பிக்கப் போகும் பாடங்களைப் பற்றிச் சிந்திக்க ஆயத்தஞ் செய்யத் தன்னைத் தயார்ப்படுத்த, சந்தேக விபரீதங்களுக்கு இடமின்றித் துணிவோடு மாணவர்முன் செல்ல ஆசிரியர் தம் கடமையை முழுமையாகச் செய்யப் பாடக் குறிப்புகள் மிக மிக அவசியமாகும். ஆனல்

பாடக்குறிப்புகள் அதிகாரிகளையோ பாடசாலைத் தலைவர்களையோ திருப்திப்படுத்துவதற்காக எழுதாது முற்குறிப்பிட்ட இலட்சியங்களை நிறைவேற்றுவதற்காகக் கடமை உணர்வோடு எழுதப்பட வேண்டும்.

4. மாணவரின் அப்பியாசப் புத்தகங்கள்

இவை பாட ஆசிரியர்களால் உடனுக்குடன் திருத்தப்படல் வேண்டும். முடியாவிடின் மறுநாளுக்கு இடையிலாவது திருத்தப்படல் வேண்டும். அதற்கேற்ற அளவான பொருத்தமான அப்பியாசங்கள் கொடுபட வேண்டும். பொதுவாக மாணவர்கள் முடிவுகளை அறிய ஆவல் உடையவர்கள். காலதாமதப் படுத்துவதால் அவர்களின் ஆர்வங்களும், ஊக்கங்களும் தேய்வடைகின்றன என்பதை ஆசிரியர்கள் உணர வேண்டும்.

5. பரீட்சை வினாத்தாள்கள், விடைப்பத்திரங்கள்

இவைகள் பாதுகாப்பாகக் குறைந்தது பரீட்சை முடிந்து ஆறுமாத காலத்திற்காவது இருக்க வேண்டும். கல்வி அதிகாரிகள் கேட்கும் போது அவற்றைப் பார்வையிடத் தக்கதாகத் தயாராக வைத்திருக்க வேண்டும்.

6. உபகரணங்கள், பாடப்புத்தகங்கள்

பாடங்களுக்குத் தேவையான உபகரணங்களை ஆசிரியர்கள் சேகரித்துப் பயன்படுத்த வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட பாடப் புத்தகங்களையே வகுப்புகளில் உபயோகிக்க வேண்டும். நூல்நிலைய வசதிகளை மாணவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதுடன் நூல்நிலையப் புத்தகங்களை எடுத்து ஆர்வத்துடன் வாசிக்கக்கூடிய ஊக்கத்தை மாணவருக்கு ஆசிரியர் ஊட்டவேண்டும்.

7. ஆக்கவேலைகள்

கைப்பணி, தையல், மனையியல், விவசாயம் போன்ற தொழில் முன்னிலைப் பாடங்களில் செய்கை முறைக்கே கூடிய நேரம் ஒதுக்கப்படல் வேண்டும்.

8. வெளி வேலைகள்

ஆசிரியர்களின் முக்கிய கடமைகளில் பாடசாலைப் புற வேலைகளில் பங்கு பற்றுவதும் ஒன்றாகும். பாடசாலைப் புறவேலைகளில் பங்கு கொண்டமையை உறுதிப் படுத்தும் வகையில் அவை சம்பந்தமான பதிவுகள் பாடசாலையில் இருத்தல் வேண்டும்.

நான் இதுவரை குறிப்பிட்டவைகளில் இருந்து அரசாங்கத்தின் கல்விக்கொகைகள் செயற்படுத்தப் படுவதும், இலட்சியம் நிறைவேறுவதும், திட்டங்கள் பூரண வெற்றி பெறுவதும் ஆசிரியர்கள் கையிற்றான் தங்கியுள்ளது என்பது நன்கு புலப்படுகின்றது, சிறந்த நிர்வாகம், மாணவரின் ஒழுக்கம். கல்வி வளர்ச்சி, நாட்டின் முன்னேற்றம் ஆகிய அனைத்தும் ஆசிரியர்களின் ஒத்துழைப்பின் மூலமே பெறற்பாலவை. பெரும்பாலான ஆசிரியர்கள் கல்வித் திட்டங்கள் பூரண வெற்றி பெறத் தம் பூரண ஒத்துழைப்பைக் கொடுத்துக் கடமை உணர்வுடன் செயற்பட்டு வருகின்றார்கள் என்பதை இவ்விடத்தில் குறிப்பிட விரும்புகின்றேன்.

விடுமுறைக் கழகங்களும், கருத்தரங்குகளும், பரீட்சையையும், சான்றிதழையும் இலக்காகக் கொண்டதாக மட்டும் அமையாது ஆசிரியர் தம் அறிவை வளர்க்கச் சிந்தனையைத் தூண்டப் பாடசாலைகளில் நல்ல நிர்வாகம் நடைபெற, மாணவர் பயன்பெற உதவுவதாகவும் அமைய வேண்டும்.

எம். குணரத்தினம்

# இலங்கையின் எதிர்காலக் கல்வித் திட்டம்

'எடியுகேஷன்' என்ற ஆங்கிலச்சொல் "EDUCO" என்ற லத்தீன் மொழியின் ஒரு பதத்திலிருந்து உருவானது. அதன் கருத்து வெளிப்படுத்துதல் என்பதாகும். எனவே, கல்வியின் நோக்கமே ஒரு குழந்தையில் மறைந்து, புதைந்து கிடக்கும் ஆற்றல்களை வெளிப்படுத்தி வளரச் செய்தலாகும். சமசந்தர்ப்பங்களை அளிப்பதன் மூலம் குழந்தைகளின் ஆற்றல்களைப் பூரணமாக வெளிப்படுத்தி வளரச்செய்ய அரசுகள் எவ்வளவு தூரம் முற்பட்டுச் செயலாற்றுகின்றனவோ அதேபோன்று குழந்தைகளும் தம் ஆற்றல்களைப் பூரணமாக வளர்த்தும் திருப்தி அடைவதுடன் தம் குடும்பத்திற்கும், தம் சமுதாயத்திற்கும், பிறந்த பொன் நாட்டிற்கும் தாம் அடைந்த ஆற்றல்களையும், அனுபவங்களையும், பிரதிபலிக்கச் செய்ய வேண்டும். எந்த ஒரு அரசும் தனது பொருளாதார வளத்தைத் தனது நாட்டுக் குழந்தைகளில் பிரயோசனமற்ற முறையில் விரையம் செய்ய முடியாது, முற்படவுமாட்டாது.

எமது நாட்டின் கல்வி வளர்ச்சியை ஆராயுமிடத்து, கடந்த 25 ஆண்டுகளில் நாம் கல்வியில் வருடாவருடம் செலவு செய்யும் பணத்தைப் பன்மடங்காகக் கூட்டி வந்திருக்கிறோம். 25 வருடங்களுக்கு முன் எம் நாட்டிற் கல்விக்காகச் செலவழிக்கப் பட்ட பணம் 35 லட்சம் ரூபாவாகும். ஆனால் இன்று 56·3 கோடியாகும். எமது நாட்டின் தேசிய வருமானத்தில் 5·2 சதவீதத்தைக் கல்விக்காகச் செலவிடுகின்றோம். ஆசியாவிலேயே ஜப்பான் தேசத்திற் கடுத்தாற் போல் கல்விக்காகக் கூடுதலான பணத்தைச் செலவு செய்யும் நாடு ஸ்ரீ லங்காவாக இருக்கின்றது. செல்வம் கொழிக்கும் நாடாக உலகில் விளங்கும் ஐக்கிய அமெரிக்கா கூட தேசிய வருமானத்தில் 4·6 சத வீதத்தையே கல்வீக்காகச் செலவிடுகின்றது. சில சமீப கால புள்ளி விபரத் திரட்டுக்களின்படி எமது நாட்டுச் சனத்தொகை வருடா வருடம் 2·2 சத வீதத்தால் அதிகரிக்கின்ற வேளையில்; நாம் கல்விக்காகச் செலவிடும் பணம் 10 சத வீதத்தால் அதிகரித்து வருகின்றது. இப் புள்ளி விபரங்களின்படியெல்லாம் எம் நாட்டில் நாம் கல்விக்குக் காட்டும் மட்டற்ற கரிசனையை நன்கு விளக்குகின்றன.

இதை ஆதாரமாக வைத்து எம் நாடு இக்கல்வி விஸ்தரிப்பு முறைகளினால் எவ்வளவு நன்மையை அடைந்திருக்கின்றது என்று ஆராய்ந்தால் அது கவலைக்கிடமாகவே இருக்கின்றது. பாடசாலைக் கல்வியை முடித்துக் கொண்டு க. பொ. த. சான்றிதழ்ப் பரீட்சையில் முழுமையாகவோ, அரைகுறையாகவோ சித்தியடைந்து, பாடசாலைகளை விட்டு வெளியேறும் மாணவர் தொகை ஆண்டு தோறும் இலட்சக் கணக்காகி விட்டது. அவ்வாறே பல்கலைக்கழகம், தொழில் நுட்பக் கல்லூரி ஆகிய கல்வி நிறுவனங்களிற் சித்தியடைந்து பட்டதாரிகளாகவோ, தொழில் நுட்பராகவோ ஆகிச் சமுதாயத்துடன் கலந்து கொள்வோர் தொகை ஆயிரக்கணக்கில் உள்ளனர். இவர்களில் ஒரு பகுதியினருக்கே வேலை பெறும் வாய்ப்புக் கிட்டுகிறது. எஞ்சியவர் வேலையற்றோர் வரிசையிலே சேர்ந்து தமக்கும், தம் குடும்பத்திற்கும், தம்மைக் கற்பித்த நாட்டிற்குமே பிரச்சினையாகிக் காலத்தை வீண் விரயமாக்குகின்றனர்.

உத்தியோகம் நாடுபவர் உடல் களைக்காத வியர்வை சிந்தாத நாற்காலியில் அமர்ந்து பார்க்கும் அரசாங்க வேலைகளையே நாடுகின்றனர். நமது நாட்டை ஒரு செழிப்புள்ள நாடாக்கக் கூடிய சகல இயற்கை வளங்கள் அமைந்தும் கமத்தொழிலும் விருத்தி காணாது தத்தளிக்கின்றோம். இவ்வியற்கை வளங்களையெல்லாம் பயன்படுத்துவதாக இருந்தால், வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டுவதாயிருந்தால், வேலையில்லாத்

திண்டாட்டத்தை ஒழிப்பதாயிருந்தால், மற்றைய நாடுகளில் உணவு, மற்றும் அத்தியாவசிய தேவைகளுக்குத் தங்கித் தத்தளித்து வாழும் அவல நிலையைப் போக்கடிப்பதாயிருந்தால், நமது வருங்காலச் சந்ததியினரது மனப்பாங்கில் அவர்களுக்குப் புகட்டப்படும் கல்வியில் பல மாற்றங்களைச் செய்ய வேண்டிய தேவையை அரசு உணர்ந்திருக்கிறது. அண்மையிலே இலங்கைக்கு விஜயம் செய்த ஐ. நா. சபை நிபுணர் பேராசிரியர் டட்லி ஸியர்ஸ் அவர்களின் கூற்றுப்படி நம் நாட்டில் புகட்டப்படும் கல்விமுறைக்கும் நாட்டின் தேவைக்கும் தொடர்பில்லை. எனவேதான் எமது கல்வித் திட்டத்தின் 1972- இல் சில புரட்சிகரமான மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன.

எமது நாட்டில் கல்வி வளர்ச்சியைச் சற்று ஆராய்ந்தோமாயிருந்தால்; இந்நிலைமை எவ்வாறு உருவானது என்பதை மட்டிடலாம். கல்வி ஆரம்பத்தில் தர்மத்திற்காக அதாவது ஒருவர் தாமறிந்ததை மற்றவர்களுக்குப் புகட்டுவதாக அமைந்தது. சமுதாயத்தின் தேவைகள் அதிகரிக்க உழைப்பிற்காக, வாழ்க்கையை நடாத்தக் கல்வி புகட்டப்பட்டது. ஆனுல் எம் நாட்டில் ஆங்கிலேயர் ஆதிக்கத்தின் விளைவாகப் பாராளுமன்றச் சனநாயக ஆட்சி முறை வளரவே கல்வி ஒரு சமூக சேவை என்ற கொள்கை உருவானது. இலவசக்கல்வி, தனியார் பாடசாலைகளை அரசாங்கம் சுவீகரித்தமை போன்ற கல்வி மாற்றங்களெல்லாம் கல்வி ஒரு சமூக சேவையாக நிலைமாறியமையை உணர்த்துகின்றன. எம் நாடு சுதந்திர மடைந்தபின் நாட்டின் சகல நிர்வாகப் பொறுப்புகளும் எம் நாட்டவரையே வந்தடைந்தபின் இந்நாட்டின் பொருளாதாரத்தைப் பலதுறைகளிலும் முன்னேற்றுவதில் கவனம் செலுத்தப்பட்டதையடுத்துக் கல்விக்குச் செலவிடும் பணம் ஒரு முதலீடு ஆகும் என்ற கொள்கையும் வளர்ந்திருக்கிறது. கல்வியும் பொருளாதாரமும் ஒன்றில் ஒன்று தங்கியிருக்கிறது. கல்வி வளர்ச்சி பொருளாதார வளர்ச்சிக்கு அடிகோலலாம். ஏனெனில் படித்த மனிதனே கூடுதலான பணத்தைச் சம்பாதிக்கும் நிலையை உருவாக்கலாம். அதேபோன்று பொருளாதார வளர்ச்சியும் கல்வி வளர்ச்சிக்கு ஏதுவாக அமையலாம். இங்கிலாந்திலே கைத்தொழிற் புரட்சியின் பயனுகவே கல்வி வளர்ச்சியடைந்தது. ருஷியாவிலும், ஜப்பானிலும் கல்வி வளர்ச்சி பொருளாதார வளர்ச்சிக்கு முன்னேடியாக அமைந்தது. ஆனுல் இதில் ஓர் உண்மையை மனதிற் கொள்ள வேண்டும். அதாவது கல்வி வளர்ச்சி பொருளாதார வளர்ச்சியைச் சற்று முந்தலாம் அல்லது பொருளாதார வளர்ச்சி கல்வி வளர்ச்சியைச் சற்று முந்தலாம். ஆனுல் இரண்டிற்கும் இடையிலான ஏற்றத்தாழ்வு அதிகம் வேறுபட்டால் வேலையில்லாப் பிரச்சனையை ஏற்படுத்திவிடும். எனவே, கல்விக்கான திட்டங்களெல்லாம் இவ்வுண்மைகளை ஆதாரமாக வைத்தே தீட்டப்பட வேண்டும்.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆகிய மேலைத்தேயவரினது ஆதிக்கத்தின் காலங்களிலும் பார்க்க ஆங்கிலேயரது ஆதிக்கத்தின் காலத்திலேயே எமது நாடு பல துறைகளிலும் வளர்ச்சியடைந்தது. ஆங்கிலேயரது ஏகாதிபத்தியக் கொள்கை இரண்டு அம்சங்களை உள்ளடக்கியது. தமது நாட்டின் கைத்தொழில் ஸ்தாபனங்களை இயக்க மூலப்பொருட்களும், தமது நாட்டில் உற்பத்தியாக்கப்பட்ட பொருட்களை விற்பதற்குச் சந்தைகளும் தேவைப்பட்டன. இலங்கையைப் பொறுத்த வரையில் இங்கு பணப்பயிர்களை உற்பத்தி செய்வதிலேயே அவர்கள் கவனம் செலுத்தினர் இப் பணப்பொருள் உற்பத்திக்கெல்லாம் தேவையான கூலியாட்களையெல்லாம் தமது ஆதிக்கத்தினுளிருந்த அயல் நாடாகிய இந்தியாவிலிருந்து வருவித்தனர் எனவே, பிறதேசத்துக் கூலியாட்களின் கல்வியில் சிரத்தை காட்ட வேண்டிய தேவையிருக்கவுமில்லை. தோட்டத் தொழிலில் ஈடுபட கல்வியறிவோ தொழில் நுட்ப அறிவோ தேவைப்படவுமில்லை. அவர்களது தோட்டங்களில் சில நிர்வாகக் கடமைகளைப் புரிய

மட்டுமே படித்த சில ஆட்கள் தேவைப்பட்டனர், அதுவும் இலிகிதர்களாகவும் கணக்கப்பிள்ளைகளாகவும் கடமையாற்றவே. இத்தொழில்களைப் புரிவதற்குக் கூடப் பலதரப்பட்ட ஒரு கல்வி முறையை இந்நாட்டில் புகுத்தவேண்டிய தேவையே இருக்கவில்லை. இதன் காரணத்தினுல் நாம் சுதந்திரம் பெற்ற பின்னர் கூட இதே கல்வி முறையை இதுவரை காலமும் முறை தவருது பதிபக்தியுடன் பின் தொடர்ந்து வந்திருக்கிரேம்.

இப்படியாக இந்நாட்டில் நாம் இதுகாறும் பின்பற்றிய கல்வித் திட்டத்தில் பின் வரும் பல குறைகளைக் காணமுடிந்தது:

(1) முதலாந்தரத்தில் சேரும் மாணவர்களில் 22·02 சத வீதமான மாணவர்கள் ஆரம்பக்கல்விடயுனேயே பாடசாலைப் படிப்பை முடித்துக்கொள்ளுகின்றனர். எட்டாந் தரம் வந்ததும் 50 சத வீதமான மாணவர்கள் படிப்பை முடித்துக் கொள்ளுகின்றனர். நாட்டின் பள்ளிக்கூடம் செல்லும் பிள்ளைகளில் $\frac{1}{5}$ வீதமானவர்களே க. பொ. த. உயர்தர வகுப்புக் கல்வியில் ஈடுபடுகின்றனர். இவர்களிலும் $\frac{1}{10}$ வீதமானவர்களே சர்வகலாசாலைக்கு அனுமதிக்கப்படுகின்றனர். இதிலிருந்து கல்விக்குச் செலவாகும் பணத்தால் எல்லோரும் பூரண பயன் அடைவதில்லை.

(2) பாடசாலைகளின் பாடவிதானம் புத்தகக் கல்வியை முக்கியமாகக் கலைப் பாடங்களையே போதிக்கக் கூடியதுமாக அமைந்திருக்கின்றது. க. பொ. த. வகுப்புகளில் உள்ள மாணவர்களில் 80 சத வீதமானேர் கலைப்பாடங்களையே கற்று வருகின்றனர். க. பொ. த. உயர்தர வகுப்புகளில் 75 சத வீதமானேர் கலைப்பாடங்களையே கற்று வருகின்றனர், இலங்கையின் 10,000 (ஏறக்குறைய) பாடசாலைகளில் 600 பாடசாலைகளில் மட்டும் தான் க. பொ. த. பரீட்சைக்கு மாணவர்களை விஞ்ஞான பாடங்களில் தோற்றுவிக்கப் பயிற்சியளிக்கக் கூடிய விஞ்ஞான ஆய்வு கூடங்கள் உள. க, பொ. த. உயர்தர வகுப்புகளில் விஞ்ஞானப் பாடங்களைக் கற்பிக்கக் கடிய ஆய்வு கூட வசதிகள் 144 பாடசாலைகளில் மட்டுமே உள. இதிலிருந்து கலைப் பாடங்களுக்குப் பாடவிதானத்தில் கொடுபட்ட முக்கியத்துவம் விளங்குகின்றது.

(3) நடைமுறையிலிருந்த கல்வித்திட்டம் பரீட்சையையே மையமாக வைத்ததாக அமைந்து க. பொ. த. சாதாரண, க. பொ. த உயர்தர பரீட்சைகளிலே மாணவர்களைச் சித்தியடையச் செய்வனவாகவே அமைந்துள்ள கல்வியாக அமைந்திருக்கின்றது. இதனுல் நாட்டின் தேவையை, நாட்டின் சூழலை உணர்த்தாத - அதனுடன் தொடர்பை ஏற்படுத்தாத கல்வியாக அமைந்திருக்கின்றது. பாடசாலையில் கற்ற கல்வி வாழ்க்கைக்குப் பிரயோசனப் படாத கல்வியாக அமைந்தது. இதனுல் பாடசாலையை விட்டு வெளியேறிய மாணவன் தனக்கோ, தன்னைச் சிருஷ்டித்த சமுதாயத்திற்கோ பிரயோசனமற்ற பிரஜைகளாகி விடுகின்ருன் 10,000 கலைப் பட்டதாரிகள் பாளி, சமஸ்கிருதம், பௌத்த நாகரிகம் போன்ற பாடங்களில் சித்தியெய்தி வேலையில்லாது திண்டாடுகின்றனர்.

(4) உலகில் விஞ்ஞானத்தின் வளர்ச்சியாலும், அதிர்ச்சியாலும் மற்றைய நாடுகள் முன்னேறிக்கொண்டு செல்லும் வேளையிலே நமது பாடவிதானம் விஞ்ஞானத்தின் சவாலை ஏற்றுக் கொள்ளமுடியாத நிலையில் சஞ்சலித்து வந்திருக்கின்றது.

(5) நாட்டை விவசாயத்துறையிலும், கைத்தொழிற்றுறையிலும் முன்னேற்ற அரசாங்கம் எடுத்து வரும் முயற்சிகளுக்குத் தேவையான தொழில் நுட்ப நிபுணர் இடைப்பட்ட நிலைக்குத் தேவையான தொழில் வல்லுநர் இல்லாது நாடு கஷ்டப்பட்டு வருகின்ற வேளையிலே நம் கல்வித்திட்டம் இத்தேவைகளைப் பூர்த்தியாக்கக் கூடிய கற்றவர்களை உற்பத்தி செய்யமுடியாது தோல்வி கண்டுள்ளனர்.

மேற்கூறியவற்றிலிருந்து நம் கல்வித் திட்டத்தில் பல குறைபாடுகள் உள என்பதையும் அவற்றைத் தீர்க்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றியும் உணர முடிந் தது. இவற்றை அடிப்படையாக வைத்தே 1972-இல் எமது இன்றைய அரசாங்கம் ஒரு புதிய கல்வித் திட்டத்தைப் புகுத்தியுள்ளது.

சாதாரண பாடசாலைகளில் இடம் பெறவுள்ள புதுக் கல்வி மூன்று பிரதான படிப்பு நிலைகளில் அமையும்.

| | | |
|---|---|---|
| 1 முதல் 5 வரை | வகுப்புகளிலான | தொடக்கக்கல்வி |
| 6 முதல் 9 வரை | ,, | கனிஷ்ட இடை நிலைக்கல்வி |
| 10 முதல் 11 வரை | ,, | சிரேஷ்ட ,, |

(1) பாடசாலைகளுக்குப் பிள்ளைகளை முதன்முறையாக அனுமதிக்கும் வயது ஐந்தி லிருந்து ஆருகக் கூட்டப்பட்டுள்ளது. உடலியல், உளவியல், கல்விமுறையான கருத் துக்களின் வழிநின்று நடுநிலையுடன் சிந்தித்துப் பார்ப்பின் உண்மை புரியும். பிரெஞ்சு தத்துவஞானி ரூஸோ, உளவியல் நிபுணர் பியாஜே ஆகியோரது கருத்துகளுக்கு அமையவும் உலகின் மற்றையநாடுகளின் பெரும்பான்மையான நாடுகளில் உள்ள வழக் கத்திற்கேற்பவுமே இவ்வயதெல்லை ஐந்திலிருந்து ஆறுக்குக் கூட்டப்பட்டதேயொழிய கல்விக்காகச் செலவிடப்படும் பணத்தில் ஒரு பகுதியையாவது மிச்சப்படுத்துவதற்கல்ல என்பதாகும்.

(2) ஆரம்பக்கல்வியின் (6—11 வயது வரை) பாட விதானத்தில் மாற்றங்கள் கொண்டுவரப்படாவிடினும் பண்படிப்படையிற்ருன் மாற்றங்கள் புகுத்தப்பட்டுள்ளன. போதனையிலும் பார்க்கச் சாதனைக்கே ஆரம்பக்கல்வியில் முதலிடம் கொடுக்கவேண்டு மென எதிர்பார்க்கப்படுகின்றது. அதாவது செயல்முறையை நாம் வளர்த்தல் வேண் டும். ஆரம்ப நிலையிலே ஆசிரியர்கள் அதிகம் கையாளும் வாசிப்பு முறையை விட்டு செய்கைமுறை முயற்சிகளை அதிகம் உபயோகிக்கவேண்டும் என வலியுறுத்தப்படு கின்றது.

(3) கனிஷ்ட இடைநிலைக்கல்வி (12—15 வயது) நிலையில்தான் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் புகுத்தப்பட்டுள்ளன, அதாவது ஒரே சீரான பொதுக்கல்வியைப் பொதுப் பாட விதானத்தின் அடிப்படையிலே நாட்டின் எல்லாப் பாகங்களிலுமுள்ள பாடசாலை களில் புகுத்தியமையாகும். கனிஷ்ட இடைநிலைப்பருவத்திலே பாடசாலைகளில் செயல் முறையினின்றும் முற்றிலும் விலகி வெறும் புத்தகங்களின் எல்லைக்குள் அடங்கியது. ஆனல் புதிய கல்வித்திட்டத்தின் பிரகாரம் கலைப்பிரிவு மாணவர், விஞ்ஞானப்பிரிவு மாணவர் என்ற வேறுபாடின்றி பொதுவான 9 பாடங்களையே மாணவர்கள் இலங்கை யின் எல்லாப் பாடசாலைகளிலும் கற்பர். விஞ்ஞானம், சமூகக்கல்வி, கணிதம், ஆங் கிலம் முதலிய பாடங்களை எல்லோரும் கனிஷ்ட இடைநிலைப் படிப்பின்போது கற்க வேண்டியிருக்கும் இப்புதிய கல்வியின் நோக்கமே உற்பத்தித்துறைக்கு வேண்டிய உத்தியோகத்தர்களுக்கும் இக்கல்வி உதவவேண்டு மென்பதாகும். இப்பொழுது நடை முறையிலிருக்கும் க. பொ. த பரீட்சையில் மாணவர் ஏறக்குறைய 55 வெவ்வேறு பாடங்களுக்குத் தோன்றலாம். ஆனல் புதிய கல்வித்திட்டப்படி இப்பாடங்களின் தொகை பத்துக்குக் குறைக்கப்பட்டுள்ளது. 1975-ல் முதன்முறையாக மாணவர் பொதுக் கல்வித் தேசிய சான்றிதழ்ப் பரீட்சைக்குத் தோற்றுவர்.

ஏட்டுப் படிப்பினுல் வரும் கொள்கைவழி அறிவைவிட செயல்முறை வடிவில் முன் வைக்கப்படும் பிரயோக அறிவே புதியபாடத்திட்டத்தின் முக்கிய அங்கமாகும். விஞ்ஞான அறிவு பரீட்சையிற் சித்தியடைவதற்கு மட்டுமன்றி பொருளாதார வளங்களுக்கும் உற்பத்தி வேலைகளுக்கும் பொருந்துமாறு தொழில் மார்க்கங்களைக் காண்பதற்குப் புதிய திட்டம் வழி வகுக்கிறது. நடைமுறையில் இருந்து வரும் வரன்முறையான பாடங்கள் முற்ருக நீக்கப்பட மாட்டா. அவை புதிய வடிவத்தில் ஒன்றிணைந்த பாட விதானமாக வைக்கப்படும்.

கணிதபாடத்தில் நூல்களுடன் கட்டுப்பட்டிருந்த கணிதத்தை மாணவரின் நடைமுறை வாழ்வுடன் தொடர்பு படுத்துவதற்குச் சகல முயற்சிகளும் எடுக்கப்படும். விஞ்ஞான பாடம் முந்திய பொது விஞ்ஞான பாடத்திற்குப் பதிலாக இரசாயனவியல், பௌதிக வியல் போன்றன அடக்கப்பட்ட பூத விஞ்ஞானமாக கற்பிக்கப்படும். நுணுகி ஆயும் ஆற்றலை வளர்ப்பதே இப்புதிய விஞ்ஞானப் பாடத்திட்டத்தின் நோக்கமாகும்.

சமூகக்கல்வி ஒருங்கிணைந்த பாடமாக அமையும் சரித்திரம், பூமிசாஸ்திரம், குடியியல் போன்ற பாடங்கள் இணைந்து வரும். சொந்தச் சூழலைப்பற்றிய அறிவுக்கு முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் நாட்டுப்பற்றை வளர்ப்பதும் சமூகக்கல்வியின் இன்னெரு நோக்கம் தொழில் முன்னிலைப் புதிய கல்வித்திட்டத்தில் பாடம் ஒரு முக்கிய அம்சமாகும். 6-ந் தரத்தில் 1972 இல் புகுத்தப்பட்ட இப்பாடத்தின் நோக்கம் என்னவெனில் எந்தவேலைக்கும் பயன்படக் கூடிய அன்ருட வாழ்விலுமே பயன்படக் கூடிய கைக்குரிய திறமைகளைப் பயிற்றுவதாகும்,

பிள்ளைகளுக்கும் சமுதாயத்திற்கு மிடையே தொடர்புகள் விரிவடைய, ஊரின் பிரதான தொழிலாளரின் கைவன்மையையும், அறிவையும் வளரும் மாணவருக்குப் புகட்டுதலாகும், மேலும் நாட்டின் வளங்கள், நாட்டின் செல்வங்கள் முதலியன பற்றி விரிவான அறிவை மாணவருக்குப் புகட்டி இத்தொழில் முன்னிலைப் பாடம் மூலம் பாடசாலையையும். சூழலையும் ஒன்றறக் கலக்கச் செய்வதாகும். இப்பாடத்தைக் கற்பதன் மூலம் உற்பத்திக்குப் பயன்படும் பொருள்கள், அப்பொருள்களின் பண்புகள் (நிறம், பாரம், வலிமை) அறிவு முதலியன வற்றைப் பெற உதவும் உழைப்புப் பண்பாடு, சுறுசுறுப்பு. ஆவல், தன்நம்பிக்கை, இடையூறுகளுக்கு முகம் கொடுத்தல் சமாளிக்கும் வல்லமை, தாங்களும் நாட்டின் முன்னேற்றத்துக்குப் பயன்படக் கூடிய பொருட்களை உற்பத்தி செய்யலாம் என்ற எண்ணத்தையும், அவ்வாறு உற்பத்தி செய்யும் பொழுது ஒரு மனத்திருப்தியையும் கூட ஏற்படுத்துகின்றது. சுருங்கக் கூறின் இத்தொழில் முன்னிலைப் பாட மூலம் மாணவர்களைத் தமக்கும் நாட்டிற்கும் பிரயோசனமுள்ள பிரஜைகளாக்குவது முக்கிய நோக்கமாகும்.

(4) 10-ம் 11-ம் வகுப்புகள் சிரேஷ்ட இடை நிலைக் கல்விக்குரிய பிரிவுகளாகும். 10-ம் வகுப்புப் பிள்ளைகள் பொதுக் கல்வித் தேசிய சான்றிதழ்ப் பரீட்சையிற் கிடைக்கும் புள்ளிகளின் படி சேர்க்கப்படுவர். சிரேஷ்ட இடை நிலைக் கல்விக்காலப் பகுதியிலே முதலாவது தடவையாகப் பிள்ளைகளுக்கு அவர்களது திறமைக்கேற்பப் பல்வேறு கல்வித் துறைகளைத் தெரிந்தெடுப்பதற்குரிய சந்தர்ப்பம் கொடுக்கப்படும். உயிரியல், விஞ்ஞானம், பௌதிக விஞ்ஞானம், சமூக விஞ்ஞானம், வர்த்தக விஞ்ஞானம் ஆகிய துறைகளுள் ஏதேனும் ஒன்றை மாணவர் தெரிந்தெடுக்கக் கூடியவராயிருப்பர். இன்றுபோல இந்தக் கல்விமுறை பல்கலைக்கழகக் கல்வியை மட்டுமே நோக்கிற் கொண்டதாக அமையாது ஒவ்வொரு பாடத்திலும் சிறந்த கொள்கை முறை அறிவைப் பெற்றுக் கொடுப்பதுடன் அக்கொள்கை முறை அறிவின் அன்ருடச் சமூகப் பிரச்சினைகளை விளங்கிக் கொள்வதற்கு உபயோகப்படுத்திக் கொள்ளும் முறை பற்றியும் அறிவு உண்டாகும். இப்பரீட்சையிற் கிடைக்கும் புள்ளிகளின்படியே ஒரு தொகை மாணவர் மாவட்ட

அடிப் படையில் பல்கலைக் கழகத்திற்கு அனுமதிக்கப்படுவர். இன்னும் ஒரு பகுதியினர் சிரேஷ்ட தொழில் நுட்பப் பயிற்சி, கவின் கலை ஆகியவற்றுக்குரிய தாபனங்களிற் சேர்க்கப்படுவர். ஆசிரியர் கல்லூரிகளுக்கும் எழுதுவினைஞர் சேவை சுருக்கெழுத்தாளர் சேவை, தட்டெழுத்துச் சேவை முதலியனவற்றிற்குக் கூட இப் பரீட்சையின் அடிப் படையிலேயே சேர்க்கப்படுவர்.

(5) கல்வியை முடித்துக் கொண்டு உத்தியோகத்திற் சேரும் பிள்ளைகள் யாவரும் ஒருவருட காலம் தேசிய சேவை செய்யவேண்டியிருக்கும். இதன் நோக்கம் மாணவர்கள் மனதில் நாட்டுப் பற்றை ஏற்படுத்துவதுடன் தொழிலின் மகத்துவத்தை வருங் காலச் சந்ததியினருக்கு உணர்த்த இன்னுமொரு சந்தர்ப்பமாகும். கட்டடவேலை, நீர்ப்பாசன வேலை, கமத்தொழில் முதலியன இத்தேசிய சேவையினுள் அடங்கலாம். இத்தேசிய சேவையானது பல்வேறு நிலைகளிலேயே ஒழுங்கு செய்யப்படும்.

(6) நாட்டிற்கு வேண்டிய உயர் நிலை மனித சக்தியின் தேவையைப் பூர்த்தி செய்யும் முறையிலேயே பல்கலைக்கழகப் பாடவிதானம் திருத்தி அமைக்கப்படும். பாட விதானம் படிப்படியாக மாற்றம் பெற்று வெறும் அறமுறைப்படியாக நின்றுவிடாது கொள்கைமுறை ஞானத்தைச் செயற்படுத்துவதற்குரிய முயற்சியை அளிக்கும் முறையில் அமையும்.

சுருங்கக் கூறின் புதிய கல்வித் திட்டம் ஆரம்பக் கல்விமுதல் பல்கலைக் கழகக் கல்வி வரை பல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. நாட்டின் பொருளாதார சமூகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு, உலக நாடுகளுடன் விஞ்ஞான வளர்ச்சியில் பின் தங்கி நிற்காது, முன்னேற வேண்டுமென்ற பெருநோக்குடனேயே இப்புதிய கல்வி மாற்றங்கள் ஏற்பட்டடுள்ளன.

எம். எம். மன்சூர்

# பகுதி II

## பரிபாலனம்

இதன் பின்னுள்ள விடயங்களான,
"நியமனம் தொடக்கம் ஆசிரியர் லீவு" வரையுள்ளவை
கல்வி அமைச்சின் கணக்காளர் திரு. இராஜ் சுப்பிரமணியம்
அவர்களதும்;

"புகையிரத ஆணைச் சீட்டு"
யாழ். கல்வித்திணைக்களக் கணக்காளர் திரு. எஸ். இராசையா
அவர்களதும்;

" கல்விச் சட்டங்கள் "
யாழ். கல்வித் திணைக்கள நிர்வாக அதிகாரி திரு. ஆ. மகாலிங்கம்
அவர்களதும் ;

விரிவுரைகளிலிருந்து தொகுக்கப்பட்டன.

# கல்விச் சட்டங்கள்

## (1939ஆம் ஆண்டிலிருந்து 1961 வரை செய்யப்பட்ட சட்டங்களின் தொகுப்பு)

### I. 1939 ஆம் ஆண்டு 31-ம் இலக்கக் கல்விக் கட்டளைச் சட்டம்

1. கல்வி மந்திரிக்கும் கல்வி நிருவாக சபைக்கும் பொறுப்பாயுள்ள பணிப்பாளரின் கீழ்க் கல்வித் திணைக்களத்தை அமைத்தல்.
2. கல்விச் சபையை ஒரு ஆலோசனைச் சபையாக மாற்றல்.
3. உள்ளூர்க் கல்விச் சபைகளின் அதிகாரத்தை மட்டுப்படுத்தியதோடு அவற்றை ஆலோசனைச் சபைகளாக மாற்றல்.
4. ''மனச்சான்று வாசகத்தை'' ஒழுங்கான முறையில் அமுலுக்குக் கொண்டு வருதல்.
5. ''சட்டக் கோவையை''த் தயாரிக்கும் பொறுப்பினை மந்திரியிடமும் நிருவாகக் குழுவிடமும் விடல்.
6. தோட்டப் பாடசாலைகளைப் பற்றித் தெளிவான பிரமாணங்களை விதித்தல்.
7. புதிய பாடசாலைகளை நிறுவுவதற்குப் பணிப்பாளரின் அங்கீகாரம் அவசியமென விதித்தல்.

### II. 1947 ஆம் ஆண்டின் 26-ம் இலக்கக் கல்விக் கட்டளைச் சட்டம்

1. பாடசாலைகளை ஆரம்ப பாடசாலைகள், இடைநிலைப் பாடசாலைகள், சிரேட்ட பாடசாலைகள், செய்முறைப் பாடசாலைகள் என வகுத்தல்.
2. அரசாங்க பாடசாலைகளில் மதபோதனைக்கு வாய்ப்பளித்தல்.
3. பரீட்சைக்குழு நியமனம்.
4. மதச்சார்புள்ள பாடசாலைகளுக்குப் புதிய பிரமாணங்களை விதித்தல்.
5. தோட்டப் பாடசாலைகளுக்கான விதிகள், மேலும் இயற்றப்பட்டு தோட்ட முகாமையாளர் பாடசாலைகளை அமைப்பதற்குக் கட்டிடமும். ஆசிரியர் வதிவதற்கு விடுதியும், விளையாட்டு மைதானமாகப் பாவிப்பதற்குக் காணியும் வழங்கும்படி எதிர்பார்க்கப்பட்டது.
6. வசதி, சேவைக் கட்டணம் அறவிட ஏற்பாடு.

### III. 1951 ஆம் ஆண்டின் 5-ம் இலக்கக் கல்வித் திருத்தச் சட்டம்

1. உதவி பெறும் பாடசாலைகளுக்குத் தொழிலகம், ஆய்வுகூடம், நூல் நிலையம் ஆகியவற்றைப் பேணுதற்குப் பணவுதவியளித்தல்.
2. 1951 மார்ச் 31 இல் சுயமொழிப் பாடசாலையாகப் பதிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் சுயமொழியில் மாத்திரம் போதனையென விதித்தல்.
3. பாடசாலைகள் நிரலில் இருந்து செய்முறைப் பாடசாலைகள் நீக்கப்படல்.

4. மத்திய ஆலோசனைச் சபை நிறுவல்.

5. உதவி பெருத பாடசாலை ஆசிரியரும் ஆசிரியர் இளைப்பாற்றுச் சம்பளநிதிக்குப் பணம் கொடுக்கலாம் என விதித்தல்.

6. இலவச கல்வித் திட்டத்தில் இருந்து விலகி, கட்டணம் வசூலித்துத் தனியார் பாடசாலையாக இயங்க இடமளிக்கப்பட்டது.

7. பாடசாலைகளில் வசதி, சேவைக் கட்டணம் அறவிடல் சம்பந்தமான ஏற்பாடுகள் மேலும் திருத்தப்பட்டன.

## IV. 1953 ஆம் ஆண்டின் 43-ஆம் இலக்கக் கல்வித் திருத்தச் சட்டம்

பாடசாலைப் பரீட்சை ஆலோசனைச் சபை நியமிக்கப்பட்டது. பரீட்சாதிகாரி இவ் ஆலோசனைச் சபைக்குத் தலைவராக நியமிக்கப்பட்டார். பாடசாலைப் பரீட்சைகள் நடாத்துதல், அவைகளின் அமைப்பு நிர்வாகம் ஆகியவற்றைப் பற்றி ஆலோசனை வழங்கல் இச்சபையின் முக்கிய கடமையாக இருந்தது.

## V. 1958 ஆம் ஆண்டின் 37-ஆம் இலக்கக் கல்வித் திருத்தச் சட்டம்.

1. வசதிகள், சேவைகளுக்கான பணம் வசூலிப்பது சம்பந்தமான நிபந்தனைகள் திருத்தப்பட்டமை.

## VI. 1960 ஆம் ஆண்டின் 5-ஆம் இலக்கச் சட்டம்

1. உதவி நன்கொடை பெறும் பாடசாலைகள் கல்விப் பணிப்பாளரின் முகாமையின் கீழ்க் கொண்டு வந்தமை.

2. விரும்பினுல் முதலாந்தர இரண்டாந்தர கல்லூரிகள் கட்டணம் அறவிடாது தனியார் பாடசாலைகளாக இயங்க இடமளித்தல்.

3. கட்டணம் வசூலிக்காது தனியார் பாடசாலைகளாக இயங்கத் தீர்மானம் எடுக்கும் பாடசாலைகளுக்கான நிபந்தனைகள் விதிக்கப்பட்டது.

## VII. 1961 ஆம் ஆண்டின் 8-ஆம் இலக்கச் சட்டம்

1. கல்விப் பணிப்பாளரின் முகாமையின் கீழ் கொண்டுவரப்பட்ட பாடசாலைகளின் சொத்துக்கள், உடைமைகள் சுவீகரித்தல்.

2. பாடசாலையின் தேவைக்குப் பாவிக்கப்படாத சொத்துக்கள் சுவீகரிக்கப்பட்டிருப்பின், அவைகளை மீள கையளித்தற்கான நிர்வாக ஒழுங்குகள்.

3. 5 வயது தொடக்கம் 14 வயது வரை உள்ள பிள்ளைகளுக்குக் கல்வி பயிற்றுவிப்பதற்கான ஏகபோக உரிமை கல்விப் பணிப்பாளருக்கு அளிக்கப்பட்டமை. வேறெவரும் மேற்குறிப்பிட்ட வயதெல்லைக்களுக்கான பிள்ளைகளுக்குப் பாடசாலைகளை அமைத்தல் சட்ட விரோதமாக்கப்பட்டது.

4. கட்டணம் வசூலிக்காத தனியார் பாடசாலைகளுக்கு மேலும் சில நிபந்தனைகள் விதிக்கப்பட்டன.

கல்விச்சட்டத்தின் கீழ் கல்வித் திணைக்களம் அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் கல்வி மா அதிபதி என்னும் பதவி உருவாக்கப்பட்டு அமைச்சரின் பொதுக் கட்டுப் பாட்டுக்கிணங்கச் சட்டத்தை அமுல் நடாத்தும் பொறுப்பு அவருக்களிக்கப்பட்டுளது.

**மத்திய மதியுரைச் சபை**

இச்சபைக்குப் பத்துப்பேர் அமைச்சரால் நியமிக்கப்படுவதுடன் தலைவரையும் அவரே நியமிப்பார். கல்வி பற்றிய கருமங்களில் அமைச்சருக்கு அறிவுரை கூறுதல் இச்சபையின் கடமையாகும். இதன் பதவிக் காலம் மூன்றுண்டுகளாகும். அமைச்சரால் பெயர் குறிப்பிடப்படும் கல்வி அமைச்சின் உத்தியோகத்தர் ஒருவர் இச்சபைச் செயலாள ராவர்.

**உள்ளூர் மதியுரைக் குழுக்கள்**

இலங்கையின் பல்வேறு பாகங்களின் கல்விக் கருமங்கள் பற்றியும். கல்வித் தேவைகள் பற்றியும் கல்வி அதிபதிக்கு அறிவுரை கூறும் சபையாக இச்சபை இயங்கும்.

ஒவ்வொரு மாநகர சபை, நகர சபை, பட்டின சபைப் பிரதேசத்திற்கும் மற்றும் அமைச்சரால் நிர்ணயிக்கப்படும் மேற்கூறியவற்றில் அடங்காத பிரதேசங் கட்கும் 12 அங்கத்தவர்கள் கொண்ட உள்ளூர் மதியுரைக் குழுக்கள் அமைக்கப்படும். இவர்களில் ஒருவர் கல்வி உத்தியோகத்தராயிருப்பர். மாநகர சபை / நகர சபை / பட்டின சபையைச் சேர்ந்த மதியுரைக் குழு விடயத்தில் இவ்வுள்ளூரதிகார சபை களால் சிபார்சு செய்யப்படும் இருவர் அமைச்சரால் நியமிக்கப்படுவர். தலைவரைக் குழுவே தெரிவு செய்யும். இச்சபைக்கு நிர்வாக அல்லது அமுல் நடத்தும் அதிகாரம் எதுவும் கிடையாது. பிரதேசத்தின் கல்வி பற்றிய கருமங்களில் ஆலோசனை கூறுதலும், தேவைகள் பற்றி எடுத்தோதுதலும் இவற்றின் கடமைகளாகும்.

**பாடசாலைப் பரீட்சைகள் பற்றிய மதியுரைச் சபை**

பரீட்சை ஆணையாளரையும், அமைச்சர் நியமிக்கும் அத்தகைய ஆட்களையும் கொண்டதே இச்சபை. இதன் தலைவர் பரீட்சை ஆணையாளராவர். பாடசாலைப் பரீட்சைகளின் அமைப்பு, கட்டுப்பாடு அவற்றை நடாத்துதல் ஆகியவை பற்றி ஆணையாளருக்கு இச்சபை ஆலோசனை கூறும்.

**கல்வி ஆராய்ச்சிச் சபை**

கல்வி அதிபதியையும் அமைச்சரால் நியமிக்கப்படும் ஆட்களையும் இச்சபை கொண்டதாயிருக்கும் இது ஒரு நிறைவேற்றுத் தாபனமாகும். அமைச்சரின் பொதுக் கட்டுப்பாட்டுக்கிணங்கக் கல்வி கற்பிக்கும் முறைகளில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்காக இச்சபை கல்விக் கொள்கைகளிலும் செயல் முறைகளிலும் ஆராய்ச்சி நடாத்தும்.

**நகர்ப்புற கல்வி அதிகார சபை**

உள்ளூராட்சிக்குப் பொறுப்பான அமைச்சரின் விதப்புரையின் கீழ் கல்வி அமைச்சர் குறிப்பிட்ட மாநகர சபை / நகர சபை / பட்டின சபை எல்லைக்குட்பட்ட பிரதேசத்தின் கல்வி வசதிகளுக்கான செலவை அல்லது அதன் ஒரு பகுதியை அவ்வுள்ளூர் அதிகார சபை பொறுக்க வேண்டுமெனக் கல்வி அமைச்சர் கட்டளையிட லாம். அதேபோன்று யாதாயினும், ஒரு கிராமசபை அதன் தீர்மானத்தின் மூலம்

அவ்வாறு ஏற்படும் செலவைப் பொறுக்கத் தயாரானல், சம்பந்தப்பட்ட கிராமசபை அதனைப் பொறுக்கும்படி அமைச்சர் தீர்மானிக்கலாம். இவ்வாறு தீர்மானிக்கப்படின் இப்பிரதேசங்களுக்கான உள்ளூர் மதியுரைக் குழுக்கள் கலைக்கப்பட்டனவாகக் கருதப் படும். அத்தகைய குறிப்பிட்ட பிரதேசம் மாநகரசபை / நகரசபை / பட்டினசபை எல்லைக் குட்பட்டதாயின் அது அப்பகுதியின் நகர்ப்புற கல்வி அதிகார சபையாகவும், கிராம சபைப் பிரதேசத்திற்குட்பட்டதாயின் சம்பந்தப்பட்ட கிராமப் புற கல்வி அதிகார சபையாகவும் இருக்கும். அவை கல்விச் செலவுக்காகச் சொத்துக்கள் மீது கூடிய வரியை விதிக்கலாம்.

இவை உள்ளூரதிகார கல்விக் குழுக்களையும் உப குழுக்களையும் தெரிவு செய் வதுடன் உள்ளூர் கல்வித் திட்டமொன்றையும் உருவாக்கல் வேண்டும். அஃது:

கல்வி வசதி தேவையான பிள்ளைகளுக்குப் பொருத்தமான கல்வி வசதிகளை ஏற்படுத்தல். கைத்தொழிற் பயிற்சி அளித்தல், பாடசாலை செல்லும் பிள்ளைகளுக்கு வைத்திய பரிசோதனை செய்தல், இலவச உணவு அளித்தல், வறிய பிள்ளைகளுக்கு இலவச புத்தகங்கள் வழங்குதல், செவிடர், குருடருக்குக் கல்வி வசதி அளித்தல் ஆகியவற்றிற்கு வழிவகுக்க வேண்டும்.

இத்தகைய கிராமப்புற நகர்ப்புற கல்வியதிகார சபைக்குத் தேவையான பிரத்தியேக காணிகளை அரசு சுவீகரித்து அவற்றிற்கு உடைமையாக்கலாம்.

### பாடசாலைகளில் சமயம் கற்பித்தல்

ஒரு பாடசாலையில் சேருவதற்கு விண்ணப்பித்த பிள்ளையின் அல்லது அப் பிள்ளையின் பெற்றேரின் சமயம், இனம், சாதி சமூக நிலைகாரணமாக எந்த உதவி பெறும் பாடசாலையிலும் அப்பிள்ளைக்கு அனுமதி மறுக்கப்படக்கூடாது. அரசாங்க பாடசாலையில் ஒவ்வொரு பிள்ளையினதும் பெற்றேரின் சமயம் கல்வி அதிபதியால் அங்கீகரிக்கப்பட்ட அச்சமயத்தைப் பின் பற்றும் ஒருவரால் கற்பிக்கப்படல் வேண்டும். ஒரு சமயத்தைச் சேர்ந்த பெற்றேரின் பிள்ளைகள் ஒரு அரசாங்க பாடசாலையில் பதினைந்துக்கு மேற்படாதிருக்கும் போது அச்சமயம் கற்பிக்கப்பட வேண்டுமென்ற நியதியில்லை. பெற்ருர் ஒருவர் தனது பிள்ளை எந்தச் சமயக் கல்வியைக் கற்பதி லிருந்தும் அல்லது வழிபாட்டுக்குச் செல்வதிலிருந்தும் விடுவிக்கப்பட வேண்டுமெனப் பாடசாலைத் தலைவருக்குத் தாமாகவே விண்ணப்பித்திருந்தால் அப்பிள்ளை அவற்றி லிருந்து விடுவிக்கப்பட வேண்டும்.

### முகாமையாளர்

உதவி பெறும் பாடசாலை ஒன்றின் சொந்தக்காரர் சிபார்சு செய்யும் யாராயி னும் ஒருவரைக் கல்வி அதிபதி முகாமையாளராக நியமிக்கலாம். வேண்டுமெனில் மறுத்து வேருெருவரை நியமிக்குமாறு கேட்கலாம். ஆனல் அதற்குரிய காரணம் காட் டப்பட வேண்டும். தகுதியானவர் எனக் கல்வி அதிபதி கருதாத ஒருவர் சிபார்சு செய்யப்பட்டிருப்பின் அவரை விடுத்துக் கல்வி அதிபதி வேருெருவரை நியமிக்கலாம். கல்வி அதிபதி சொந்தக்காரரின் வேண்டுகோளின் பேரில், அல்லது தனது தீர்மானத் திற்கமைய முகாமையாளர் ஒருவரை இடைநிறுத்தலாம் அல்லது விலக்கலாம். இவ் வாறு செய்யும்படி சொந்தக்காரர் வேண்டும்போது கல்வி அதிபதி மறுக்கலாம். ஆனல் காரணம் காட்ட வேண்டும். கல்வியதிபதியால் அவரது சொந்த எண்

ணத்தில் நீக்கப்படும் முகாமையாளர் அமைச்சருக்கு மேன் முறையீடு செய்யலாம். இதேபோன்று, தான் சிபார்சு செய்யும் ஒருவரை முகாமையாளராக நியமிக்கக் கல்வி அதிபதி மறுத்தால், சொந்தக்காரர் அமைச்சருக்கு மேன் முறையீடு செய்யலாம். உதவி பெறும் பாடசாலையின் ஆசிரியர் எவரும் அல்லது அதனால் வருமானம் பெறும் எவரும் முகாமையாளராக முடியாது.

கல்வி

கல்வி அமைச்சர் பின்வரும் விடயங்களுக்கு விதிகள் கொண்டு வரலாம்.

1. பாடசாலைகளைத் தாபித்தல், ஆசிரியர்களை நியமித்தல், விலக்கல்.
2. உதவி பெறும் பாடசாலைகளுக்கு உதவிப்பணம் வழங்கல்.
3. 1-7-47 இன் பின்னர் பாடசாலைகளைப் பதிவு செய்தல்.
4. பாடசாலை அனுமதி, பாடவிதானம், புத்தகங்கள்.
5. அரசாங்க/உதவி பெறும் பாடசாலைகளில் கல்வி புகட்டும் மொழி.
6. பாடசாலை ஒழுங்கு.
7. பாடசாலைகளைப் பரீட்சித்தல் பரீட்சகர்களின் கடமைகள்.
8. பாடசாலைப் பிள்ளைகளின் வைத்திய பரீட்சை.
9. இலவச உணவு, புத்தக விநியோகம்,
10. பாடசாலைகளைத் தரம்படுத்தல்.
11. தேவையான கல்வி வசதிகளும் கைத்தொழிற் பயிற்சிகளும் அளிக்கச் செல விடும் பணம்.
12. முகாமையாளரின் கடமைகள்.
13. ஆசிரியர்களுக்குத் தேவைப்படும் கல்வித் தகைமைகள், சம்பளம், பயிற்சி, பதிவு செய்தல், தரம் பிரித்தல், விலக்கல்.
14. கட்டாயக் கல்வியை அமுல் நடாத்த உத்தியோகத்தர்களை நியமித்தல்.
15. பிள்ளைகளின் விபரங்களைப்பெற அவர்களுக்கு அதிகாரம் அளித்தல்.
16. பாடசாலை நேரங்களைத் தீர்மானித்தல்.
17. பயிற்சிக் கலாசாலைகளுக்கு ஆசிரியர்களை அனுமதித்தல்.
18. புலமைப் பரிசில்.
19. தொழில் நுட்ப, விவசாய, வணிகக் கல்வி.
20. வளர்ந்தோர் கல்வி.

### 1960-ஆம் ஆண்டின் 5-ஆம் இலக்கச் சட்டம்

இது உதவி பெறாத பாடசாலையாக நடத்துவதற்குச் சொந்தக்காரர் விரும்பும் பாடசாலை தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு உதவி பெறும் பாடசாலையினதும் முகாமையாளராகக் கல்வி அதிபதியை நியமிப்பதற்கும், வாக்கெடுப்பின் மூலம் பிள்ளைகளின் பெற்றோரும் ஆசிரியரும் எடுக்கும் முடிவிற்கிணங்க சில உதவி பெறும் பாடசாலைகளினது முகாமையைக் கல்வி அதிபதி கைவிடுவதற்கும் வகை செய்வதற்கான சட்டமாகும். அமைச்சர், இச்சட்டம் இயைபுடைத்தாகும் எந்தவொரு உதவிபெறும் பாடசாலையினதும் முகாமையாளராகக் கல்வி அதிபதியைப் பிரகடனப்படுத்தலாம். ஆனால் எந்தவொரு I-ம் தர - 2-ம் தரப் பாடசாலையினதும் சொந்தக்காரர் அப்பாடசாலையை உதவி பெறாத பாடசாலையாகத் தாம் நடாத்தப்போவதாகக் குறிப்பிட்ட காலத்தினுள் கல்வி அதிபதிக்கு எழுத்து மூலம் அறிவித்தால் அத்தகைய பாடசாலைக்கு இந்தப் பிரகடனம் செல்லுபடியாகாததாகும். இத்தகைய பிரகடனத் திகதியில் இருந்து அப்பாடசாலையின் முன்னைய முகாமையாளர் தமது பதவியை இழப்பர். மேற்குறித்த பிரகடனம் செல்லுபடியாகும் திகதிக்கு முன்னர் யாராயினும் சொந்தக்காரர் தமது பாடசாலையை

உதவி நன்கொடை பெருத பாடசாலையாக நடாத்தப்போவதாகக் கல்வி அதிபதிக்கு எழுத்துமூலம் அறிவித்தல் கொடுத்தால் கல்வி அதிபதியை இப்பாடசாலையின் முகாமையாளராகப் பிரகடனம் செய்த அமைச்சரின் பிரகடனம் அப்பாடசாலையைப் பொறுத்த அளவில் செல்லுபடியாகாது. 1961-8-ம் இலக்கச் சட்டத்தில் திருத்தப்பட்டவாறு அத்தகைய சொந்தக்காரர் தமது விருப்பை வாபஸ் பெறுவதாக எழுத்து மூலம் அறிவித்தால் அத்திகதியில் இருந்து அப்பாடசாலையின் முகாமையாளராகக் கல்வி அதிபதி பொறுப்பேற்பார்.

சொந்தக்காரரின் விருப்பின் பேரில் உதவி நன்கொடை பெருத பாடசாலையாகும் எப்பாடசாலையினதும் சொந்தக்காரர்:-

(1) தமது பாடசாலையில் அரசாங்கத்தின் பொதுக் கல்விக் கொள்கைக் கிணங்கப் பிள்ளைகளுக்குக் கல்வி புகட்டலும் பயிற்சி அளித்தலும் வேண்டும்.

(2) 1960 யூலை 1-ம் திகதிக்கு முன்னர் அப்பாடசாலையிலிருந்த வசதிகளையும் சேவைகளையும் தொடர்ந்து பேணல் வேண்டும்.

(3) அத்தகைய தெரிவின் பின்னர் அத்தகைய சொந்தக்காரரின் சமயமல்லாத பிறிதோர் சமயத்தைப் பின்பற்றும் பெற்ருர் ஒருவரின் பிள்ளையைக் கல்வி அதிபதியின் அங்கீகாரமின்றித் தனது பாடசாலையில் அனுமதிக்கக் கூடாது.

(4) 1939-ம் 31-ம் இலக்கச் சட்டத்தின் பிரகாரம் செய்யப்பட்ட விதிகளுக் கிணங்க வசதிகள், சேவைக்கட்டணம் தவிர்ந்த வேறெந்தக் கட்டணத்தையும் விதித்தலாகாது.

(5) பிள்ளைகளுக்காக அப்பாடசாலையில் இருந்த இடப்பரப்பைக் குறைத்தலாகாது.

(6) அத்தகைய தெரிவுக்கு முன்னர் அப்பாடசாலையில் இருந்த எந்தப் பிள்ளையையும் ஒழுக்காற்றுக் காரணங்களுக்காகக் கல்வி அதிபதியின் அங்கீகாரத்துடனல்லாது விலக்கக்கூடாது.

(7) அத்தகைய பாடசாலைக்கு இயைபுடைய கல்விச் சட்டங்களுக்கிணங்க ஒழுகவேண்டும். 1961-ம் ஆண்டின் 8-ம் இலக்கத் திருத்தம்.

(8) 1960 யூலை 1-ம் திகதிக்கு முன்னர் இருந்த எந்த ஆசிரியரையோ ஊழியரையோ கல்வி அதிபதியின் அங்கீகாரமின்றி விலக்கமுடியாது.

(9) அப்பாடசாலையின் ஒவ்வொரு ஆசிரியருக்கும் ஒவ்வொரு ஊழியருக்கும் அவரவருக்குக் கொடுக்கப்பட வேண்டிய சம்பளத்தை அடுத்த மாதம் 10-ம் திகதிக்கு முன்னர் கொடுத்தல் வேண்டும்.

(10) 1-7-60 இல் அல்லது அதற்குப் பின்னர் அப்பாடசாலையில் இருக்கும் எந்தவொரு ஆசிரியரது அல்லது ஊழியரது நியமன நியதிகளையும், நிபந்தனைகளையும் (சம்பள, லீவு உட்பட) கல்வி அதிபதியின் அங்கீகாரமின்றி மாற்றமுடியாது.

(11) அப்பாடசாலையைக் கொண்டு நடாத்தத் தேவையான நிதி உண்டென்று கல்வி அதிபதியைத் திருப்திப்படுத்தல் வேண்டும்.

(12) பாடசாலையில் எந்தவித வேலை நிறுத்தத்திற்கோ, கதவடைப்புக்கோ இடமளித்தலாகாது. கல்வி அதிபதியின் முகாமையில் உள்ள எந்தவொரு 1-ம் 2-ம் தரப் பாடசாலையினதும் சொந்தக்காரர் அத்தகைய பாடசாலை உதவி நன்கொடை பெறுத ஆனல் கட்டணங்கள் விதிக்கின்ற பாடசாலையாக நடத்தப்பட வேண்டுமா அல்லவா எனப் பிள்ளைகளினதும், பெற்றோரினதும், ஆசிரியரினதும் வாக்கெடுப் பொன்றை நடாத்துமாறு கல்வி அதிபதியை எழுத்து மூலம் கேட்கலாம். இவ்வாக் கெடுப்பில் அத்தகைய சொந்தக்காரரின் கோரிக்கைக்குச் சாதகமாக 75 சதவீதத் தினர் வாக்களித்திருப்பின் கல்வி அதிபதி அப்பாடசாலையின் முகாமையினின்றும் விலகுவார்.

## 1961-ஆம் ஆண்டின் 8-ஆம் இலக்கச் சட்டம்

1960-ம் ஆண்டின் 5-ம் இலக்கச் சட்டத்தின் மூலம் கல்வி அதிபதியின் முகாமையின் கீழ் கொண்டுவரப்பட்ட உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளின் சொத்துக்களை அரசாங்கத்திற்குச் சுவீகரிப்பதற்கும், அத்தகைய சொத்துக்களில் உள்ள பாடசாலைகளை நிர்வகிக்கும் பொறுப்பைக் கல்வி அதிபதிக்கு அளிப்பதற்கும், சுவீகரிக்கப்பட்ட சொத்துக்களை அரசாங்கத்திற்குப் பொறுப்பெடுப்பதற்குக் கல்வி அதிபதிக்கு உரித்தளிப்பதற்கும், வகை செய்வதற்கான சட்டமாகும்.

சுவீகரிப்பதற்கு ஏற்ற எந்தச் சொத்தும் பாடசாலையொன்றை நடாத்துவதற்கு அவசியமென அமைச்சர் தீர்மானிக்குமிடத்து அவர் அத்தகைய தேவை இருக்கிற தென வர்த்தமானியில் ஓர் அறிவித்தலை வெளியிடலாம். அத்தகைய அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டபின்:-

1. கல்வி அதிபதியால் அங்கீகாரமளிக்கப்பட்ட எவரும் அத்தகைய இடத்தில் இருக்கும் எந்தக் கட்டிடத்தினுள்ளும் புகுந்து அத்தகைய சொத்தின் எல்லைகளை மட்டிடலாம்; அங்குள்ள பொருட்களின் பதிவேடொன்றைத் தயாரிக்கலாம்.

அமைச்சர் தேவையெனக் கருதுமிடத்து சுவீகரித்தல் கட்டளை யொன்றை வர்த்தமானியில் வெளியிடலாம். இக்கட்டளை வெளியிடப்பட்டுப் 14 நாட்களின் பின்னர் அச்சொத்துக்கள் அரசாங்கத்திற்கு உரியதாகும். வேறெந்தச் சட்டத்தின் பிரகாரம் இச் சொத்துக்கள் பற்றி நீதிமன்ற நடவடிக்கைகள் இருந்த போதிலும், இச் சுவீகரித்தல் கட்டளை செயல்படும்.

சுவீகரித்தல் கட்டளை பிரசுரிக்கப்பட்ட 14 நாட்களுக்குள் அத்தகைய சொத்தில் அக்கறை உள்ள எவரும் தமது எதிர்ப்பைக் கல்வி அதிபதிக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

சுவீகரித்தல் கட்டளையால் அரசாங்கத்திற்கு உரித்தாக்கப் பட்ட எந்தச் சொத்தையும் கல்வி அதிபதி பாடசாலையொன்றை நடாத்தப் பாவிக்கலாம்.

எந்தவொரு சொத்துச் சம்பந்தமாகவும் சுவீகரித்தற் கட்டளை செய்யப்பட்ட திகதியில் அத்தகைய சொத்து அதன் அருகேயுள்ள எந்தவொரு மத ஸ்தாபனத்தினுலும் சமய சம்பந்தமான அலுவல்களுக்காகப் பாவிக்கப்பட்டிருப்பின், கல்வி அதிபதி அத்தகைய பாவிப்புக்காக அச் சொத்தைப் பாடசாலை நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் அம்மத ஸ்தாபனத்திற்கு அளித்தல் வேண்டும்.

அமைச்சர் அத்தகைய சொத்து பாடசாலை நடாத்துவதற்குத் தேவையில்லை எனக் கருதினல் அச்சொத்தைத் திரும்பவும் கொடுக்கலாம்.

25-வது பிரிவின்படி இச்சட்டம் அமுலுக்கு வந்த தினத்தின் பின்னர்:-

1. கல்வியதிபதியைத் தவிர வேறெவரும் 5 வயதிற்கும் 14 வயதிற்கும் இடைப் பட்ட எந்த ஆளினதும் கல்விக்காகப் பாடசாலை யொன்றை ஸ்தாபிக்க முடியாது.

2. கல்வி அதிபதியின் அனுமதியின்றி மேலே குறிப்பிட்ட பாடசாலையைத் தவிர்ந்த ஏதேனும் பாடசாலையை 18 வயதுக்குட்பட்டோரின் கல்விக்காகத் தாபிக்க முடியாது.

இவ்விதிகள், முற்றுகச் சமயக் கல்விக்காகத் தாபிக்கப்படும் பாடசாலைகளுக்குப் பொருந்தாது.

**தோட்டப் பாடசாலைகள்**

5 வயதுக்கும் 14 வயதுக்கும் இடைப்பட்ட தோட்டப் பிள்ளைகளுக்குக் கல்வி வசதி அளித்தல் தோட்டச் சொந்தக்காரரின் சட்ட பூர்வமான கடமையாகும். இவ் வகையைச் சேர்ந்த பிள்ளைகள் 27க்குக் கூடுதலாக இருப்பின் தோட்டச் சொந்தக் காரர் பாடசாலையொன்றைத் தாபித்தல் வேண்டும். இதற்காக:-

1. கல்வி அதிபதியால் பணிக்கப்படும் வகையில் பாடசாலைக் கட்டடமொன் றைக் கட்டல் வேண்டும்.
2. பாடசாலைக் கட்டடத்தை நன்முறையில் பேணல் வேண்டும்.
3. விவாகம் செய்த தலைமையாசிரியர் ஒருவருக்குக் குடிமனை கட்டுதல் வேண்டும்.
4. பாடசாலைக்காகக் குறைந்தது 1 ஏக்கர் காணியை ஒதுக்குதல் வேண்டும்.

கல்வி அதிபதியின் அங்கீகாரத்துடன் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தோட்டச் சொந்தக்காரர்கள் சேர்ந்து ஒரு பாடசாலையை அமைக்கலாம்.

யாதாயினும் தோட்டத்தைச் சேர்ந்த பிள்ளைகளுக்குக் கல்வி வசதி பெறுவதற்கு வேறு பாடசாலைகள் உண்டாயின் கல்வி அதிபதி, பாடசாலை தாபிக்கும் பொறுப்பி லிருந்து அத்தகைய தோட்டச் சொந்தக்காரர்களுக்கு விலக்களிக்கலாம்.

யாதாயினும் தோட்டப் பாடசாலைக்குப் பதிலாக அரசாங்கப் பாடசாலை யொன்றை அவ்விடத்தில் கல்வி அதிபதி தாபிக்கலாம். ஆனல் பாடசாலைக் கட்டடத் திற்காகத் தோட்டச் சொந்தக்காரருக்கு வாடகை செலுத்துதல் வேண்டும். தோட்டச் சொந்தக்காரர் கட்டடத்தை நன்நிலையில் வைத்திருத்தல் வேண்டும்.

யாதாயினும் தோட்டச் சொந்தக்காரர் இக்கடமைகளை நிறைவேற்றுவிடின் கல்வி அதிபதி தேவையானவற்றைச் செய்து அதற்கான செலவுகளைத் தோட்டச் சொந்தக்காரரிடமிருந்து அறவிடலாம்.

தோட்டப் பாடசாலை ஆசிரியர்கள் தோட்ட முகாமையாளரால் நியமிக்கப்படு கிருர்கள். ஆனல் இவர்களது நியமனங்கள் கல்வி அதிபதியால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும். ஆசிரியர்களுக்குத் தேவையான தகைமைகள் கல்வி அதிபதியால் நிர்ணயிக்கப் படுகின்றது.

 [redacted]

# பாடசாலைகளின் உட்பரிபாலனம்

பாடசாலை அதிபரின் கடமைகள் இரு தலைப்புக்களில் அடங்கும். அவை (1) மேற்பார்வை (2) பரிபாலனம். பொதுவாகப் பாடசாலையினுட் பரிபாலனம் என்று கூறும்போது இவையிரண்டும் சேர்த்தே குறிப்பிடப்படுகின்றது. கல்வியின் குறிக்கோளை இடைவிடாது மனதிற் கொண்டு, செய்யும் எந்தக் கருமத்தையும் இக் குறிக்கோளாகிய அளவு கோலால் அளந்தால் அல்லது எடைபோட்டால் மட்டுமே மேற்பார்வை, பரிபாலனம் ஆகிய இரு துறைகளிலும் சித்தி காணலாம்.

பாரத நாட்டில் கல்வி மந்திரியாகக் கடமை ஆற்றிய ஹீமயன் கபிர் 4 குறிக்கோள்களைக் குறிப்பிட்டுள்ளார்கள்:

(1) (To develop the personality of the individual.) ஒருவரின் ஆளுமையை வளர்த்தல். உடல், உள்ளம், மன எழுச்சிகள் (emotions), ஆன்மா ஆகியவற்றை வளர்த்து முதிர்ச்சி அடையச் செய்வதே இதுவாகும்.

(2) (To give knowledge of the world in which he lives) இவ்வுலகத்தைப் பற்றிய அறிவைக் கொடுத்தல். இப்பூமியும் இதிற் காணப்படும் பௌதிக, இரசாயன சக்திகளும், சீவராசிகளும், இப்பிரபஞ்சமும் ஆகியவற்றைப் பற்றிய அறிவு அவசியம் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டதே.

(3) (To develop skills needed to sustain and advance social life, so that he can be a creative member of society.) சமுதாயத்தின் வாழ்க்கை முறையையோ தரத்தையோ குறைய விடாது பாதுகாக்கவும் அதனை உயர்த்தவும் வேண்டிய நுட்பங்களை அல்லது வல்லபங்களை மாணவரிடையே வளர்த்தல். இதனால் ஆக்க முயற்சிகளில் ஈடுபட்டுச் சமூகத்திற்குப் பயன் தரும் அங்கத்தவராக மாணவரைத் திகழச் செய்தல்.

4. (To satisfy the individual's search after values) ஒவ்வொருவரிடத்தும், பெறுமதியுடையவை எவை என்று அறிய இருக்கும் அவாவைத்தீர்த்தல். வாழ்க்கையை வளம்மிக்கதாக்க ஒவ்வொருவரும் எத்தனிக்க வேண்டும். இதற்குச் சில அடிப்படைத் தத்துவங்களால் எமது வாழ்க்கை ஆளப்பட வேண்டும். தன்னை உணர்ந்தால் மட்டுமே (Self realisation) இப்பெறுமதி மிக்க தத்துவங்களைப் பெறலாம். இதுவே நாலாவது குறிக்கோளாகும்.

இக்குறிக் கோள்களைப் பெறுவதற்காக நாம் கல்லூரிகளில் எடுத்துக் கொள்ளும் முயற்சிகள் என்ன என்பதை ஆராய்வோம்.

பாடப்பொருள் (curriculum) பாடப்பொருளோடு இயைந்த முயற்சிகள் (Co-curricular activities), வருமானம் குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த சிறுருக்கு இலவச புத்தகங்கள். தையல், துணி, மூக்குக் கண்ணாடி விநியோகித்தல், பகற்போசனம் வழங்கல், வைத்தியப் பரிசோதனை மேற்கொள்ளல் ஏற்ற தளபாடங்களைப் பெற்றுக் கொடுத்தல், விளையாட்டுமைதானம் அமைத்தல். கட்டடங்கள் அமைத்தல் ஆகிய இன்னோரன்ன அனைத்தும் கல்வியின் குறிக்கோள்களைப் பெற எடுத்துக் கொள்ளும் முயற்சிகளாம்.

இவற்றுள் பாடப்பொருளையும், பாடப்பொருளோடு இயைந்த முயற்சிகளையும், ஒவ்வொரு மாணவனும் பூரண வளர்ச்சி பெறக்கூடிய வகையிலும் அவனால் சமுதாயத்

திற்குச் சிறந்த நலன் கிடைக்கக்கூடிய வகையிலும் ஆசிரியர்கள் செவ்வனே கற்பிக்கிறார்களா? மாணவர்கள் சிறந்த நன்மை அடைகிறார்களா? என்பவற்றைக் கண்காணிப்பது மேற்பார்வை எனப்படும்.

ஆசிரியரும் மாணவரும் தங்கள் முயற்சிகளில் சித்தி காண்பதற்கு வேண்டிய உபகரணங்கள், தளபாடங்கள், கட்டடங்கள், பாட நேரங்கள், மாணவருக்கும் ஆசிரியருக்கும் கற்பதற்கும் கற்பிப்பதற்கும் அனுகூலமான சூழ்நிலையை ஏற்படுத்துதல் ஆகிய அனைத்தும் பரிபாலனத்துக்குள் அடங்கும்.

அதிபர்களை (நிர்வாகிகளை) 3 வகையினராகப் பிரிக்கலாம்:

(1) சர்வாதிகாரிகள் (authoritarian leaders)

(2) ஜனநாயக முறையைக் கையாள்பவர் (democratic leaders)

(3) இரண்டு மற்ற அதாவது நடப்பது நடக்கட்டும் சும்மா பார்த்துக் கொண்டிருப்போம் என்ற அக்கறை அற்றவர் (lesses faire leaders)

சர்வாதிகாரிகள் தாம் சொல்வதை மட்டுமே பிறர் செய்தல் வேண்டும் என்ற கொள்கை உடையவர்கள். மற்றவர் கூறுவதில் நியாயம் இருக்கலாம், ஒரு வேலையைப் பலமுறைகளாற் செய்யலாம். வேறு ஒருவர் கூறும் முறை, தான் கூறுவதிலும் சிறந்ததாக இருக்கலாம் என்ற நினைவு அற்றவர்களாகக் காணப்படுவார்கள்.

இப்படியான அதிபர்களுக்கு எவரிலும் நம்பிக்கை இல்லை. எந்த நேரமும் மற்றவர்கள் தன்னைப் பற்றிக் குறைவாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்ற ஐயுறவுள்ள இவர்கள் தன் நம்பிக்கை அற்ற மனநிலை (a sense of insecurity) உடையவராகவே இருக்கிறார்கள். ஏதாவது விரும்பத்தகாத நிலை ஏற்பட்டால் சமாளிக்க முடியாமற் போய்விடும் என்ற தன்னம்பிக்கை அற்றவர்கள். இதனாலேயே மற்றவரில் நம்பிக்கை வையாமல் நடந்து கொள்கிறார்கள்.

இந்த மாதிரியான ஒருவருக்குச் சட்டங்கள் சம்பிரதாயம் ஆகியவற்றின் அறிவும் இல்லையெனில் அக்கல்லூரியிற் கடமை புரியும் ஆசிரியர் மிகவும் வேதனைப்படுவார்கள். உதவி ஆசிரியர்கள் கல்வி அதிபருக்கு எழுதும் எந்தக் கடிதத்தையும் தலைமை ஆசிரியர் மூலமே அனுப்பவேண்டும். அப்படி ஒரு உதவி ஆசிரியர் கொடுக்கும் கடிதத்தை அவர், "இது உமது சொந்த விஷயம், நான் இதனை அனுப்பமாட்டேன்." என்றெல்லாம் குறைகூறினால், அவர் தனது கடமைகளை அறியாதவர் என்பதைக் காட்டிக் கொடுப்பது மட்டுமன்றி, நீதி, நியாயம் ஆகியவற்றிற்குக் கட்டுப்படாதவர் என்பதையும் காட்டிக் கொடுப்பார்.

இவ்வகையான அதிபரால் பாடசாலை நேரத்தைத் தவிர்ந்த ஏனைய நேரங்களில் ஆசிரியரைக் கொண்டு மேலதிக வேலை செய்விக்க முடியாது. ஒருவரும் மனப்பூர்வமான ஒத்துழைப்பைக் கொடுக்கவும் மாட்டார்கள், மற்றவர்களின் திறமைகள் வளர்க்கப்படவும் மாட்டாது. அத்திறமைகளைப் பாடசாலையோ பிள்ளைகளோ அனுபவிக்கவும் முடியாது.

சர்வாதிகார முறையை அனுசரிப்பதனால் பாடசாலை அமைதியும் ஒழுங்கும் நிலவுவதுபோல் தோன்றலாம். ஆனால் உதவி ஆசிரியரும் மாணவரும் சந்தோஷமில்லாமல் கடமைக்கு மட்டுமே வேலை செய்வார்கள். அங்கு இருப்பவர்கள் அனைவரையும் ஓர் எரிமலைமேல் இருப்பவர்களுடன் ஒப்பிடலாம்.

ஜனநாயக ரீதியில் நிர்வகிக்கும் அதிபர்கள் ஒரு மேலைத்தேச சங்கீதக் கோஷ்டியை நடத்துபவர் போல் இருப்பார்கள். ஒவ்வொருவரிலும் இருக்கும் திறமைகளையும் விருத்திபெறச் செய்து அதனால் அவருக்கும் மற்றும் எல்லோருக்குமே நன்மை உண்டாகச் செய்வார்கள். அதிபரின் கட்டாயமின்றி ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் கல்லூரி அங்கத்தவர் தாமே அனுசரிப்பார்கள். அவர்கள் அனைவரிடையேயும் தன்மானம், கல்வியபிமானம் முதலியவை காணப்படும். ஆகவே, எந்தக் கருமமும் ஒவ்வொருவரின் ஆற்றலுக்கும் ஏற்ற வகையிற் திறம்படச் செய்யப்படும். ஒவ்வொருவரும் தாம் செய்யும் கருமத்தை ஈடுபாடுடனும் சந்தோஷத்துடனும் செய்வார்கள்.

சர்வாதிகார ஜனநாயக வகையான நிர்வாகிகளையும் ஒப்பிடும் ஓர் ஆங்கிலக் கவிதை பின்வருமாறு:—

## Be a Leader not a Boss

The boss drives his men
  The leader inspires them
The boss depends on authority
  The leader on good will
The boss evokes fear
  The leader radiates love
The boss says "I"
  The leader says "We"
The boss shows who is wrong
  The leader shows what is wrong
The boss knows how it is done
  The leader knows how to do
The boss abuses men
  The leader uses them,
The boss demands respect
  The leader commands respect
The boss makes world a drudgery
  The leader makes it gay.

ஓர் அதிகாரி தன் மக்களை ஓட்டிச் செலுத்துகிறான்
  ஒரு தலைவன் அவர்களை உயர்ந்த கொள்கைகளைக் கொண்டு ஊக்குவிக்கிறான்
அதிகாரி தன் அதிகாரத்தில் தங்கி இருக்கிறான்
  தலைவனுக்கு நன்னம்பிக்கையே ஆதாரம்
அதிகாரி பயத்தை உண்டுபண்ணுகிறான்.
  தலைவன் அன்பினால் ஆளுகிறான்.
அதிகாரி 'நான்' என்பான்.
  தலைவன் 'நாங்கள்' என்பான்.
அதிகாரி பிழை செய்தவனைக் காட்டுகிறான்.
  தலைவன் பிழை என்ன எனக் காட்டுகிறான்.

அதிகாரி எப்படி ஒன்று செய்யப்படவேண்டுமென அறிவான்.
தலைவன் எவ்விதம் ஒன்று செய்யவேண்டுமென அறிவான்.
அதிகாரி மக்களைப் பிழையான முறையிற் பயன்படுத்துவான்.
தலைவன் செம்மையான முறையில் நடத்துவான்.
அதிகாரி தன் மதிப்பை வற்புறுத்திப் பெறுவான்.
தலைவனை மதிப்புத் தானுகத் தேடிவரும்.
அதிகாரி உலக வாழ்வைச் சுவையற்றதாக்குகிருன்.
தலைவன் அதைக் களிப்புடையதாக்குகிருன்.

சர்வாதிகார, ஜனநாயகக் கொள்கைகள் இரண்டும் அற்ற அதிபர்கள், அதாவது மூன்ருவது வகையைச் சேர்ந்தவர்கள், மாணவர்களுக்கும் கல்லூரிகளுக்கும் சமுதாயத் திற்குமே பெருங் கெடுதி செய்பவராக இருக்கிருர்கள்.

உட்பரிபாலனம் இப்படியாக இருக்கும் பாடசாலைகளில் அதிபரால் மேற்பார்வை செய்யமுடியாது. கட்டுப்பாடு, கண்ணியம். இலட்சியம் ஆகிய இவை ஒன்றுமே அதிப ரிடமோ, ஆசிரியரிடமோ, மாணவரிடமோ காணப்படமாட்டாது. மாணவர் ஆசிரியரை மதிக்கமாட்டார்கள். ஆசிரியர்கள் தலைமை ஆசிரியரை மதிக்கமாட்டார்கள். பெற்ருே ரும் சமுதாயமும் அக் கல்லூரி நிர்வாகியையும் ஆசிரியரையும் ஏளனம் செய்வதுடன் திட்டுவார்கள். அதிபர் கட்டுப்பாடும் கண்ணியமும் இலட்சியமும் உள்ளவராக இருந் தால் எல்லோருடைய தரமும் தானுகவே உயரும்.

'பிறர் பிள்ளை தலைதடவத் தன்பிள்ளை தானே வளரும்' என்பார்கள் கிராமத்தி லிருக்கும் முதியோர்கள். ஒரு பிள்ளைக்கும் (எவருடைய பிள்ளையாக இருந்தாலும் சரி) கேடு விளையாமல் பாதுகாக்க வேண்டியது ஒவ்வொரு தலைமை ஆசிரியரினதும் தலை யாய கடன், ஆங்கிலத்தில் (Sacred duty) என்பார்கள். இதுதெய்வத்திற்குச் செய்யும் கடன் ஆகும். நான் செய்யவில்லை எனது சக ஆசிரியர்கள் தானே பிழை செய்கிருர்கள் என்று ஒரு தலைமை ஆசிரியர் அசட்டையாக இருந்துவிட்டால், அவர் நீதி தவறிய வரே ஆவார்.

இன்னறுங் கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகளியற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினுயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி யொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்

இந்த உயர்ந்த கொள்கையையுடைய தமிழினத்தைச் சார்ந்த எம்மவரிற் சிலர் இதனை மறந்து செயற்படுவதைக் காண வேதனையாக இருக்கின்றது. நீங்கள் அனை வரும் அதிபர்களாக நியமனம் பெறவேண்டும் என்று ஆசைப்படுகின்றேன். அப்படி நியமனம் பெறும்போது நீங்கள் உங்கள் பாடசாலைகளைச் சிறந்த நிர்வாகமும் தகுந்த கல்வியும் கொண்ட கலைக் கூடங்களாக்க வேண்டும். இதுவே நீங்கள் செய்யக் கூடிய மிக உயர்ந்த புனிதமான தொண்டாகும்.

செல்வி P. ஆறுமுகம்

# வரலாற்றுக் குறிப்புகள்

## I. வரலாற்றுக் குறிப்புகளின் முக்கியம்

1. மாணவர்களைப் பற்றிய பல தரப்பட்ட தகவல்கள் தொடர்ச்சியாகப் பல ஆண்டுகளுக்குத் தொகுக்கப் படுவதால் அவனை நன்கு அறியலாம்.
2. மாணவனின் ஆர்வம், திறமை, உளச்சார்புகளைக் கவனித்து அவனை நல் வழிப் படுத்துவது.
3. மாணவனைப் பற்றிய ஆரோக்கியக் குறிப்புகளிலிருந்து அவனது வளர்ச்சி சாதாரணமானதா, குறைவுற்றதா எனக் கவனித்து ஏற்ற நடவடிக்கைகள் எடுத்தல்—(Extra - Curricular ; Co – Curricular)
4. வரலாற்றுக் குறிப்புகள் ஒழுங்காகவும் கவனமாகவும் பதியப்பட்டால் பல்கலைக்கழகம், ஆசிரிய பயிற்சிக்கலாசாலை, தொழில் நுட்பக்கலாசாலை களுக்கு உதவும்.
5. தொழில் அல்லது உத்தியோக வாய்ப்புகள் அளிப்பவர்க்கும் பயன்படும். நற்சாட்சிப் பத்திரங்களிலும் ஏற்கக் கூடியனவாயிருக்கும்.
6. மாணவனுக்குத் தன் குறை நிறைவுகளை உணர்த்தக்கூடிய தகவல்களை அளிக்கும்
7. தலைமையாசிரியர், வகுப்பாசிரியர், பாடவாசிரியர் மாணவனை நன்கு அறிவதற்கு உதவும்.

## II. வரலாற்றுக் குறிப்புகளின் முக்கிய அம்சங்கள்

1. மாணவனைப் பற்றிய படிப்படியாகத் தொடரும் படம்.
2. மாணவனுக்குப் புத்தி புகட்டற்குரிய தகவல்கள்.
3. மாணவனின் உட்கருத்துக்கள் விசேட செயல்கள் போன்றவற்றைப் பிரதி பலிக்கும்.
4. மாணவரின் குணதிசயங்கள், ஆட்தன்மைகள் (Personality) முதலியவற்றைத் தெளிவாக்கும்.
5. மாணவனை நன்கு அறிந்து அவனுக்குச் சேவை செய்யும் நோக்கமுள்ளது.
6. மாணவனின் பெற்றோர் சமுதாயம், சகாக்களைப் பற்றிய தகவல்கள்.
7. பரீட்சைத் தரங்கள், மாணவனைப்பற்றிய கருத்துடைய சம்பவங்கள் பொருந்தியன.

## III. வழிகாட்டலின் அவசியம்

1. மாணவன் தன் ஆர்வங்கள் திறமைகள் உளச்சார்புகளுக்கு ஏற்ற கல்வி, தொழிற்றுறையைத் தெரிவு செய்ய உதவுதல்.
2. நேரத்தையும் மனிதசக்தியையும் பாதுகாப்பதற்காக.
3. கிராம வாழ்க்கையிலிருந்து நகரவாழ்க்கைக்கும், விவசாயத்திலிருந்து கைத் தொழில், தொழில், நுட்பம் போன்றவைக்கு மாறுவதினால் ஏற்படும் பிரச்சினைகளைச் சமாளிக்க.

4. தொழிலின் மகத்துவத்தை மாணவருக்கும் பெற்ருேருக்கும் புகட்டுவதற்கு.
5. நாட்டின் தற்கால தேவைகளுக்கு ஏற்ற தொழில் நுட்பசாலேகளேத் தயாரிக்க.
6. நல்நடத்தை, கட்டுப்பாடு முதலியவற்றை நிலேநாட்ட.
7. குடி சனப்பெருக்கப் பிரச்சினேகளேத் தீர்க்க.
8. சந்ததி வேறுபாட்டுப் பிரச்சினேயைத் தீர்க்க.

## IV. வழி காட்டு ஆசிரியரின் குணதிசயங்கள்

1. பரந்த நோக்கமுடையவராயும், பிறரை அன்பு ஆதரவுடன் ஏற்கின்றவர்.
2. மனித நடத்தையைப் பற்றி அடிப்படை விளக்கமுடையவர்.
3. மாணவனின் வளர்ச்சியில் குடும்பம், சுற்ருடலின் பங்கை உணர்ந்தவர்.
4. பல தரப்பட்ட சமுதாயத்தையறிந்து, அதில் ஏற்படும் பிரச்சினேகளே விசாரணே செய்து தீர்க்கக்கூடிய வன்மை வாய்ந்தவர்.
5. மாணவர், சகவாசிரியர், பெற்ருேர் முதலியோருடன் கண்ணியமாய்ப் பழகிக் கொள்பவர்.
6. பாடசாலேப் பொதுப் பிரச்சினேகளே மட்டிட்டு விசாரணே செய்து அவற்றைத் தீர்க்கும் வன்மையுடையவர்.
7. ஒன்று சேர்த்த தகவல்களே ஆராய்ந்து பயன் படுத்தக் கூடியவர்.

## V. வழிகாட்டலும் கல்வி முன்னேற்றமும்

1. வர்க்க பேதமற்ற மாணவ சமுதாயத்தைத் தோற்றுவித்தல்.
2. தத்தம் திறமைக்கும் ஆர்வத்திற்கும் ஏற்ற ஒரு தொழிலேத் தேர்ந்து நாட்டின் பொருளாதார அபிவிருத்தியை நிலேநாட்டல்.

பரீட்சைகள் கல்வித்தரத்தை உயர்த்த வேண்டுவனவாயின் பல குணதிசயங்கள் பொருந்தியனவாயிருக்க வேண்டும். —பரீட்சைகளே ஆசிரியர் தயாரிக்கும் போது தம்மைத் தாமே கேட்க வேண்டிய சில வினுக்கள்.

1. பரீட்சையின் நோக்கமென்ன ?
2. பயனுடையதா ?
3. நம்பத்தகு தன்மையுடையதா ?
4. விளக்கம் கூறக் கூடியதா ?
5. பெறு பேற்றை ப்படிப் பயன் படுத்தலாம் ?
   (அ) அறிவின் குறைநிறைகளே அளவிடுகின்றதா ?
   (ஆ) மாணவன் தன் சுய நிலேயை அறிந்து கொள்ளலாமா ?
6. சுலபமாகப் பரீட்சிக்கப் படலாமா ?
7. சுலபமாகத் திருத்தக் கூடியதா ?

## The Teachers Role in the School—பாடசாலேகளின் ஆசிரியர் பங்கு

1. Instructor — கற்பித்தல் வினுக்களிற்கு விடை எழுதும் முறை கூறுபவர்
2. Judge — நீதவான் — தரம் கணிப்பவர்
3. Disciplinarian — ஒழுக்கம் நிலேநாட்டுபவர்
4. Parent Substitute — பெற்ருேருக்குப் பதிலாகவிருப்பவர்
5. Confidant — மாணவன் ஆசிரியரில் நம்பிக்கையுடையவர் - தன் பிரச்சினேகளேத் தீர்க்கும்படி ஆலோசனே கேட்டல்

W. M. அழகக்கோன்

# பெற்ருர் ஆசிரியர் சங்கமும் பாடசாலைக் கட்டடங்களும்

ஒரு கட்டடத்தைக் கொடுக்கப்பட்ட அளவு பிரமாணங்களுக்கு அமையக் கட்டிமுடித்தல் மிகவும் இலகுவானதும் மனதிற்குத் திருப்தி அளிக்கக் கூடியதுமாகும். ஆனல் அக்கட்டடத்தைத் தொடர்ந்தும் திருப்திகரமான முறையில் பராமரித்தல் மிகவும் சிரமமான காரியமாகும். இதற்குப் பல காரணங்கள் உண்டு. இவற்றில் முக்கியமானவை நிதி, — செய்திறன், அறிவு ஆகும்.

எமது நாட்டில் 1000த்துக்கு மேற்பட்ட பலவகைப்பட்ட பாடசாலைக் கட்டடங்களைப் பராமரிக்கும் பொறுப்பு எம்மைச் சார்ந்துள்ளது. இதில் யாழ்ப்பாணக்குடாநாட்டில் மட்டும் ஏறக்குறைய 3000 கட்டடங்கள் உள்ளன. பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றதுடன் எமக்குக் கிடைத்த கட்டடங்கள் பல தனியாரினுல் கட்டப்பட்ட பழைய கட்டடங்களாகும்.

கட்டடங்களில் ஏற்படும் சிறு சேதங்களை உடனுக்குடன் பழுது பார்ப்பதன் மூலம் எவ்வளவோ சிரமங்களையும் நிதி விரயத்தையும் தவிர்க்கக் கூடியதாக இருக்கும்.

பாடசாலை நிர்வாகத்திலும் மற்றும் அலுவல்களிலும் பெ . ஆ . சங்கம் குறிப்பிடத்தக்க இடத்தை வகிக்கின்றது. எனவே, கட்டடங்களைப் பராமரித்தலும் பெ . ஆ . சங்கத்தின் முக்கிய பொறுப்புகளில் ஒன்ருகும். இதனைச் செவ்வனே செய்வதற்கு ஒவ்வோர் பெ . ஆ . சங்கத்திலும் புறம்பான குழுக்களை அமைத்தல் பொருத்தமானதாகும்.


ஒரு கட்டடம் விழுந்துவிடும் அவல நிலையில் இருந்தால்....

முதன் முதலில் அவ்விடத்திலிருந்து பிள்ளைகளையும் தளபாடங்களையும் அகற்ற வேண்டும். அடுத்துக் கூடுமான வரையில் அபாயத்தைத் தடுக்கும் முறையில் இயலுமான வழிவகைகளைக் கையாளுதல் வேண்டும். சில சமயங்களில் அரசாங்கத்தின் உதவி உடனடியாகக் கிடைக்காமல் இருக்கலாம். இச்சந்தர்ப்பத்தில் "சிரமதான முறையே" சிறந்ததாகும். பின்பு பாடசாலைக் கட்டடத்தின் நிலையை விளக்கி உரிய தொழில் நுட்ப அறிவுரைக்கும் நிதி ஒதுக்கீட்டுக்கும் வித்தியாதிபதியுடன் தொடர்பு கொள்ள வேண்டும்.


வருடாந்தத் திருத்த வேலைகள், இதில் கூரை வேய்தல், உடைந்த ஓடு மாற்றுதல் முதலியவற்றிற்கு முதலிடம் கொடுக்கப்பட வேண்டும். அடுத்து நிலம், சுவர், கிணறு போன்றவற்றைக் கவனித்தல் வேண்டும். இவற்றிற்கு மதிப்பீடு அனுப்பும் பொழுது ஒவ்வோர் வேலைக்கும் அளவு பிரமாணங்களும் விஸ்தீரணமும் கொடுக்கப்படல் வேண்டும். இது முக்கியமாகக் கவனிக்கப்படல் வேண்டும். இவற்றைச் செவ்வனே செய்வதன் மூலம் தாமதங்களைத் தவிர்க்க முடியும்.

கடைசியாக பெ . ஆ . சங்கத்தின் வங்கிக்கணக்குப் பற்றியும் இவ்விடத்தில் குறிப்பிடுவது உகந்தது. புதுக்கட்டடங்கள் நிர்மாணிக்கும் பொறுப்பு பெ. ஆ. சங்கத்திடம் கொடுக்கப்பட்டால் அவற்றிற்குரிய கொடுப்பனவுகள் பெ . ஆ. ச. வங்கிக் கணக்குக்கே நேரடியாக இடப்படும். எனவே, ஒவ்வோர் பெ. ஆ. சங்கமும் ஏககாலத்தில் வங்கிக் கணக்கை ஆரம்பித்தல் நலமாகும்.

கே. தருமலிங்கம்




வடமாநிலக் கல்வியதிபதி திரு. தி. மாணிக்கவாசகர் அவர்கள் முன்னாள் வித்தியாதிபதி சி. உ. சோமசேகரம் கல்வி அமைச்சின் கணக்காளர் திரு. இராஜ் சுப்பிரமணியம் ஆகியோர் சகிதம் சபையிலிருந்து விரிவுரைகளை அவதானிக்கிறார்.



கல்வி அமைச்சின் கணக்காளர் திரு. இரரஜ் சுப்பிரமணியம் அவர்கள் கல்வியதிகாரி திரு எம். சிமியாம்பிள்ளை அவர்கள் தலைமையில் விரிவுரையாற்றுகிறார். கோப்பாய் மகளிர் ஆசிரிய கலாசாலை அதிபர் திருமதி. இ. ஆனந்தகுமாரசாமி அவர்களும் மேடையில் அமர்ந்திருக்கிறார்.

## விடுமுறைக் கழகத்தில் பங்குபற்றியவர்கள்





# நியமனம்

குடியரசின் சேவையில் ஊதியம் பெறும் ஒரு பதவியை ஏற்றுக் கொள்ளுவது நியமனமாகும். இந்நியமனம் ஏற்கனவே அரச சேவையில் இல்லாத ஒருவரைப் பதவி ஒன்றுக்கு நியமித்தலாக இருக்கலாம் அல்லது ஏற்கனவே அரசசேவையில் இருப்பவருக்கு வேதன அதிகரிப்பையோ அல்லது பதவி உயர்வைவோ அளிக்கும் நியமனமாகவிருக்கலாம். அமய சேவையில் அல்லது தற்காலிக சேவையில் இருக்கும் ஊழியரை நிரந்தரமாக்குவதும் நியமனம் என்ற பதத்துள் அடங்கும்.

## 2. நியமனம் வழங்க அதிகாரமுடையவர்கள்

(அ) ஜனாதிபதி
(ஆ) அமைச்சரவை
(இ) அமைச்சர்
(ஈ) திணைக்களத் தலைவர்

## 3. ஜனாதிபதியால் செய்யப்படும் நியமனங்கள்

(i) அமைச்சரவையின் நியமனங்கள்
(ii) பிரதியமைச்சர் நியமனங்கள்
(iii) அமைச்சுக்களின் செயலாளர்கள்
(iv) அமைச்சரவையின் செயலாளர்
(v) தேசிய அரசுப் பேரவையின் எழுதுவினைஞர்
(vi) கணக்காய்வுத் தலைமை அதிபதி
(vii) சட்டத்துறைத் தலைமையதிபதி
(viii) நீதியரசர்கள்
(ix) தேர்தல் ஆணையாளர்
(x) தரைப்படை, கடற்படை, விமானப்படைத் தளபதிகள், பொலிஸ் படைத் தலைவர்
(xi) அரச சேவை ஆலோசனைச் சபை அங்கத்தவர்கள்
(xii) அரச சேவை ஒழுக்காற்றுச் சபை அங்கத்தவர்கள்
(xiii) தேசிய அரசியலமைப்பு நீதிமன்றத்தின் அங்கத்தவர்கள்

## 4. அமைச்சரவையால் செய்யப்படும் நியமனங்கள்

அமைச்சரவையினால் பின்வரும் நியமனங்கள் செய்யப்படவேண்டும்; இந் நியமனங்களுக்கு ஆட்சேர்ப்புத் திட்டங்கள் தயாரிக்கவோ அல்லது வர்த்தமானி மூலம் விண்ணப்பங்கள் கோரவோ தேவையில்லை. கீழ்வரும் பதவிகளில் வெற்றிடங்கள் ஏற்படுமிடத்து, சம்பந்தப்பட்ட அமைச்சர் அரச சேவை ஆலோசனைச் சபையின் ஆலோசனையைப் பெற்று அமைச்சரவையின் செயலாளருக்கு அறிக்கையனுப்ப வேண்டும். அவ்வறிக்கையின் அடிப்படையில் அமைச்சரவை தீர்மானமெடுக்கும். இணைந்த சேவை நியமனங்களைப் பொறுத்தமட்டில் சம்பந்தப்பட்ட அமைச்சர், பொது நிர்வாக அமைச்சராவர்.

(அ) திணைக்களத் தலைவர்களின் நியமனங்கள்
(ஆ) அமைச்சுக்களின் மேலதிகச் செயலாளர்கள்
(இ) அமைச்சுக்களின் சிரேட்ட செயலாளர்கள்
(ஈ) மாவட்ட அரசாங்க அதிபர்கள்

## 5. அமைச்சரால் செய்யப்படும் நியமனங்கள்

(i) வருடத்திற்கு ரூ. 6720/- க்குக் கீழ்ப்படாத பதவிக்குரிய நியமனங்கள் அமைச்சரால் செய்யப்படும்.

(ii) இந்நியமனங்கள் பதவி நிலை நியமனங்கள் என அழைக்கப்படும்.

(iii) இணைந்த சேவையைப் பொறுத்தமட்டில் பொது நிர்வாக அமைச்சர் பொறுப்பாகவிருப்பார்.

(iv) எந்தவோர் அமைச்சின் கீழும் அமையாத திணைக்களங்களில் நியமனங்களுக்குப் பிரதம மந்திரி பொறுப்பாகவிருப்பர்.

(v) பதவி நிலைத்தர உத்தியோகத்தர்களின் வெற்றிடம் ஏற்படும் பொழுது அல்லது உருவாக்கப்படும் பொழுது, திணைக்களத் தலைவர் செயலாளருக்கு அறிவிப்பர். அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டம் வரையப்பட்ட விளம்பரம் ஆகியவையும் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். அமைச்சின் செயலாளர் வர்த்தமானியில் விளம்பரத்தைப் பிரசுரிப்பர், அமைச்சின் அலுவலகம் விண்ணப்பங்களையேற்று அட்டவணை செய்து, தெரிவுச் சபையை ஒழுங்கு செய்வதற்கு நடவடிக்கையெடுக்கும். தெரிவுச் சபை சம்பந்தப்பட்ட அமைச்சின் சம்மதத்துடன், அரச சேவை ஆலோசனைச் சபையினுல் நியமிக்கப்படும் தெரிவுச் சபையின் விதப்புரைகளைப் பெற்றுச் செயலாளர் அரச சேவை ஆலோசனைச்சபைக்கு அனுப்பிவைப்பர். ஆலோசனைச் சபையின் சிபாரிசுகளுக்கமைய அமைச்சர் நியமனங்களைச் செய்வர்.

(vi) பரீட்சை மூலம் தெரிவு நடைபெறுவதாயின் பரீட்சை ஆணையாளர் பரீட்சைகளை நடாத்திப் பெறுபேறுகளைச் சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைப்பார். தெரிவுச் சபைக்கு எழுத்துப் பரீட்சையில் பெற்ற புள்ளி விபரங்கள் அனுப்பி வைக்கப்படமாட்டா.

## 6 திணைக்களத் தலைவர்களால் செய்யப்படும் நியமனங்கள்

(i) பதவி நிலைத்தர உத்தியோகத்தரல்லாத (வருடமொன்றிற்கு ரூ. 6720/- க்குக் குறைந்த சம்பளம் பெறும்) நியமனங்கள் திணைக்களத் தலைவர்களால் கையாளப்படும்.

(ii) திணைக்களத் தலைவர் ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கமைய நடவடிக்கையெடுத்து வர்த்தமானி மூலம் விளம்பரம் செய்து, விண்ணப்பங்கள் கோரி, விண்ணப்பங்களை அட்டவணைப்படுத்தி, தெரிவுச் சபையை ஒழுங்கு செய்வர்.

(iii) பரீட்சை மூலம் தெரிவு நடைபெறுவதாயின் பரீட்சாதிகாரி பரீட்சையை நடாத்திப் பெறுபேறுகளைத் திணைக்களத் தலைவருக்கு அனுப்பி வைப்பார்.

(iv) தெரிவுச் சபையை ஒழுங்கு செய்கின்றபொழுது சம்பந்தப்பட்ட திணைக்களத்தில் அல்லது அமைச்சில் கடமையாற்ருது வேறு திணைக்களங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர் தெரிவுச் சபையின் ஓர் அங்கத்துவராக இருத்தல் வேண்டும்.

(v) தெரிவுச் சபையின் விதப்புரைகளுக்கமையத் திணைக்களத் தலைவர் நியமனங்களைச் செய்வார்.

## 7. ஆட்சேர்ப்புத் திட்டம்

(i) ஜனதிபதியால் செய்யப்படும் நியமனங்களும் அமைச்சரவையால் செய்யப்படும் நியமனங்களும் தவிர்ந்த மற்றைய நியமனங்களுக்கு ஆட்சேர்ப்புத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். ஆட்சேர்ப்புத் திட்டங்களை உரிய திணைக்களங்கள் தயாரித்துப் பொது நிர்வாக அமைச்சின் அங்கீகாரத்திற்கு அனுப்பும். பொது நிர்வாக அமைச்சிற்கும் சம்பந்தப்பட்ட திணைக்களத்திற்கும், ஆட்சேர்ப்புத் திட்டம் சம்பந்தமாகக் கருத்து வேறுபாடுகள் இருப்பின் அது அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டுப் பரிசீலிக்கப்படும். ஆட்சேர்ப்புத் திட்டத்திற்குப் புறநடையாக ஏதாவது நியமனங்கள் செய்ய வேண்டுமாயின் பொது நிர்வாக அமைச்சின் அனுமதி பெற வேண்டும்.

(ii) ஆட்சேர்ப்புத் திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டிய முக்கியமான அம்சங்கள்; பதவியின் பெயர், சம்பள விகிதம், வயதெல்லை, தெரிவுப் பரீட்சை மூலம் நடாத்துவதாயின் அவ்விபரங்கள், பதவி நிரந்தரமானதா அல்லது தற்காலிகமானதா என்ற விபரம், நேர்முகப் பரீட்சையிருப்பின் அது பற்றிய குறிப்பு, தகுதிகாண்காலம்; அரசகரும மொழி நிபந்தனைகள், பிணைப்பணம், ஒப்பந்தம் ஆதியனவும் மற்று எல்லா நிபந்தனைகளும்.

## 8. அரச ஆலோசனைச் சபை

இச்சபை ஜனதிபதியால் நியமிக்கப்படும். மூன்று உறுப்பினர்கள் கொண்டதாக இச்சபை அமைந்து நான்கு வருட காலத்திற்குச் செயல்படும். நான்கு வருடம் முடிந்த பின்பும் மீளவும் இன்னுமொரு நான்கு வருடங்களுக்கு அதே அங்கத்தவர்கள் நியமிக்கப்படலாம். இச்சபை அங்கத்தவர்கள் அரச ஊழியராகவோ தேசியப் பேரவை உறுப்பினராகவோ, அரச சேவை ஒழுங்காற்றுச் சபை அங்கத்தவர்களாகவோ இருத்தலாகாது. இவர்களின் சம்பளம், தேசியப்பேரவையால் நிர்ணயிக்கப்பட்டுத் திரட்டு நிதியில் இருந்து வழங்கப்படும். அங்கத்தவர்கள் விரும்பினுல் தாமாகவே பதவி துறக்கலாம். அல்லது ஜனதிபதியினுல் பதவி நீக்கம் செய்யப்படலாம்.

இச்சபையின் முக்கிய கடமைகளாவன:

(i) அரச சேவை சம்பந்தமான விடயங்களில் ஆலோசனை வழங்கல்.

(ii) அமைச்சரவையால் கையாளப்படும் நியமனங்கள் சம்பந்தமாக ஆலோசனை வழங்கல்.

(iii) அமைச்சர்களால் செய்யப்படும் நியமனங்களுக்கு மதியுரை வழங்கல்.

(iv) அமைச்சரால் செய்யப்படும் நியமனங்களுக்குத் தெரிவுச் சபை தேவைப்படும் பொழுது அவற்றை நியமித்தல்.

## 9. அரச சேவை நியமனம் பெறுவதற்குத் தகைமை நீக்கம்

(i) திறமையின்மைக்காக இளைப்பாற்றுச் செய்யப்பட்டவர்.

(ii) வேலை நீக்கத்திற்குக் கருணை காட்டும் முகமாக மாற்று நடவடிக்கையாக இளைப்பாறச் செய்யப்பட்டவர்.

(iii) ஒழுக்காற்று நடவடிக்கை காரணமாக வேலை நீக்கம் செய்யப்பட்டவர்.

(iv) தகுதிகாண் காலத்தில் வேலை நீக்கம் செய்யப்பட்டவர்.

(v) பதவியில் இருந்து தாமாகவே விலகியதாகக் கருதப்பட்டவர்.

10. வைத்திய காரணங்களுக்காக இளைப்பாற்றப்பட்டவர்கள் மீண்டும் அரசசேவையில் சேர்த்தல்

(i) இளைப்பாறிய பொழுது 50 வயதிற்குக் குறைந்தவராக இருத்தல் வேண்டும்.
(ii) இளைப்பாறி ஒரு வருடமேனும் கழிந்திருக்க வேண்டும்.
(iii) இளைப்பாறுவதற்கு முன்பு அவருடைய சேவையும் நடத்தையும் திருப்திகரமாக இருக்க வேண்டும்.
(iv) வைத்திய பரிசோதனைக் குழுவினால் திரும்பவும் கடமையாற்றுவதற்குத் தகுதி உடையவர் என்று உறுதிப்படுத்தல் வேண்டும்.
(v) வேலை செய்து இளைப்பாறிய பதவியில் வெற்றிடம் இருக்க வேண்டும்.
(vi) மனநோய், நரம்புக் கோளாறு காரணமாக இளைப்பாற்றப்பட்டவர்கள் சம்பந்தமாக மேலே கூறிய நிபந்தனைகளுடன் அமைச்சின் செயலாளரின் அனுமதி வேண்டும்.

---

## அரச ஊழியர்களுக்கு அரசியல் உரிமைகள்

தற்போது அரச ஊழியர்கள் அரசியலில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. ஆயினும் சில தரப்பட்ட உத்தியோகத்தர்கள் இந்த உரிமையை அனுபவிக்க முடியாது.

i. நீதித்துறை உத்தியோகத்தர்கள்.
ii. முப்படைச் சேவையிலுள்ள வீரர்கள்.
iii. பொலிஸ் உத்தியோகத்தர்களும், இவர்கள் போன்ற வேறு உத்தியோகத்தர்களும். உ+ம் கிராம சேவையாளர்கள், விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகள்.
iv. சிறைச்சாலை உத்தியோகத்தர்கள்.
v. பதவி நிலைத்தர உத்தியோகத்தர்களும், மேற்பார்வை உத்தியோகத்தர்களும்.

மேலே கூறப்பட்ட உத்தியோகத்தர்கள் தவிர்ந்த ஏனைய உத்தியோகத்தர்கள் அரசியல் உரிமைகளுக்கு உரித்துடையர்.

2. அரசியல் உரிமைக்கு உரித்துடைய ஊழியர்கள் அரசியற் கட்சிகளில் உறுப்பினராக இருப்பதற்கும் அரசியல் விடயங்களில் கருத்துத் தெரிவிப்பதற்கும், சஞ்சிகைகளிலும் புதினப் பத்திரிகைகளிலும் கட்டுரைகள் எழுதுவதற்கும், பொதுக் கூட்டங்களிலே அரசியல் விடயங்கள் பற்றிப் பேசுவதற்கும்; உள்ளூராட்சிச் சபைத் தேர்தலிலும், தேசிய அரசுப் பேரவைத் தேர்தலிலும் போட்டி போடவும், அவ்வாறு போட்டி போடுபவர்களை ஆதரிக்கவும் உரிமையுண்டு. ஆனால் இவ்வகையான அரசியல் நடவடிக்கையில் அலுவலக நேரங்களிலோ அல்லது ஊழியரின் கடமை நேரங்களிலோ ஈடுபடலாகாது. உள்ளூராட்சிச் சபையிலோ அல்லது தேசிய அரசுப் பேரவையிலோ உறுப்பினராவதற்குப் போட்டியிட விரும்பின், நியமனத் திகதிக்கு 10 நாட்களுக்கு முன் தமது திணைக்களத் தலைவருக்கு அறிவித்தல் வேண்டும். இவர்களுக்கு நியமனத் திகதிக்கு முன் 7 நாட்கள் தொடக்கம் தேர்தல் திகதிவரை சம்பளமற்ற லீவு வழங்கப்

படும். உள்ளூராட்சிச் சபையின் உறுப்பினராக ஒரு உத்தியோகத்தர் தெரிவு செய்யப்பட்டால், அவர் சபைக் கூட்டங்களுக்குச் செல்வதற்குத் திணைக்களத் தலைவரின் தற்றுணிவின்படி முழுச் சம்பள விசேஷ லீவு வழங்கப்படலாம். இவ்வுத்தியோகத்தரின் அரசாங்கக் கடமைகள் பாதிக்கப்படாது இருக்கும் நிலையிலேதான் லீவு வழங்கப்படும். தேசிய அரசுப் பேரவையில் உறுப்பினராகத் தெரிவு செய்யப்படின் அரச சேவையில் இருந்து விலகிக் கொள்ள வேண்டும்.

3. அரசியல் உரிமை இல்லாத அரச ஊழியர் பொதுத் தேர்தலில் தமது வாக்குகளைப் பதிவு செய்வதைத் தவிர வேறெந்த உரிமைகளுக்கும் உரித்துடையவரல்லர். அரசியல் உரிமை இல்லாத ஊழியர்கள் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அல்லது தேசியப் பேரவைத் தேர்தலில் பங்கு கொள்ள விரும்பின், அது சம்பந்தமாக எவ்வித நடவடிக்கைகள் எடுக்க முன்பு அரச சேவையில் இருந்து விலகவேண்டும்.

4. அரசியல் உரிமை உள்ள ஊழியர் அங்கீகரிக்கப்பட்டுள்ள அரசியல் கட்சியின் மத்திய குழுவில் கீழ்க்கண்ட பதவிகளில் செயலாற்றினல் மத்திய குழுவின் தலைமைக் காரியாலயத்திற்கு அண்மையில் உள்ள இடத்தில் கடமையாற்றக் கூடிய சலுகை வழங்கப்படலாம்.

### பதவிகள்

தலைவர், உபதலைவர், செயலாளர், உபசெயலாளர். பொருளாளர்.

ஆனல் இச்சலுகை திணைக்களத் தேவைகளுக்கும் ஒழுக்காற்று நடவடிக்கைகட்கும் அமைவானதாக இருக்கும்.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி என்பது தேர்தல் ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியாக இருக்க வேண்டும்.

---

## அவைகளில் அங்கத்துவம் வகித்தல், கருத்து வெளியீட்டு உரிமைகளைப் பிரயோகித்தல்

1. அரசில் உரிமைக்கு உரித்தற்றவர்கள் அரசியல் கட்சிகளிலோ வரி இறுப்போர் சங்கங்களிலோ உறுப்பினராக இருத்தல் தடுக்கப்பட்டுள்ளது. எனினும் பொலிஸ் உத்தியோகத்தர், மறியற்சாலை உத்தியோகத்தர் தவிர்ந்த மற்றைய உத்தியோகத்தர் அரசாங்கத்தின் அனுமதியின்றி அரசியல் நோக்கற்ற சங்கங்களிலும், வெளிப்படையாகவோ எதிர்மறைமுகமாகவோ அரசியல் கட்சிகளுடன் தொடர்பில்லாத சங்கங்களிலும் பங்கு கொள்ளலாம். அவ்வாறு உருவாக்கப்பட்ட சங்கங்கள் தமது அங்கத்தவர் சம்பந்தமாக அரசிற்கு ஏதாவது முறையீடு செய்வதாயின் அச்சங்கங்கள் தொழிற் சங்கக் கட்டளைக்கிணங்கப் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

2. அரசாங்க ஊழியர் அல்லாத ஒருவரை அங்கத்தவராகச் சேர்க்க அனுமதிக்கும் ஒரு தொழிற்சங்கத்தில் அரசாங்க ஊழியர் அங்கத்தவராக இருக்க முடியாது. தொழிற் சங்கங்களில் அரசாங்க ஊழியர் அல்லாத ஒருவரை எந்தவொரு தொழிற் சங்கப் பதவிக்கும் நியமித்தலாகாது. ஆனல் தொழிற்சங்கத் திருத்தக் கட்டளை (1970 ம் ஆண்டு) க்கமைய விதிவிலக்குண்டு.

3. ஒரே திணைக்களத்தில் பணிபுரியும் ஊழியர்கள் அங்கத்தவராக இருக்கும் ஒரு சங்கத்தில் எந்தவொரு அதிகாரிக்கும் யாதேனும் முறையீடு செய்யின், அம்முறையீட்டினைத் திணைக்களத் தலைவருக்கும் செயலாளருக்கும் அனுப்புதல் வேண்டும். ஒரு அமைச்சின் கீழுள்ள பல திணைக்களத்திலுள்ளவர்கள் ஒரு சங்கத்தில் அங்கத்தவராக இருக்கும்போது முறையீட்டின் பிரதி அமைச்சின் செயலாளருக்கு அனுப்புதல் வேண்டும். பல அமைச்சைச் சேர்ந்த அங்கத்தவர்கள் ஒரு சங்கத்தில் அங்கத்தவராயிருப்பின் முறையீட்டின் பிரதி பொது நிர்வாக அமைச்சுக்கு அனுப்புதல் வேண்டும். இணைந்த சேவையிலுள்ள ஊழியர்கள் ஒரு சங்கத்தில் அங்கத்தவர்களாக இருப்பின் பொது நிர்வாகப் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

4. அரசாங்க ஊழியர்களின் சங்கங்கள், நியமனம், இடமாற்றம், ஒழுக்காற்று நடவடிக்கை ஆகியவை சம்பந்தமாக முன்னைய அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கோ அரச மதியுரைக் குழுவிற்கோ, அரச ஒழுக்காற்று நடவடிக்கைச் சபைக்கோ எந்தவொரு முறைப்பாட்டையும் செய்யலாகாது.

5. அரசியல் உரிமைகளுக்கு உரித்தற்றவர்கள் அரசின் கொள்கையைக் கண்டிப்பதற்கோ அல்லது பிறநாட்டு அரசாங்கத்தைக் கண்டிக்கவோ இது சம்பந்தமாக ஒரு கூட்டத்தினை ஒழுங்கு படுத்தவோ முடியாது. புதினப் பத்திரிகை மூலமாகவோ, சஞ்சிகை மூலமாகவோ, கட்டுரைகள் எழுதி அரசைக் கண்டிக்கவோ அல்லது அரசாங்க திணைக்களங்களைத் தாக்கிப் பிரசாரம் செய்யவோ அதிகாரம் இல்லை.

6. ஆனல் அரசியல் உரிமைக்கு உரித்துடையவர்களானலும் சரி, உரித்தற்றவர்கள் ஆயினும் சரி தமது சேவையின் நிபந்தனைகள் பற்றியோ, சம்பளம் பற்றியோ இணக்கவின்மையைத் தெரிவிப்பதற்கு முடியும். ஆனல் அவ்வாறு செய்யும் போது அந்த அரசாங்கத்தின் அந்தரங்க விடயம் யாதேனும் வெளிப்படாமலும் தமது சேவை நலன்களைப் பேணுவதாகவும் கண்டனத்தின் மொழி இகழ்வற்றதாகவும் இருக்க வேண்டும்.

7. ஓர் அரசாங்க உத்தியோகத்தர் எந்தவொரு ஒழுக்காற்று நடவடிக்கை மீதும் இணக்கவின்மையைத் தெரிவிக்கலாம். ஆனல் அப்படிச் செய்யும் பொழுது அத்தகைய இணக்கவின்மை பகிரங்கமாகத் தெரிவிக்கப்படாமலோ அல்லது வெளியிடப்படாமலோ இருக்க வேண்டும். எந்த உத்தியோகத்தருக்கு எதிராக அந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதோ அவ்வுத்தியோகத்தரே அல்லது அவர் அங்கம் வகிக்கும் சங்கத்தின் பதவியில் இருக்கும் ஒருவரால் மட்டுமே இணக்கவின்மை தெரிவிக்கப்படலாம். எனினும் எந்தவோர் ஒழுக்காற்று விடயத்தின் மீதும் தமக்களிக்கப்பட்ட அதிகாரத்தைப் பிரயோகிக்கும் அதிகாரி இணக்கவின்மை சம்பந்தமாகக் கடிதத் தொடர்பு வைத்திருக்கக் கடமைப் பட்டவர் ஆகார்.

# பொது நடத்தையும் ஒழுக்கமும்

## பொது

(1) அரசாங்கம் உத்தியோகத்தரின் சேவையை எந்த நேரத்திலும் எந்தச் சந்தர்ப்பத்திலும் வேண்டிநிற்கும்போது முழு விசுவாசத்தையும் அரசாங்கத்திற்குச் செலுத்துவதோடு, அரசாங்கம் எக்கடமைகளின் பொருட்டு வேலைக்கமர்த்த விரும்புகிறதோ அக்கடமைகளை நிறைவேற்றக் கடமைப்பட்டவர்.

(2) தாம் வகிக்கும் பதவிக்குப் பொருத்தமான முறையில் நடந்து கொள்வதோடு, அரசாங்க சேவைக்கு மதிப்பின்மை ஏற்படுமாறு நடப்பின் அது பற்றிச் செயலாளர் நடவடிக்கை எடுப்பர். தமது சொந்த நலன் அரசாங்கக் கடமையுடன் முரண்படும் வகையில் நடந்து கொள்ளலாகாது. — பார்வைக்குக்கூட — அந்த நிலைமை ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும்.

(3) அரசாங்க சேவையில் நியமிப்பதற்கோ, உயர்ச்சிகளுக்கோ இடமாற்றங்களுக்கோ, நேரடியாகவோ, எதிர்மறையாகவோ ஆதரவு நாடுவது ஒழுக்காற்று நடவடிக்கைக்கான குற்றமெனக் கருதப்படும். பணத்திற்காகக் கடமைகளைப் பரிமாறிக் கொள்ளும் முயற்சிகள், அவ்வுத்தியோகத்தர்களின் வேலை நீக்கத்திற்கான குற்றங்களாகும்.

(4) அரசாங்க விடயமாக அல்லது தம் கருமத்தின் பொருட்டு அரசாங்க அலுவலகங்களுக்கு வரும் பொது மக்களிடம் மரியாதையாக நடந்து அவர் கருமத்தைச் செய்வதில் உதவியாக இருப்பதுடன், அவர்களுடன் மேற்கொள்ளும் கடிதத் தொடர்புகள் பண்பானதாக அமைதல் வேண்டும்.

(5) தங்களுக்குக் கீழ்க் கடமையாற்றும் உத்தியோகத்தர்களிடமிருந்து பொது தருமஸ்தாபனங்களுக்காகப் பணம் சேர்க்கும் விடயத்தில் தாமும் ஈடுபடாது, தமது மனைவி குடும்பம் ஆகியனவும் ஈடுபடாது பார்த்துக்கொள்ள வேண்டும். அலுவலக நேரங்களிலேனும் அன்றி அதற்குப் புறம்பான நேரங்களிலேனும் அரசாங்க ஊழியர்களைத் தமது சொந்த வேலைகளுக்குப் பயன்படுத்தலாகாது.

## நன்கொடைகள்

(1) சொந்த நண்பர்களின் சாதாரண நன்கொடைகளைத் தவிர பிற எந்த வித அன்பளிப்புகளையும், பிற நன்மைகளையும் அரசாங்க ஊழியரோ அல்லது அவரது மனைவியோ பணமாகவோ பொருட்களாகவோ சேவைகளாகவோ நேராகவோ அல்லது மறைமுகமாகவோ பெற முடியாது. வருகை புரியும் பிறநாடுகளின் தலைவர்களால் வழங்கப்படும் நன்கொடைகள் பெறின், பெறப்பட்ட நன்கொடைகள் இந்நாட்டின் பிரதிநிதி என்ற முறையில் பெற்றார் எனக் கொள்ளப்பட்டுப் பாதுகாப்பு வெளிநாட்டுச் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். பெறுமதி ரூ. 150/-க் குறைவான பொருட்கள் உத்தியோகத்தர் தாமே வைத்திருக்கலாம். இதற்கு மேற்பட்டதாயின் அவர்கள் தாம்கொள்வனவு செய்யலாம். அப்படி விரும்பாதவிடத்து நூதனசாலையில் வைக்கப்படவேண்டும்.

(2) உத்தியோகத்தரொருவருடைய நன்நடத்தையினால் மக்களின் மனதைக் கவர்ந்து மக்கள் தமது பாராட்டைக் குறிக்கும் பொருட்டு பணம் அன்பளிப்புச் செய்

யின் அவை பொதுவாகப் பயன்படும் நோக்கங்களுக்காக அர்ப்பணிப்புச் செய்ய வேண்டும். மேலுத்தியோகத்தர்களுக்குப் பரிசுகள், வாழ்த்துப் பத்திரங்கள் வழங்குவதினால் ஏற்படும் செலவுகளுக்கு அவருக்குக் கீழ் உள்ள பணியாளர்களிடமிருந்து ஒப்பப் பணம் சேர்த்தல் தடுக்கப்பட்டுள்ளது. புத்தாண்டு, நத்தார் போன்றவற்றிற்கு உபகாரம் அளிப்பதற்குப் பணம் சேர்ப்பதும், சேர்த்தலின் பொருட்டுப் பத்திரம் சுற்றி விநியோகித்தலும் தடுக்கப்பட்டுள்ளது. இவ்வகையான நன்கொடைகளைப் பெறுவதற்கான சட்டங்களை ஒரு உத்தியோகத்தர் பதவியிலிருந்து இறுதியாக விலகும்போது தளர்த்தப்படலாம். ஆனால் அதற்குச் செயலாளர் அனுமதி வேண்டும்.

## பணமுட்டு

(1) கடுமையான பணமுட்டு எக்காரணத்தினால் ஏற்பட்டதாயினும் அது உத்தியோகத்தரின் வினைத்திறமையைப் பாதிக்கக்கூடிய சூழ்நிலையை, உருவாக்கி அவரால் பெறக்கூடிய பயனையும் அவர்மீது வைக்கக்கூடிய நம்பிக்கையும் குறைத்துவிடும். இத்தகைய பணமுட்டு வரம்பு மீறிய செலவினால், விவேகக் குறைவினால் அல்லது வேறு எந்தக் கண்டனத்திற்குரிய காரணத்தினால் ஏற்பட்டதாயின் அரசாங்க சேவையின் மதிப்பைப் பாதிக்கக்கூடிய குற்றமாகக் கருதப்படும். இவ்வாறு நடந்துகொண்டால் பதவி உயர்ச்சிக்கோ அன்றி வேதன ஏற்றத்திற்கோ உரிமையளிக்கும் மாண்பு மிக்க நிலைமை இழந்துவிட்டதாகக் கருதப்பெறும். கடன் கட்டளைச் சட்டத்தினால் பாதுகாக்கப்பட்ட உத்தியோகத்தர் (மாதம் ரூ. 520/- க்கு உட்பட்ட உத்தியோகத்தர்) வாக்குறுதிப் பத்திரமொன்றிற்குக் கைச்சாத்திடுவது கடன் கட்டளைச் சட்டத்தினால் பாதுகாக்கப்படாத ஊழியர் செய்வதின் குற்றத்திலும் பார்க்கக் கூடிய குற்றமாகும்.

(2) வேதன பற்றுச் சீட்டுகள் பிணையாக வைத்துக் கடன் எடுப்பது கண்டிப்பாகத் தடுக்கப்பட்டுள்ளது. ''கொண்டு வருபவரிடம் கொடுக்குக'' என்ற குறிப்புடன் வேதன பற்றுச்சீட்டைப் பிணையாக வைத்து ஒருவர் கடன் எடுத்தார் என்று உறுதிப்படுத்தப்பட்டால் அவர் வேலையினின்றும் நீக்குவதற்கான ஒழுக்காற்று நடவடிக்கைக்கு ஆளாவார்.

(3) கடனுக்காக உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டால் அல்லது கடன் இறுக்க முடியாதவரென்று நீதி மன்றத்தினால் தீர்க்கப்பட்டால் அவர் வேலையிலிருந்து இடை நிறுத்தப்பட்டு (விசாரணையின் பின்பு) அவருக்கு நேர்ந்த பணமுட்டு ஊதாரித்தனத்தால் அன்றேல் விவேகக் குறைவினால் ஏற்படவில்லை என்று நிரூபித்தாலன்றி திரும்பவும் வேலைகொடுத்துக் கொள்ளமாட்டார். கடனுக்காகக் கைது செய்யப்பட்டவர் அல்லது கடன் இறுக்க முடியாதவர் என்று தீர்மானிக்கப்பட்ட ஒருவர் உடனடியாகத் திணைக்களத் தலைவருக்கு அறிவிக்காதுவிடின் மீளநிறுவல் எதுவும் எதிர்பார்க்க முடியாதவாறு வேலையிலிருந்து நீக்கப்படுவர்.

## அரசாங்கப் பணம்

(1) உத்தியோகத்தர்கள் அரசாங்கப் பணத்தைச் சிருப்பரிடமிருந்தோ காசாளரிடமிருந்தோ கடனாகப் பெறுவது தடுக்கப்பட்டுள்ளது. அரசாங்கப் பணத்தைச் சொந்த நோக்கங்களிற்காக எவ்வளவு குறைந்த காலத்திற்கும் கையாளுதல் பாரதூரமான குற்றமாகும். இவ்வகையான குற்றத்திற்குத் தண்டம் வேலை நீக்கம் மட்டுமன்றி அவ்வுத்தியோகத்தர் மேல் வழக்கும் தொடரப்படலாம்.

(2) பொது மக்களுக்குத் தேவைப்படக்கூடியதும், நலன்தரக்கூடியதுமான செய்திகள், திணைக்கள முயற்சி பற்றிச் செய்திகள் பற்றிய தகவல் வழங்கும்போது

செயலாளர்களும் திணைக்களத் தலைவர்களும் தமது தற்றுணிவைப் பொறுத்துப் பிரயோகிக்கலாம். ஆனல், அத்தகைய தகவல் பணிப்பாளர் மூலம் கொடுக்கப்பட வேண்டும். எனினும் கீழ்க்கண்ட சூழ்நிலைகளில் நேரடியாகக் கொடுக்கலாம்;

(i) உண்மை நிகழ்ச்சிகள், புள்ளி விபரங்கள் ஆகியவற்றைக் கொடுக்கலாமேயன்றி அபிப்பிராயங்களைத் தெரிவித்தல் ஆகாது. உண்மை நிகழ்ச்சி ஒன்றை வெளியிடுவதின் மூலம் அரசாங்கத்தை அல்லது அரசாங்கத் திணைக்களத்தை அல்லது அரசாங்க ஊழியரை இடர்ப்படுத்தும் எனக் கருதினுல் அவற்றை வெளியிடக்கூடாது. ஐயமேற்படும்போது அமைச்சருடன் ஆலோசிக்க வேண்டும்.

(ii) புதினப் பத்திரிகைகளில் தகவல் வெளியிடும் பொழுது அவை அனுமதிக்கப்பட்டதா அன்றேல் அங்கீகாரம் உள்ள ஒருவரால் வழங்கப்பட்டதா என்பது பற்றி விசாரணை செய்ய வேண்டும்.

உத்தியோகத்தரொருவர் கடமையாற்றும்போது அல்லது லீவில் நிற்கும் போதேனும் அரசாங்கக் கொள்கை விடயங்களைப் பற்றியும் இராணுவ பாதுகாப்பு விடயங்களைப் பற்றியும் தம்மைப் பேட்டிகாண அனுமதித்தலாகாது. உத்தியோகபூர்வமான கடிதத் தொடர்புகள் எவற்றையும் செயலாளரின் அனுமதியின்றிப் புதினப் பத்திரிகைகளில் பிரசுரித்தல் ஆகாது. செயலாளரிடம் அனுமதி பெருது புதினப் பத்திரிகைகளின் ஆசிரியராக அல்லது அதன் முகாமையைப் பங்கெடுப்பதற்கு (நேர்முகமாகவோ மறைமுகமாகவோ) தடுக்கப்பட்டுள்ளனர்.

(13) உத்தியோகத்தரொருவர் இலங்கையிலோ பிறநாடுகளிலோ உள்ள புதினத் தாள்களில் பெயரிடாது எழுதுதல் ஆகாது. அரசியல் உரிமைக்கு உரித்தில்லாத ஊழியர்கள் நிர்வாக சம்பந்தமானவை என்று கருதப்படுகின்ற விடயங்களைப் பற்றிச் செயலாளரின் முன் அனுமதியின்றி எழுதவோ பேசவோ முடியாது. இச்சந்தர்ப்பங்களில் கட்டுரையின் எழுத்துப் பிரதி செயலாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டு அமைச்சரினுல் அங்கீகரிக்கப்பட வேண்டும். ஒரு நூல் பிரசுரம் வெளியிடுவதற்கு உத்தியோகப் பதிவேடுகளைப் பார்க்க அல்லது பயன்படுத்த விரும்பின் திணைக்களத் தலைவரின் அனுமதி பெறவேண்டும். ஒரு உத்தியோகத்தர் தமது அன்றிப் பிற ஒருவரது தொழிலோடு சம்பந்தப்பட்ட விடயத்தைப் பற்றி உத்தியோகப் பதிவேடுகள் ஆராயப்பட்டிருப்பின் பிரசுரிக்க முன்பு செயலாளர் அனுமதி பெறவேண்டும். இச்சந்தர்ப்பங்களில் அரசாங்கத்திற்குத் தேவையான பிரதிகளைக் குறைந்த விலையில் விநியோகிக்க ஒத்துக்கொள்ளும் நிபந்தனையைக் கடைப்பிடிக்குமாறு வேண்டப்படலாம்.

# இடமாற்றங்கள்

## இடமாற்ற ஆலோசனைச் சபையின் அனுமதியின்றிச் செய்யக்கூடிய இடமாற்றங்கள்

1. நிலைய மாறுகை சம்பந்தப்படாத மாற்றம்
2. ஒழுக்காற்றுக் காரணத்திற்காக
3. சேவையின் அவசிய தேவை நோக்கி
4. மாற்று நிலையப்பணியாளர் 25 பேரிலும் குறைந்த தொகை (இப்படியான சந்தர்ப்பங்களில் இடமாற்றச் சபையே தேவையில்லை)

## இடமாற்றத் திட்டங்களில் கவனிக்கவேண்டியவை:

1. சகல நிலையங்களும் மிகவிரும்பத்தக்கவை, விரும்பத்தக்கவை, விரும்பத்தகாதவை என வகுதிகளாகத் தரப்படுத்தல் வேண்டும்.

2. ஒவ்வொரு வகுதியின் சேவையாற்ற வேண்டிய கூடிய காலம் குறிக்கப்படல் வேண்டும்.

3. ஒரு திணைக்களத்திலிருந்து மற்றோர் புதிய திணைக்களத்திற்கு மாற்றம் செய்யப்பட்டிருந்தால் அவருக்கு இடமாற்றம் வழங்கும்போது அவர் முன் பணியாற்றிய திணைக்களத்தின் நிலையங்களைப் பரிசீலித்தல்.

4. விரும்பத்தகாத இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்படும் பொழுது விவாகமான உத்தியோகத்தர்களையும், பள்ளி செல்லும் பிள்ளைகளுடைய உத்தியோகத்தரையும் இயன்றவரையில் தவிர்த்து விவாகமாகாத ஆண்களையும், பள்ளி செல்லும் பிள்ளைகள் இல்லாத உத்தியோகத்தர்களையும் இடமாற்றம் செய்தல்.

5. திட்டவட்டமான விதிகளை நிர்ணயிப்பது கஷ்டம். மாற்றச் சபைகள் சேவையின் தன்மைக்கேற்ப மாற்றுமுறையைத் திட்டமிட்டுத் தயாரிக்கலாம். சேவையில் அவசிய நிலைகளையும், தேவைகளையும் கருத்தில் கொள்ளல் வேண்டும். மாற்றுத் திட்டம் முன்கூட்டியே உத்தியோகத்தருக்கு அறிவித்தல் வேண்டும்.

6. இயன்றவரையில் (சனவரி முதல்) வருட ஆரம்பத்தில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டும்.

7. இரண்டு மாதகால அறிவித்தல் கொடுக்கப்பட வேண்டும்.

8. இடமாற்றம் பின்போடப்படின் அன்றேல் ரத்துச் செய்யப்படின் ஒருமாத கால எல்லை கொடுக்கப்படுதல் வேண்டும்.

## ஒரு பாடசாலையில் வைத்திருக்க வேண்டிய பதிவேடுகளின் அட்டவணை

1. ஒவ்வொரு வகுப்பிலும் செய்யப்படும் வேலையைக் காட்டும் பதிவேடு.
2. பாடத்திட்டம்.
3. விடுதலைப் பதிவேடு.
4. புகையிரத ஆணைச் சீட்டுப் பதிவேடு.
5. மாணக்கர்களின் வரலாற்றுக் குறிப்புகள்.
6. ஆசிரியர்கள் பாடசாலை வரும் நேரத்தைக் குறிக்கும் பதிவேடு.
7. பொருட் பதிவுப் புத்தகம்.
8. ஆசிரியர்களின் சுய விபரக் கோவைகள்.
9. தலைமை ஆசிரியரின் மேற்பார்வைக் குறிப்புகள்.
10. பொது நேர சூசி.
11. வகுப்பு நேர சூசி.
12. ஆசிரியர்கள் ஒவ்வொருவரின் வேலையைக் குறிக்கும் நேர சூசி.
13. வசதிக்கட்டணம் சம்பந்தமான காசுப் புத்தகமும் மற்றைய ஏடுகளும்.
14. சம்பவத்திரட்டு (லொக்)ப் புத்தகம்.
15. மதிய போசனம் சம்பந்தமான பதிவேடுகள்.
16. ஆசிரியர்களின் மாதாந்தச் சம்பள விபரங்களைப் பதியும் ஏடு.
17. மாணவர் சேர்வுப் பதிவேடு.
18. மாணவர் வரவுப் பதிவேடுகள்.

---

# இருப்புப் பொருட்களின் பதிவேடும் கணக்கீடும் கட்டுக்காப்பும்

அரசாங்க திணைக்களங்களாற் பெறப்படும் இருப்புப் பொருட்கள் அனைத்தும் கிடைத்தவுடனேயே பொருட்பதிவேடுகளில் பெற்றுக்கோடற் பக்கத்தில் பதியப்படல் வேண்டும். இப்பதிவுகளுக்கத்தாட்சியாக அனுப்பும் பொருட் பத்திரங்கள் (Consignment Note) பெறுகைக் கட்டளையின் 2-ம் பிரதி, உள்ளூர்க் கொள்வனவு சம்பந்தமாகப் பொருட் பட்டியல்கள், உறுதிச் சீட்டுக்கள், கடன் கொடுத்துப் பெறப்பெற்ற பொருட்கள் சம் பந்தமான கடிதங்கள் பேணப்படல் வேண்டும்.

2. தக்க அதிகாரத்தின் பேரில் மட்டுமே வழங்கல்கள் செய்யப்பட வேண்டும். இதற் கத்தாட்சியானவை வழங்கல் கட்டளையிற் 2-ம் பிரதி, பதிவழித்தற்குரிய அதிகாரமுள்ள இருப்புக் கணித்தல் சபையின் அறிக்கைகள் ஆதியன.

3. அரசாங்கத்திடமிருந்து பெறப்படும் இருப்புச் சாமான்களைப் பதிவேடுகளில் பதிந்த பின்னர் அதற்குச் சான்றாகப் பொருட் பதிவுச் சான்றிதழ்களைத் தயாரித்துப் பொருட்களை வழங்கிய காரியாலயத்திற்கு அல்லது தாபனத்திற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். இந்தப் பொருட் பதிவுச் சான்றிதழ்களில் கிடைத்த பொருட்களின் பெயர், தொகை, பதிவேட்டில் பதிவு செய்துள்ள பக்கம் ஆதியன குறிப்பிடப்படல் வேண்டும்.

4. பொருட்களை நெருப்பு, களவு, சிறுகளவு, சீர்கெடுதல், பாழாக்கல் ஆகியனவற்றால் இழப்பு நேராமல் பாதுகாப்புக்குப் போதிய ஒழுங்குகள் செய்யவேண்டும்.

5. கீழ்வரும் வழங்கீடுகள் பொருட் பதிவேடுகளில் வழங்கீடுகள் எனக் குறிக்கப் படலாகாது:

(i) பொருட்பதிவேடு ஒன்றினை வைத்திருக்காதவர்களுக்கு வழங்கப்படும் பொருட்கள்.

(ii) உத்தியோகத்தர்களுக்கும், பிறருக்கும் கடன் கொடுக்கும் பொருட்கள் (எனினும் இவைகளை வழங்கும்போது பற்றுச் சீட்டுக்கள் பெற வேண்டும்) கடனாகக் கொடுத்த பொருட்கள் 6 மாத காலத்திற்குள் திருப்பிக் கொடுக்கா விட்டால் பற்றுச் சீட்டுப் புதுப்பிக்கப்படுதல் வேண்டும்.

### பொருட்பதிவேடு சமன் செய்தல்

ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும், பொருட் பதிவேட்டிலுள்ள ஒவ்வொரு பொருட்களுக்கும் சம்பந்தமான பெறுகைகளும் வழங்கீடுகையும் மொத்தமாக்கப்படல் வேண்டும். அதன்பின் கையிலுள்ள மிகுதி வழங்கீடு மொத்தத்தின் கீழ் பதியப்பட்டு அதனுடன் கூட்டப்படல் வேண்டும். கையிலுள்ள மீதி அடுத்த நிதியாண்டின் கணக்குக் குக் கொண்டுவரப்படல் வேண்டும்.

ஒரு தலைமை ஆசிரியர் இளைப்பாறுமிடத்தோ அன்றேல் இடமாற்றமாகிச் செல்லு மிடத்தோ தன்னிடமிருந்து பொறுப்பேற்கும் தலைமை ஆசிரியரிடம் அல்லது உதவி ஆசிரியரிடம் பொருட் பதிவேட்டுப் புத்தகங்களையும், அது சம்பந்தமான சான்றிதழ் களையும் பாரமளித்தல் வேண்டும்.

பெற்றுக்கோடற் பக்கத்திற் பதியப்பட்ட பொருட்கள் சம்பந்தமான பத்திரம் அனைவற்றையும் முறையாகக் கோவை செய்து பாதுகாப்பாக வைத்திருத்தல் வேண்டும். இந்தப் பத்திரங்களிலே பொருட்கள் பதிவேட்டின் எந்த எந்தப் பக்கங்களிலே பதியப் பட்டுள்ளன என்ற விபரமும் குறிப்பிடல் வேண்டும்.

### இருப்புப் பொருட்களின் கணக்கெடுப்பு

பாடசாலைக்குச் சொந்தமான இருப்புப் பொருட்களைச் சரிபார்த்தற்கும், வேண் டியவிடத்து உபயோகிக்காத பொருட்கள் பற்றிய அறிக்கை சமர்ப்பிப்பதற்கும் ஒவ் வொரு வருடமும் கணிப்புச் சபை நியமிக்கப்படல் வேண்டும். இச்சபையானது பொறுப்புள்ள உத்தியோகத்தர் இருவர் கொண்டதாக இருத்தல் வேண்டும். இவர்கள் இருப்புப் பொருட்களுக்கு நேரான உத்தியோகத்தர்களாவுகம் அல்லது கீழ் அமைந்த உத்தியோகத்தர்களாகவும் இருக்கக்கூடாது. பெரிய பாடசாலைகளிலே இருப்புக் கணித் தல் சபையை அமைக்கும் பொழுது கல்விப் பகுதியிலிருந்தும் சில வேளைகளில் உத்தி

யோகத்தர் அங்கத்தவராகக் கடமையாற்றுவர். ஆனல் சாதாரண பாடசாலைகளிலே வட்டாரக் கல்வி அதிகாரியின் சிபாரிசில் அப்பாடசாலை ஆசிரியர்களில் இருவர் இப்பணியைப் புரிவர்.

**இச்சபைக்கான அதிகாரங்கள்**

(1) இருப்புப் பொருட்கள் சரிபார்த்தல் (T & A 66)

(2) உபயோகத்திற்கு அல்லாத பொருட்கள் பற்றி அறிக்கை சமர்ப்பித்தல் (General 47)

இக்கணிப்புச் சபைகளின் நடவடிக்கைகள் ஒவ்வொரு நிதி வருடத்திலும் நடைபெறுவது மாத்திரமல்ல, கணக்குப் பொறுப்பு உத்தியோகத்தரால் அவசியமெனக் கருதப்படும் வேளைகளிலும் மேற்கொள்ளப்படலாம். கணிப்புச் சபை சரிபார்த்தல் ஆரம்பிக்கு முன்பு பொருட்பதிவேடு கட்டுக்காப்பு வைத்திருக்கும் உத்தியோகத்தரால் சமன் செய்யப்படல் வேண்டும். அத்துடன் சமன் செய்கை, அவ்வாறு சமன் செய்தமை கணிதமுறைச் செவ்வையுடையது என்ற ஒரு சான்றிதழும் களஞ்சிய உத்தியோகத்தரால் கணிப்புச் சபைக்குக் கொடுக்கப்படல் வேண்டும். அதன் பின்பு பதிவேட்டில் காட்டிய மிகுதிகளுடன் ஒவ்வொரு பொருளையும் சபை சரிபார்த்தல் வேண்டும். அவ்வாறு சரிபார்க்கும் பொழுது வேற்றுமை காணப்பட்டால் அதனை T & A 66 படிவத்தில் குறிக்கப்படல் வேண்டும். சபையின் அறிக்கையைக் கணக்கு உத்தியோகத்தருக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கணக்குப்பொறுப்பு உத்தியோகத்தர் அறிக்கையொன்றைக் கணக்காய்வு அதிபதிக்கு அனுப்புதல் வேண்டும். ஏதேனும் வித்தியாசங்கள் குறைகள் இருப்பின் அது பற்றிப் பொறுப்பாக உள்ள உத்தியோகத்தர் விளக்கம் கூறுமாறு வேண்டப்படுவர்.

உபயோகிக்காத பொருட்கள் ஏனைய அரசாங்கத் திணைக்களங்களுக்கும் உதவாது எனத்திருப்திப்பட்டால் ஒழிய அவற்றை விற்பதற்கோ, அழிப்பதற்கோ விதப்புரை செய்தல் ஆகாது. இது சம்பந்தமாகத் தொழில் நுட்பப் பொருட்கள் ஏதாவதிருப்பின் அவற்றுடன் பழக்கப்பட்ட ஒருவரின் அபிப்பிராயத்தை அல்லது அது பற்றி ஒரு தீர்மானம் எடுப்பதற்குத்தகைமை உள்ள உத்தியோகத்தரிடமிருந்து அறிக்கை பெறல் வேண்டும். கணக்கீட்டுச் சபையின் விதப்புரை இன்றி எந்த ஒரு பொருளையும் உபயோகிக்கத்தகாததென்று பதிவழிக்கப்படல் ஆகாது

கணக்கீட்டுச் சபை, தமது அறிக்கையைக் கணக்குப் பொறுப்பு உத்தியோகத்தருக்கு அனுப்புதல் வேண்டும். அவற்றைப் பரிசீலனை செய்தபின் உபயோகிக்கத்தகாத பொருட்களை அழித்தல் சம்பந்தமாக கட்டளை பெறப்படல் வேண்டும். அழித்தலைச் செய்யும் பொழுது இருப்புக் கணிப்புச் சபையின் அங்கத்தவர் ஒருவர் சமுகம் அளித்தல் வேண்டும்.

**அழியும் பொருட்களின் பட்டியல்**

பாடசாலைக்கு அரசாங்கத்தினல் அல்லது வேறு எந்தத் தாபனத்தினலும் கிடைக்கப் பெறும் அழியும் பொருட்களின் (உ+ம் வெண்கட்டி) விபரங்களை ஒரு பதிவேட்டில் பதியப்படல் வேண்டும். அவை எவ்வாறு வழங்கப்படுகின்றது அல்லது செலவிடப்படுகின்றதென்ற விபரமும் அதில் குறித்துக் கொள்ளல் வேண்டும். புத்தகப்படி உள்ள கையிருப்பும் உண்மையான இருப்பும் சரியாக இருத்தல் வேண்டும்.

**வறிய பிள்ளைகளுக்கு இலவச புத்தகங்கள் வழங்குவது சம்பந்தமான முக்கிய குறிப்புகள்**

(1) மொழி, எண், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு வழங்கப்படும்.

(2) 1·5-ஆம் வகுப்பு வரையுள்ள மாணவர்கள் பெறலாம்.

(3) கல்வி அமைச்சின் நிதி வசதிக்கமைய

(4) பெற்ருேரின் அல்லது பாதுகாவலரின் எழுத்து மூலம் விண்ணப்பம் வேண்டும்

(5) மாதம் 75/- ரூபாவிற்குக் குறையப் பெறுபவரின் பிள்ளையே உரித்துடையவர்.

(6) வட்டாரக் கல்வி அதிகாரிக்கு - 31. 10-க்கு முன்பு விண்ணப்பங்கள் அனுப்பல்.

(7) கல்வி அதிபதி பரிசீலனை செய்து நிதி நிலைக்கு அமைய வழங்கல்

(8) சாமான் பதிவுப் பத்திரங்கள் - 3 நாட்களுக்குள் பாடசாலைத் தலைவரால் அனுப்பப்படல் வேண்டும்.

(9) ஒவ்வொரு வருட முடிவிலும் இப்புத்தகங்களை மீளப் பெற்று மற்றைய பிள்ளைகளுக்கு வழங்கல்.

---

## அரசினர் விடுதிகளும் - ஆசிரியர்களும்

"அரசினர் விடுதி" என்ற பதம் அரசாங்கத்தால் வசிப்பதற்காக ஒதுக்கப்படும் எந்தவித இட வசதிகளையும் உள்ளடக்கும். அரசினர் விடுதிகள் இருவகைப்படும்.

| வகை | | நிர்வாகம் |
|---|---|---|
| (அ) பொது சேவை விடுதிகள் | — | பொது நிர்வாக அமைச்சும் அரசாங்க அதிபர்களும் |
| (ஆ) திணைக்கள விடுதிகள் | — | திணைக்களத் தலைவர்கள் |

2. திணைக்கள விடுதிகள் அமைக்கப்படுவதன் நோக்கம்:-

(அ) நாள் பூராவும் அரச கருமவேலைகளில் ஈடுபட்டுள்ளவர்கள் என்று கருதப்படும் உத்தியோகத்தர்களின் வேலைத் தலத்திற் கருகாமையில் விடுதிகள் அமைத்தல்.

(ஆ) தனியார் வீடுகளை வாடகைக்கு எடுப்பதனுல் அவ்வீட்டுச் சொந்தக்காரருடன் தொடர்பு வைத்திராத ஒரு நிலையை எதிர்பார்க்கப்படும் ஊழியர்களுக்காக (நீதித்துறையினர்)

(இ) பின் தங்கிய இடங்களில் தனியார் வீடு வசதிகள் இல்லாமையால் அரசாங்கத்தால் அதன் ஊழியர்களுக்கு வசதி செய்வதற்காக

(ஈ) பெரிய தொழிற்களம், தொழிற்சாலை ஆகியவற்றிற்கு அண்மையில் அத்தொழிலாளர்களின் வசதிகள், நன்மையைக் கருதிச் செய்து கொடுக்கும் வீட்டு வசதிகள்.

(உ) ஒழுங்கு, கட்டுப்பாடு, நன்மையைக் கருதிக் குறிக்கப்பட்ட உத்தியோகத்தர்களை ஒன்ருக வைத்திருக்க வேண்டிய தேவையை நோக்கிச் செய்யும் வசதிகள் — தரைப்படை.

3. விடுதி சம்பந்தப்பட்ட மட்டில் அரசாங்க உத்தியோகத்தர்களை இரு வகைக் கீழ் பிரித்து ஒதுக்குகின்றனர்.

(அ) இலவச விடுதிக்கு உரித்துடையோர் - ஆசிரியர்கள், புகையிரத நிலைய ஊழியர்கள்

(ஆ) இலவச விடுதிக்கு உரித்தற்ருேர் - அரசாங்க எழுதுவினைஞர்கள்.

குறிப்பு:- ஆசிரியர்களைப் பொறுத்த மட்டிலும், முதலாந்தர அதிபர்கள், முதலாந்தர விசேட பதவியினைப் பெற்றுள்ளோர் இலவச விடுதிக்கு உரித்துடையோரல்லர். சுருங்கக்கூறின் குடியியல் பட்டியலில் பெயர் இடம் பெறுபவர்கள் இவ்வுரிமைக்கு உரித்துடையோரல்லர்.

4. வாடகை அறவிடப்படும் முறைகள்:-

(அ) இலவச விடுதிக்கு உரித்துடையோர் - விவாகமானவர்களாயின் அடிப் படைச் சம்பளத்தில் 17 % மும், விவாகமாகாதவர்கள் $8\frac{1}{2}$ % மும். ஆனால் குடியியல் நிரலில் இடம் பெற்றுள்ள ஆசிரியர்கள். (உ+ம் முதலாந்தர அதி பர்கள்) மேற்குறிப்பிட்ட தொகையுடன், மேலதிகமாக 6 % மும் செலுத்த வேண்டும்.

(ஆ) இலவச விடுதிக்கு உரித்தற்றவர்கள் விவாகமானவர்கள் 23 % மும், விவாக மாகாதவர்கள் $14\frac{1}{2}$ % மும் செலுத்த வேண்டும்.

5. கணவனும் மனைவியும் அரச ஊழியர்களாக இருந்து இருவரும் இலவச விடு திக்கு உரித்தற்றவர்களாக இருந்தால், கூடுதலாகச் சம்பளம் பெறும் துணை வரிடமிருந்து 23 % மும், மற்றவரிடம் 8 % மும், அறவிடப்பட வேண்டும்.

6. கணவன், மனைவி இருவரில் ஒருவரோ அன்றேல் இருவருமோ இலவச விடு திக்கு உரித்துடையவர்களாக இருந்தால், கூடுதலாகச் சம்பளம் பெறுபவரிடம் 17 % மும், மற்றவரிடம் எதுவும் அறவிடுவதில்லை.

7. அறவிடப்படும் வாடகைத் தொகை வசிக்கும் வீட்டின் வாடகை மதிப்புக்குக் கணிசமான அளவில் கூடுதலாக இருந்தால் செயலாளருடைய அனுமதியுடன் (Economic rent) சிக்கன வாடகை அறவிடப்படும். இதற்குப் பிரதான மதிப் பீட்டாளருடைய அறிக்கை அவசியம்.

8. ஓர் அரச ஊழியர் விடுதியில் வசிக்க விரும்பாதவிடத்து இன்னோர் அரச ஊழி யரை வசிக்கப் பொறுப்பான அதிகாரி அனுமதி வழங்கலாம். மாற்றொழுங்குகள் செய்ய முடியாத விடத்து உரித்துடையவரிடமிருந்து வாடகை அறவிடப்படும்.

9. ஒரு பாடசாலையில் ஒரு விடுதி மாத்திரம் இருந்தால் அதில் பாடசாலை அதிபர் வசிக்க வேண்டும். கீழ்க்கண்ட சந்தர்ப்பங்களில் கல்வி அதிபரின் அனுமதி யுடன் இன்னுமோர் ஆசிரியர் வசிக்க ஒழுங்கு செய்யலாம்.

(அ) குறித்த விடுதி தலைமை ஆசிரியர் வசிப்பதற்குத் தகுதியற்றமையோ அன் றேல் போதாமையோ அன்றி இன்னோரன்ன வேறு காரணங்களுக்கா கவோ;

(ஆ) அவருக்கோ அன்றேல் அவரது துணைவருக்கோ பாடசாலையிலிருந்து 3 மைலுக்குள் சொந்தவீடு அமைந்திருப்பின்,

(இ) இன்னோர் ஆசிரியரை (அ), (ஆ) சந்தர்ப்பங்களில் வசிக்க அனுமதி வழங் கினால் பாடசாலைத் தலைவரிடமிருந்து வாடகை அறவிடப்படமாட்டாது வசிக்கும் ஆசிரியரிடமிருந்து அறவிடப்படும்.

தலைமை ஆசிரியர் விவாகம் செய்யாதவராக இருக்குமிடத்துத் தனது பாலைச் சேர்ந்தவர்களுடன் கூட்டாக வசிக்கலாம். ஆனல் அவ்வாறு வசிக்கும் எல்லா ஆசிரியர்களும் வாடகை இழப்பர். (அ), (ஆ) சூழ்நிலையில் வேறு ஆசிரியர் வசிக்க வேண்டி ஏற்படின் பின்வரும் அடிப்படையில் அந்த ஆசிரியர் தெரிவு செய்யப்படுபவர்:

(அ) விவாகமானவர்களின் சேவையில் மூப்புடையவர்.

(ஆ) விவாகமாகாத பெண் ஆசிரியர் ஒருவரோ பலரோ.

(இ) விவாகமாகாத ஆண் ஆசிரியர் ஒருவரோ பலரோ.

10. நிரந்தரத் தலைமை ஆசிரியர் இல்லாதவிடத்து அவருக்குப் பதிலாக உதவி ஆசிரியர் கடமையாற்றின் தலைமையாசிரியருக்கான விடுதி எந்தவொரு உதவி ஆசிரியருக்கும் மேற்போந்த (அ), (ஆ), (இ) விதிகளுக்கிணங்கக் கொடுக்கப்படலாம். ஆனல் அவ்வாறு வசிக்க அனுமதிக்கப்பட்டவர் நிரந்தரத் தலைமையாசிரியர் பாடசாலையில் பதவியேற்குமிடத்து விடுதியில் இருந்து வெளியேற வேண்டும். அப்படிச் செய்யத் தவறுபவர்கள் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உள்ளாவதுடன் தலைமை ஆசிரியரிடமிருந்து அறவிடக்கூடிய வாடகையையும் செலுத்த வேண்டி நேரிடும்.

11. தற்காலிக வேலை நீக்கத்திற்கு (Interdiction) உள்ளாகி இருக்கும் ஆசிரியர்களை ஆசிரியர் விடுதியிலிருந்து உடனே வெளியேறுமாறு உத்தரவிட கல்வி அதிபதிக்கு அதிகாரம் உண்டு. அவ்வுத்தரவை மீறுபவர்கள் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உள்ளாவார்கள்.

12. தலைமையாசிரியரின் பொறுப்பு:-

அ. விடுதியில் வதிகின்ற சகல ஆசிரியர்களிடமிருந்துப் வாடகை கழிக்கப்படச் செய்தல்.

ஆ. வகுப்பறைகளை விடுதி வசதிக்காகவோ, அன்றேல் விடுதிகளை வகுப்பறைகளாகவோ, பண்டகசாலையாகவோ மாற்றுதலாகாது.

இ. பாடசாலை விடுதியில் வதிகின்ற ஆசிரியர்கள் பாடசாலைச் சொத்துக்களைப் பேணுவதில் பொறுப்புடையவர்கள். தலைமை ஆசிரியர் விடுதியில் வசிக்காதிருப்பினும் அவர் பாடசாலைச் சொத்துக்களைப் பேணும் பொறுப்பிலிருந்து விலகிக்கொள்ள முடியாது. பாடசாலைச் சொத்துக்களைப் பேணுவதின் முழுப்பொறுப்பும் தலைமை ஆசிரியரைச் சார்ந்ததே.

13. மற்றைய நிபந்தனைகள்:-

அ. தண்ணீர், மின்சாரம் ஆகியவற்றிற்கான கட்டணங்களையோ வரிகளையோ விடுதியில் வசிக்கும் அரச ஊழியரே செலுத்தல் வேண்டும்.

ஆ. அவரும், அவரது துணைவரும், பிள்ளைகளும், அவரது தங்கியிருப்போரும் மாத்திரமே விடுதியில் வசிக்கலாம். அனுமதியின்றி நிரந்தரமாக இன்னொருவரை வசிக்க விடலாகாது.

இ. விடுதியிலிருந்து வெளியேற விரும்புமிடத்து ஒரு மாத அறிவித்தல் கொடுத்தல் வேண்டும். வெளியேறுமுன் அவரால் விடுதியிலுள்ள சொத்துக்களுக்கோ, இணைப்புக்களுக்கு ஏதாவது நட்டமோ, சேதமோ ஏற்பட்டிருப்பின் அதற்கான பெறுமதியைச் செலுத்தல் வேண்டும்.

## அரசினர் பாடசாலைகளில் பணம் திரட்டல் (வசதிக் கட்டணம் நீங்கலாக)

விளையாட்டுப் போட்டிகள், கதம்ப நிகழ்ச்சிகள், பரிசு வழங்கும் கொண்டாட்டங்கள் போன்றவற்றிற்கான செலவுகளுக்காகப் பாடசாலை மாணவர் களிடமிருந்து பணம் வசூலிக்கலாம். ஆயினும், இவ்வாறான பணம் திரட்டும் முறைமை வருடத்தில் ஒரு முறைதான் நடைபெறலாம்.

### அனுட்டிக்கப்பட வேண்டிய ஒழுங்கு முறை

1. பெற்றார் ஆசிரியர் சங்கத்தைக் கூட்டி, பணம் திரட்டும் நோக்கம், திரட்ட வேண்டிய மொத்தத் தொகை, ஒவ்வொரு மாணாக்கரிடமிருந்தும் எதிர்பார்க்கும் தொகை ஆகியவை பற்றி பெ. ஆ. சங்கத்தின் அங்கீகாரம் பெறவேண்டும்.

2. பெற்றார் ஆசிரிய சங்கம் ஒரு சபையை (இரு பெற்றோரை உள் அடக்கி) நியமித்துப் பணம் திரட்டுதலுக்கும், செலவுகளுக்கும் பொறுப்பாயிருக்கச் செய்தல். ஒருவர் (ஆசிரியர்) தனாதிகாரியாகக் கடமையாற்றுவார்.

3. பணம் திரட்டத் தொடங்கு முன்பு வித்தியாதிபதியின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். அனுமதிக்கு விண்ணப்பிக்கும்போது நோக்கம், தொகை ஆகியன குறிப்பிடப்பட வேண்டும். இக்கட்டணம் கட்டாயமானது அல்ல எனவும் பெற்றார் தமது விருப்பப்படி செய்யலாமெனவும் கட்டணம் கொடுக்காததினால் எம்மாணவனும் தண்டிக்கப்படவோ அல்லது வேறெந்த வகையிலும் பாதிக்கப்படவோமாட்டாரெனவும் தெளிவு படுத்த வேண்டும்.

4. பெற்றுக் கொள்ளப்படும் பணத் தொகைக்கு விபர அட்டவணை தயாரித்து வைத்திருக்கப்பட வேண்டும். கணக்குப் புத்தகம் ஒன்று தயாரித்து இடது பக்கத்தில் திரட்டப்பட்ட தொகையும், வலது பக்கத்தில் செலவு விபரங்களையும் குறித்தல்வேண்டும். செலவுவிபரங்களுக்குப் பற்றுச்சீட்டு அணைத்தல் வேண்டும்.

5. பணம் திரட்டப்படும் சம்பவம் நிறைவேறிய மூன்று கிழமைக்குள் திரட்டப்பட்ட பணம், செலவழித்த பணம் கையிருப்புப் பணம் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிக்கையைத் தனாதிகாரி தயாரித்துச் சபைக்குச் சமர்ப்பித்து, சபை ஏற்றுக் கொள்வதா? இல்லையா என்பதைத் தீர்மானிக்கும். பணம் திரட்டப்படும் சம்பவம் நிறைவேறும் 4 கிழமைக்குள் தனாதிகாரியின் அறிக்கையினையும், சபையின் தீர்மானத்தையும் தலைமை ஆசிரியர் வித்தியாதிபதிக்கு அனுப்பி வைப்பதுடன் மிகுதிப் பணம் இருப்பின் அதை எங்ஙனம் உபயோகிக்கலாம் என்ற ஆலோசனையையும் தெரிவிக்க வேண்டும். அத்துடன் வருடாந்தப் பரீட்சையின் போது கணக்குப் புத்தகங்களையும் பற்றுச் சீட்டுக்களையும் சபையின் தீர்மானத்தையும் வட்டாரக் கல்வி அதிகாரியின் பரிசீலனைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

# சம்பளக் கடன்கள்

எந்த உத்தியோகத்தரும் இதனை உரிமையாகப் பெறமுடியாது. இந்தக் கடன் பெறுவது சம்பந்தமாக விதிக்கப்பட்ட நிபந்தனைகளைப் பரிசீலித்து அவர் தகுதியான வர் எனக் காணுமிடத்து, அதற்கான அதிகாரி தமது தற்றுணிவின்படி வழங்கலாம். கடன் எடுத்த உத்தியோகத்தர் வேறு அலுவலகத்திற்கு மாறிச் செல்லுமிடத்துக் கடன் சம்பந்தமான விபரங்களை ஊழியர் பணிபுரியும் அலுவலகத்திற்கு அறிவித்து, அறவிட வேண்டிய தொகையைக் குறித்துக்கொண்டு, அதற்கத்தாட்சியாகக் கடிதம் ஒன்று பெற வேண்டும்.

கடன் வழங்கிய பொழுது கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்கள், உடன்படிக் கைகள், பிணைப் பத்திரங்கள் ஆகியவற்றை ஒருவர் இடம் மாறிச் செல்லும்போது, இடமாறிச்செல்லும் அலுவலகத்திற்கு அனுப்பாது, கடன் வழங்கிய கந்தோரிலேயே பேணப்படல் வேண்டும்.

2. பொதுவாக அரச ஊழியர் பெறக்கூடிய கடன் வசதிகள்:-

(அ) மோட்டார் கார் வாங்குவதற்கு

(ஆ) மோட்டார் சைக்கிள் வாங்குவதற்கு

(இ) சைக்கிள் வாங்குவதற்கு

(ஈ) கடன் முட்டைத் தீர்ப்பதற்கு - குறிக்கப்பட்ட சில காரணங்கள்

(உ) உற்சவ முற்பணம்

(ஊ) வீடு கட்டுவதற்கான காணி வாங்குவதற்கோ, வீடு வாங்குவதற்கோ

குறிப்பு — மேலே குறிக்கப்பட்டவற்றில் (அ), (ஆ), (ஊ) ஆகியவற்றிற்கு ஆசிரியர்கள் உரித்தற்றவர்கள்.

3. கடன் வழங்குவதற்கான பொது நிபந்தனைகள்:

(அ) எந்தக் காரணத்திற்காகக் கடன் பணம் வழங்கப் பெற்றதோ அக் காரணத்திற்காக அப்பணம் முழுவதும் செலவழித்தல் வேண்டும். எடுக்கப்பட்ட கடனில் ஏதாவது ஒரு பகுதி செலவழிக்காது மிகுதி யாயிருந்தால் அப்பணம் உடனடியாகத் திருப்பிக் கொடுத்தல் வேண்டும்.

(ஆ) ஒரு வாகனம் வாங்குவதற்காகவோ, வீடு அன்றி காணி வாங்கு வதற்காகவோ கடன் பணம் எடுத்து, அத்தேவையின் பொருட்டு பணத்தைப் பாவியாது, குறிக்கப்பட்ட பத்திரங்களைக் கடன் எடுத்த தினத்திலிருந்து இரண்டு கிழமைக்குள் சமர்ப்பிக்கத் தவறினல் எடுக்கப்பட்ட கடன் பணத்தைத் திருப்பிக் கொடுத்தல் வேண்டும்.

4. சம்பளப் பட்டியலில் ஏற்படும் மாதாந்தக் கழிவு, ரூ 375/- சம்பளத்திற்கு மேற்பட்டவர்களுக்கு 40 % க்ருக் கூடாமலும் ரூ 375/-க்கு குறையின் $33\frac{1}{3}$ %க்குக் கூடாமலும் இருக்க வேண்டும்.

5. கழிவுகள் சமமான தவணைக் கழிவுகளில் அறவிடப்படுதல் வேண்டும். ஆனால் சமமாகக் கழிவு செய்யும்போது ஏதாவது மீதி இருப்பின் அது முதற் தவணையுடன் சேர்த்துக் கழித்தல் வேண்டும்.

தவணைக் கழிவு கடன் வழங்கப்பட்ட மாதத்திற்கு அடுத்து வரும் மாதத்திலேயே அறவிடப்பட ஆரம்பித்தல் வேண்டும். உற்சவ கடனைத் தவிர மற்றையவற்றிற்கு வட்டி அறவிடப்படல் வேண்டும். அத்துடன் ஒரு மாதச் சம்பளத்திற்குக் குறைவாகக் கொடுத்து அது 6 தவணைக்குள் அறவிடப்படின், வட்டி அறவிட வேண்டியதில்லை. எடுக்கப் பட்ட கடன் திருப்பிக் கொடுக்கப்படும்வரை கடன் எடுத்து வாங்கிய வாகனம், வீடு காணி ஆகியவற்றில் அரசாங்கத்திற்குப் பூரண உரிமையுண்டு. அவற்றை அரசாங்கத்தின்' அனுமதி இன்றி விற்கவோ, ஈடுசெய்யவோ முடியாது. அப்படி விற்கும் பட்சத்தில் அல்லது ஈடு செய்கையில், எடுக்கப்பட்ட கடன் உடனடியாகக் கொடுத்தல் வேண்டும்.

கடன் எடுத்த ஒருவர் இளைப்பாறும்பொழுது திணைக்களத் தலைவர் அறவிட வேண்டிய கடன் விபரத்தை விளக்கமாக இளைப்பாற்றுச் சம்பளப் பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும். கடன் அறவிட முன்பு, குறிப்பிட்ட ஊழியர் இறப்பின், அற விடப்பட வேண்டிய மிகுதிக் கடன் அவருக்குரித்தாயிருக்கும் பணங்களில் கழிக்கப் படும். கடனாளியிடமிருந்து அறவிட முடியாதவிடத்து, பிணைக்காரர்களிடமிருந்து அறவி டப்படலாம்.

கடன் வழங்க அதிகாரம் பெற்றவர்கள்

| | |
|---|---|
| (அ) காணி வாங்குவதற்கோ வீடு வாங்குவதற்கோ | - தாபனப் பணிப்பாளர் |
| (ஆ) மோட்டார் வாகனம் வாங்குவதற்கு | - செயலாளர் |
| (இ) மற்றைய கடன்கள் | - திணைக்களத் தலைவர் |

சைக்கிள் வாங்குவதற்கான முற்பணம் வழங்கல்

நிரந்தர சேவையில் உள்ள சிறு பணியாளர்களும், பதவி உத்தியோகம் அல்லா தோரும் தொழில் செய்யும் இடத்திற்குப் போவதற்கும், வருவதற்கும் சைக்கிள் வாங்கு வதற்கு முற்பணமாக ரூ. 300/- பெறலாம். 10 வருட (இளைப்பாற்றுச் சம்பள) சேவை உள்ள ஒருவருக்குப் பிணை தேவையில்லை. மற்றவர்களுக்கு 5 வருடத்திற்குக் கூடிய (இளைப்பாற்றுச்) சேவையுள்ள உத்தியோகத்தர் பிணையாக நிற்கலாம். பெறும் முற் பணத்தைக் கொண்டு புதிய சைக்கிள் கொள்வனவு செய்தல் வேண்டும். கட்டுப்பண முறையில் அல்லாது கைக்காசிற்குக் கொள்வனவு செய்தல் வேண்டும். சைக்கிள் வாங் கியதை உறுதிப்படுத்தும் பற்றுச்சீட்டு உடனடியாக அலுவலகத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். கடன் திருப்பிக் கொடுக்கும்வரை சைக்கிளை பரிசீலனைக்கு எந்நேரமும் திணைக்களத்திற்குக் காட்டக்கூடியதாயிருத்தல் வேண்டும்.

| | |
|---|---|
| (1) ரூ 300/-க்குக் குறைந்தவர்கள் | — 36 தவணைகள் |
| (2) ரூ 300/- – 500/- | — 24 தவணைகள் |
| (3) ரூ 500/-க்கு மேற்பட்டவர்கள் | — 10 தவணைகள் |

இந்தக் கடன் 4 வருடங்களுக் கொருமுறை கொடுக்கப்படலாம்.

## கஷ்ட நிவாரண முற்பணம்

கீழ்க்கண்ட காரணங்களுக்காக, அவை உண்மையானவை என உறுதிப்படுத்துமிடத்து வழங்கப்படலாம்:

(அ) நெருப்பாலோ வெள்ளத்தாலோ ஏற்பட்ட நஷ்டங்கள்

(ஆ) வைத்திய செலவுகள்

(இ) குடும்பத்திலுள்ளவர்களின் சுகவீனத்தால் ஏற்பட்ட கடன்

(ஈ) வீட்டு வாடகைகளின் நிலுவைகள்

(உ) குடும்பத்திலுள்ள ஒருவரின் மரணச் செலவிற்காக

(ஊ) தனது அல்லது துணைவரின் வீட்டிற்கு அவசிய திருத்தங்கள் செய்வதற்கு (வீட்டில் அவர்களே குடியிருப்பாளர்களாய் இருத்தல் வேண்டும்)

(எ) அலுவலக உபயோகத்திற்காகத் தனது பெயரிலுள்ள வாகனத்தைத் திருத்தம் செய்வதற்கு.

(ஏ) மலேரியா, யானைக்கால் போன்ற நோய்களைத் தடுப்பதற்காக நுளம்பு வலைகள் வாங்குவதற்கு.

(ஐ) தம்மில் தங்கி இருக்கும் பிள்ளைகளுக்குப் பாடசாலைப் புத்தகங்கள் வாங்குவதற்கு

(ஒ) உத்தியோகத்தரொருவர் வசிப்பதற்காக வீட்டின் வாடகை முற்பணம்,

(ஓ) முழுச் சம்பள விடுதலையில் வெளிநாடு செல்கின்ற ஒருவருக்கும் அவரது குடும்பத்திற்கும் ஏற்படும் பணச் செலவு.

## பெறத்தகைமையுடையோர்

(i) நிரந்தரமானதும், இளைப்பாற்றுச் சம்பள உரித்துள்ள உத்தியோகத்தர்கள்

(ii) அரசாங்க சேவைச் சேமலாப நிதிக்குப் பணம் செலுத்தும் நிரத்தர ஊழியர்களும் தற்காலிக ஊழியர்களும்

## தொகை

(1) செலவழிக்கப்பட்ட தொகையோ அல்லது செலவழிக்கப்பட இருக்கின்ற தொகையோ அல்லது 3 மாத அடிப்படைச் சம்பளமோ இதில் எது குறைந்ததோ அதுவாகும்.

(2) இளைப்பாற்றுச் சம்பள உரித்தில்லாதவர்கள் இந்தக் கடனையும் வேறு செல்மதிகளையும் சேர்க்கும்போது அ. சே. சே. நிதியின் கொடைப் பணத்திற்குக் குறைவாக இருத்தல் வேண்டும்.

(3) பெறப்படும் கடன் வீட்டு வாடகை முற்பணமாகக் கொடுப்பதற்காகின் 3 மாதம் அங்கீகரிக்கப்பட்ட வாடகைக்கு மேலாக இருத்தல் ஆகாது.

ஏனைய நிபந்தனைகள்

(1) கடன் எந்த நோக்கத்திற்காகப் பெறப்பட்டதோ அது சம்பந்தமாகச் செலவழிக் கப்பட்டதென்பதற்கான பற்றுச்சீட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) ஒரு மாதத்திற்குக் கூடிய அடிப்படைச் சம்பளமாயின் 18 மாதத் தவணையிலும், அதற்குக் குறைந்த தொகையானால் 10 தவணையிலும் அறவிடப்படல் வேண்டும்.

இந்தக் கடனுக்காகக் குடும்பம் என்பது உத்தியோகத்தர் குடும்பத்தையும், பெற்றோரையும், மாமன் மாமியரையும் தம்மில் தங்கியிருக்கும் விவாகமாகாத சகோதரி களையும் 18 வயதிற்குட்பட்ட தனது தம்பிமார்களையும் குறிக்கும்.

உற்சவ முற்பணம்

**தகைமை:–** ரூ 520/- மாதாந்த சம்பளத்திற்குட்பட்ட நிரந்தர, தற்காலிக அமயப் பணி யாளர்களுக்கு வழங்கலாம். தற்காலிக, அமயப் பணியாளர்களைப் பொறுத்தமட்டில் 3 மாத கால சேவையிலிருப்பார் என்ற சாத்தியக் கூறுகள் இருத்தல்வேண்டும். விருப்பப் படி வருடத்தில் ஒரு உற்சவத்திற்கு ரூ 100/- எடுக்கலாம். இதற்குப்பிணை தேவையில்லை. உற்சவ தினத்திற்கு 2 கிழமை முன்பாக முற்பணம் வழங்கப்படலாம். 10 மாதாந்தத் தவணையில் அறவிடப்படல் வேண்டும். 12 மாதத்திற்கு ஒரு முறைதான் வழங்கப்பெற லாம். ஆனால் உற்சவ தினம் மாறுபடும் பட்சத்தில் 12 மாதத்திற்கு முன்பும் வழங் கப்படலாம் (உ+ம் வெசாக்)

# லோகோர் சீமாட்டி கடன் நிதி

அரசாங்க உள்ளூராட்சி மன்ற ஊழியருடைய கடன்களைத் தீர்த்து ஆறுதல் வழங்குவதற்காக அரசாங்கம் இந்நிதிக்குக் கடனாகப் பணம் வழங்கியுள்ளது. பதவித்தர உத்தியோகத்தர்களுக்கு இந்நிதியிலிருந்து கடன்பெற உரிமையில்லை.

விண்ணப்பங்கள் நிர்வாகி, லோகோர் சீமாட்டி கடன் நிதி என்ற முகவரிக்குத் தமது திணைக்களத் தலைவரூடாகப் பொதுப்படிவம் 256 இல் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். ஆனால், அவ்விண்ணப்பங்களைத் திணைக்களத் தலைவர் நிர்வாகிக்கு அனுப்ப முன், நிர்வாகியிடம் தொடர்பு கொண்டு அவரின் அனுமதி பெற்றபின்பே விண்ணப்பங்களை அனுப்பலாம். விண்ணப்பதாரிக்கு ஏற்கனவேயுள்ள கடன்களை இக் கடன் நிதியிலிருந்து பணம் பெறுவதற்கு ஏற்றதான கடனென நிர்வாகி திருப்திப்படும் இடத்து அனுமதி வழங்கப்படலாம். ஏற்கனவே இந்நிதியிலிருந்து முன்னர் எப்போதாவது கடன் உதவி பெற்றிருப்பின், அத்தொடர்பிலக்கத்தைக் குறிப்பிடல் வேண்டும்.

இக்கடன் நிதியிலிருந்து வழங்கப்படும் பணம் நேரடியாக வழங்கப்படாது. எக்கடனை இவ்வுதவிப் பணம் தீர்ப்பதோ அக்கடனைக் கொடுத்தவருக்கே வழங்கப்படும். விண்ணப்பதாரரின் திணைக்களம் கடன் சம்பந்தமான அறவிடலைச் செய்வதோடு இதற்கான ஒரு பதிவேட்டுப் புத்தகத்தில் விண்ணப்பதாரரின் பெயர், பெறப்பட்ட பணத் தொகை, அறவிடப்பட்ட தொகை ஆதியன குறிக்கப்பட்டு வருதல் வேண்டும். அறவிடப்பட்ட பணம் நிர்வாகிக்கு விபர அட்டவணையுடன் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

கடன் வசதி பெற்ற ஒரு ஊழியர் ஒரு திணைக்களத்திலிருந்து மற்றோர் திணைக்களத்திற்கு மாற்றலாகிச் செல்லுமிடத்து, மாற்றலாகிச் செல்லும் திணைக்களத் தலைவருக்கும் நிர்வாகிக்கும் தற்போதைய திணைக்களத் தலைவர் கீழ்க்கண்ட விபரங்களை அறிவித்தல் வேண்டும். பெயர், பதவி, மாதாந்தம் அறவிடவேண்டிய தொகை, நிர்வாகியால் வழங்கப்பட்ட தொடர்பிலக்கம் ஆதியன அறிவிக்கப்படும். மேற்போந்தவை, அரச திணைக்களத்திலிருந்து கூட்டுத்தாபனத்திற்கு மாற்றலாகிச் செல்லும்போதும் கடைப்பிடிக்கப்படவேண்டும். இளைப்பாறுகின்றபோதும் திணைக்களத் தலைவர் அது பற்றி நிர்வாகிக்கு அறிவிப்பதுடன் அறவிடப்படவேண்டிய முழுத் தொகையையும் இளைப்பாற்றுச் சம்பளத்திலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். உத்தியோகத்தரொருவர் வேலை நீக்கம் செய்யப்படுமிடத்து அந்த விபரங்களை நிர்வாகிக்குத் திணைக்களத் தலைவர் அறிவிக்க வேண்டும்.

கடன்பட்ட உத்தியோகத்தருக்கு இளைப்பாற்றுச் சம்பளம், சேமலாப நிதி சம்பளங்கள் அல்லது பிணைப்பணங்கள் ஆதியனவற்றை வழங்க முன்பு, கடன் சம்பந்தமாக மிகுதிப் பணத்தை அறவிடுவது உறுதிப்படுத்துபவரின் பொறுப்பாகும். இந்தப் பொறுப்பிலிருந்து தவறும் உத்தியோகத்தர்களைப் பற்றிய விபரங்களை தாபனப் பணிப்பாளருக்கு நிர்வாகி அனுப்புவார். இப்படியான தவறுகளினால் நிதிக்கு யாதேனும் நட்டம் ஏற்படுமிடத்து அதற்குப் பொறுப்பான உத்தியோகத்தரிடமிருந்து நட்டம் அறவிடப்படுவதுடன் அந்த உத்தியோகத்தர் ஒழுக்காற்று நடவடிக்கைக்கும் ஆளாவர்.

# லீவு

உண்மையான தேவை ஏற்படும் சந்தர்ப்பத்தில் மட்டும் லீவுச் சலுகையைப் பயன்படுத்த வேண்டும். லீவு தேவைப்படுமிடத்து அதற்கென உரிய விண்ணப்பப் பத்திரத்தில் விண்ணப்பிக்க வேண்டும். முன்னறிவித்தலின்றிச் சேவைக்குச் செல்லாதிருத்தல் சேவையிலிருந்து நீக்கிக் கொண்டதற்குச் சமனுகும். எதிர்பாராத சந்தர்ப்பங்களில் பாடசாலை மூடுவதற்கு முன் தலைமையாசிரியருக்கு அறிவித்தல் கொடுத்துக் கூடிய விரைவில் விண்ணபத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

1. சமயோசித லீவு:- வருடத்தில் முழுச்சம்பளத்துடன் 21 வேலை செய்யும் நாட்களைச் சமயோசித லீவாகப் பெற்றுக் கொள்ளலாம். 21 நாட்களில் அத்தியாவசிய சுய தேவைகளுக்கு ஏழு நாட்களைப் பயன் படுத்தலாம். ஒரே முறையில் ஆறு நாட்களுக்கு மேல் தொடர்ந்து சமயோசித லீவு பெற்றுக்கொள்ள முடியாது.

2. சுகவீன லீவு:- வருடத்தில் முழுச்சம்பளத்துடன் 20 வேலை செய்யும் நாட்களை வைத்திய சான்றிதழ் மூலம் சுகவீன லீவாகப் பெற்றுக் கொள்ளலாம். 14 நாட்களுக்கு மேற்படின் அரசாங்க வைத்தியரின் சான்றிதழ் அவசியமாகும்.

3. பிரசவ லீவு:- வைத்திய சான்றிதழ் மூலம் வருடத்தில் முழுச் சம்பளத்துடன் 6 வார பிரசவ லீவு பெறலாம். 6 வாரங்களில் 4 வாரங்களாவது பிரசவத்தின் பின் எடுக்கப்பட வேண்டும்.

4. விசேட லீவு:- வைத்திய சபையின் சிபார்சின் மூலம் கயரோகத்திற்கு முழுச் சம்பளத்துடன் 9 மாதங்களும், குட்டரோகத்திற்கு முழுச் சம்பளத்துடன் 22 மாதங்களும் விசேட லீவாக வழங்கப்படலாம். கயரோகலீவு முதன் முறை பெற்ற பின் குறைந்தது நாலு வருடங்கள் கடந்த பின்னரே தேவைப்படி திரும்பவும் ஒருமுறை மட்டும் கயரோக லீவு பெறலாம். குட்டரோக லீவு ஒரு முறை மட்டும் அளிக்கப்படும்.

5. படிப்பு லீவு (அ) ஆசிரிய பயிற்சி:- சேவையிலிருந்து ஆசிரிய பயிற்சிக்குத் தெரிவு செய்யப்படுபவர் பயிற்சி முடிந்து வெளியேறி 8 வருடங்களுக்கு அரசாங்கத்தின் கீழ் சேவை செய்யும் ஒப்பந்தத்தைச் செய்து கொண்டால் 2 வருட முழுச்சம்பளப் படிப்பு லீவு வழங்கப்படும்.

(ஆ) பல்கலைக் கழகம்:- பட்டக் கல்விப் பாட நெறிப் பயிற்சிக்கு அமைச்சினுல் தெரிவு செய்யப்படின் பட்டப்படிப்பு முடிந்து 8 வருடங்களுக்கு அரசாங்கத்தின் கீழ்ச் சேவை செய்யும் ஒப்பந்தத்தைச் செய்து கொண்டால் முழுச் சம்பளத்துடன் இரண்டு வருடங்களும், சம்பளமின்றி ஒரு வருடமும் படிப்பு லீவு அனுமதிக்கப்படும்.

(இ) கல்வித் தகுதித் தேர்வுப் பத்திரம்:- இதற்காகத் தெரிவு செய்யப்படின் 5 வருடங்களுக்கு அரசாங்கத்தின் கீழ்ச் சேவை செய்யும் ஒப்பந்தஞ் செய்து முழுச் சம்பளத்துடன் ஒரு வருட லீவு பெறலாம்.

# புகையிரத ஆணைச் சீட்டு

புகையிரத ஆணைப்பத்திரம் அரசாங்கத்தைப் பொறுத்த மட்டில் பணப் பெறுமதியுடைய ஒருபத்திரமாகும். ஆகவே, அது நிதி சம்பந்தமான ஒன்ருக அமைகின்றது. நிர்ணயிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு அமைய அரசாங்க ஊழியரால் விரும்பும் பொழுது இந்தச் சலுகையானது அனுபவிக்கப்படும். விதிக்கப்பட்ட சட்டங்களை மீறி இச்சலுகையை அனுபவிக்க முயற்சித்தல் அரசாங்க நிதிச்சட்டங்களைப் புறக்கணித்த குற்றமாகும். அந்த அளவுக்குச் செய்யப்படும் நிலையில் ஒரு அரசாங்க ஊழியரை வேலை நீக்கத் தண்டனைக்கு ஆட்படுத்தவும் நேரிடும். இவ்வாறே புகையிரத ஆணைப் பத்திரம் வழங்கும் உத்தியோகத்தரையும் பாதிக்குமாதலினல், ஒவ்வொரு சீட்டு வழங்கும்பொழுதும் அந்த உத்தியோகத்தர் அரசாங்க புகையிரத ஆணைப்பத்திரம் வழங்கல் சம்பந்தமாக ஆக்கப்பட்டுள்ள விதிகளைக் கருத்திற் கொண்டு நுணுகிய கவனத்தோடு வழங்கல் வேண்டும்.

(1) தகைமை: இலங்கையில் நிரந்தரமாக வசிப்பவராயும், புகையிரத திணைக்களம் அல்லாத ஏனைய திணைக்களங்களில் கடமையாற்றும் கீழ்க் காணும் ஊழியர்கள் இலவச புகையிரத ஆணைப்பத்திரத்திற்கு அருகதையுடையர்.

(2) ரூபா 2424/- வருடாந்த திரட்டுச் சம்பளமாகவும் அதற்கு மேலும் பெறும் நிரந்தர ஊழியர்களுக்கு ஒரு நிதி வருடத்துக்கு 6 தனிப்பிரயாணச் சீட்டுக்களோ அல்லது மூன்று சோடி ஆணைச்சீட்டுக்களையோ இலங்கைப் புகையிரதப் பகுதியின் இரு புகையிரத நிலையங்கட்கு இடையில் பிரயாணம் செய்ய வழங்கலாம்.

(3) ரூபா 2424/- வுக்குக் குறைவான வருடாந்தத் திரட்டுச் சம்பளம் பெறும் ஊழியராயின் ஒரு சோடி அல்லது இரு தனிப் பிரயாணச் சீட்டுக்களுக்கு உரித்துடையர்.

(4) மாதச் சம்பளம் பெறும் தற்காலிக உத்தியோகத்தராயின் ஒரு வருட திருப்திகர சேவை செய்தபின், அவருக்கு ஒரு சோடி அல்லது இரு தனிப் பிரயாணச் சீட்டுக்கள் வழங்கப்படும்.

(5) சமயோசித லீவுக்கு உரித்துடைய நாட் சம்பள ஊழியராயின் ஒரு சோடி அல்லது இரு தனிப்பிரயாணச் சீட்டுக்கு உரித்துடையர்.

மாணவ ஆசிரியர், புகையிரத ஆணைப்பத்திரம் பெற உரிமையற்றவர். அரச ஊழியராயிருந்து ஒருவர் தற்காலிகமாக வேலை நீக்கத்துக்குட்பட்டிருந்தால், அவ் வூழியருக்கு பு, ஆ. பத்திரம் வழங்கப்படுவதில்லை. எனினும், கணவனும் மனைவியும் அரச சேவையிலிருந்தால் சேவையிலுள்ள தன்கணவன் / மனைவியின் உரித்து வழி வந்த புகையிரத பிரயாணச் சலுகை தற்காலிக வேலை நீக்கத்தில் உள்ள ஊழியர் பெறும் வாய்ப்பு உடையர்.

குறிப்பு:

தனிப் பிரயாணத்துக்கு வழங்கப்படும் ஆணைச்சீட்டைக் கொடுத்து மிகுதிப் பணத்தையும் கொடுத்து போய்த் திரும்பவும் வருவதற்கான டிக்கட்களைப் பெற முடியாது.

(3) வெளிநாடு சென்றுள்ள உத்தியோகத்தரின் குடும்பம்:

புலமைப் பரிசில் அல்லது கல்வி நெறிச் சம்பளம் பெற்று வெளிநாட்டில் தங்கியிருக்கும் உத்தியோகத்தரின் குடும்பத்தவர் இலங்கையில் இருப்பின், அவர்களுக்குரிய புகையிரத ஆணைச்சீட்டுக்களை வழமைபோல் வழங்கலாம். அந்த உத்தியோகத்தர் இலங்கைக்குத் திரும்பியபின் புகையிரத ஆணைப்பத்திரத்துக்கு உரித்துடையவராவர்.

(4) அண்டி வாழ்வோர்:

விவாகமாகாதவர், தாரமிழந்தவர், விதவை ஆகிய மூவரும் அத்தாட்சிப்படுத்தல் மூலம் அவரைத் தங்கிவாழும் தாய் அல்லது சகோதரி அல்லது இருவருக்கும் புகையிரத ஆணைப்பத்திரம் பெறலாம். அண்டி வாழ்வோருடைய மாதாந்த வருமானம் ரூ. 100/- அல்லது அதற்கு மேற்பட இருப்பினும், சகோதரி தொழில் புரிபவராய் இருப்பினும் இச்சலுகை வழங்கப்படமாட்டாது.

(5) குடும்பம்:

அரசாங்க ஊழியர் ஒருவர் தனக்கும், மனைவிக்கும் தன்னிற் தங்கி வாழும் பிள்ளைகட்கும் புகையிரத ஆணைப்பத்திரம் பெறலாம். ஆண் குழந்தைகள் 18 வயதை அடையும் பொழுதும், பெண் குழந்தைகள் விவாகமானபின்பும் இச்சலுகையை இழப்பர் ஆண், பெண், பிள்ளைகள் விவாகம் செய்தவுடன் இச்சலுகையை இழப்பர்.

(6) பிரயாண வகுப்பு:

ஊழியருக்கு உருத்துடைய அதே வகுப்பு ஆணைப்பத்திரத்திற்கும் உறங்கும் படுக்கை வசதிக்கும் அவரின் குடும்பத்தினரும் அருகதையுடையர்.

(7) பெண் ஊழியர்கள்:

கணவன், மனைவி இருவரும் அரச ஊழியராயிருப்பின் கணவன் தான் கடமை புரியும் பகுதியில் மனைவிக்கும் பிள்ளைகட்கும் புகையிரத ஆணைப்பத்திரத்திற்கு விண்ணப்பித்தல் வேண்டும். மனைவி உயர் வகுப்பிற் பிரயாணத்துக்கு உரித்துடையராயின், மனைவியின் சம்பள விபர அத்தாட்சிப் பத்திரத்தைக் கணவன் தன் அலுவலகத்திற்குச் சமர்ப்பித்து, அதே வகுப்பிற் பிரயாணஞ் செய்யும் சலுகையைப் பெறலாம். பிள்ளைகளும் பெற்ரோருடன் சேர்ந்து பிரயாணஞ் செய்கையில் உயர்வகுப்பிற் பிரயாணஞ் செய்யலாம். கணவன் தனித்துப் பிரயாணஞ் செய்யும்பொழுது அவர் தனக்குரித்துடைய வகுப்பில் மட்டும் பிரயாணஞ் செய்தல் வேண்டும். தந்தையோடு பிள்ளைகள் பிரயாணஞ் செய்யும்பொழுது தந்தைக்குரிய வகுப்பில் மட்டுமே பிரயாணஞ் செய்யலாம். தாயாருடன் பிரயாணஞ் செய்கையில் தாயாருக்குரிய வகுப்பில் பிரயாணஞ் செய்யலாம்.

3 வயதுக்குட்பட்ட குழந்தைகள் புகையிரத ஆணைப்பத்திரத்துக்கு உரித்துடையராகார். 3 வயதுக்கும் கூடியவராயும் 12 வயதுக்கும் குறைந்த வயதுடையவராயும் உள்ள குழந்தைகட்கு அரைப் பயணச் சீட்டு (half ticket) வழங்கப்படும்.

கணவன் கூட்டுத்தாபனத்திலோ, வர்த்தக ஸ்தாபனத்திலோ கடமை புரிவராயின் அவர் புகையிரத ஆணைப்பத்திரத்துக்கு உரித்தற்றவர். அவ்வாருன நிலையில் மனைவி தனது அலுவலகத்தில் ஆணைப்பத்திரத்தைப் பெறலாம்.

கணவன் ஒரு சோடி பு. ஆ. பத்திரத்திற்கு மட்டும் உரித்துடையவர் ஆயின் அவர் மனைவியின் மூலம் வரும் பு. ஆ. பத்திரச் சலுகையை அடையலாம். நிரந்தர மற்ற சேவையில் இருக்கும் கணவர் ஒருவர் தம் மனைவி நிரந்தர சேவையில் இருப்பின் (மனைவி கணவனிலும் கீழ் வகுப்புப் பிரயாண உரித்துடையவரான பொழுதும்) மனைவியின் மூலம் உரித்தாகும் பு. ஆ. சீட்டுரிமையை அனுபவிக்கலாம்.

விவாகமான எல்லா ஊழியரும் வருட ஆரம்பத்தில் துணைவர் / துணைவியின் தொழில், தொழில் முகவரி, இடம், வேதனம், தொழில் விபரம் முதலியனவற்றைத் திணைக்களத்திற்கு வெளிப்படுத்த வேண்டும்.

**(8) தற்காலிக வேலை நீக்கம்:**

தற்காலிக வேலை நீக்கத்திலிருக்கும் எந்த ஊழியருக்கும் மீண்டும் வேலையில் அமர்த்தப்படும் வரை புகையிரத ஆணைச்சீட்டு வழங்கப்படமாட்டாது. தாமே வேலையிலிருந்து விலகியதாகக் கருதப்படும் ஊழியருக்கும் இவ்விதி பொருந்தும்.

**(9) விகித சமன் முறையில் புகையிரத ஆணைச் சீட்டு வழங்கல்:**

(அ) நிரந்தர சேவையில் உள்ள ஊழியர் ஒருவருக்கு அந்த நிதி ஆண்டில் மீதமாயுள்ள மாதங்களின் அடிப்படையில் புகையிரத ஆணைச் சீட்டு வழங்கலாம்.

(ஆ) தற்காலிக நியமனத்தில் இருக்கும் ஒருவர் நிரந்தர சேவைக்கு நியமிக்கப்பட்டால், தற்காலிக நியமன காலத்திற்குப் புகையிரத ஆணைச் சீட்டுக்கு உரித்துடையராகார். எனினும், நிரந்தரமாக்கப்பட்ட திகதியிலிருந்து விகித சமன்முறையில் புகையிரத ஆணைச்சீட்டுப் பெறலாம்.

உதாரணம்: நிதி ஆண்டின் எட்டாம் மாதம் நிரந்தர சேவையில் அமர்த்தப்படும் ஒருவருக்கு ஒரு சோடி பு. ஆ. சீட்டு வழங்கப்படல் வேண்டும்.

(இ) நிதி ஆண்டு நடைபெறும்பொழுது ஓய்வு பெறும் ஊழியர் ஓய்வு பெறும் திகதிவரை உள்ள நிதி ஆண்டுப் பகுதிக்குரிய விகித சமன் முறையில் புகையிரத ஆணைச் சீட்டுக்களைப் பெறுவர்.

(ஈ) இல: 2-ல் கூறப்பட்டுள்ள தகைமை உடைய ஊழியர் நிதியாண்டு நடைபெறும்பொழுது விவாகஞ் செய்தால் விவாக திகதியிலிருந்து மீதமாயுள்ள நிதியாண்டுப் பகுதிக்குரிய புகையிரத ஆணைச்சீட்டை விகிதசமன் முறையில் பெறுவர். ஊழியர் தன்னிற் தங்கி வாழும் தாய் / சகோதரி ஆகியோருக்குரிய புகையிரத ஆணைச்சீட்டுக்களில் பெறப்பட்டவை போக மீதமாயிருப்பதை விகிதசமன் முறையில் மனைவிக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

(உ) இல: 3-ல் கூறப்பட்டுள்ள தகைமை உடைய ஊழியர் மணஞ்செய்தால் அவர் மனைவியும் ஒரு சோடி புகையிரத ஆணைச்சீட்டுக்கு உரித்துடையவராவர். இங்கும் முன்கூறியபடி தாய் / சகோதரி அல்லது இருவருக்கும் வழங்கப்பட்டவை நீங்கி, மிகுதியில் விகிதசமன் முறையில் பெறலாம்.

**(10) கோட்டுமூலம் சட்ட நிபந்தனையில் பிரிந்திருப்பவர்:**

விவாகமாகிப் பின் சட்டத்திற்கமைவாகப் பிரிந்து வாழ்பவர்கள் இருவரும் அரச ஊழியஞ் செய்பவராயின், தத்தம் உரிமைப்படி புகையிரத ஆணைச்சீட்டைப் பெறுவர். சட்டமூலம் நீதிஸ்தலத்தில் ஏற்றுக்கொண்டு பிரிந்து வாழ்பவர்களையே இங்கு குறிப்பிடப்படுகின்றது. இதற்கு அங்கீகரிக்கப்பட்ட நீதிஸ்தலத்திலிருந்து பெறப்பட்ட தீர்ப்பின் பிரதி சமர்ப்பிக்கப்படல் வேண்டியதவசியம். இவர்களின் பிள்ளை கட்குரிய புகையிரத ஆணைச்சீட்டு குழந்தைகள் யாருடைய பாதுகாப்பில் வைக்கப் பட்டுள்ளார்களோ அவரால் அவருடைய திணைக்களத்திலிருந்து பெறப்படலாம்.

**(11) இந்து சமய ஆசாரப்படி நிகழ்ந்த விவாகம்:**

இந்து சமய ஆசாரப்படி விவாகம் சமூக நோக்கில் ஏற்கப்படுவதாயின் புகை யிரத ஆணைச்சீட்டு வழங்குவதற்கு அங்கீகரிக்கப்படமாட்டாது. இந்துசமய ஆசாரப் படி நிகழ்ந்த திருமணமாயின் திருமணஞ் செய்துகொண்டவர்கள் வாழும் பகுதியைப் பரிபாலிக்கும் பகுதி நீதிமன்றம் (District Court) அதனை அங்கீகரித்து உறுதியுரை வழங்கப்பட்டதாயிருத்தல் அவசியம். விவாகப் பதிவின் மூலம் வரும் உரிமைகளைப் பெறுவதற்கு சமய ஆசார முறைப்படி விவாகஞ் செய்தோர் நீதிஸ்தலத் தீர்ப்புப் பிரதி இணைத்தல் அவசியம்.

**(12) தத்தெடுத்த பிள்ளைகளும், சகோதரரின் பிள்ளைகளும் (பெருமக்கள்)**

பெருமகன் / மகள் என்போர் புகையிரத ஆணைச்சீட்டிற்கு உரிமையற்றவர். மேலதிகாரிகள் ஊழியரால் சமர்ப்பிக்கப்படும் அத்தாட்சிகளை ஏற்றுத் திருப்திப்படின் தத்தெடுத்து வளர்க்கப்படும் பிள்ளைக்குப் புகையிரத ஆணைச்சீட்டு வழங்கப்படல் வேண்டும். தத்தெடுத்தல் நீதிமன்றத்தினுல் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

**(13) சேவையிலிருந்து ஓய்வு பெற்று ஓய்வு வேதனம் பெறுவோரின் துணைவர்:**

ஓய்வு பெறும் ஆண்டின் செப்டம்பர் மாதத்தின் பின் ஓய்வு பெற்ருலன்றி ஏனையவர் ஓய்வுபெற்றிருப்பின் ஒரு நிதி ஆண்டிற்கு ஒரு சோடி புகையிரத ஆணைச்சீட்டிற்கு உரித் தாவர். ஓய்வு பெற்றவரின் கணவன் / மனைவி தனக்குரிய மூன்று சோடி அல்லது ஆறு தனிப்பிரயாண ஆணைச்சீட்டுக்களைப் பெறலாம். நிரந்தர சேவையில் உள்ள ஊழியர் தன் கணவன் / மனைவிக்குத் தனது சேவைச் சலுகையின் மூலம் ஓய்வு பெற்றுள்ள தன் துணைவருக்கு மூன்று சோடி புகையிரத ஆணைச்சீட்டைப் பெற உரித்துடையர்.

ஓய்வில் உள்ளவர் தனது சொந்த உரிமைமூலம் ஒரு சோடி புகையிரத ஆணைச் சீட்டிற்கு உரித்துடையர். எனினும் அதனை அவர் துறக்கும் பட்சத்தில் சேவை யிலிருக்கும் தனது கணவன் / மனைவி மூலம் 3 சோடி புகையிரத ஆணைச்சீட்டுகளைப் பெறலாம். இவ்வுரிமையைப் பெறுவதற்குத் தனது சொந்த உரிமையான ஒரு சோடி புகையிரத ஆணைச்சீட்டை இழக்க விரும்புவதைச் சேவையில் உள்ள தம் கணவன் / மனையின் திணைக்களத்திற்குத் தெரியப்படுத்தல் வேண்டும். அவ்வாறு தெரியப்படுத்தித் தனது கோரிக்கை ஏற்றுக்கொண்டமைக்குரிய அத்தாட்சிப்படுத்தும் கடிதத்தை ஓய்வு வேதனம் வழங்கும் கச்சேரிக்கு அனுப்பித் தெரியப்படுத்தல் வேண்டும். இவ்வாறு பிரகடனப்படுத்தப்பட்டவுடன் ஓய்வில் இருப்பவர் அவர் துணைவர் / துணைவி இரு வருக்கும் தெரியப்படுத்துவதுடன் சேவையில் உள்ளவர் ஓய்விலிருப்பவருக்கும் தன் உரிமை ஆதிக்கத்தின் கீழ் 2 சோடி பு. ஆ. சீட்டுக்கள் பெறலாம்.

**(14) பயன்படுத்தப்படாத பு. ஆணைச்சீட்டு, பிரயாணச்சீட்டு (Tickets) பணம் மீட்டல்:**

புகையிரத ஆணைச்சீட்டுப் பயன்படுத்தக்கூடிய கடைசித் திகதியிலிருந்து மூன்று நாட்களுள் அதனை வழங்கிய உத்தியோகத்தருக்கு அனுப்பப்படுதல் வேண்டும். உபயோகிக்கப்படாத புகையிரத ஆணைச்சீட்டு அடிக்கட்டையுடன் ஒட்டப்பட்டுப் பய னற்றதாக்கப்படல் வேண்டும். புகையிரத ஆணைச்சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளவர்களுள் எவரும் பிரயாணஞ் செய்ய முடியாதபடி எதிர்பாராத கஷ்டங்கள் ஏற்படுமிடத்து புகை யிரத ஆணைப்பத்திரத்தின் பின்புறத்தில் பிரயாணஞ் செய்யாதவர்களின் பெயர் விபரங் களை (புகையிரத ஆணைப்பத்திரம் பெறுபவர்) குறித்து ஒப்பமிட்டபின் புகையிரத நிலையத் தில் ஒப்படைக்கவேண்டும். புகையிரத ஆணைச்சீட்டில் கூறப்பட்டுள்ள இரு புகையிரத நிலையங்கள் தவிர்ந்த இரண்டிற்கும் இடையில் உள்ள வேறு நிலையத்தில் ஏறுவதோ அல்லது இறங்குவதோ திட்டமாயிருந்தால், பின்புறத்தில் நிலையமாற்றம் குறிக்கப்பட்டு ஒப்பமிட்டபின்பே நிலைய அதிகாரிகளிடம் சமர்ப்பித்தல் வேண்டும். ஒரு பிரயாணச் சீட்டு (Ticket) பயன்படுத்தப்படாதவிடத்து, புகையிரத நிலையப் பொறுப்பதிகாரியிடம் (O. I. C) கொடுத்து அவரது ஒப்பத்தைப் பெறல் வேண்டும். அந்தப் பயணச்சீட்டு வித்தியாதிபதிக்கு (D/E) முறைப்பாட்டுடன் சமர்ப்பிக்கப்படும். அங்கிருந்து புகை யிரதப்பகுதி மா அதிகாரி (G. M. R.) க்கு அனுப்பப்பட்டு கணக்கில் குறிக்கப்பட்டபின் புதிய ஆணைச்சீட்டு இதற்காக வழங்கப்படலாம். ஒருவர் பெயரில் பெறப்படும் புகை யிரத ஆணைச்சீட்டு மற்றவருக்கு மாற்றப்படக் கூடியதல்ல. புகையிரத ஆணைப்பத்திரம் அல்லது பிரயாணச்சீட்டுப் பிறரால் பயன்படுத்தப்படுதல் கண்டுபிடிக்கப்படின் வேலை நீக்கஞ் செய்யப்படுவர். அல்லது அதற்கு மேலான தண்டனை வழங்கப்படும்.

(15) ஊழியர் அல்லது ஆசிரியர் ஒருவர் உத்தியோக மாற்றம் பெறுமிடத்து அவ்வாசிரியரின் தலைமை ஆசிரியர் மாற்றம் பெற்றுச் செல்லும் ஊழியருக்குப் புகையிரத ஆணைப்பத்திரம் வழங்கப்பட்ட விபரங்கள் அடங்கிய அறிக்கை ஒன்றினைப் புதிய பாடசாலைக்கு அனுப்புதல் வேண்டும். இரு பாடசாலையிலும் இவ்வறிக்கை அனுப்பப்பட்ட மைக்கான பதிவுகள் செய்யப்படல் வேண்டும்.

முன் கடமை புரிந்த பாடசாலைத் தலைவரிடமிருந்து மேற்கூறிய அறிக்கை கிடைக்கும்வரை புகையிரத ஆணைப்பத்திரத்தை வழங்கக்கூடாது. புதிய பாடசாலைத் தலைவர் அறிக்கை கிடைக்காதவிடத்து ஆசிரியர் முன்னர் சேவைபுரிந்த பாடசாலைத் தலைவருடன் தொடர்பு கொள்ளுதல் வேண்டும். தொடர்புக் கடிதப்பிரதி வித்தியாதி பதிக்கும் அனுப்பப்படுதல் வேண்டும்.

**(16) கடமை காரணமான பிரயாணம்:**

பலாலி ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை அதிபர் தவிர்ந்த வேறு எந்தப் பாட சாலைத் தலைவரும் கடமையிற் செல்வதற்குரிய பிரயாண ஆணைப்பத்திரம் வழங்கமுடி யாது. குறிப்பிட்ட ஓர் ஆசிரியரை எந்தக்காரணத்திற்காகவும் கல்வி அமைச்சினுல் அழைக்கப்பட்டாலும் கடமை காரணமான பிரயாணத்திற்குரிய பு. ஆ. பத்திரம் பெறு வதற்குரிய விண்ணப்பம் வித்தியாதிபதிக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

கடமை காரணமாகப் பிரயாண ஆணைப்பத்திரம் பெறும் ஆசிரியர் பத்திரத்திற் குறிக்கப்பட்டுள்ள திகதியில் மட்டுமே பிரயாணஞ் செய்தல் வேண்டும். முன் திகதியிலோ பின் திகதியிலோ பிரயாணஞ் செய்திருப்பின் பிரயாணச் செலவு ஊழியரிடமிருந்து அறவிடப்படும்.

## (17) தொழிற் சங்கம்

வருடாந்தப் பொதுக்கூட்டத்திற்குப் பங்குபெற உரிமையுடையோர்க்குக் கடமை காரணமான பிரயாண ஆணைச்சீட்டு வழங்கப்படலாம். ஒரு சில தொழிற்சங்கங்களின் வருடாந்தப் பொதுக்கூட்டத்திற்குத் தெரிவு செய்யப் பட்ட பிரதிநிதிகள் மட்டுமே பங்கு பற்றும் உரிமையுடையராயிருப்பர். இதனைக் கருத்திற் கொள்ளவேண்டும். ஒவ்வொரு பாடசாலையிலிருந்து பங்குபெற விரும்புவோரால் ஒப்பமிடப்பட்ட விண்ணப்பம், வித்யாதிபதி, நிருவாகக் கிளைக்கு அனுப்பப்படுதல் வேண்டும். கல்வி அமைச்சரின் பணிப்பின் பிரகாரம் அவரைப் பேட்டிகாண விருப்பவர்கள் கொண்ட தூதுகோஷ்டி (குழு) அல்லது திணைக்கள அதிபர் அல்லது ஊழியருக்கும் கடமை காரணமாகச் செல்லும் புகையிரதஆணைப்பத்திரம் வழங்கப்படலாம். இவ்வாருன சந்தர்ப்பத்தில் மந்திரி அவர்களிடமிருந்து பெற்ற அழைப்புக் கடிதப்பிரதி, ஊழியர் அங்கம் வகிக்கும் தொழிற் சங்கச் செயலாளரிடமிருந்து குறிப்பிட்ட ஊழியர் தொழிற்சங்கத்தில் அங்கம் வகிப்பதனையும், குழுவில் அங்கம் வகிப்பதனையும், உறுதிப்படுத்தி புகையிரத ஆணைப்பத்திரத்திற்கு விண்ணப்பிக்கும் கடிதமும் விண்ணப்பத்துடன் பெற்று இணைக்கப்படல் வேண்டும். உத்தியோகத்தர் உரிமைப்படி 1-ம், 2-ம், 3-ம் வகுப்பிற்குரிய பிரயாணச் சீட்டுப் பெறலாம்.

## (18) குளிரூட்டப்பட்ட வண்டியிற் பிரயாணஞ் செய்தல்

குளிரூட்டப்பட்ட வண்டிப் பிரயாணமும், 1-ஆம் வகுப்புப் படுக்கை வசதிப்பிரயாணமும் ஒரே செலவுமுடிப்பு உடையனவாயிருத்தலால், 1-ஆம் வகுப்புப்படுக்கை வசதி பெற உரித்துடையோர் இக்குளிரூட்டி வண்டியிற் பிரயாணஞ் செய்ய அனுமதிக்கப் படுவர். புகையிரத ஆணைப்பத்திரத்தில் படுக்கைவசதி எனக் குறிப்பிடாமல் குளிரூட்டப்பட்ட வண்டிப் பிரயாணச்சீட்டு எனக் குறித்தல் வேண்டும். கடமை காரணமான பிரயாணமும் இவ்வண்டியிற் செய்யும் உரிமை பெறலாம்.

## (19) விமான மூலம் பிரயாணம்

உள்நாட்டில் நிகழ்த்தப்படும் விமான சேவையில் பிரயாணஞ் செய்யப் புகையிரத ஆணைப்பத்திரத்தை இலங்கை விமானசேவையினர் ஏற்றுக் கொள்ளுவதால், ஆணைப் பத்திர விண்ணப்பத்தின் மேலே சிவப்பு மையினுல் ஆகாய விமான பிரயாண விண்ணப்பம் (Application for Air Travel) எனக்குறிப்பிடல் வேண்டும். ஆணைப்பத்திரத்திற்குக் குறுக்கே விமானப் பயணத்திற்கு வழங்கப்பட்டது (Issued for Air Travel) என சிவப்பு மையினுல் எழுதப்படல் வேண்டும். இக்குறிப்பு புகையிரத ஆணைப்பத்திரம் வழங்க உரிமையுடைய உத்தியோகத்தரால் ஒப்பமிடப்படல் வேண்டும்.

## (19) a புகையிரத ஆணைச்சீட்டு பங்கிடுதல் - பிரித்து உபயோகித்தல்

மாத்தறை அல்லது கண்டியிலிருக்கும் ஒருவர் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு விமானப் பயணஞ் செய்ய விரும்பின் அவருக்கு இரத்மலானை வரையான பிரயாணத்திற்கு ஒரு ஆணைப்பத்திரமும், இரத்மலானையிலிருந்து யாழ்ப்பாணம் வரை ஒரு ஆணைப்பத்திரமும் வழங்கப்படலாம். இது ½ சோடியாகக் கணிக்கப்படும். ½ சோடி இரத்மலானை யாழ்ப்பாண விமானப் பயணச் செலவைச் சமன் செய்யாதாயின் மேலதிகமான தனிப் பிரயாண ஆணைப்பத்திரம் வழங்கப்படல் வேண்டும். இது ஊழியரின் முழு உரிமைப்பத்திரங்களிலிருந்து கழிக்கப்படும்.

(19) b வழங்கப்படும் எல்லைகள்

விமானத் தளத்திற்கு அருகாமையிலிருக்கும் புகையிரத நிலையத்திற்கு மட்டுமே புகையிரத ஆணைப்பத்திரம் வழங்கப்படலாம், யாழ்ப்பாணம் - கொழும்பிற்கான விமானப்பயணத்திற்கு காங்கேசன் துறை - இரத்மலானை புகையிரத நிலையங்களுக்கே வழங்கப்படும். காங்கேசன்துறை - மாத்தறைக்கிடையிலான பிரயாணத்திற்கு வழங்கப்பட்ட விமானப் பயணப்பத்திரம் யாழ்ப்பாணம் - கொழும்பு விமானப் பயணத்திற்குப் பயன்படுத்தப்பட முடியாது.

(19) c புகையிரதப் பிரயாணத்திற்கு 3 வயதுக்குக் குறைந்த பிள்ளைக்கு ஆணைப் பத்திரம் வழங்கப்படுவதில்லை. எனினும் விமானப் பயணத்திற்கு மட்டும் 3 வயதிற்குக் குறைந்த பிள்ளைக்கு ஆணைப்பத்திரம் வழங்கப்படுகிறது.

மூன்று வயதிற்குக் குறைந்த பிள்ளைகள்

| | |
|---|---|
| (1) 1 - ஆவது பிள்ளைக்கு (முழுப்பணஞ் செலுத்தும் பிரயாணியுடன் சென்றால்) | முழுச்செலவில் 10 % |
| (2) 2 - ஆவது பிள்ளைக்கு | முழுச்செலவில் 50 % |
| (3) 12 வயதுக்குட்பட்ட எல்லாப் பிள்ளைகட்கும் | முழுச்செலவில் 50 % |

(19) d புறநடை

(1) ஓய்வு பெற்றிருப்பவர் தனக்கு வழங்கப்படும் புகையிரத ஆணைப் பத்திரத்தை விமானப் பயணத்திற்குப் பயன்படுத்த முடியாது.

(2) தொழிற்சங்க நடவடிக்கைக்காக வழங்கப்பட்ட புகையிரத ஆணைப்பத்திரம் 1- ஆம் வகுப்பிற்குரியதாயினும் விமானப் பயணத்திற்குப் பயன் படுத்த முடியாது இச்சலுகை காரியாலயப் பாவனைக்குப் மட்டுமே பொருந்தும்.

(20) புகையிரத ஆணைச்சீட்டில் விபரங்கள் நிரப்புதல்

ஊழியர் பெயர், பதவி, பயணஞ் செய்யும் ஏனையோர் விபரங்கள் ஊழியருக்கும் அவர்களுக்குமிடையேயுள்ள உறவு, பிரயாணஞ் செய்யும் நிலையங்கள், நிதி ஒதுக்கீட்டுச் செலவுத் தலையங்கங்கள், பிரயாணத்தின் தன்மை, விடுமுறை, கடமை, வழங்கப்பட்ட பிரயாணத் திகதிகள் ஆகிய விபரங்கள் சரியாகத் தரப்பட்டு வழங்க அதிகாரம் பெற்ற அதிகாரியால் ஒப்பமிடப்படல் வேண்டும். அவ்வதிகாரி பிரசன்னமாயிராதவிடத்து மட்டும், அவரின் உதவியாளர் ஒப்பம் இடலாம். பாடசாலைப் பெயர், விலாசம் றப்பர்ஸ்ராம்பு குத்தல் எழுத மறத்தலைத் தவிர்க்க உதவும்.

(21) அடிக்கட்டைப் பதிவுப்புத்தகம்

புகையிரத ஆணைப்பத்திரப் புத்தகம் பெற்றவுடன் உரிய பக்கத்தில் பதிவுப் புத்தகத்தில் பதிதல் வேண்டும்.

(22) A - 18 படிவத்தில் விண்ணப்பித்தல் அவசியம். இவை கோவையில் இடப்பட்டு எண் இடப்பட்டு இருத்தல் வேண்டும், இவ் எண்ணைப் புகையிரத ஆணைப்பத்திரப் புத்தகத்தின் அடிக்கட்டையில் குறிப்பிடல் பதிவுப் புத்தகப் பக்க எண்ணை விண்ணப்பத்திலும் அடிக்கட்டையிலும் குறித்தல் ஒப்பீட்டுப் பார்வையிடும் வேலையைச் சுலபமாக்கும். எச்சந்தர்ப்பத்திலும் விண்ணப்பம் A - 18 படிவத்தில் பெருமல் புகையிரத ஆணைப்பத்திரம் வழங்கப் படக் கூடாது.

(23) பதிவுப் புத்தகம்

நீல அட்டையில் பதிதல் முறை எல்லாப் பாடசாலைகளிலும் நீக்கப்படல் வேண்டும். (General 164) பதிவுப் புத்தகத்தில் திருப்திகரமாக அன்ருடம் பதிந்து வைத்தல் வேண்டும்.

(24) மேலதிகச் செலவு அறவிடல்

தவருக வழங்கப்படும் புகையிரத ஆணைப் பத்திரத்தினுல் ஏற்படும் செலவு வழங்கு உத்தியோகத்தரிட மிருந்து அறவிடப்படும். மோசடி செய்யும் நோக்கமாக வழங்கப்பட்டிருத்தல் காணப்படின் வேலைநீக்கம் செய்யப்படும்.

(25) சம்பளமும் பிரயாண வகுப்பும்

1 - ஆம் வகுப்பு — ரூ. 6,780/- வருடத்திற்குத் திரட்டுச் சம்பளம் அல்லது அதற்கு மேல் பெறுபவர்.

2-ஆம் வகுப்பு (A) ரூ. 3,360/- வருடத்திற்குத் திரட்டுச் சம்பளம் அல்லது அதற்கு மேல் பெறுபவர்.

(B) ஆண்கள்: ரூ. 3,840/- உச்ச திரட்டுச் சம்பளம் அல்லது அதற்கு மேல் பெறுபவர்.

(C) பெண்கள்: ரூ. 3,600/- உச்ச திரட்டுச் சம்பளம் அல்லது அதற்கு மேல் பெறுபவர்.

3- ஆம் வகுப்பு - ஏனையவர்.

# தொழிற் சங்கம்

**பதிவு செய்யப்பட்ட தொழிற் சங்கத்துக்குப் பின்வரும் உரிமைகள் வழங்கப் பட்டுள்ளன.**

(1) சம்பளப் பட்டியலில் இருந்து உறுப்பினர்களது சந்தாப் பணத்தைக் கழித்தல். இதற்குக் குறிப்பிட்ட உறுப்பினர் சம்மதக் கடிதம் கொடுத்திருக்க வேண்டும். இடைக்காலத்தில், தான் முதற் கொடுத்த சம்மதத்தை மாற்றிச் சந்தாப் பணத் தைக் கழிக்க வேண்டாமெனத் திணைக்களத் தலைவரை ஒரு உறுப்பினர் கோரி னால் இக் கழிவு எவ்வித தடையுமின்றி, திணைக்களத் தலைவரால் நிறுத்தப்படும்.

(2) தொழிற் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டத்திற்குச் சென்றுவரக் கடமை இல வசப் புகையிரத ஆணைச் சீட்டும் ஒரு நாட் கடமை லீவும் பெறப் பதிவு செய் யப்பட்ட தொழிற் சங்கத்தின் உறுப்பினர்க்கு உரிமையுண்டு.

(3) அமைச்சரையோ, அமைச்சின் செயலாளரையோ அன்றித் திணைக்களத் தலை வரையோ, அவரிடமிருந்து முற்கூட்டியே பெறப்பட்ட சம்மதத்துடன் தொழிற் சங்கரீதியாகப் பேட்டி காணச் செல்லும் சங்க உத்தியோகத்தர் குழுவிற்குக் கடமை இலவசப் புகையிரத ஆணைச் சீட்டும் கடமை லீவும் பெற உரித்துண்டு. இக் குழுவில் மூவருக்கு மாத்திரமே இவ்வுரித்து வழங்கப்பட்டுள்ளது.

(4) ஒரு தொழிற் சங்கத்தின் தாய்ச் சங்க முக்கிய உத்தியோகத்தர்களுக்குச் சங்க வேலைகளைக் கவனிப்பதற்கு வசதியளிக்கு முகமாகச் சங்கத் தலைமைக் காரி யாலத்துக்கு அண்மையில் இடமாற்றம் பெற உரித்துண்டு. சாதாரண இட மாற்றத் திட்டங்களுக்குள் இவர்கள் அடங்கார். ஆனால், பதவியுயர்வு காரண மாகச் செய்யப்படும் இடமாற்றங்களின் போது இச் சலுகை மறுக்கப்படலாம். சேவையின் அத்தியாவசியம் கருதியும் இது மறுக்கப்படலாம். தொழிற் சங் கத்தின் உறுப்பினர் தொகையும் இச் சலுகை அளிக்கு முன் கவனிக்கப்படும். ஒருவருக்கு எப்பதவி காரணமாக இச் சலுகை அளிக்கப்பட்டதோ, அப் பதவி யின்றும் அவர் விலகியதும் அவர் அவ்விடமாற்றத்துக்கு உட்படுத்தப்படுவார்.

(5) (அ) ஆயிரத்துக்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட தொழிற் சங்கமாயின் ஒருவரையும், மூவாயிரத்துக்கு மேற்பட்ட உறுப்பினராயின் இருவரையும் அவர் களது சாதாரண கடமைகளில் இருந்து பொது நிர்வாக அதிபதியின் அனுமதி யுடன் முழு நேரமும் தொழிற் சங்க வேலைகளைச் செய்வதற்காக விடுவிக்கலாம். சேவையின் அத்தியாவசியம் கருதி இது மறுக்கப்படவும் கூடும். இப்படி முழு நேரத் தொழிற் சங்க வேலைகளுக்காக விடுவிக்கப்படுவோரின் சம்பளத்தில் அடிப்படைச் சம்பளமும் 25% விதமும் கழிக்கப்பட்டு மிகுதிப் பணமே அரசாங் கத்தால் வழங்கப்படும். மிகுதிப் பணம் சங்க நிதியிலிருந்து வழங்கப்படலாம்.

(ஆ) சம்மேளனமாயின் இருவர் முழுச் சம்பளத்துடன் முழு நேரச் சம்மேளன வேலைகளுக்கு விடுவிக்கப்படலாம்.

(6) ஒரு திணைக்களத்தின் கீழ்ச் சேவையிலிருக்கும் ஊழியரில் 15%க்கு மேற்பட்ட ஊழியரை உறுப்பினராகக் கொண்ட தொழிற் சங்கத்தின் பிரதிநிதி ஒருவர் இடமாற்றச் சபையில் இடம் பெற அனுமதிக்கப்படுவார். அமைச்சு திணைக் களங்கள், உப காரியாலயங்கள் அனைத்திலுமுள்ள இடமாற்றச் சபைகளில் பிரதி நிதிகளை இடம் பெறச் செய்ய இவ்வாறான தொழிற் சங்கங்களுக்கு உரித்துண்டு.

(7) அமைச்சினாலோ அன்றித் திணைக்களத்தினாலோ வெளியிடப்படும் சுற்று நிரு பங்களில், தொழிற் சங்கங்களைப் பாதிக்கக் கூடியவை அன்றித் தொழிற்சங் கங்களின் ஆலோசனைகள் பெறப்பட வேண்டியவை இருப்பின் அவற்றின் ஒவ்வோர் பிரதிகள் இலவசமாகத் தொழிற் சங்கங்களுக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

# பொது அறிவு

## உள்நாட்டு வெளிநாட்டுத் தற்கால நிலை

(சுருக்கமான குறிப்புகள்)

**1. ஐரோப்பிய பொதுச் சந்தை:**

ஐரோப்பிய நாடுகளை மட்டும் அங்கத்தவர்களாகக் கொண்ட வியாபாரக் கூட்டுத்தாபனம். இதன் அங்கத்துவ நாடுகள் பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, பெல்ஜியம், நெதர்லாந்து, லக்சம்பேர்க் என்பன. 1971-ல் இருந்து பிரித்தானியா, அயர்லாந்து, டென்மார்க் போன்ற நாடுகள் சேர்ந்தன.

நோக்கம்: (1) நாடுகளுக்கிடையிலான சுங்க வரிகள் படிப்படியாக ஒழிக்கப்படல்.

(2) பொருளாதார சமூகக் கொள்கைகளில் ஒற்றுமை காணல்.

(3) அந்நிய நாட்டுப் பொருட்களுக்கு ஒரேவிதமான வரிகள் விதித்தல்.

(4) பொதுவான விவசாயக் கொள்கை.

(5) எந்தப் பிரசையும் எவ் அங்கத்துவ நாடுகளிலும் குடியிருக்கவோ, முதலீடு செய்யவோ முடியாது. 1961-ல் பிரித்தானியா சேர்வதை பிரான்ஸ் எதிர்த்தது.

காரணம்: பிரித்தானிய விவசாயப் பொருட்கள் பாதுகாப்பு — பொதுநலவாய நாடுகளுடன் உள்ள தொடர்பு — இலங்கையின் பொருளாதாரம் — பிரித்தானியா சேர்வதால் பாதிக்கப்படும்.

**2. கேர்ட் வல்ட் ஹயிம்:**

இவர் அவுஸ்திரியாவின் வெளிநாட்டு அமைச்சராக இருந்தவர். 1971-ம் ஆண்டில் ஊ-தாண்ட் விலகியதும் ஐ. நா. சபையின் செயலாளர் நாயகமாகத் தெரிவுசெய்யப்பட்டார். ஐரோப்பிய நாடுகளுக்கிடையே வியாபார உறவுகளை ஏற்படுத்த ஆர்வமுடையவராக இருந்தவர். ஐ. நா. உலக சமாதானத்தை நிலைநாட்டும் என்பதில் நம்பிக்கையுடையவர். உலகத்தின் எப்பகுதியில் அமைதியின்மை காணப்பட்டாலும் தாம் அங்கு சென்று சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான சாத்தியங்களை ஆராயத் தயார் என அறிவித்துள்ளார். உலக வல்லரசுகள் தமது பிரச்சினைகளைப் போர்க்களத்திலன்றி ஐ. நா. வில் பேசித்தீர்க்க வேண்டுமெனக் கேட்டுள்ளார்.

**3. இடி அமீன்:**

மில்டன் ஒபோட்டோ உகண்டாவின் ஜனாதிபதியாக இருந்தபோது அவரின் இராணுவத் தளபதியாக இருந்தவர். ஒபோட்டோ நாட்டிலில்லாதபோது 1971-ம் ஆண்டு ஜனவரி புரட்சி மூலம் பதவிக்கு வந்தவர். பதவிக்கு வந்ததும் அரசியல் கைதிகளை விடுதலை செய்தார். விரைவில் தேர்தல் நடாத்துவதாக அறிவித்தார்.

முன்னைய அரசாங்கம் செய்துகொண்ட உடன்படிக்கைகளை மதிப்பதாகவும், ஐ. நா. பொதுநலவாயம், ஆபிரிக்க ஐக்கியம் இவற்றில் நம்பிக்கையுடையவரெனவும் அறிவித்தார்.

பின்னர் ஆபிரிக்கா ஆபிரிக்கர்களுக்கே, ஆசியர்களே வெளியேறு எனக் கோசமிட்டு 40 ஆயிரம் பிரித்தானிய பாஸ்போட்டுள்ள ஆசியர்களை நாட்டைவிட்டு வெளியேறுமாறு கட்டளையிட்டார். உகண்டா பிரசாஉரிமை உள்ள ஆசியாக்காரர் நாட்டுப்புறத்துக்குச் சென்று வசிக்கவேண்டுமெனவும் கட்டளையிட்டார்.

## 4. அலிபூட்டோ:

மேற்குப் பாகிஸ்தானின் தற்போதைய ஜனாதிபதி பதவியிலுள்ள அலி-பூட்டோ 45 வயதுடையவர். கலிபோர்னியா, ஒக்ஸ்போட் பல்கலைக் கழகங்களில் பயின்று பட்டம் பெற்றார்.

ஐயூப்கானின் அமைச்சரவையில் 8 ஆண்டுகள் அமைச்சராகவும் இறுதியில் வெளிநாட்டு அமைச்சராகவும் சேவை செய்தார். 1968-ல் ஐயூப்கானால் சிறையிலிடப் பட்டார். மக்களின் எழுச்சியினால் 4 மாதங்களின்பின் சிறையினின்றும் விடுவிக்கப் பட்டார்.

ஐயூப்கான் பதவியை விட்டு விலகியபின் யாகியாகான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். 1970-ல் பொதுத்தேர்தலை நடத்த உத்தரவிட்டார். அதன்படி மேற்குப் பாகிஸ்தானில் அலி-பூட்டோவின் மக்கள் கட்சி அதிக ஆசனங்களைப் பெற்றது. கிழக்குப் பாகிஸ்தானின் தலைவர் முஜீப்புர் றஹ்மானின் கட்சி அலி-பூட்டோ பெற்ற ஆசனங் களிலும் பார்க்கக்கூடிய ஆசனங்களைப் பெற்று முன்னணியில் நின்றது. இதன் காரணமாக மேற்கு—கிழக்கு பாகிஸ்தான் தலைவர்களுக்கிடையே ஏற்பட்ட கருத்து வேற்றுமை காரணமாக கிழக்குப் பாகிஸ்தான் மீது யாகியாகான் இராணுவத்தை ஏவிவிட்டார். அலி-பூட்டோவும் உடந்தையாக இருந்தார். பூட்டோ இந்தியாவுக்கு எதிராகவும், சீனாவுக்குச் சார்பாகவும் உள்ளவர். கிழக்குப் பாகிஸ்தான் மேற்குப் பாகிஸ்தானிலிருந்து பிரிவதை விரும்பாதவர். இந்தியாவின் உதவியுடன் கிழக்குப் பாகிஸ்தான் வெற்றிவாகை சூடியதும் மேற்குப் பாகிஸ்தான் படைகள் சிறைபிடிக் கப்பட்டு இந்தியாவுக்குக் கொண்டுவரப்பட்டன. யாகியாகானின் ஆட்சி கவிழ்ந்தது. மேற்குப் பாகிஸ்தானின் ஆட்சிப் பொறுப்பை அலி-பூட்டோ ஏற்றார். ஏற்றதும் நாட்டை முன்னேற்றுவதற்காக, காணிச் சீர்திருத்தம், கைத்தொழில், தேசீயமயம், சிம்லா உடன்படிக்கை, புதிய அரசியல் திட்டம் போன்றவைகளை நிறைவேற்றி யுள்ளார்.

## 5. மதியுரைக் குழுக்கள்:

புகைவண்டித் திணைக்களம் தவிர்ந்த ஏனைய திணைக்களங்கள், சட்டமுறைச் சபைகள், தேசீயமயமான வங்கிகள், பல்கலைக்கழகங்கள். கைத்தொழில் கூட்டுத் தாபனங்கள் தவிர்ந்த ஏனைய கூட்டுத்தாபனங்களில் தேர்தல் மூலம் தெரிவுசெய் யப்படும். பதவி உத்தியோகத்தர் பங்குபற்ற முடியாது. வேலைத் தலங்களிலுள்ள திறமையின்மை, தீச்செயல் ஆகியவற்றை முகாமையினரின் கவனத்திற்குக் கொண்டு வருதல், அவற்றிற்கான சீர்திருத்தங்கள் பற்றி மதியுரை கூறல், முகாமையினரிடம் வகைப்படுத்தாத தகவல்களைப் பெறுதல். தொழிற் சங்கப் பணிகளாகவுள்ள விடயங் களிலும் அமைச்சரவையாற் கையளிக்கப்பட்ட அதிகாரிகள் நியமனங்கள், பதவி உயர்வு ஆகியவற்றில் தலையிட உரிமையில்லை.

6. அரசியலமைப்பு நீதிமன்றம்:

5 அங்கத்தவர்கள் ஜனதிபதியால் நியமனம் பெறுவர். சட்டமூலமொன்று அரசியலமைப்புடன் ஒத்துப்போகிறதா? அல்லவா எனச் சபாநாயகருக்கு அபிப்பிராயம் கூறல். அபிப்பிராயம் / தீர்ப்பு முடிவானது. சபாநாயகரைக் கட்டுப்படுத்தும். 14 நாட்களுக்குள் அபிப்பிராயம் கூறவேண்டும். சட்ட மூலங்களை நீதிமன்றத்துக்கு அனுப்பல்:

(1) பிரசை ஒருவர் பணிந்து வேண்டலாம்.

(2) சபாநாயகர் அனுப்பலாம்.

(3) அனுமதிக்கப்பட்ட அரசியல் கட்சியின் தலைவர் சபாநாயகருக்கு எழுத்து மூலம் அறிவிப்பதன் மூலம் சட்டமூலமொன்று தேசீய அரசுப்பேரவை நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்ட ஒரு கிழமைக்குள் இவ்வாருன நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

7. பாகிஸ்தான் போர்க் கைதிகள்:

93000 பேர் மனைவி மக்கள் அல்லல். இந்தியாவின் நிலை:- பங்களாதேஸ், இந்தியக் கூட்டுப்படைகளிடம் சரணடைந்தது. எனவே பங்களாதேசின் அனுமதி வேண்டும், பங்களாதேஸ் விசாரிக்க வேண்டும்.

பாகிஸ்தான் நிலை:-

பங்களாதேஸ் அச்சமயத்தில் இருக்கவில்லை.
சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கொடுமைகள் பற்றி அறிவித்தல்.
உலக அனுதாபம்.

8, அயர்லாந்து:-

பிரித்தானியா ஆதிக்கம் செலுத்திய நாட் தொடக்கம் அமைதியின்மை, பிரித்தானியாவின் வியட்னும் இரகசிக இயக்கங்கள் பயங்கரவாதிகளின் நடவடிக்கை, அயர்லாந்துக் குடியரசுப் படை. இதனுல் அயர்லாந்துக்குச் சுதந்திரம் வழங்கப்பட்டது. வட அயர்லாந்திலுள்ள புரட்டஸ்தாந்தரின் விருப்பப்படி அப்பகுதி பிரித்தானியாவின் ஒரு பகுதியாக்கப்பட்டது. சமயம் பிரித்து வைத்துள்ளது.

வடக்கில் பெல்வாஸ்ட், லண்டனேறி ஆகிய இடங்களில் கத்தோலிக்கர் அதிகமாக வாழ்கிருர்கள். புரட்டஸ்தாந்துக்கு வெளிப்படையான எதிர்ப்புக் காட்டுகிருர்கள். வட அயர்லாந்து, அயர்லாந்துக் குடியரசுடன் சேரவேண்டும் என்பது இவர்களின் கோரிக்கை. கத்தோலிக்கருக்குப் புரட்டஸ்தாந்தர் தம்மை நசுக்குகிருர்கள் என்ற எண்ணம். புரட்டஸ்தாந்தருக்குக் கத்தோலிக்கர்கள் நாட்டுக்கு விசுவாசம் அற்றவர்கள் என்ற எண்ணம்.

1970-ல் குழப்பம் வில்சன் பிரித்தானியப் படைகளை அனுப்பினுர். கத்தோலிக்கருக்கு I. R. A. ஆதரவு. கத்தோலிக்கரின் விருப்பம் அயர்லாந்துக் குடியரசுடன் சேர வேண்டும் என்பதே. தற்பொழுது பிரித்தானியப் பாராளுமன்றத்துக்குப் 13 அங்கத்தவர்கள் வட அயர்லாந்திலிருந்து அனுப்பப்படுகின்றனர்.

தற்பொழுது சமாதானம். புதிய உடன்படிக்கை கத்தோலிக்கருக்கு பிரதேச சட்ட மன்றத்தில் கூடிய அங்கத்துவம். புரட்டஸ்தாந்தர் விரும்பும் வரை பிரித்தானியாவுடன் சார்ந்திருக்கப் பாதுகாப்பு.

9- மக்கள் குழுக்கள்

நிர்வாகத்தை அறவே மாற்றி அமைத்துக் கூடுதலாக மக்களாட்சி மயமாக்கு வதே ஐக்கிய முன்னணி அரசின் கொள்கைப் பிரகடனம். இதற்கிணங்கவே மக்கள் குழுக்கள் அமைக்கப்பட்டன. இன்றுவரை சுமார் 1810 குழுக்கள் அமைக்கப்பட்டுள் ளன. தேர்தல் தொகுதியிலுள்ள உள்ளூரதிகார சபையின் ஒவ்வொரு வட்டாரத்திலும் மக்கள் குழுக்கள் அமைப்பது நோக்கம்.

பாராளுமன்ற உறுப்பினர் கி. மு. ச; சனசமூக நிலையங்கள் ஆகியவற்றின் விதப்புரையின் மீது பொது நிர்வாக உள்நாட்டு, உள்ளூராட்சி அமைச்சரால் நியமிக் கப்படுகின்றது. அவற்றின் பணிகள் மேற்பார்வை செய்தலும், ஆலோசனை அளித்தலும், சட்டவாக்கப் பணியோ, நிர்வாகப் பணியோ, நீதி பரிபாலனப் பணியோ அன்று. தனிப் பட்டவர்களின் சொந்த உரிமைகளில் தலையிட முடியாது. கைலஞ்சம், ஊழற்பழக்கம், சேதமுண்டாக்கல், பொதுநிதிகளைத் துஷ்பிரயோகம் செய்தல், அத்தியாவசிய பொருட் களை ஒழுங்கற்ற முறையில் பகிர்ந்தளித்தல். பதுக்கி வைத்தல், கள்ளக்கடத்தல், சட்ட விரோதக் குடிவரவு என்பவற்றைத் தடைசெய்தல், இதன் மூலம் அரச உத்தியோகத்தர் களுக்கு உதவி புரிதல். இப்பணிகளைச் செய்யப் பரந்த தத்துவங்கள் வழங்கப் பட்டுள் ளன. அரச அதிகாரிகளும், நிறுவனங்களும், ஒத்துழைப்பும், உதவியும் கொடுக்க வேண்டும். உள்ளூர்ப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் அரச அலுவலருக்கு உதவி புரிதல், கிராமப்புற அபிவிருத்திக்கும் மேம்பாட்டிற்குமாகத் திட்டங்களைப் பெரும்பாக அபிவிருத்திச் சபைகளுக்குச் சமர்ப்பித்தல், கூட்டுறவுச் சங்கம், பயிர்ச் செய்கைக்குழு போன்ற உள்ளூர்த் தாபனங்களில் பொது மக்கள் பங்கு கொள்வதை ஊக்கப்படுத்தல் ஆதியன.

அத்தியாவசியப் பொருட் பங்கீடு
காட்டுக் குற்றங்கள்
கள்ளச்சாராய உற்பத்தி
ஆகிய துறைகளில் குறிப்பிடத் தக்க சேவை ஆற்றியுள்ளன.

10. புதிய அரசியல் திட்டம்:

இறைமையும் தன்னுதிக்கமும் கொண்ட குடியரசு. முன்னர் பிரித்தானிய மாட்சிமை தங்கிய மகாராணியிடமிருந்த அதிகாரம், இப்பொழுது இலங்கை மக்க ளிடமிருந்து தேசிய அரசுப் பேரவை அரச தத்துவத்தின் மீயுயர் கருவி. அதன் நடவ டிக்கை அல்லது அதன் சட்டங்கள் எவையும் எந்த நீதிமன்றத்தாலும் பிரச்சினைக் குட்படுத்தப்பட முடியாது. அரசியலமைப்புக்கு முரணானவை என வெளிப்படுத்த முடியாது.

முன்னர் 29வது பிரிவு

வலுவேருக்கற் கோட்பாடு நிராகரிக்கப்பட்டுள்ளது. மக்களின் சட்டமாக்கல் தத்துவம், சட்டநிர்வாகத் தத்துவம், நீதித் தத்துவம் அனைத்தும் தேசிய அரசுப் பேர வையால்; இரண்டாவது சபை இல்லை. அரசாங்க சேவை ஆணைக்குழு ஒழிக்கப்பட் டுள்ளது. அரசாங்க அலுவலர்களின் நியமனம், பதவி உயர்வு, இடமாற்றம், ஒழுங் காற்றுக் கட்டுப்பாடு என்பவற்றுக்கான தத்துவம் அமைச்சரவைக்கு; நியமன அங்கத் தவர் முறை இல்லை. அடிப்படை உரிமைகளும் சுதந்திரங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. தேசிய அரசுப் பேரவையின் காலம் 6 ஆண்டுகள். அரசியலமைப்பு நீதி மன்றம் புதிய சேர்க்கை. அமைச்சரவை பிரதமர் விலகியதும் கலைக்கப்பட்டதாகக் கருதப்படும் அரசி யலமைப்பிலேயே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. முன்னர் இல்லை.

11. பெரும்பாக அபிவிருத்திச் சபைகள்:

உள்ளூரதிகார சபைப்பிரதேசங்களில் அமைக்கப்பட்டுள்ளன. 1971ல் 599 சபைகள் அமைக்கப்பட்டன. அரசாங்க அலுவலர், மக்கள் குழுக்கள், பயிர்ச் செய்கைக் குழுக்கள், கூட்டுறவுச் சங்கம், கிராமசபை முதலிய பல்வேறு உள்ளூர்த்தாபனங்களின் பிரதிநிதிகளைக் கொண்டவை. அரசாங்க நிலையங்கள் பலவற்றையும், உள்ளூர் சமுதாயத்தினரையும் ஒன்று சேர்ப்பன.

பணிகள்: அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்கலும் அபிவிருத்தி முயற்சிகளை ஒன்றிணைப்பதும், திட்டச் செயல்களை மீளாய்தலும்.

12. இலங்கையில் சனப்பெருக்கம்:

முக்கியமான சமூகப் பொருளாதாரப் பிரச்சனை

பொருளாதார அபிவிருத்திக்கும் சமூக முன்னேற்றத்திற்கும் சவால்.

1871 — 1946 — 1·4% 75 ஆடு — 40 இலட்சம் பெருகியது

1946 — 1963 — 2·8% 17 ஆடு — 40 ,, ,,

இயற்கையான பெருக்கம். இறப்பினும் பார்க்கக் கூடிய பிறப்பு.

குடிவரவு

குடிவரவு 1948-ன் பின் குடிவரவு கட்டுப்படுத்தப்பட்டது. பிறப்புக்கும் இறப்புக்கும் இடையிலான பாரிய வித்தியாசம். நூற்றுண்டுத் தொடக்கத்தில் இறப்பு வீதம் 1000-க்கு முப்பது. படிப்படியாகக் குறைவு - 1947-ன் பின் இறப்பு வீதம் 1000-க்கு 8·5 காரணம் மலேரியா ஒழிக்கப்பட்டது. இரண்டாம் உலகயுத்தத்தின் பின்னர் வெகுவான அதிகரிப்பு மேற்கில் கைத்தொழிற் புரட்சியின் பின்னர் வாழ்க்கை நிலை உயர்ந்தது. இலங்கையில் 30 ஆண்டுகளில் சனத்தொகை இருமடங்காகலாம். இப்பொழுது பொருளாதார சமூகப் பிரச்சினைகள் - நெருக்கமான சனம் - பயிரிடுவதற்குக் காணி குறைவு. துண்டாக்கல் ஒரேவழி, உணவு இறக்குமதி, செய்மதி நிலுவைப்பிரச்சினை போசாக்கற்ற உணவு, பால், இறைச்சி, முட்டை உணவு குறைவு, தொழிலில்லாப் பிரச்சினை, இது வரை 550,000 பேருக்குத் தொழிலில்லை. அபிவிருத்திக்குத்தேவையானபணம் நுகர்வுக்குச்செலவழித்தல்.

தொகுப்பு; ஆ. மகாலிங்கம்

01 FEB 2011
2483
02 MAY 2012
2903

அச்சுப்பதிவு

கலைவாணி அச்சகம்,
10, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
704—73
தொலைபேசி: 221.